
# ஸப்தரிஷிகள் மண்டலம்



மஹா கும்பாபிஷேக சிறப்புமலர் 2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்தரிஷிகள் மண்டலம்
ஸ்ரீ மஹாமேரு, ஸ்ரீ மஹா விஷ்ணு ஆலயங்களின்
மஹா கும்பாபிஷேகம்

# கும்பாபிஷேக சிறப்பு மலர்

## - 2004 -



காயத்திரி பீடாதிபதி
காயத்திரி சித்தர் ஆர்.கே. முருகேசு சுவாமிகள்

வெளியீடு
மலர்க் குழு
சப்தரிஷிகள் மண்டலம் - ஸ்ரீ காயத்திரி பீடம்
புதுமுகத்துவாரம், மட்டக்களப்பு.
தொ.பே.065-2226286



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சற்குருவே நமஹ

# மலரை நுகருமுன் சில வார்த்தைகள்......!

**தாயே நமஹ, தந்தையே நமஹ,**
**சற்குருவே நமஹ.**

"துண்ப முறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை " என்ற செந்நாப் போதரின் வாய்மொழிக்கேற்ப எத்தனையோ இன்னல்களுக்கு முகம் கொடுத்து, காடு, மேடுகள் யாவும் ஏறி, இறங்கி பல்வேறுபட்ட ஞானிகள், யோகிகள், சித்தர்கள், மாமகரிஷிகள் போன்றோரிடம் ஆன்ம ஞான சித்தி பெற்று இன்று ஆன்மீக உலகில் தனிப்பெரும் தவசீலராகத் திகழும் எங்கள் குருநாதர் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகள், ஆன்மீகத் துறையில சாதித்த சாதனைகள் எண்ணிறந்தன.

இலங்கையிலும், உலகநாடுகள் பலவற்றிலும் காயத்திரி மந்திரத்தின் மகிமையை உணர்த்தி அங்குள்ளவர்களையும் தமது சீடர்களாக்கிய பெரு மதிப்புக்குரியவர் எங்கள் குருநாதர். 1994ல் உலக ஆன்மீக பாராளுமன்றத்தின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட இம்மகானுபாவர்,

"எண்ணிய எண்ணியவாங்(கு) எய்துவ எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்" எனும் குறள் நெறிக்கேற்ப ஆன்மீக சாதனைகள் பல புரிந்து எமக்கெல்லாம் ஞானவழிகாட்டி வருகிறார்கள்.

கருணையே உருவான எங்கள் குருநாதரின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கித் தவிக்கும் உள்ளங்கள் எத்தனை? அவர்தம் பொன்னார் திருமேனியைக் காணத் துடிக்கும் இதயங்கள் எத்தனை? அத்தனைக்கும் மத்தியில், நாயிற் கடையாய்க் கிடந்த எம்மை, தாயிற் சிறந்த பரிவுடன் அணைத்துத் தீட்சையளித்து, பாசநோய்ப் பற்றறுத்துப் பாரிதனில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி வரும் அருள் ஞானக் கனியான குருதேவரின் திருவடிகளைப் பணிந்து, கூற வந்ததை தொடர்கிறோம்.

அன்றொருநாள், நாங்கள் குருதேவரின் திருவடிக்கீழ் அமர்ந்து அவர் தம் உபதேசங்களை செவிமடுத்துக் கொண்டிருந்தோம். அப்போது, குருநாதர் "சப்தரிசி மண்டலத்திற்கும், மகா மேரு, மகாவிஷ்ணு ஆலயங்களுக்கும் கும்பாபிஷேகம் செய்ய மகரிஷிகளிடம் இருந்து உத்தரவு கிடைத்துள்ளதப்பா. இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 28ந் திகதி நாள் குறித்து தந்துள்ளார்கள். தாமதிக்காது ஒவ்வொருவரும் ஒவ்வொரு பணியைப் பொறுப்பேற்று கும்பாபிஷேகத்தை நல்ல முறையில் செய்து முடிக்க வேண்டும்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

எங்கள் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது கூடவே யார் யாரிடத்தில் எவ்வெப் பணிகளைத் தரப் போகின்றார்களோ என்ற வினா ரேகையும் படர்ந்தது. பிறிதொரு நாள் நாங்கள் குருதேவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையில் கும்பாபிஷேகம் செய்வது சம்பந்தமாக ஆலோசனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது "கும்பாபிஷேக மலரொன்று வெளியிட வேண்டுமப்பா" எனக் கூறிய குருதேவர் அருகில் இருந்த என்னைப் பார்த்து "தேவன் மாஸ்டர் நீங்கள் அந்த மலர்ப் பொறுப்பை எடுத்துக் கொள்ளுங்க, குணாவையும் உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள் எனப் பணித்தார்கள். அத்தனை பேர் மத்தியில் எங்களிடம் இப்பாரிய பொறுப்பை ஒப்படைத்ததையிட்டு நாங்கள் இருவரும் பெருமகிழ்ச்சியடைந்தோம்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்(து)

அதனை அவன்கண் விடல்" என்ற பெருநாவலரின் வாய் மொழிக்கேற்ப, பக்தர்களின் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை ஒரு நொடிப் பொழுதில் புரிந்து கொள்ளக் கூடிய வல்லமை பெற்ற எம் குருநாதர், இப்பாரிய பொறுப்பை எம்மிடம் வழங்கினார்கள் என்றால், அதிலொரு உட்பொருள் இருக்கும் என்பதை நாங்கள் ஊகித்து உணர்ந்து கொண்டோம்.

நாங்கள் இருவரும் கலந்தாலோசித்து மலர்ப் பணியை ஆரம்பித்த போதுதான், நாம் ஏற்றுள்ள பணி எத்துணைச் சிரமமானது என்பதை உணர்ந்தோம். எங்கள் மலைப்பு அதிக நேரம் நீடிக்கவில்லை. நாம் யார்? நாம் ஏன் பயப்பட வேண்டும்? எல்லாம் வல்ல குருநாதர் எம்மையொரு கருவியாகக் கொண்டு இம்மலரை ஆக்க இருக்கிறார். இதில் எங்கள் திறன் எதுவுமில்லை. என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எங்கள் உள்ளத்தில் உதித்தது. அவ்வளவுதான். நாங்கள் தேடியலைந்த நூல்களும்,தகவல்களும் எதிர்பாராத வகையில் யார் யாரிடமோ இருந்து வந்து குவிந்தன.

குருதேவர் என்னுள் இருந்து எழுதினார்கள். குணாவுள் புகுந்து கணினிப் படுத்தினார்கள் இதோ மலர் முழுப் பொலிவு பெற்று உங்கள் கரங்களிலிருந்து மணம்பரப்புகின்றது. இதன் நறுமணம் தங்களை ஆன்மீகப் பாதையில் அழைத்துச் செல்லும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மலர்க் குழுவினரான எங்களுக்கு, மலராக்கத்தின் போது உதவிய அன்பர்கள் பலர். குறிப்பாக அரிய நூல்களைத் தந்துதவியவர்களுக்கும், கணினிகளைத் தந்துதவியவர்களுக்கும், மலரில் பொதிந்துள்ள சில படங்களை வரைந்துதவிய திரு. வினாயகமூர்த்தி அவர்களுக்கும், அட்டைப்படத்தை வடிவமைத்து தந்த செல்வன் நிருபரன் அவர்களுக்கும், கொழும்பில் நாம் தங்கியிருந்து மலர்ப்பணியை நிறைவேற்ற பலவழியிலும் உறுதுணையாக இருந்த திரு. சாந்தகுமார் குடும்பத்தினருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை காணிக்கையாக்குகின்றோம்.

மலர்ந்து மணம் சிந்தும் இம்மலரின் எழிலும், பொலிவும், நிறைவும் எங்கள் சற்குரு நாதரின் அருள்கொடைகளாகும்.. இதன் கண் மலிந்துள்ள குறைகள் யாவும், மலர்க் குழுவினரான எம்மையே சாரும் என்பதை மனதில் கொண்டு மலரை நுகருங்கள் எனத் தங்களை பணிவன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**மலர்க் குழுவின் சார்பில்**
**செ.சிவானந்ததேவன்**
**த. குணரெத்தினம் (குணா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரில் மணக்கும் மலர்கள்


மலரை நுகருமுன் சில வார்த்தைகள்

ஆசிச் செய்தி - காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகள்.

ஆசிச் செய்தி - ஜெகத்குரு சித்தேஸ்வரநந்தா பாரதி சுவாமிகள்

வாழ்த்துப்பா - கலாநிதி அருட்கவி சி.விநாசித்தமி.எம.ஏ.அவர்கள்

சுவாமிகளின் அகவை நிறைவை முன்னிட்டு யாத்த வாழ்த்து வெண்பா.

ஸ்ரீ காயத்திரி சித்தர் டாக்டர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் வாழ்க்கைப் பாதையில் சில படிகள் ..... 10

சப்தரிஷிகள் மண்டல வரலாறு ..... 28

பிரம்ம ரிஷி விசுவாமித்திரர் ..... 38

ஸ்ரீ மஹாமேரு யந்திரம் ..... 40

ஸ்ரீ ஈஸ்வரப்பட்டர் மாமகரிஷி ..... 42

சப்த ரிஷிகள் கோவில் பற்றி ஈஸ்வரப்பட்டாய குருதேவரின் விளக்கம் .....

மாமகரிஷி ஈஸ்வரப்பட்டாய குருதேவரின் தியானத்தால் உணர்த்தப்பட்ட 45

சப்தரிஷிகள் கோவிலின் ஸ்தாபிதம் ..... 46

ஜெகத்குரு சித்தேஸ்வரநந்தாபாரதி சுவாமிகள் ..... 47

காயத்திரி மந்திரம் பற்றி குருநாதர் ..... 49

மனிதா எங்கே போகிறாய்.........! ..... 51

உலகமக்களுக்கோர் இன்பச் செய்தி ..... 55

தாந்திர யோகம் ..... 58

ஸ்ரீ ஆதிசங்கரர் ..... 61

ஸ்ரீ இசக்கி சுவாமிகள் ..... 62

ஸ்ரீ வீரப்பிரம்மேந்திர சுவாமிகள் ..... 63

ஜோதியுடன் ஜோதி ..... 64

ஸ்ரீ யோகி ராம் சுரத்குமார் சுவாமிகள் ..... 65

குருவின் மகிமை ..... 66

ஸ்ரீ பூண்டிச் சுவாமிகள் ..... 67

கோமாதா ..... 68

குருபக்தி ..... 69

கண்ணீரால் இறையருள் பெறலாம் ..... 71

சுவாமி சிவானந்தர் எழுதிய மடல் ..... 74

பண்டிட் கண்ணையா யோகீஸ்வரர் யாத்த மடல் ..... 75

சுவாமி சிவானந்தர் ..... 76

ஸ்ரீ ரமணமகரிஷி ..... 78

கிரஹ தேவதை ..... 80

வரவேற்புப் பா ..... 81

மகரிஷிகளின் மர்மவாசம் ..... 83

குருநாதரும் மறக்க முடியாத சம்பவங்களும் ..... 86

ஸ்ரீ இராமலிங்க வள்ளலார் ..... 92

கசங்கிய பேப்பர் காசாகியது ..... 93

ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு ..... 94

ஆச்சிரமத்தின் தெய்வீகக் கொள்கையும் ஆன்மீகக் கொள்கையும் ..... 97

ஆன்மீகச் சிந்தனையைக் கிளறும் சித்தர்கள் ..... 102

சீரடி சாயிபாபா ..... 112

ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள் ..... 113

குரு கீதை ..... 116



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் ஏகதன்ஷ்ராய வித்மஹே, வக்ர துண்டாய தீமஹி
தன்னோ புத்தி: ப்ரசோதயாத்



## ஓம் கணபதி துணை

கண்டார் களிப்பெய்தக் காட்சிதரும் சப்தரிஷி
மண்டலத்தின் கும்பா அபிஷேகத் - தண்மலர்க்கு
எள்ளுருண்டை உண்டுமகிழ் எங்கள் கணபதியே
உள்ளிருந்து நின்னருள்நீர் ஊற்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பூர் புவஹ ஸ்வஹ
ஓம் தத்ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நஹ ப்ரசோதயாத்



ஸ்ரீ காயத்திரி தேவி துணை
உள்ளப் பெருங்கோயில் தன்னில் உறைந்தெங்கள்
கள்ளப் புலனைந்தின் கட்டறுக்கும் - தெள்ளமுதே!
காயத்திரி என்னும் தாயே! திருவேநின்
நேயத் திருவருளை நல்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பரமேஷ்டிகுரு
அகஸ்திய மாமஹரிஷியே நமஹ




## பரமேஷ்டி குருநாதர் துதி

ஆற்றல்மிக வாய்ந்த அகத்திய மாரிஷியே
சாற்றும் தமிழின் தலைமகனே - ஏற்றம்மிகு
எங்கள்பர மேஷ்டிகுரு நாதா,நாம் உங்களது
தங்கமலர்த் தாள்பணிந்தோம் தாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சற்குரு பரமாத்மனே நமஹ




சற்குருநாதர் துதி

பார்வையால் பண்டைப் பிணிதீர்த்து நுண்ணறிவுக்
கூர்மையால் உள்ளக் குறிப்பறிந்து - நீர்மையாம்
நெஞ்சில் எனைப்பதித்த நல்லகுரு தேவா நும்
பஞ்சடிக்கீழ் நிற்போம் பணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ ஈஸ்வரப்பட்டர் மாமகரிஷியே நமஹ:
ஓம் ஸ்ரீ ஈஸ்வரப்பட்டாய சச்சிதானந்த சற்குரு ஜோதியே சரணம்




## ஸ்ரீ ஈஸ்வரப்பட்டர் மாமகரிஷி துதி

நேசமுடன் நின்னை நினைப்போர்தம் நெஞ்சமர்ந்து
பாசவினை போக்கும் பரந்தாமா - வீசுபுகழ்
ஈசுவரப் பட்டமா மாரிஷியே இன்புறநின்
தேசுமிகு தாள்பணிந்தோம் தேர்ந்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஜெகத்குருவே நமஹ




ஜெகத் குருநாதர் துதி

சித்தி மிகப்பெற்ற சீர்சால் ஜெகத்குருவாம்
சிந்தேஷ் வரநந்தா பாரதியார் - இத்தலத்தில்
சித்தம் குளிரக் குடமுழுக்(கு) காற்றவுளார்
சித்தரடி போற்றுவோம் சேர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகத்குரு சித்தேஷ்வர நந்தா பாரதி சுவாமிகளின் குருநாதர் ஸ்ரீ மௌன சுவாமி அவர்கள்



## மௌன சுவாமி துதி

ஆந்திரமாம் மாநிலத்தில் ஆன்மீக பயிர்வளர்த்து
தாந்திரமாம் யோகக் கலை பயின்ற - ஏந்து புகழ்
வித்தகரே மௌன சுவாமியே! எங்களுக்கு
உத்தமனின் நல்லருளை ஊட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காயத்திரிச் சித்தர் கலாநிதி ஆர்.கே.முருகேசு சுவாமிஜி அவர்களின்

## ஆசிச் செய்தி

என்னைப் பிள்ளையாக ஈன்ற முன்னறி தெய்வங்களான என் அன்னை பிதா இருவரின் திருவடிகளுக்கும் முதல் வணக்கம் கூறி அடியேனை ஆட்கொண்டவரும், அகஸ்தியமாமகரிஷியினிடத்தில் பதினான்கு வருடங்கள் ஆத்மஞானம் பயின்று உலகையே ஆக்கவும், அழிக்கவும் கூடியவரும் ரிஷித் தன்மை பெற்றவரும், மண்ணுலகில் இலைமறை காய் போல், அண்டியவர்களை ஆட்கொண்டு தெய்வமாக்க வல்லவருமான என்குருநாதர் பிரம்மரிஷி ஸ்ரீ கண்ணையா யோகீஸ்வரரின் பாதக்கமலங்களுக்கு பல்லாயிரம் கோடி நமஸ்காரம் செய்து வணங்குகிறேன்.

இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சமும், பிரபஞ்சத்திலுள்ள மக்களும், அறியாமை இருளில் சிக்கி அழிவுப் பாதை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருப்பதையும், மனிதன் மனித உருவில் நடமாடும் ஒரு பயங்கரப் பிராணியாக வாழ்வதையும், மனித இனம் பிறர் அழிவில், பிறர் துன்பத்தில் இன்புறுவதையும், நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இன்று, உலகம் அமைதியின்மை, போர் வெறி, மதவெறி, இனவெறி போன்றவற்றின் தாக்கத்தாலும், பூகம்பம், வெள்ளம் போன்ற இயற்கையின் அனர்த்தங்களாலும், அமைதியின்றி காணப்படுகின்றது. இந்தப் பயங்கர நிலையிலிருந்து பணத்தால், ஜனத்தால், படைபலத்தால், அதிகாரத்தால் , அரசுரிமையால், விஞ்ஞானத்தால் மற்றும் எதனாலும் போக்க முடியாத இந்தப் பயங்கரச் சூழ்நிலையில் இந்து தப்ப வழியே இல்லையென்று ஏங்கித் தவிக்கும் மக்களுக்கு இந்த பயங்கரப் பேரழிவில் இருந்தும், பேராபத்தில் இருந்தும், காப்பாற்ற மண்ணுலகில் சிரஞ்சீவியாக வழிநடத்தி வரும் மகரிஷிகளும், சித்தர்களும் முன்வந்துள்ளார்கள்.

இந்த நிலையில் மகரிஷிகளின் மாபெரும் ஆன்மசக்தி மண்ணுலகில் செயல்பட்டு வருகிறது. மண்ணுலக மக்கள் மான்புற வழிகாட்டவென்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரிஷிகளுடைய உத்தரவின் பேரில் அவர்களுடைய அருள்வழிகாட்டலில், அருள் ஆசியின் பேரில், அவர் தம் நேர்முக கண்காணிப்பில் இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு, புதுமுகத்துவாரத்தில் சப்தரிஷி மண்டலம் ஒன்று நிறுவப்பட்டு இன்று பூர்த்தியாகியுள்ளது.

இந்த சப்தரிஷி மண்டல மகா கும்பாபிஷேகப் பெருவிழா, மாபெரும் தவஞானியும், அணிமாதி அஷ்டசித்திகள் பெற்றவரும், சித்த புருஷரும் யந்திர, மந்திர, தந்திர சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றவருமான ஜெகத்குரு ஸ்ரீ சித்தேஸ்வரநந்தா பாரதி சுவாமியவர்கள், ரிஷிகளின் ஆசியுடனும், பிரம்மஞானியான ஸ்ரீ நானாக்கரு சுவாமியவர்கள், மௌனகுரு சுவாமி ஆகியோரின் அருளாசியுடனும் இந்த மகாகும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்க வருகை தரவுள்ளார்கள்.

இது மகரிஷிகளின் மறைமுகமான திட்டமென்பதை விளங்கிக் கொள்ளலாம். இந்தியாவில் வற்றாத ஒன்பது புனித ஜீவநதிகளின் தீர்த்தங்கள் கொண்டும், ஆயிரத்து எட்டு ஆன்மீக உயிர் மூலிகைகள் கொண்டும் நடாத்தப்படும், மகாயாகத்துடன் கூடிய இந்த மகாகும்பாபிஷேகத்தால் தாய்த்திருநாடாம் எங்கள் இலங்கைத் திருநாட்டிலும் உலகமனைத்திலும் நிரந்த சாந்தி, சமாதானம் நிலவி உலகம் இறை சாம்ராஜ்யமாக மாறி நிலையான, மாறாத திகட்டாத உயர் பேரின்பமான இறையின்பத்தை அனைவரும் அனுபவிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

மனித அறிவுக்கும், சிந்தனைக்கும் எட்டாத விஞ்ஞானிகளாலும் புரிந்து கொள்ள முடியாத இந்த ஆன்மஞானத்தை உலகில் பரப்பி, இந்த மண்ணுலக மக்கள் உலகமாம் துன்பக்கடலைத் தாண்டி பேரானந்தம் என்னும் அக்கரைக்கு செல்ல என்னை ஒரு படகாக்கி ஆட்கொண்டு வழிநடத்தும், என் சற்குரு மூர்த்தி ஸ்ரீ கண்ணையா யோகீஸ்வரருடைய திருவடிகளுக்கும், சப்தரிஷி மண்டல ஆலயம் அமைப்பதற்கு, மூலகர்த்தாவான ஸ்ரீ ஈஸ்வரப்பட்டர் மாமகரிஷி அவர்களின் பாதகமலங்களுக்கும், பல்லாயிரம் கோடி நமஸ்காரங்கள் செய்து, பிராத்தனை செய்கின்றேன்.

இக்கும்பாபிஷேக பெருவிழாவை முன்னிட்டு ஆக்கப்பட்ட இச்சிறப்பு மலர் அருள்மணம் பரப்பி, வெளிவருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதில் அடங்கியுள்ள சகல விடயங்களும், ஆன்மீகத்திற்கு மிகவும் தேவையானவையாகும். இந்த சப்தரிஷி மண்டலத்திற்கு அடிக்கல் நடப்பட்ட காலம் முதல் இன்று வரை அரும்பாடுபட்டு இரவு-பகலாக உழைத்தவர்களுக்கும், குருபாதக் கமலங்களில் பரிபூரண சரணாகதியடைந்து இந்தக் கும்பாபிஷேகப் பெருவிழா காண ஒத்துழைப்பு நல்கிய பக்தர்கள் அனைவருக்கும், எனது அன்பு கலந்த வாழ்த்துக்களும், அருளாசிகளும் உரித்தாகட்டும்.

அகிலம் அனைத்தையும், ஆக்கி அமைத்தழிக்கும் அகிலாண்டேஸ்வரி, ஆதிசக்தி, ஜெகன் மாதா காயத்திரி தாயே உனக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!! நமஸ்காரம்!!!

சப்தரிஷிகளே உங்களுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!! நமஸ்காரம்!!! பதிணென் சித்தர்களே உங்களுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!! நமஸ்காரம்!!! என்னுடைய சற்குரு தேவர் கண்ணையா யோகீஸ்வரரே நமஸ்காரம்! நமஸ்காரம்!! நமஸ்காரம்!!!. ஈஸ்வரப்பட்டர் மாமகரிஷியே உமக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!! நமஸ்காரம்!!!. நீங்கள் அனைவரும் அடியேனை கைவிட்டாலும் பரவாயில்லை. இந்த அடியவனாகிய என்னை அண்டியவர்களை மட்டும் கைவிடாதீர்கள். அண்டிய அனைவரையும் அன்னைபோல் அணைத்து காத்து அருள்பாலிப்பீர்களாக.

அனைவர் வாழ்விலும் அன்புமாரி, அருள்மாரி பொழியட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ॐ

ஜெகத்குரு சிததேஷ்வரநந்தா பாரதி
சுவாமிகளின்

# ஆசிச் செய்தி



**HIS HOLINESS JAGADGURU**
**SRI SIDDHESWARANANDA BHARATHI SWAMI**
SRI SIDDHESWARI PEETADHIPATHI
SRI SIDDHESWARI PEETAM, MOUNASWAMY MUTT,
DATTATREYAASHRAMAM, COURTALLAM-627 802.
TENKASI (VIA.
THIRUNELVELI (DIST). PH.040-222707.
Web:www.siddheswari.org.
**With Narayanasmritis**

## Asirvada Sreemukham

I am very happy to know that Maha Kumbhabhishekam ritual is being celebrated at **Puthumuhathuwaram, Batticaloa** under the leadership of His Holiness **Swamy Murugesu** who is an esteemed personality in the spiritual field. By these Vedic ceremonies divine energy is attacted from the Astral Plane and Saints of the Siddha Mandala will discend and bestow their kindness to the humanity in general and devotees in particular.

The Dieties may be a bit late in coming when invoked but the Siddhapurushas will come immediately and bless the Sadhakas.

I wish that the devine personalities from the higher planes like Suvarloka and Tapoloka will come down at the time of this great Yagna and shower their blessings.

**Wishing success for this Maha Kumbhabishekam**

**Siddheswarananda Bharati Swamy**
**Peetadhipathi**

**Camp: Guntur.**
Date : 5.10.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

## ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம் கலாநிதி அருட்கவி சி.விநாசித்தம்பி. எம்.ஏ. அவர்கள் யாத்த வாழ்த்துப்பா



திருவளரும் இலங்கைநுவ ரெலியா மன்னும்
சீர்வளரும் காயத்ரீ பீடம்தன்னில்
உருவளரும் சிவபால யோகி மகராஜ்
உளம்வளரும் கண்ணையா யோகவள்ளல்
கருவளரும் நெறிவளர்க்கும் சித்தஞான
கலைவளரும் காயத்ரீ சித்தசக்தி
தருவளரும் வகையமைத்துத் தந்த லிங்கம்
தவம்வளரும் இமயமெனக் கண்டேனம்மா,

மூலர்முதல் பலசித்தர் மொழிந்த சித்த
முத்திரையால் சிவங்கண்டு வேதவேள்விச்
சீலமெலாம் மனத்துணர்ந்து ஞாலமெல்லாம்
திகழவைத்த மகான்களினால், மக்கள், வாழ்வில்
கோலமிகு சுகம்சிறந்து குலவும் உச்சி
குவிந்துநிற்கும் சகஸ்ரார விந்தம் காட்டும்
மேலழகு வெளியிலே சுடரைக் காணும்
விளக்கொளியில் நிலைத்துநிற்கும் வண்ணங்கண்டேன்

முற்பவத்தில் கயிலைமீது வாழ்ந்தஞானி
முருகேசு சுவாமிகளின் பணியினாலே
பொற்புடைய காயத்ரீ பீடம்தன்னில்
புகழ்படைத்த இலங்காதீஸ் வரனார் கோயில்
அற்புதங்கள் பலபடைத்து மக்களுக்காய
ஆன்மீக வழிகாட்டல் நன்மை கண்டு
சொற்பதத்து வானோரும் வழிபாடாற்றும்
தொழுமேரு மலையாக விளங்கக் கண்டேன்

இத்தகைய இலங்கா தீஸ்வரனார் கோயில்
இனியகுட முழுக்காற்றி இருபத் தையாண்
டொத்தபெரு விழாவுடனே, மட்டூர் மேவும்
உயர்சப்த ரிஷிகளுக்கும் கண்ணன், மேலாம்
வித்தகபத் தெண்சித்தர் யாவருக்கும்
விழைந்தெடுக்கும் கும்பாபி ஷேகம் யாவும்
உத்தமியாம் காயத்ரீ கருணை பொங்கி
ஓங்குசிவப் பிரகாசம் பெருகி வாழி.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு புதுமுகத்துவாரத்தில் அமைந்துள்ள சப்தரிஷிகள் மண்டலத்தின் வெளித்தோற்றமும், இயற்கை எழிலும்.



மட்டக்களப்பு சப்தரிஷி வளாகத்தில் அமைந்திருக்கும் சப்தரிஷி மண்டலத்தின் முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சப்த ரிஷி வளாகத்தில் உள்ள நிகோர்ட் திட்டத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள இலவச மருத்துவமனையும், மருத்துவ விடுதியும்



மட்டக்களப்பு சப்தரிஷி வளாகத்தில் அமைந்துள்ள குருநாதரின் குருபீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமிகளின் அகவை நிறைவை முன்னிட்டு யாத்த வாழ்த்து வெண்பா



தத்துவத்தின் மெய்ப்பொருளே! வித்தகரே! காயத்திரி
சித்தர்முரு கேசென்னும் சற்குருவே - உத்தமரே
தாங்கள் அவதரித்த இந்நாளில் எம்அன்பை
நாங்கள் சொரிகின்றோம் நன்று.

அன்பின் வழியில் அகிம்சை தனை விளக்கும்
இன்பின் வடிவே குருநாதா - நின்றனது
பொற்பாத தேன்மலரில் சென்னி யதைவைத்து
சொற்பாவால் வாழ்த்துகிறோம் சேர்ந்து

பண்பும் பரிவும்நற் பாசமும் காட்டியாம்
துன்பும் துயரும் அணுகாது - என்றென்றும்
வாழ வழிவகுத்த வள்ளலே தாங்கள் நலம்
சூழவே வாழ்க சிறந்து

நாயிலும் கீழ்ப்பட்ட நம்மை அரவணைத்து
தாயிலும் மேலாகத் தென்பூட்டி - தூயநற்
தீட்சை அளித்த குருதேவா உங்களது
மாட்சி பெருக மலிந்து!

காயத் திரியென்னும் மூலமாம் மந்திரத்தை
நேயத் துடனோதும் நற்குருவே - நோயகன்று
ஆவிநிகர் செந்தமிழ்போல் பல்லாண்டு தாம்வாழ
தேவியவள் நிற்பாள் துணை.

**- தமிழருவி செ. சிவானந்ததேவன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ காயத்திரி சித்தர் டாக்டர் ஆர்.கே. முருகேசு சுவாமிகளின் வாழ்க்கைப் பாதையில் சில படிகள்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு உரியவரான இறைவனின் ஆணைப்படி, ஆழி சூழ்ந்த இந்த அகிலத்தை மகரிஷிகள் ஏழு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். இப் பிரிவுகள் ஒவ்வொன் றையும் ஒவ்வொரு மகரிஷிகள் பொறுப் பேற்று மறைமுக மாக நல்லாட்சி புரிந்து வருகின்றனர். சப்தரிஷிகள் என அழைக் கப்படும் இம் மகாரிஷிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட ஆன்மீகப் பணியை நிறை வேற்றும் பொருட்டு காலத்துக்குக் காலம் ஞாலத்தில் பக்குவப்பட்ட ஆன்மாக்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மூலம் இம்மகரிஷிகள் தமது பணியை செவ்வனே நிறைவேற்றி வருகின்றனர்.

இந்த வகையில், பாரத பூமியாம் தென்னாட்டிலே தோன்றியவரும், பதினெண் சித்தர் வரிசையில் தலைமைச் சித்தராகப் போற்றிப் புகழப்படுபவருமான, கடல் குடித்த குடமுனியாம் ஸ்ரீ அகஸ்திய மாமகரிஷியின் அருளாசி பெற்றவரே ஸ்ரீ கண்ணையா யோகீஸ்வரர். இவர் பதினான்கு ஆண்டுகள் ஸ்ரீ அகஸ்திய மாமகரிஷியின் ஆச்சிரமத்தில் அவரின் நேரடிக் கண்காணிப்பில் ஆன்மீகப் பயிற்சியில் ஈடுபட்டு சகல வித்தைகளையும் கற்றுத் தேர்ந்தவர். உலகமக்களின் நன்மைக்காக உலகம் அறிந்திடாதபடி மறைமுகமாக வாழ்ந்த உத்தமபுருடர்.

இந்த அருந்தவ ஞானியாம் ஸ்ரீ கண்ணையா யோகீஸ்வரரின் அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமான பிரதம சீடரே இன்று இவ்வையகம் உவந்து போற்றித் துதி செய்யும் எம் குருதேவர் காயத்திரி சித்தர் டாக்டர் ஆர்.கே. முருகேசு சுவாமிகள் அவர்கள்.

ஸ்ரீ அகஸ்திய மாமகரிஷி போன்ற உடற்தோற்றம், வெண் தாடி போர்த்த வசீகரமான முகம், காந்த சக்தி மிக்க கண்கள், கம்பீரமான, கேட்போரைக் கவர்ந்திழுக்கும் குரல்வளம், எளிய வெண்ணிற வேஷ்டி, சால்வை, மொத் தத்தில் ஆடம்பரமற்ற சாதாரண மனித வடிவே எம்குருநாதர்.

ஆன்மீகத் துறையில் முன்னேறி வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்துவரும் இம்மகாபுருடரைப் பற்றி அறியாத மனிதர்களே இல்லையெனலாம்.

1994ல் உலக ஆன்மீகப் பாராளுமன்றம் இவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கௌரவப்படுத்தியது. ஆங்கிலத்திலும் தமிழிலும் இவர் எழுதிக் குவித்த நூல்கள் எண்ணிலடங்கா. காயத்திரி தத்துவம், ஆன்மீகப் போதனைகள், தியானம், ஆகியவை பற்றிய நூல்கள் சர்வதேச ரீதியில் பாராட்டுப் பெற்றவை. மனோதத்துவம், யோகம், ஆத்மீகம் பற்றிய ஆராய்ச்சி நூல்களும் இவரின் உயர்ந்த அறிவாற்றலை உலகுக்கு உணர்த்தி நிற் கின்றன.

புதுடில்லியில் உள்ள உலக அபிவிருத்திப் பாராளுமன்றம் (விஸ்வ உணாயன் ஷம்ஷாட் அலுவலகம்) உலக அபிவிருத்தித் துறையில் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. தத்துவம், விஞ்ஞானம், இலக்கியம் ஆகிய துறைகளிலும் இவர் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மஹா அவதார்', 'பிரம்மரிஷி', 'ஆதி மகாபரம ஜெகத் குரு' என்பன எம் குருநாதராம் பொன்மனச் செம் மலுக்கு ஆன்மீக உலகம் வழங்கிய கௌரவப் பட்டங்களாகும்.

இப்பெரும் ஞானஜோதியின் வாழ்க்கைப் பின்னணியை, யாமறிந்த வகையில் திரும்பிப் பார்க்கின்றபோது வியப்பும், மலைப்பும் ஏற்படுகின்றது. எம் குருநாதர் உலகம் உய்ய,பட்ட துன்பது யரங்களை அறிந்து இதயத்தில் இரத்தம் கசிகிறது. எம்குருநாதர் பெற்ற அனு பவங்கள் அனைத்தையும் எழுத்துருவில் கொணர்வது இயலாத காரியம். ஆயி னும் மறக்க முடியாத, எம் குருநா தருடன் நெருங்கிப் பழகாத மக்கள் இப்படியும் நடக்குமா? என்று ஏற்றுக் கொள்ளத் தயங்கும் பல அனுபவ உண்மைகளை, எம் குருநாதரின் அரு ளாசியுடன் எடுத்துக் கூற விழை கின்றோம்.

சுவாமிகளின் பூர்வீகத் தலம், சகல தத்துவ ஞானங்களும் தோன்றிய புண்ணிய பூமியாம் தென்னிந்திய நாட்டின் கண் விளங்கும் புதுக் கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆவு டையார் கோயில் கிராமமாகும். இக் கிராமம் பல சிறப்புகளைப் பெற்ற பொற் கிராமமாகும். இங்குதான் மகரிஷிகளில் ஒருவரான புலஸ்திய மாமகரிஷியின் சமாதியுள்ளது. இக்கிரா மத்தில்தான் எவ்வாசகத்துக்கும் உருகாதோரை உருகவைக்கும் திருவாசகத்தைத் தந்த மணிவாசகர் பெருமான் தவம் புரிந்து ஞானம் பெற்றார் என்பது உலகம் அறிந்த உண்மை. ஆதலால் இக்கிராமம் உயர் ஞான அதிர்வலைகளைக் கொண்ட புண்ணிய பூமி என்பதில் ஐயமில்லை.

இங்கு வாழ்ந்து வந்த இறை பக்திமிக்க ராமன் தம்பதிகளின் மகனான காளிமுத்து எனும் பெரியார் சந்த னமம்மா எனும் தம் முறைப் பெண்ணை மணந்து கொண்ட பின், திரை கட லோடியும் திரவியம் தேடு என் பதற்கிணங்க, தென்னிந்திய நாட் டிலுள்ள தம் புனித கிராமத்திலிருந்து சிவபூமி எனப் புகழ்பெற்ற ஈழத்தை வந்தடைந்து, ஈழத்தின் இதயம் எனத்தக்க கண்டி மாநகரைத் தமது வசிப்பிட மாக்கிக் கொண்டனர். இவர்களே எம் குருநாதரின் பெற்றோர். இங்குதான் எம் குருநாதர் 1933.10.26ந் திகதி அவ தாரம் செய்தார்.

சுவாமிகளின் குடும்பம் மிகப் பண வசதி கொண்டதல்ல. சாதாரண நடுத்தரக் குடும்பம். சுவாமிகளுக்கு ஆறு சகோதரர்கள் இரண்டு சகோதரிகள். இப்பெரும் குடும்பத்தில் மூத்தவர் சுவாமி களேயாவார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் முருகேசு என்பதாகும்.


"வளரும் பயிரை முளையில் தெரியும்" என்பது போல இளமையில் கல்வி கேள்விகளில் சுவாமிகள் மிகப் பிரகாசித்தார்கள். துடுக்குத்தனம் குறைந்தவராக, தாய் தந்தை சொல் கேட்டு நடப்பவராக, சகோதர, சகோ தரிகளிடத்து பாசம் நிறைந்தவராக, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப தம் ஆசா பாசங்களைச் சுருக்கி, தனக்கென வா ழாது குடும்பத்திற்காக வாழும் ஒரு சிறந்த பிள்ளையாக பெற்றோர்களால் இனங் காணப்பட்டார்கள். காலம் நகர்ந்தது சுவாமிகள் பத்தாவது அகவையை நிறைவு செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நியாசியின் பார்வையில்......

இந்நிலையில் ஒருநாள் சுவாமிகள் கண்டியில் உள்ள பள்ளேக்கல எனும் தோட்டத்தில் அமைந்திருந்த தமது இல்லத்திற்கு அருகில் சக தோழர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.




அவ்வேளையில் அவ்விடத்திற்கு சந்நியாசி ஒருவர் வந்தார். வாட்ட சாட்டமான உடற்பாங்கு, வசீகரமான முகம் அருள் சிந்தும் பார்வை, மொத் தத்தில் அவர் ஒரு அழகான சந்நியாசி. வந்தவர் விளையாடிக் கொண்டிருந்த பாலகன் சுவாமி அவர்களை அணுகி, ''தம்பி ஒரு ரூபாய் தா'' எனக் கேட் டார். அவரை ஏறிட்டுப்பார்த்த சுவாமிகள் ''என்னிடத்தில் பணம் இல்லை'' எனக் கூறி விட்டு விளையாட்டில் ஈடுபட முனைந்தார். ஆனால் மனம் அதில் லயிக்கவில்லை. சந்நியாசிக்கு ஏதேனும் கொடுக்க வேண்டும் என உள்ளம் உறுத்தியது. தனது சட்டைப் பையில் இருந்த பத்துச்சத நாணயங்கள் இரண்டை எடுத்து சந்நியாசிக்குக் கொடுத்தார். அதனை அன்புடன் பெற்றுக் கொண்ட சந்நியாசி ''நீ நன்றாக வாழ்க'' என ஆசிர்வதித்தார். அவ்வேளை சுவாமிகள் உடலில் மின்சாரம் போன்ற தெய்வீக அதிர்வலைகள் பாய்வதை உணர்ந்தார். அவ்வுணர்வின் விளைவாக விளையாட்டை நிறுத்தி விட்டு வீட்டுக்கு விரைந்து சென்ற சுவாமிகள், ஒரு ரூபாவை எடுத்துக் கொண்டு திரும்பி வந்த போது அங்கு சந்நியாசியைக் காணவில்லை. வியப்புடன் அந்த சந்நியாசியின் நினைவுடனே வீட்டுக்குச் சென்றார். பின்னொரு காலத்தில் அச்சந்நியாசியை தாம் சந்திக்கப் போவதையும் அவரால் பல அனுபவங்களைப் பெறப் போவதையும் சிறுவனாகிய சுவாமிகள் அறிந்திருக்கவில்லை.

சுவாமிகளுக்கு பதினொராவது அகவை நிறைவான போது மற்றுமொரு அனுபவம் கிடைத்தது. கண்ணையும் கருத்தையும் கவரவல்ல நுவரெலியாவில் உள்ள குதிரைப்பந்தயத்திடலில் சுவாமிகள் இருந்த போது முதியவர் ஒருவர் அவர்முன் தோன்றினார். அவர் சுவாமிகளைப் பார்த்து சுவாமிகளின் பூர்வீகப் பின்னணியைக் கூற, சுவாமிகள் வியப்பில் மூழ்கினார். பின் தன்னைப் பற்றியும் கூறிவிட்டு, 'நான் மிகவும் பசியுடன் இருக்கின்றேன். பசிதீர்க்க எனக்கு ஏதாவது வாங்கித் தர முடியுமா?" எனக் கேட்டார். உடனே சுவாமிகள் தம்மிடம் இருந்த பணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ரொட்டியை வாங்கி அவருக்குக் கொடுத்தார். இச் செயல் மூலம் தமது வாழ்க்கையும், ஆத்மாவும் உயரக் கூடிய ஆசிர்வாதமொன்றைப் பெறப் போகின்றோம் என்ற உணர்வோ எதிர் பார்ப்போ சுவாமிகளிடம் இருக்க வில்லை சாதாரணமாக ஒருவருக்கு உதவி செய் வதாகவே எண்ணினார். ஆனால் ரொட் டியை மகிழ்வுடன் ஏற்று உண்டு பசி யாறிய முதியவர், தமது இடுப்பில் செரு கியிருந்த பையை எடுத்து அதனுள் இருந்து ஒரு பழைய கிழிந்த புத்த கத்தை எடுத்தார். அது 'விநாயகர் கவசம்'. அந்நூலை சுவாமிகளின் கையில் கொடுத்த அந்த நீண்டதாடி முதியவர், சுவாமிகளை நோக்கி 'இதனைத் தினமும் பாராயணம் செய்! நீ வாழ்க்கையில் பெரும் உயர்வடைவாய்' என ஆசிர்வதித்தார். இவ்வாக்கினை சிரமேற் கொண்ட



சுவாமிகள் அதனைப் பக்தியுடனும் சிரத் தையுடனும் பாராயணம் செய்யத் தொடங்கினார். அவ்வேளைகளில் இனம் புரியாத ஒருவித தெய்வீக ஆனந்தம் தமது உள்ளத்தில் நிறைவதை உணர் ந்து அனுபவிக்கலானார். இந்நிகழ்வே சுவாமிகளின் பிற்கால ஆன்மீகத் தாகத் துக்கும் தேடலுக்கும் வழிவகுத்தது எனக் கூறலாம்.

காலம் கரைந்தது. சுவாமிகளின் குடும்பத்தில் குழந்தைகள் வளர வளர பொருளாதாரப் பிரச்சனை முளைவிடத் தொடங்கியது. தமது தாய் தந்தையரின் சொற்ப வருமானம் தமது குடும்பத்தைக் கொண்டு நடாத்த போதுமானதல்ல என்பதை இளவயதிலேயே புரிந்து கொண்ட சுவாமிகள் தமது படிப்பிற்கு, பதினான்காவது வயதிலேயே முற்றுப் புள்ளி வைத்துவிட்டார். தாய் தந்தைக்குப் பின் தமையன் ஐங்குரவர்களில் ஒரு வனாவான் என்பதற்கு ஏற்ப, குடும்பத்தின் வறுமை நிலையைப் போக்க நினைத்த சுவாமிகள் வேலை தேடும் படலத்தில் இறங்கினார்கள். சுவாமிகளுக்கு ஒரு உணவு விடுதியில் சிற்றூழியராக கடமை புரியும் வாய்ப்பு ஏற்பட்டது. அதன் மூலம் கிடைத்த சொற்ப வரு மானத்தை தமது குடும்பத்துக் காகவே செலவு செய்து வந்தார். பின்பு ஒரு அலுவலகத்தில் சிறுபணியாளராகச் சேர்ந்து கொண் டார். தமது முயற்சியா லும், திறமை யாலும், தாம் வாழ்ந்த பகுதியில் கடைக் கணக்கு எழுதியும் சம் பாதிக்க தொடங் கினார்கள். சுவாமிகளின் விடா முயற்சியும் சிந்தனை ஆற்றலும் கல்வித் திறனும் இவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திக்குத் தெரியாத நீலகிரி காட்டில்............!

ஆங்கிலக் கம்பனி ஒன்றில் உயர் அதிகாரியாக பணியாற்ற வைத்தன. இத்தனைக்கு மத்தியிலும் சுவாமிகளின் ஆன்மீகத் தாகம் தீர்ந்துவிடவில்லை மாறாக ஆன் மஞானப் பாதையில் தடம் பதித்து தம்மால் இயன்றவரை ஆன்மீகத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்கள்.

'பணம் வந்தபோதும் குணம் மாறாமல் உலகியலில் தம்மை இணைத்து துன்புறாமல் வாழ்ந்தார்'

'வருந்தியழைத்தாலும் வாராது வாரா பொருந்துவன போதென்றால் போகா' என்பது போல சுவாமிகள் மகரிஷிகளால் ஆட்கொள்ளப்படும் காலம் அண்மித்தது. ஒரு கடையில் கடைக்கணக்கு எழுதுபவராகக் கடமை புரிந்து கொண்டிருந்த வேளையில் எதிர்பாராத விதமாக மகரிஷிகளின் தெய்வீக காந்த சக்தி சுவாமியவர்களை பாரத நாட்டிற்கு அழைத்துச் சென்றது. பாரதம் சென்ற சுவாமிகள் பலகாலம் அங்கு தங்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டார். ஆயினும் தமது ஓய்வு நேரத்தை அங்குள்ள திருத்தலங்களைச் சுற்றிப் பார்ப்பதற்கு ஒதுக்கிக் கொண்டார்.

ஒருநாள் திருச்சியில் உள்ள ஸ்ரீ ரங்கம் கோயிலில் ஸ்ரீ இராமனுஜரது சமாதியின் முன்னமர்ந்து கண்களை மூடி வழிபட்டுக் கொண்டிருந்த போது தன் முதுகை ஒருவர் கையால் தட்டுவதை உணர்ந்து கண்களை விழித்தார். அங்கே ஒரு முதியவர் நிற்பதை கண்டு வியப்புடன் அவரை நோக்கினார். அம் முதியவர் சுவாமி அவர்களைப் பார்த்து "என்னை உனக்கு ஞாபகம் இருக்கிறதா?" என வினவினார். சுவாமிகள் தடுமாறிய போதும், அவரின் உள்ளுணர்வு தான் பதினைந்து வருடங்களுக்கு முன் சிறுவனாய் இருந்த போது தன்னிடம் வந்து ஒரு ரூபாய் கேட்ட சந்நியாசி இவர்தான் என்பதை அடையாளம் காட்டியது. அதனை சுவாமிகள் முதியவரிடம் கூற முதியவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

அம்முதிய சந்நியாசியானவர் இளைஞனாகிய சுவாமிகளைப் பார்த்து "என்னுடன் வா" என அழைத்தார். சுவாமிகள் ஒரு மறுப்பும் கூறாது மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல் அவருடன் சென்றார். அம்முதிய சந்நியாசி நெடுந்தூரப் பயணம் செய்து ஈற்றில் அடர்ந்த நீலகிரி வனப்பகுதிக்குள் சுவாமியை அழைத்துச் சென்றார். காட்டில் சிறுதூரம் சுவாமிகளுடன் வந்த முதிய சந்நியாசி திடீரென சுவாமியைத் தனித்து நடுக்காட்டினுள் விட்டுவிட்டு மறைந்து விட்டார்.

வன விலங்குகளும், மிருகத்தை விட கேவலமான பயங்கரமான காட்டு வாசிகளும் வாழும் அந்த அடர்ந்த காட்டில் தன்னந் தனியனாக நின்று செய்வதறியாது தடுமாறிய சுவாமிகளை மிகக் கூரிய ஆயுதங்களும், நெருப்புக்கொள்ளிகளும் வைத்திருந்த காட்டுவாசிகள் சூழ்ந்து கொண்டனர். தமது இடத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்த வேற்றுமனிதனான சுவாமிகளை அவர்கள் துன்புறுத்தி நெருப்புக் கொள்ளிகளால் அவர் உடலை ரணப்படுத்தி அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள ஒரு மரத்தில் அவரைக் கட்டிப்போட்டுச் சென்று விட்டனர்.

இத்தகைய பயங்கர சூழலில் தம்மை சிக்கவைத்த சந்நியாசி மேல் சுவாமிகளுக்கு கோபம் கோபமாக வந்தது. தம்மை நரபலி கொடுக்கவே சந்நியாசி சதி செய்து இங்கு அழைத்து வந்ததாக மனம் கூறியது. அதனை நினைத்த போது சந்நியாசி மேல் கடும் கோபம் ஏற்பட்டது எவ்வாறாயினும் இச் சூழலில் இருந்து தப்பிவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், கட்டுகளை அவிழ்க்க முயற்சித்தார் சுவாமிகள். அப போது அந்த முதிய சந்நியாசி மீண்டும் அவர்முன் தோன்றினார். அவரைக் கண்டவுடன் சுவாமிகள் மனதில் அச்சம் சூழ்ந்து கொண்டது. இனி என்ன நடக் குமோ என்ற திகிலுடன் இவரை எப்படி சமாளித்து இக்காட்டிலிருந்து விடுபடுவது என மனதைக் குழப்பிக் கொண்டிருந்த போது, சுவாமிகளைப் பார்த்து புன்ன கைபுரிந்த அந்த முதிய சந்நியாசி 'எங்கே உனது இடதுகையை நீட்டு' எனக் கட்டளையிட்டார்.

சுவாமிகள் அச்சநிலையில் நின்று விடுபடாமலே தமது இடது கையை நீட்டினார். உடனே சந்நியாசி 'கண்களை மூடிக் கொள்' என்றார். சுவாமிகளும் இனி என்ன நிகழப்போகிறதோ என்ற பீதியுடன் கண்களை மூடிக் கொண்டார். சுவாமி களின் இடது கை நடுவிரலை அப் பெரியவர் பற்றினார். அவ்வளவுதான் சுவா மிகள் தன்னிலை மறந்துவிட்டார். மீண்டும் கண்களைத் திறந்த போது சந்நியாசி அங்கிருக்கவில்லை. ஆயின் மனதில் இருந்த அச்சம் உடல் சோர்வு, யாவும் கதிரைக் கண்ட பனிப்போல் அகன் றுவிட தன்னை மறந்தவராக சுவாமிகள் அக்காட்டுப்பாதையில் வெகு தூரம் நடந்து, ஈற்றில் ஒரு ஆசிரமத்தை சென்ற டைந்தார்கள்.

அந்த ஆச்சிரமத்திலே பல யோகிகளும், சித்தர்களும், முனிவர் களும், மேலைத் தேசத்தவரும் கண்மூடி ஆழ்ந்த தியானத்தில் இறையின்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அங்கு வந்தவுடன் மனதில் எழுந்த அச்சம் கலக்கமெல்லாம் நீங்கி உள்ளம் தெளிவுற்றிருப்பதை உணர்ந் தார் அப்போது அவ்வாச் சிரமத்தின் தலைமை ரிஷியானவர் சுவாமியின் அருகில் வந்து அவரை ஆசீர்வ தித்தார்கள்.

அப்போது, தான் வந்து சேர்ந்த ஆச்சிரமம் எது என்றோ அது எங்குள் ளது என்றோ அதன் தலைமை ரிஷி யார் என்றோ சுவாமிகள் அறிந்திருக் கவில்லை! எல்லாம் கனவில் நடப்பது போலவே நடந்து முடிந்தன. பிற்கா லத்தில் தன் குருநாதராகிய கண் ணையா யோகீஸ்வர ரிடத்தில் சாத னைகள் பயிலும் போதுதான் தான் சென்றடைந்த ஆச்சிரமம் அகஸ்திய மாமகரிஷியினுடையது என்பதும் தன்னை ஆசிாவதித்தவர் அகஸ்திய மாமகரிஷிதான் என்பதும் அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தார்கள்.

அதன்பின் சுவாமிகள் ஆன்ம தாகம் மீதூரப்பெற்று தமக்கு நல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டக் கூடிய குருநாதர் ஒருவரைத் தேடியலைந்தார்கள். அந்தவேளையில் சுவாமிகளிடம் எவ்வித பொருளாதார வசதியும் இல்லை. சாப்பிடுவதற்குக் கூட வழியில்லாமல் சுவாமிகள் திண்டாடிய சந்தர்ப்பங்கள் பல. உண்பதற்கு உண வில்லை, உடுப்பதற்கு உடையில்லை, படுத்து உறங்குவதற்கு வசதியான இடமில்லை. காடுகளிலும் மேடுகளிலும் சுவாமிகள் அலைந்து திரிந்து கொண்டிருந்தார்கள். தாம்பட்ட கஷ்டங் களையும் துயரங்களையும் சுவாமி அவர்கள் கதை கதையாகக் கூறும் போது கேட்டுக் கொண்டிருக்கும் பக்தர்களின் கண்கள் குளமாகிவிடும்.

''கொடிது கொடிது வறுமை கொடிது. அதனிலும் கொடிது இள மையில் வறுமை" என்று ஔவை பிராட்டி கூறியுள்ளார் அல்லவா? சுவா மிகளை வறுமை விரட்டிய போதும் அவரின் ஆன்மீக தாகம் தணிந்து விடவில்லை. ''உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்ச மில்லை அச்சமென் பதில்லையே" என பாரதியின் கூற்றுக்கு வடிவம் கொடுப்பதுபோல் அச்சமற்ற மனத்துடனும், நெஞ்சுறு தியுடனும் சுவாமிகள் ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டார்கள்.

கால்நடையாகவே பல காடு மலைகளில் ஏறி இறங்கி பல ஞானிக ளையும், மாமகரிஷிகளையும் சந்தித்து அவர்கள் ஆசியைப் பெற்றுக் கொண டார்கள். அவர்கள் மூலம் பல வித்தை களையம் கற்றுத் தேர்ந்தார்கள்.

## சுவாமி தரிசித்த தலங்கள்

இந்தவகையில், எமது குருநாதர் தரிசித்த ஆலயங்கள் எண்ணிலடங்கா. அவற்றுள் மதுரை மீனாட்சி அம்மன் கோயில், பழனி, திருச்செந்தூர், திருப் பரங்குன்றம், சுவாமிமலை, திருத் தணிகை, பழமுதிர்ச்சோலை முதலிய ஆறுபடை வீடுகள், திருவேங்கடம், சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சி காமாட்சி, ஸ்ரீரங்கம், ரிஷிகேஷ், கோதாரிநாத், பத்திரிநாத், ஹரித்துவார், திருப்பதி முதலிய திருத்தலங்கள் குறிப்பிடத்தக்கவை.

எமது குருநாதர் ஆன்மீகப் பயிற்சி பெற்ற ஆச்சிரமங்களில் நீலகிரி மலைச்சாரலில் அமைந்திருந்த அகஸ் திய மாமகரிஷியின் ஆச்சிரமம், ரிஷி கேஷில் அருளொளி பரப்பி நின்ற சுவாமி சிவானந்தரின் ஆச்சிரமம், ஞானானந்தகிரியின் ஆன்மீக ஆச்சிரமம், சுவாமிகளின் குருநாதரான ஸ்ரீகண் ணையா யோகீஸ்வரரின் அம்பத்தூர் மானசயோக ஆன்மீக ஆச்சிரம் என்பன கோடிட்டுக் காட்டக் கூடியவை.

'துன்பமுறவரினும் செய்க துணி வாற்றி
இன்பம் பயக்கும் வினை'

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு அமைவாக துன்பத்தைப் பொருட்படுத் தாமல் சுவாமிகள் மேற்கொண்ட அய ராத முயற்சியின் காரணமாகவும், தமது பூர்வ புண்ணியப்பலன் காரணமாகவும் அகஸ்திய மாமகரிஷியின் ஆசீர்வாதம் பெற்ற சுவாமிகள் தமது பூர்வ புண் ணியப் பலனாய் ஸ்ரீ கண்ணையா கோகீ ஸ்வரரிடம் வந்து சேர்ந்து அவரின் அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமான பிரதம சீடரானார்கள்.

இவ்விடத்தில் ஸ்ரீ கண்ணையா யோகிஸ்வர சுவாமிகளைப் பற்றி எடுத் துரை ப்பது பொருந்தும். இம்மகான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது ஏழாவது வயது முதல் பதினான்கு ஆண்டுகள் அகஸ்திய மாமகரிஷியால், ஆட்கொள்ளப்பட்டு, நீலகிரி மலைச் சாரலில் உள்ள அவர்தம் ஆச்சிர மத்தில் சாதனை பயின்றவர். மிகுந்த ஆன்ம சக்தியும் தவவலிமையும் கொண்ட அகஸ்தி மாமகரிஷிகளி டத்தில் நேர்முகமாக ஒன்று இணை ந்து உலகம் இதுவரை அறிந்திராத உயர்ந்த ஆன்ம ரகசி யங்கள், மகரிஷிகள் மர்மமான முறை யில் பிறர் அறியாமல் மறைத்து பாது காத்துவந்த மகா சாதனைகள், காயத் திரி குப்த விஞ்ஞானம், யந்திர, மந்திர, தந்திர சாத்திரங்கள் இரசவாதம், வைத்தியம், ஜோதிடம் முதலிய அரிய வித்தை களைக் கற்றுத் தேர்ந்தவர். உலகைப் படைத்து, காத்து அழிக்கும் ரிஷித்தன்மை கைவரப் பெற்றவர். இத் தகு பெருமைவாய்ந்த ஸ்ரீ கண்ணைய யோகீஸ்வரர் அவர்கள் தமது மனைவி மக்களுடன் இல்ல றத்தில் இருந்து கொண்டு, உலகப் பற்றற்று தாமரை இலைத் தண்ணீர் போல இவ்வுலகில் வாழ்ந்தார்.

காவியுடுத்து கமண்டல மேந்தா மல், இப்பூவுலகைப் பொய் எனக் கூறி ஒதுக்காமல், வேற்று மதத்தவரின் உள் ளம் புண்படப் பேசாமல் உலகுடன் ஒன்றி வாழ்ந்து, தெய்வத்தை உணர்ந்து தெய்வமாகவே வாழ்ந்தவர். அத்துடன் தம்மை அண்டி வந்தவரையும் தெய்வ மாக்க வழிகாட்டிய ஆத்மஞானியவர். ஜீவன் முத்தரான இம்மகான் 'துறவு உள்ளத்திலேயே அன்றி வெளி வேடத்தில் இல்லையென' அடிக்கடி வலியுறுத்திக் கூறுவார்.

மகரிஷிகள் உலகின் பரிணா மத்தை நிர்ணயிக்கும் நாளும், அவர் களுடைய அருள் காந்த சக்தி பூவுல கில் நிறைந்திருக்கும் நாளுமாகிய வைகாசி பௌர்ணமித் தினத்தில் இம் மகாயோகி அவதரித்தார். பூவுலக னைத்தும் மாம கரிஷிகளின் பணியைப் பரப்பும் பொருட்டு தன் வாழ்நாளை மூன்று முறை நீடித்துள்ளதுடன் 117 வருட காலம் வாழ்ந்து கார்த்திகை மாதப் பௌர்ணமி தினத்தில் சீவன் முத்தரானார்.

தமது ஸ்தூல உடலைத் துறப் பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு தமது பிரதம சீடரான சுவாமியவர்களை தம்மருகில் அழைத்த கண்ணையா யோகீஸ்வரர் அவர்கள் கூறிய வார்த் தைகள் இங்கு நினைவு கூரத்தக்கன. "என்பணியை நீயே தொடர்ந்து பரப்ப வேண்டும். என்னுடைய குருதேவரின் நேர்முக ஆன்மீக தீட்சை பெற்ற நீ (சுவாமி முருகேசு) ' உலகம் புகழும் ஆன்மீக உத்தமனாக வாழ்வாய்" என்பதே கண்ணைய யோகிஸ்வரர் அவரது சீடரான எம்குருநாரிடம் கூறிய இறுதி வார்த்தைகளாகும்.

இந்த கண்ணையயோகீஸ்வரரின் ஆசிர்வாதத்தினைால், உலகுக்கு உயர் ஞான வழி காட்டுதற்காக மகாரிஷி களால் நேர்முகமாகத் தேர்ந் தெடுக்கப் பட்ட எம்குருநாதரை, அவரின் குரு நாதர் சூட்சுமமாக அவருள் இருந்து ஆன்மீக நெறிப்படுத்தி வருகிறார். சுவாமிகளும் தமது குருநாதரின் ஆன்மீகப் பணியைத் தடைப்படாது தம்மால் இயன்றவரை செயற்படுத்தி உலகம் உய்ய வழிகாட்டி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கண்ணையா யோகீஸ்வரரின் சீடராக இருந்தபோது, சித்தி மனிதன் பயிற்சி, யோகவித்யா, பரிணாமப் பூர்த்தி சாதனை, காயத்ரீ குப்த விஞ்ஞானம், சித்த யோகபாடம், மந்திர, தந்திர, யந்திர, வைத்திய இரசவாத சாதனைகள், மகரிஷிகள் மர்மமான முறையில் மறைத்து வைத்திருந்த பல்வேறு உலகம் அறிந்திராத உயர் சாதனைகள் முதலிய வற்றை சிரத்தையுடன் குரு-சிஷ்ய பாவத்தில் கற்றுத் தேர்ந்தார்.

சுவாமியவர்கள் தமது குருதேவரிடம் பயின்ற சாதனைகளில் மிக முக்கிய மான சாதனை பிரபஞ்ச சக்திகள் அனைத்தையும், பஞ்ச கோசங்களையும் தன்வசப்படுத்தி மனித உடலிலேயே அப்பிரபஞ்ச மூல சக்தியை விழிப்பிக்கும் காயத்திரி சாதனையாகும். இச்சாதனையால் சுவாமிகள் அணிமாதி அஷ்ட சித்திகளையும் பெற்று மனித உடலுடன் வாழும் தெய்வமாக ஜீவன் முத்தர் நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். இன்று சுவாமியவர்களை நாடிவரும் பல்லா யிரக்கணக்கான அன்பர்கள் அவ் வுயரிய உண்மையை நேரிலே கண்டு அனுப விக்கின்றார்கள்.

எம் குருநாதரின் இவ்வரிய ஆற்றலை முன்கூட்டியே அறிந்து கொண்ட கொல்லிமலைச் சித்தர் ஒருவர் சுவாமியவர்களைப் பார்த்து 'நீ வருங் காலத்தில் காயத்திரி சித்தர் என உலகமக்களால் போற்றப்படுவாய்' என திருவாய் மலர்ந்து ஆசிர்வதித்தமையை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

எம் குருநாதர் சாதனைகள் பயின்று கொண்டிருந்த காலத்தில் அவரின் குருநாதர் ஒரு முகவரியைக் கொடுத்து அங்கு சென்று ஒருமகானைச் சந்தித்து ஆசிர்வாதம் பெறுமாறு பணித்தார். அது ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு சனசந்தடி குறைந்த ஒரு குக்கிராமம் புகையிரதத்தில்தான் பயணம் செய்ய வேண்டும். சுவாமிகளும் தாம் முன்பின் அறிந்திராத அக்குக்கிராமத்தை நோக்கி புகை வண்டியில் பயணமானார். எந்த புகைவண்டி நிலையத்தில் இறங்குவது என்று தெரியாது விழித்த சுவாமிகள் அருகில் தம்முடன் பயணம் செய்த ஒருவரிடம் முகவரியைக் கொடுக்க. அவரும் புரியாத மொழியில் பொறுமை யோடு நித்திரை செய்யும் படியும் குறிப்பிட்ட புகையிரத நிலையம் வந்ததும் தான் எழுப்பி விடுவதாகவும் கூறினார். சுவாமிகளும் தம்மை மறந்து புகைவண்டியில் தூங்கிவிட்டார்.

மெய்மறந்து தூங்கிக் கொண்டிருந்த சுவாமிகளை அருகில் அமர்ந்திருந்த அப்பயணி தட்டி எழுப்பி இறங்கும் இடம் வந்துவிட்டதாக சைகை காட்டினார். சுவாமிகளும் எழுந்து தமது கைப்பையைத் தூக்கிக் கொண்டு புகையிரதத்தைவிட்டு இறங்கினார். நேரம் நடுநிசி சுமார் மூன்று மணியிருக்கும், புகையிரத நிலையம் இருளில் மூழ்கிக் கிடந்தது. ஒருவர் 'காஸ்லாம்' புடன் அங்கு நின்றார். சுவாமிகள் இறங்கியதும் அவரும் அதே ரயிலில் ஏறிப் போய் விட்டார். தனித்து விடப்பட்ட சுவாமிகள் செய்வதறியாது திகைத்து நின்றார்.

சுவாமிகளுக்கு அப்போது இருபத் தெட்டு வயதிருக்கும். கட்டிளம் காளைப் பருவம். நெஞ்சில் துணிவு இருந்தாலும், பாம்பு போன்ற விஷஜந்துக்கள் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பயம் மனதில் எழுந்தது. கும்மிருட்டு பாதையொன்றும் கண்களுக்குத் தென்படவில்லை என்ன செய்வது என சுவாமிகள் திணறிய போது மின்னல் போன்ற ஒளிக்கீற்று தோன்றித் தோன்றி மறைந்தது. அவ்வெளிச்சத்தில் ஒரு ஒற்றையடிப் பாதை தென்பட அதன் வழியே சுவாமிகள் நடக்கத் தொடங்கினார்.

சற்றுத் தூரம் சென்றபின் 'ராம் ராம்' என்ற மந்திர ஒலி வெகு தூரத்திலிருந்து வந்து காதில் விழுந்தது. தொடர்ந்து நடந்து கொண்டிருந்த சுவாமிகளின் கண்களுக்கு ஒரு மலையுச்சியில் வெளிச்சம் தெரிவது தென்பட்டது. அதனை நோக்கி நடந்து அவ்விடத்தை அடைந்தார் சுவாமிகள் அப.போது நேரம் காலை நான்கு மணி இருக்கும்.

## சுவாமியும் சீதாபிராட்டியும்

இலை குழைகளால் வேயப்பட்ட அந்த பர்ணசாலையில் ஆஜானுபாகுவான ஒரு மகான் அமர்ந்து 'ராம் ராம்' என்ற மந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். பயபக்தியுடன் பர்ணசாலை வாயிலில் நின்று கொண்டிருந்த சுவாமிகளை, அம்மகான் கண்விழித்ததும் பார்த்தார். சுவாமிகள் முகவரியை அவரிடம் கொடுத்து அரைகுறை ஆங்கிலத்தில் தாம் வந்த விடயத்தைக் கூறினார். அவர் இந்த முகவரிக்கு இன்னும் சற்றுத் தொலைவு செல்ல வேண்டும் எனவும் முதலில் சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வரும்படியும் சுவாமிகளுக்கு கொல்லைப் புறத்தைக் காட்டினார். அங்கு சிறிய அருவி ஒன்று ஓடிக் கொண்டிருந்தது அதில் கைகால் முகம் கழுவிவிட்டு சுவாமிகள் வந்தார்கள்.

காலை ஆகாரத்திற்காக சுவாமியை பர்ணசாலையினுள் தரையில் அமரச் செய்தார் அந்தமகான். சிறிது நேரத்தில், உலகின் அழ கெல்லாம்



ஒன்று சேர்ந்தது போன்ற ஒரு பேரழகுப் பெண் அங்கு தோன்றினார். சுவாமிகள் வியப்புடன் அவரை நோக்கினார். அப்பெண்ணின் அழகை வர்ணிக்க வார்த்தைகளே இல்லையென சுவாமிகள் அச்சந்தர்ப்பத்தை கூறும் போது எமக்கு அப்பேரழகைக் காணக் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் தோன்றும்.

அப்பெண்ணின் கையில் இரண்டு இலைகளால் சேர்த்து இழைக்கப்பட்ட இலையில் இரண்டு தோசைகள் இருந்தன ஒரு தோசையின் மேல் இனிப்புப் பதார்த்தம் ஒன்றைத் தடவி அதன் மேல் மற்றொரு தோசையால் மூடப்பட்டிருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை சுவாமிகள் உண் டார்கள். அதன் சுவைபற்றி சுவாமிகள் குறிப்பிடும் போது அச் சுவையை தாம் இதுவரை அனுபவித்த தில்லை எனவும் அதனைத் தேவாமிர்தம் எனவும் குறிப்பிட் டுள்ளார்கள்.

சாப்பிட்டு முடிந்ததும் அம்மகான் சுவாமியைப் பார்த்து குறிப்பிட்ட முக வரிக்கு செல்வதற்கு தயாராகுமாறு கூறினார். அப்போது சுவாமிகள் அவரைப்பார்த்து உணவு பரிமாறிய பெண்ணிடம் விடைபெற எண்ணி அவரைக் காண வேண்டும் என அம்ம கானிடம் கேட்க, அம்மகான் சுவாமி களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழத் தொடங்கி விட்டார். சுவாமிகளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ஒரே குழப்பம் தான் அப்பெண்ணைப் பார்க்க நினைத்தது தவறோ? இம்மகான் என்னை தவறாகப் புரிந்து கொண் டாரோ? எனக் கலங்கினார். கலக் கத்துடன் தான் தவறு செய்திருந்தால் மன்னிக்குமாறும் எங்கள் வழக்கப்படி வீட்டில் உள்ளவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுவது சம்பிரதாயம் என்றும் அரைகுறை ஆங்கிலத்தில் எடுத்துக் கூறினார்.

அப்போது அம்மகான் சுவா மியை இறுக அணைத்துக் கொண்டு, உமக்கு தோசை பரிமாறியவர் சாட்சாத் சீதாதேவியே என்றும் அவர் என் கண்களுக்கு மட்டும்தான் தென்படுவார் என இறுமாந்திருந்தேன் அவர் உங்கள் கண்களுக்கு தென்பட்டு விட்டாரே நீங்கள் எவ்வளவு தவம் செய்தவர் என்று எண்ணியே கண்ணீர்விட்டேன் எனக் கூறிய போது சுவாமிகளுக்கு மயிர்க்கூச்செறிந்தது.

இவ்வாறு சீதாபிராட்டியை நேரில் தரிசித்து அவர் கையாலேயே தோசை சாப்பிட்ட சுவாமிகளின் பெருமையை எவ்வாறு எடுத்துரைப்பது?

சுவாமிகள் சிறிது காலம் ரிஷிகேசத்தின் ரிஷி என்றழைக்கப்படு பவரும், சுவாமி சிவானந்தர் அவர்களின் ஆச்சிரமத்தில் தங்கி ஆன்மீகப் பயிற்சி பெற்று வந்தார்கள். அச்சமயம் சுவாமி சிவானந்தர் அவர்கள் எம் குருநாதரை நோக்கி 'ஈழத்தில் மலைநாடு சிவபெருமான் வாழும் திருநாடு அங்கு சிவாலயம் அமைத்து மக்களுக்குத் தொண் டாற்றுங்கள்" எனக் கூறினார். சுவாமி சிவானந்தரின் அருள்வாக்கு பத்து வருடங்களின் பின் நுவரெலியாவில் ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயமாகப் பரிணமித்ததுள்ளதல்லவா? அந் நாட்களில் இலங்கையில் இருந்து செல்லும் பக்தர்களிடம் சுவாமி சிவானந்தர் அவர்கள் "முருகேசு நலமாக இருக்கிறாரா'' என நலம் விசாரித்து அவரிடம் இதனைக் கொடுங்கள் எனத் தனது கைபட எழுதிப் பிரசாதங்களை அனுப்பி வைப்பார் என்பதில் இருந்து சுவாமிகளிடத்தில் அவர் வைத்திருந்த அன்பை அறிந்து கொள்ளலாம்.

பலநூறு வருடங்கள் அரிய தவம் புரிந்து தனது வயது என்ன வென்பதே தெரிந்திராத ஞானானந்தகிரி பகவான் அவர்களின் தொடர்பும் பூர்வ புண்ணிய பலனாய் சுவாமிகளுக்கு ஏற்பட்டது. தன்னை அண்டியவர்களுக்கு தயங்காது ஞானத்தை அள்ளி வழங்கிவந்த பகவான் சுவாமிகளிடத்து பேரன்பு கொண் டிருந்தார். பலவகை ஆன்ம ரகசியங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை சுவாமிகளுக்கு போதித்து ஆசீர் வதித்துள்ளார். இப்பகவானின் நல்லாசியும் சுவாமிகளுக்கு ஆன் மீகப்பலம் பெருக மிகவும் உறுது ணையாயிற்று.

மகரிஷிகளின் அருளாசி பெற்ற சுவாமிகளுக்கு உலகிலேயே மாபெரும் தாந்திர சாதராகத் திகழ்ந்த ஸ்ரீமாலி சுவாமிகளைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. சுவாமிகளின் ஆன்மீக தாகத்திற்கு மதிப்பளித்த ஸ்ரீமாலி சுவாமிகள் வட இந்தியாவில் உள்ள சித்திர கூட பர்வத மலையில் (இராமா யணத்தில் வருவது) அமைந் துள்ள தமது ஆச்சிரமத்தில் வைத்து எம் குரு நாதருக்கு தாந்திர சாத னையைப் பயிற்றுவித்தார்கள் இதன் பின் நீல கிரியில் வாழ்ந்த ஓர் தாந்திர சித்தருடன் இணைந்து காளிதேவியை தாந்திரிக முறைப்படி சாதனை செய்து சித்தி பெற்றார். இது எவரும் செயற்கரிய சாதனையாகும்.

அஸ்வாருட மந்திரம் என்பது தவவலிமை மிக்க ரிஷிகளின் சக்தி நிறைந்த மகாமந்திரமாகும் இது தீய சக்திகளை வேருடன் அழிக் கவல்லது. அஸ்வாருடம் ஜெபித்தால் விஸ்வ முர்த்தியையும் வெற்றி கொள்ளலாம் என்பது மகான்களின் அனுபவ வாக்கு. அதி சக்திவாய்ந்த பீஜாட் சரங்களையும் ஒலியமைப்பையும் கொண்டது இம்மந்திரம். இம்மந்திரம் எமது குருநாதருக்குக் கிடைத்த பின்னணியும் சுவையானது.

## சுவாமியும் இஸ்லாமியச் சித்தரும்

சுவாமிகள் ஆந்திராவில் இருக்கும் போது நண்பர் ஒருவர் அங்கு ள்ள ஒரு வனத்தில் இஸ்லாமிய சித்தர் ஒருவர் இருப்பதாகவும் அவரைக்காணத் தம்முடன் வரும்படியும் அழைத்தார். சுவாமிகளும் ஆர்வத்துடன் நண்பருடன் புறப்பட்டார்.

அது ஒரு பயங்கரமான காட்டுப் பிரதேசம். ஒற்றையடிப்பாதை வழியாக இருவரும் நடந்து சென்று கெண்டிருந் தபோது திடீரென மேகம் கறுத்தது காற்றுடன் சேர்ந்து மழைபொழிய ஆரம்பமானது. இருவரும் செய்வத றியாது தவித்தனர். அவ்வேளை அங்கு தோன்றிய இஸ்லாமியர் ஒருவர் "நீங்கள் எங்கே போகிறீர்கள்" எனக் கேட்டார். அதற்கு சுவாமிகள் குறிப்பிட்ட இஸ்லாமிய சித்தரைச் சந்திக்கப் போவ தாகக் கூறினார்.

உடனே அந்த இஸ்லாமியர் நீங்கள் போகும் இடம் வெகு தொலைவில் உள்ளது இன்னும் ஒரு நாள் பொழுது நடந்து சென்றால் தான் அவ்விடத்தை அடையலாம் மழையும் வந்து விட்டது. இருட்டில் நடக்க முடி யாது. ஆதலால் அருகில் ஒரு பள்ளி வாயல் இருக்கிறது அங்கே இன்றிரவு தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டு நாளை உங்கள் பயணத்தைத் தொடருங்கள் எனக் கூறினார். சுவாமிகளும் நண்பரும் அவர் கூறிய இடத்திற்கு சென்ற போது அங்கே அழகிய பள்ளிவாயல் ஒன்று தென்பட்டது இருவரும் அங்கு சென்றனர். அங்கிருந்த ஒருவர் இவர்களை வரவேற்று இரவு உணவு கொடுத்து உபசரித்து உறங்குவதற்கு வசதியும் செய்து கொடுத்தார்.

காலையில் எழுந்த இருவரும் பள்ளி வாயல் பெரியவிடம் விடை பெற்று தமது பயணத்தைத் தொடர்ந்து பெரும் சிரமத்திற்கு மத்தியில் இஸ்லாமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தரின் இருப்பிடத்தை அடைந்தனர். சித்தர் இவர்களை அன்புடன் வரவேற்றார். இவர்கள் தாங்கள் நேற்றுப் புறப்பட்டு வந்தபோது மழைபொழிந்ததையும் அங்குள்ள பள்ளிவாயல் ஒன்றில் தங்கி இரவுப் பொழுதைக் கழித்ததையும் கூறினர். அப்போது சித்தருக்கு அருகில் அமர்ந் திருந்த அப்பகுதி வன அதிகாரி இவர்களைப் பார்த்து இவ்வனத்தில் பள்ளி வாயல் எங்குள்ளது என வினவினார். அப் போது இஸ்லாமிய சித்தர் தம்முள் முறு வலித்துக் கொண்டார்.

வன அதிகாரியின் கூற்றில் இருந்து அக்காட்டில் எக்கட்டிடமும் இல்லை என்பதை அறிந்த பின்புதான் தங்களுக்கு பள்ளிவாயல் அமைத்து புகலிடம் தந்தது சித்தரின் சித்து விளையாட்டு என்பது இருவருக்கும் புரிந்தது. பின்பு இஸ்லாமிய சித்தர் சுவாமிகளை பார்த்து இருபது வருடங்க ளுக்குப் பின்பு உனக்கு அஸ்வாருடம் கிடைக்கும்.' என திருவாய் மலர்ந்தரு ளினார்கள்.

இது நடந்து, சுமார் இருபது வருடங்களுக்கு பின் சுவாமிகள் கொல்லி மலைக்குச் சென்றிருந்த போது அங்கிருந்த சித்தர் ஒருவர் சுவாமிகளுக்கு அஸ் வாருட மந்திரத்தை உபதேசித்து தீட்சை அளித்தார்கள். இஸ்லாமிய சித்தரின் தீர்க்கதரிசன மகிமையை எவ்வாறு எடுத்துரைப்பது?.

## சுவாமியும் மகான்களும்

இத்துடன் எம்குருநாதருக்கு பல்வேறுபட்ட மகன்களின் தொடர்பும் ஏற்பட்டது. அவர்கள் ஆந்திராவைச் சேர்ந்த மும்முடிபுரம் பாலயோகி சுவாமிகள், ஸ்ரீ அரவிந்தர் சுவாமிகள், ஸ்ரீ ரமணமாமகரிஷி, யுகரிஷி ராம்சர்மா, ஆச்சார்யா சுவாமிகள், நானாகரு சுவாமகள், காகபுகண்ட தலையாட்டிச் சித்தர் வாமிகள், ஈஸ்வரப்பட்ட மாமரிஷி, சத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள், சுவாமி சிவானந்தர், பகவான் யோகி ராம் சுரத்குமார் சுவாமிகள், பூண்டி சுவாமிகள், ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ், ஸ்ரீ பாலயோ கிஸ்வரர், ஸ்ரீ பாலயோ கிஸ்வரார், அன்னை மாயி மாதா, ஸ்ரீ ராஜ்மார் சுவாமிகள், ஆந்திராவை சேர்ந்த ஜகத்குரு சித்தேஷ்வ நந்தா பாரதி சுவரிகள் போன்ற மகான்கள் குறிப்பிடத் தக்கவகள். இவர்களின் நேர்முக ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட சுவாமிகள் பதினெட்டுச் சித்தர்கள், சப்தரிஷிகள், க்ரியாபாபா, இராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகா னந்தர், சாரதா தேவி அம்மையார், நாராயண குரு சுவாமிகள், வீரபிரம் மேந்தரா சுவாமிகள், அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுவாமிகள் ஆகியோரின் அருளையும் ஆசீர் வாதத்தையும் சூட்சுமமான தியானத்தின் மூலம் பெற்றுக் கொண்டார்கள், தாம் பெற்ற அருட் கொடைகளை இவ்வையகம் வளம்பெற வழங்கி எமக்கெல்லாம் ஆன்ம வழிகாட்டி வருகிறார்கள்.

## ஸ்ரீ சிவபாலயோகி மஹராஜ்

இவ்விடத்தில் சுவாமிகளிடத்து மிகுந் அன்பு கொண்டிருந்த ஸ்ரீ சிவபாலயோகி மஹராஜ் அவர்களைப் பற்றிச் சிறிது கூற வேண்டும். இவர் தமது பன்னிரெண்டாவது வயதில் அருட்கடாட்சம் பெற்று தொடர்ந்து பன்னிரண்டு வருட ங்கள் யுகதபஸ் இயற்றியவர் சாட்சாத் சிவபெருமானே இவர்முன் தோன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை ஆசீர்வதித்தார் என்றால் இவரின் பெருமையை என்னென்பது?.

இம்மகாயோகிக்கு சிவனருளால் நர்மதை ஆற்றில் கிடைத்த சிவலிங்கம் மிகப்பெரும் சக்திவாய்ந்தது. இந்த லிங்கமே அன்னாரின் அருளாசியுடன் எமது குரு நாதருக்கு வழங்கப்பட்டது இதனை எம்குருநாதர் நுவரெலியாவில் இலங்கா தீஸ்வரர் என்ற பெயரில் ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்துள்ளார்கள். 1978ல் பிரதிஸ்டை செய்யப்பட்ட இவ் வாலயத்தில் மகரிஷிகளின் ஆணைப்படி ஸ்ரீ காயத்திரி தேவியின் உருவச்சிலையும், பிரதிஸ்டை செய்யப்பட்டதுடன் காயத்திரி பீடமும் சுவா மிகளால் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த சிவலிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட முன் நடந்த சம்பவங்களை இங்கு எடுத்துக் கூறுவது பொருத்த மானது. சுவாமிகளுக்கு ஸ்ரீ சிவபாலயோகி மஹாராஜ் அவர்கள் சிவலிங்கம் வழங்கியதும் சுவாமிகள் அதனை கொழும்பு மாநகரில் உள்ள தமக்கு வேண்டிய அன்பர் ஒருவர் இல்லத்தில் அதனைக் கொணர்ந்து வைத்துவிட்டு அதற்கு கோயில் கட்டு வதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் சுவாமிகளின் தவவிமையையும் ஆன்மீக ஆற்றலையும் உலகம் அறிந்திருக்க வில்லை இலைக்குள் மறைந்த ஞானக் கனியாய் சுவாமிகள் வாழ்ந்த காலம் அது.

சுவாமிகள் ஆலயம் அமைக்கப் போகிறார் என்ற செய்தியை அறிந்து, சுவாமி மீது பொறாமை கொண்ட சிலர் அதனைத் தடுத்து நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளத் தொடங்கினர்.

பிரபல தொழிலதிபர் ஒருவர் இத்தீய சக்திகளுக்குத் தலைமை தாங்கினார். இதன் பயனாக நர்மதை ஆற்றில் கண்டெடுக்கப்பட்டு சுவாமி களுக்கு ஸ்ரீ சிவபாலயோகியால் வழங்கப் பட்ட சிவலிங்கம் திரும்பவும் இந்தியா வுக்கு கொண்டு செல்லப்பட்டது.

சுவாமிகள் முயற்சியைக் கைவிட வில்லை. முயற்சி திருவினை யாக்கும் என்பதற்கமைவாக, சுவாமிகளின் அயராத தியானத்தாலும், ஆன்மீக ஆற்ற லாலும் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட சிவலிங்கம் மீண்டும் சுவா மிகளின் கரத்தில் கிடைத்தது. பல எதிர்ப் புகளுக்கு மத்தியில் சுவாமிகளுக்கு கிடைத்த பெரு வெற்றி இது.

கொழும்பு மாநகரில் இந்த லிங்கத்தை பிரதிஷ்டை செய்ய சுவாமிகள் எடுத்த முயற்சிகள் கைகூடாததால், இதனை நுவரெலியாவில் கொணர்ந்து பிரதிஷ்டை செய்யத் துணிந்தார்கள் அதன் பயனாக இன்று நுவரெலியாவில் இலங்காதீஸ்வரர் ஆலயம் ஆலவிருட் சமாய் அருளொளி பரப்பி நிற்கின்றது.

நீலகிரியைச் சேர்ந்த ஓர் சித்தரின் ஆசிர்வாத்துடன் தாந்திர மாகாளியும், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த நானாகரு என்னும் மஹானுபாவரின் ஆசிர்வா தத்துடன் ராதாகிருஷ்ணரும், மூல குருவாகிய அகஸ்திய மாமகரிஷியும், காயத்திரி மந்திரத்தின் தந்தை எனத்தக்க விஷ்வாமித்திர மகரிஷியும், திருப்பதி வெங்கடாஜலபதியும் பிரதிஷ்டை செய்யப்பட்டு இவ்வாலயம் சிறப்புற்ற தோடு 1986ல் இதற்கு குட முழுக்கும் இனிது நடந்தேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நுவரெலியாவில் இலங்காதீஸ்வரர் ஆலயமும், காயத்திரி பீடமும், மிகப் பிரமாண்டமான தியான மண்டபமும் அமைந்துள்ள இடத்தைப் பற்றி இங்கு குறிப்பிடல் வேண்டும். இவ்விடம் முன்பு ஒருவருக்கு சொந்த மாயிருந்தது. எவரும் இந்த இடத்தை வாங்குவதற்கு முன்வரவில்லை. காரணம் இங்கு பூதகணங்களும், துஷ்ட்ட ஆவிகளும் சஞ்சரித்து வந்தன. இங்கு வருபவர்களை அவைகள் பயமுறுத்தின. இதனால் இந்நிலப்பரப்பை எவரும் வாங்க முன்வரவில்லை.

சுவாமிகள் இவ்விடத்தைத் துணிவுடன் வாங்கினார்கள். தமது தபோ சக்தியால் சகல பூதகணங்களையும் துஷ்ட ஆவிகளையும் துரத்திப் புனித பூமியாக் கினார்கள். தற்போது பூத கணங்கள் இப்பகுதியை காவற் தெய்வங்களாகமாறி பாதுகாத்து வருகின்றன.

கொழும்பில்தான், சுவாமி அவர்களுக்கு எதிர்ப்பு இருந்தது என்பதற்கில்லை. நுவரெலியாவிலும் சுவாமி அவர்களுக்கு எதிராக பலர் கிளர்ந்து எழுந்தனர். தங்களால் முடியாத ஒன்றை இச் சாதாரண மனுஷர் சாதிக்கப் போகின்றார் என்ற வயிற்றெரிச்சலும், பொறாமை உணர்வும் கொண்ட இவர்கள் சுவாமியவர்களை கொலை செய்வதற்கு கூடத் துணிந்து பல சதி முயற்சிகளில் ஈடுபட்டனர். மகரிஷிகளின் அருளால் இவையொன்றும் எம் குருநாதரைப் பாதிக்கவில்லை. மாறாக குருநாதரின் புகழ் நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்தே வந்தது.

இங்குள்ள இலிங்கேஸ்வரப் பெருமானுக்குபிரதி பௌர்ணமி தினத் தன்று, சிவராத்திரி தினத்தன்றும் அபிடேகத்துடன் கூடிய பெருவிழா நடைபெற்று வருகிறது. பக்தர்கள், எம் பெருமானுக்கு பால், இளநீர் கொண ர்ந்து தம் கரங்களாலே அபிடேகம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப் படுகிறது.

அபிஷேகத்தைத் தொடர்ந்து பிரதி பௌர்ணமி தினங்களும் சுவாமி நடாத்தும் மகாயாகத்தில் பக்தர்கள் ஆகுதி வழங்கவும் சுவாமிகள் ஏற்பாடு செய்து தந்துள்ளார்கள்.

காயத்திரி பீடத்திற்குள் பக்தர்கள் கால்பதித்த மாத்திரத்திலேயே தமது மிருக குணங்கள் நீங்கப் பெற்று தெய்வீக காந்த சக்தியால் ஈர்க்கப் படுவதும், தமது மனக்குறைகள் நீங்கி ஆனந்த பரவச நிலை அடைவதும், சுவாமிகளின் அருளாசியால் மலை போன்ற துன்ப துயரங்கள் பனிபோல மறைய கொடிய நோய்கள் விரண்டு ஓட மகிழ்ச்சி வெள்ள த்தில் நீந்தித் திளைப்பதும் நாளாந்தம் நடைபெறும் நிகழ்வுகளாகும்.

சுவாமிகளின் அருளாசி பெற்ற அன்பர்கள் தமது அனுபவங்களைக் கூறக் கேட்கும் போது எமக்கு, இப்படியும் நடக்குமா என வியப்பும் மலைப்பும் தோன்றும், மரணத்தையே விரட்டியடிக்கக் கூடிய வல்லமை பொருந் திய சுவாமியவர்களின் காலத்தில் அவரை நேர்முகமாக தரிசித்து வாழும் பாக்கியம் எமக்குக் கிடைத்தது எமது பூர்வ புண்ணிய பயனன்றி வேறென்ன?

### உலக ஆன்மீக பாராளுமன்றத்தில் சுவாமிகள்

எமது குருநாதரின் ஆன்மீகச் சேவை உலகளாவிய ரீதியில் விஸ் தரிக்கப்பட்ட வேளையில், புதுடெல்கியில் துர்க்கைச் சித்தரால் 1994ம் ஆண்டு உலக ஆன்மீகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றம் கூட்டப்பட்டது. இப்பாராளு மன்றத்தில் எங்கள் குருநாதர் தலைவராகத் தேர்ந் தெடுக்கப் பட்டார்கள். இவர் தலைவராகத் தேர்ந்தெக்கப்பட்ட சம்பவமும் சுவை யானதே.

இப்பாராளுமன்றத்திற்கு 171 நாடுகளில் இருந்து மிகச் சக்திவாய்ந்த ஆன்ம ஞானிகள் வருகை தந்திருந்தனர். இவர்கள் தாங்கள் கற்ற வித்தைகளை தத்தமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் செய்து காட்டினர். இவர்கள் செய்த சாத னைகளை சுவாமி அவர்கள் தமது திருவாயால் கூறும்போது வியப்பும் மலைப்பும் தோன்றும்.

ஒரு ஆன்மவாதி விண்ணிலே பறந்து காட்டினார். மற்றவர் மரணித்த ஒருவரின் சடலத்திற்கு உயிரூட்டி அதனைப் பேசச் செய்தார். இன்னொ ருத்தர் மனோசக்தியால் பிரமாண்டமான வீடொன்றை கட்டி எழுப்பினார். இவையெல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த எம் குருநாதர் அந்த மாபெரும் சபையில் சிறிது நேரம் சொற் பொழிவாற்றி னார்கள். எவ்வித சலனமும் இன்றி ஆடாது அசையாது சபையினர் சுவாமிகளின் பேச்சை செவிமடுத்துக் கொண்டிருந்தனர். ஆற்றொ ழுக்குப் போன்ற அவரின் பேச்சாற்றலும், கருத்துச் செறிவும் சபையினரை வியப்பில் ஆழ்த்திவிட்டன. அதன் பின் ஒரு ஆன்மஞானி தமக்கென ஒதுக்கப்பட்ட நேரத்தில் அனைத்துலக ஆன்மவாதிகளையும் நோக்கி ''மான சீகமாக நான் மலர்களை வீசுகின்றேன் அவை உங்கள் திருப்பாதங்களை வந்தடையும்'' எனக் கூறி தியானத்தில் ஆழ்ந்தார். என்ன ஆச்சரியம், அந்த ஆன்மஞானி கூறியது போல் மானசீகமாக வீசிய றோஜா மலர்கள் அனைத்தும், அங்கு கூடியிருந்த ஆன்ம வாதிகள் எவரது திருப் பாதங்களுக்கும் செல்லாமல் எம் குருநாதரின் திருவடியில் வந்து சங்க மமாகி அவர் பாதக்கமலத்தை அலங் கரித்தன. அவ்வளவுதான் அனைத்து நாட்டு ஆன்மஞானிகளும் எவ்வித மறுப்புமின்ற எம்குருநாதரை தலைவராக ஏகமனதாக தேர்ந் தெடுத்தனர்.

சுவாமியவர்கள் நுவரெலியாவில் காயத்திரி பீடம் அமைத்து நல்ல முறையில் நடாத்தி வருகையில் அவர் உள்ளத்தில் இவ்வமைப்பை இலங் கையின் பலபாகங்களில் மட்டுமல்ல உலகலாவிய ரீதியில் காயத்திரியின் மகிமையை பரவச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உதயமாகியது. மகரி ஷிகள் சுவாமிகளின் எண்ணத்திற்கு வலிமையூட்டி செயற்படுத்தத் தொட ங்கினர். இதன் விளைவாக கிழக்கு மாகாணத்தில் நெற்கதிர் அசைந்தாடும் விவசாயக் கிராமமாம் திருக்கோயிலில் உள்ள சின்னத்தோட்டம் என்னும் இயற்கை சூழலும் அமைதியும் நிறைந்த இடத்தில் நிமிர்ந்து நின்ற ஆலவிருட்சத்தின் அருகே 1987ம் ஆண்டு சுவாமிகள் காயத்திரி ஆலயம் ஒன்றை அமைத்தார். இன்றும் இங்கே பூசை வழிபாடு நடைபெற்று வருகிறது. இவ்வாலயம் உருவாவதற்கு சுவாமிக்கு உறுதுணையாக இருந்தவாகள் தம்பிலுவில் கிராமத்தைச் சேர்ந்த திரு.ச.சாம்பசிவம் என்பவரும், திருமதி செல்லம்மா என்பவரும் ஆவார்கள்.

திருப்பழுகாமத்தைச் சேர்ந்த பொறியியலாளரான திரு.எம். இரவீந்திரன் அவர்கள் பண்டார வளையில் நீர்ப்பாசன பிரதிப்பணிப் பாளராகக் கடமை புரியும் போது, தமது குழந்தை இறந்துவிட்ட சோகத்துடன் சென்று நுவரெலியாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி அவர்களின் பாதாரவிந் தங்களைச் சரணடைந்தார்கள். இப்பெருமகன் அக்க ரைப்பற்று 'திருக் கோவில் வீதியின் அருகில் தம்பிலுவில் கிரா மத்தில் ஐந்து ஏக்கர் நிலத்தை வாங்கி சுவாமியவர் களுக்கு அன்பளிப்புச் செய்தனர். அவ்விடத்தில் இன்று தம்பிலுவில் காயத்திரி ஆலயமும், காயத்திரி தபோவனமும் அமைந்து அருள் மணம் பரப்பி நிற்கின்றன.

1987ம் ஆண்டளவில் திரு.ச.செ. சிவபாதசுந்தரம் என்பவர் சுவாமிகளிடம் சரணடைந்து பொறியியலாளர் திரு.எம். ரவீந்திரன் அவர்களின் நட்பைப் பெற்றார்கள் இவர்கள் இருவரும், திரு. செல்வநாயகம் அவர்களும் மட்டக்களப்பில் காயத்திரி வழிபாடு மேம்பட சுவாமிகளுடன் ஒத்துழைத் தனர். பின்பு புதுமுகத்துவாரக் கடற்கரை அருகில் சப்தரிஷி மண்டலமும், காயத்திரி கோயிலும், தியான மண்டபம், மகாமேரு ஆலயம், விஷ்ணு ஆலயம் என்பன அமைய சுவாமிகளுடன் இணைந்து வழிவகுத்தனர்.

ஒரு நாள் சுவாமியவர்கள் தியா னத்தில் இருக்கும் போது ஸ்ரீ ஈஸ்வரப் பட்ட மாமகரிஷி ஸப்தரிஷி மண் டலத்தின் மாதிரி வடிவமைப்பைக் கூறினார்கள். அதனைத் தொடர்ந்து சுவாமிகளால் 1996ம் ஆண்டில் சப்தரிஷி மண்டலத்திற்கு அடிக்கல் நாட்டப் பட்டு இன்று பூரணமடைந்துள்ளது. இதன் கும்பாபிடேகம் சப்தரிஷிகளின் ஆணைப்படி 28.10.2004ல் நடைபெற சுவாமிகளால் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந் நந்நாளிலேயே இங்கு அமைந்துள்ள மகாமேரு ஆலயம், விஷ்ணு ஆலயம் ஆகியவற்றுக்கும் குடமுழுக்கு நடைபெற சுவாமியவர்களுக்கு ஸப் தரிஷிகள் அருளாசி வழங்கியுள்ளார்கள்.

ஸ்ரீ காயத்திரியின் மகிமையை உலகம் எங்கும் பரப்ப வேண்டும் என்ற எம்குருநாதரின் ஆன்மீக தாகம் இன்று இலங்கையின் பல பாகங்களிலும் உல கின் பல நாடுகளிலும் காயத்திரி பீடம் அமைய வழிவகுத்தது.

இதற்கமைவாக நுவரெலியா, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத் திலுள்ள தம்பிலுவில், திருகோணமலை, வவுனியா போன்ற இந்து மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் காயத்திரி பீடங்கள் அமைந்து நல்ல முறையில் செயற்பட்டு வருகின்றன.

சுவாமிகளின் அருள்காந்த சக்தியால் ஈர்க்கப்பட்ட சீடர்கள் பலர் உலகின் பல பாகங்களிலும் காயத்திரி பீடத்தை அமைத்து செயற்படுத்தி வரு கின்றனர். சுவாமிகளின் சீடரான சுவாமி சங்கரானந்தா அவர்கள் தென்னா பிரிக்கா நாட்டில் காயத்திரி பீடம் அமைத்து சுவாமிக ளின் அருளாசியுடன் ஆன்மீகப் பணியாற்றி வருகிறார்.

ஜேர்மனியில் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் காயத்திரி பீடம் அமைத்து தியானப்பயிற்சி வழங்கி வருகின்றார். நூற்றுக்கணக்கான ஜேர்மானியர்கள் இப் பயிற்சியில் ஈடுபட்டு வருவதுடன் சுவாமி களின் அருளாசியையும் பெற்றுள்ளனர்.

இதேபோன்று எம் குருநாதரின் சீடர்கள் கனடா, அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, மலேசியா, இந்தியா முதலான நாடுகளில் காயத்திரி பீடங்கள் அமைத்து ஆன்மீக ஒளிபரவ வழியமைத்து கொடுத்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் மேலாக,

''கருடன் உருவம் கருதும் அளவில்,
பருவிடம் தீர்ந்து பயம் கெடுமாபோல்
குருவின் உருவம் குறித்தஅப் பொழுதே
திரிமலம் தீர்ந்து சிவன் அவன் ஆமே''

எனத் திருமந்திரம் கூறுவது போல உலகின் பல பாகங் களிலுமி ருந்து ஆன்மீகத் தாகத்துடன் எம் குருநாதரின் ஆன்ம சக்தியை உணர்ந்து அவரை நாடிவரும் உத்த மர்கள் சுவாமி யவர்களின் திருவடிகளைச் சரண டைந்து உயர் சாதனைகள் பயின்று சித்திபெற்று சித்தி மனிதர்களாக வாழ்ந்து வருகின்றார்கள்.

ஞாயிற்றைச் சங்கிலியால்
அளக்கலாமோ?
ஞானகுரு புகழினை நாம்
வகுக்கலாமோ?

என தெய்வப் புலவர் மகாபாரதி எழுப்பும் வினாவுக்கு விடை காண முடியுமா என்ன? அது போல வார்த்தை களால் எடுத்தியம்ப முடியாத எம் குருநாதரின் தெய்வீக சத்தியை உணர்ந்து, குருநாதர் வழி நின்று, அருள் மணம் கமழும் அவர்தம் திருப் பாதக் கமலங்களைச் சரண டைந்து, பெறுதற்கரிய பெரும் பேறுகளைப் பெற்று, வையகத்தில் வாழ் வாங்கு வாழ்ந்து, தெவிட்டாத, மாறாத, பேரானந்தப் பேரின்பத்தைப் பெற்றுய்வோமாக.!

## காயத்திரி ஜெபம்

காயத்திரி ஜெபத்தால் பாவங்கள் விலகும் சுவர்க்க சுகம் கிடைக்கும், மோட்சமும் கிடைக்கும், அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு பேறுகளும் புருசார்த் தங்களும் கிடைக்கும்.

- காயத்திரி தாசர் -

## காயத்திரி பீட குருவணக்கம்

**ஓம் ஆநந்த மாநந்த கரம் ப்ரசன்னம்
ஞானஸ்வரூபம் நிஜ போத ரூபம்
யோகீந்த்ர மீட்யம் பவ ரோக வைத்யம்
ஸ்ரீ ஸத்குரும் நித்யமஹம் பஜாமி.**

**குரோர் ப்ரஹ்மா குரோர் விஷ்னு
குரூர் தேவோ மஹேஸ்வரஹ
குரு சாக்ஷாத் பரப்பிரஹ்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ:**

## குரு பக்தியின் சிறப்பு

பரம குருதேவர்
**ஸ்ரீ கண்ணைய யோகீஸ்வரர் அருளியது**

**பிறவிப் பெருங்கடலை நீந்திப் பேரின்பக்கரையைச் சேரவேண்டுமானால் புத்தகபடிப்பும், கேள்வி ஞானமும் பயன்படாது. பேரின்பானுபவத்தைப் பெற்ற ஓர் சத்குருவின் அருள் தேவை. சத்குரு எங்கே என்று தேடியலைந்தால் கிடைக்கமாட்டார். 'குரு வேண்டும் அவர் வழி நிற்பேன்' என்ற உண்மையான உள் துடிப்பு இருந்தால் சத்குரு கிடைக்கப்பெறுவார். சத்குரு கிடைக்கப்பெற்றவன் வேறு எந்த தெய்வத்தையும், கடவுளையும் வழிபட தேவையில்லை. பரம்பொருளின் அருளெல்லாம் குருவின் அருளாலேயே கிடைக்கும். கடவுளக்கு கோபம் வரும்படி ஏதாவது தவறு செய்திருந்தால், அதற்கு கடவுளிடம் மன்னிப்பு கேட்டுப்பயனில்லை குரு மன்னித்துவிட்டால் கடவுள் மன்னித்துவிடுவார். குருவுக்கு துரோகம் செய்து விட்டு கடவுளிடம் மன்னிப்பு கேட்டால் கிடைக்காது. 'உன் குருவிடம் மன்னிப்பு கேள்' என்றுதான் சொல்வார். அதற்கும் குருதான் மன்னித்தாக வேண்டும். குருவைக் கிடைக்கப் பெறாதவன் கிடைக்கப் பெறும் வரை செய்யும் கடவுள் பக்தியெல்லாம் பயனற்றுத்தான் போகும். குருவையே தன் இஷ்ட தெய்வமாக கருதி வழிபட்டால், இஷ்ட தெய்வம் குரு மூலமாய் அவனுக்கு அருள் செய்யும். எவ்வளவு பாவம் செய்திருந்தாலும், கடவுளை மன்னிக்கும் படி வேண்டினால் பயனில்லை. குரு மன்னிக்கும்படி சொன்னால் கடவுள் சற்றும் தயங்காமல் மன்னித்துவிடுவார். சற்குரு திருவடிகளைப் பற்றிப் பிறவாப் பேரின்பம் பெறுவோமாக!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலும், தேனும் மலிந்ததும், பல்வளம் செறிந்ததுமான புண்ணிய பூமியாம் மட்டக்களப்பு மாநகரின் வடபால், ஒரு புறம் கடலிசை பாட, மறுபுறம் வாவி அசைந்தாட உள்ளம் பூரித்து நிற்கும் புது முகத்துவாரத்தில் அமைந்துள்ளது. உலக ஆன்மிக அதிசயங்களுள் ஒன்றாகக் கருத த்தக்க சப்த ரிஷிகள் மண்டலம்.

இதன் மகா கும்பாபிடேகம் சப்தரிஷிகளின் கட்டளைப்படி எதிர்வரும் தாரண வருடம் ஐப்பசித் திங்கள் பன்னிரண்டாம் நாள் (28.10.2004) அன்று ஸ்ரீகாயத்திரி சித்தர் கலாநிதி ஆர்.கே.முருகேசு சுவாமிகள் அவர்களது தலைமையின் கீழ், ஆந் திரா வைச் சேர்ந்த ஜெகத்குரு சித்தேஷ்வர நந்தா பாரதி சுவாமிகளால் நிறைவேற்றப் பட சப்தரி ஷிகள் அருள்பாலித்துள்ளனர்.

இநதச் சப்தரிஷிகள் மண்டலத்தின் வரலாறு மிக நீண்ட காலத்தைக் கொண் டதல்ல. ஒரு சில வருடங்களுக்கு முற்பட்ட தேயாகும். ஆயினும் இவ்வரலாற்றில் மறைந் திருக்கும் ஆன்ம ரகசியங்களையும், இம் மண்டலம் அமைவதற்கான நோக் கத்தை யும் அனைவரும் அறிந்திருக்க வேண் டியது அவசியமாகும்.

எமது குருநாதர் அவர்கள், ஸ்ரீ சிவபாலயோகி மஹராஜ் அவர்களால் நர்மதை ஆற்றில் கண்டெடுக்கப்பட்ட சிவ லிங்கத்தை, நுவரெலியா மாநகரில் இலங்கா தீஸ்வரர் எனும் பெயரில் ஆலயம் அமைத்து 1978ம் ஆண்டு கும்பாபிடேகம் செய்து வைத்தார்கள். அதன் பின் இலை மறை காயாக இருந்த சுவாமிகளின் ஆன்மீக ஆற்றலும், அருட்காந்த சக்தியின் ஈர்ப்பும் உலக மக்களுக்கு விளங்கத் தொடங்கின. சுவாமியவர்களிடம் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வந்து சரணடைந்து தமது ஆன்மீக, உலகியல் தேவைகளைப் பூர்த்தி செய்து பெருமிதமடைந்தனர்.

இந்த ஆன்மீகத் தாக்கம் மட்டக் களப்பு மாநகரிலும் பிரதிபலித்தது. சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த நீர்ப்பாசன பொறியியலாளர் திரு.மு.இரவீந்திரன் அவர்கள் சுவாமிகளை முதன் முறையாக 1997ல் மட்டக்களப்புக்கு அழைத்து வந்தார்கள். அச்சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த பலர் சுவாமிகளின் அருட்பார்வைக்கு உட்பட்டு நுவரெலியா காயத்திரி பீடத்துடன் தம்மை இணைத்துக் கொண்டனர்.

இந்நிலையில் ஒருநாள் சுவாமிகள் தியானத்தில் இருக்கும்போது ஈஸ்வரப்பட்டர் மாமகரிஷி தோன்றி மட்டக்களப்பில் சப்தரிஷி மண்டலம் அமைக்கப்பட வேண்டும் எனவும் அக்காரியத்தை செய்து முடிக்கக் கூடிய சகல வல்லமையும் சுவாமியவர்களு க்கே இருப்பதாகவும் கூறினார்கள். அத்துடன் சப்தரிஷி மண்டலம் அமையுமிடம் பற்றிய விளக்கத்தையும் சுவாமியவர்களுக்கு தியானத்தில் சுட்டிக்காட்டினார்கள்.

சப்தரிஷி மண்டலம் அமையும் இடத்தில் வடபுறத்தில் மயானம் இருக்கு மென்றும் கிழக்குப்புறத்தில் அலை வீசும் கடலும் மேற்குப் புறத்தில் நெளிந் தோடும் வாவியும் அமைந்திருக்குமென்றும் அவ்விட த்தில் குறிப்பாக வெள்ளெருக்கு மரம் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் என்றும் சுவாமியவர்களுக்கு, தியானத்தில் ஈஸ்வரப்பட்ட மாமகரிஷியால் குறிப்புகள் கொடுக்கப்பட்டன.

இவற்றைக் கருத்தில் கொண்டு, சுவாமி அவர்கள் பொறியியலாளர் திரு.எம்.இரவீந்திரன் அவர்களுடனும் மட்டக்களப்புப் பத்தர்களுடனும் கலந்து ரையாடித் தேடியபோது புது முகத்து வாரத்தில் காணப்பட்ட தற்போது சப்தரிஷி மண்டலம் அமைந்துள்ள இவ்விடம் பொருந் திவருவதை அறிந்து பெரு மகிழ்ச்சிய டைந்தனர்.

அப்போது மட்டக்களப்பில் பிரதேசச் செயலாளராகக் கடமைபுரிந்த திரு.கே. புண்ணியமூர்த்தி அவர்கள் இவ் விடத்தில் சப்தரிஷி மண்டலம் அமை ப்பதற்கு அனுமதி பெற்றுத் தந்தார் கள். அந்தக் காலகட்டத்தில் மட்டக் களப்பில் மாநகர முதல்வராக இருந்த திரு.செழியன் பேரின்ப நாயகம் அவர்கள் சுவாமிகளின் முயற்சிக்கு பெரும் உறுதுணையாக இருந்தார்.

சுவாமி அவர்கள் இந்நிலப்பரப்பை தமது பக்தர்களின் துணையுடன் திருத்திய மைத்தார்கள். சுற்றிவர மதிற்சுவர் போடப் பட்டது. தென்னங்கன்றுகள் நடப்பட்டன. பயன்தரும் உயிர் மூலிகைகளும், பலவித மான மரங்களும், பூச்செடிகளும் வைக்கப் பட்டன. சிறிது காலத்துள், சுவாமிய வர்களின் ஆன்ம பலத்தாலும் சப்தரிஷி களின் அருட் சத்தியாலும் பாலைவனமாகப் புதர் அடர்ந்து கிடந்த இப்பூமி சோலைவ னமாக மாறியது. பத்தர்கள் தம்மால் இயன்றவரை தண்ணீர் ஊற்றி மரஞ்செடி கொடிகளைப் பாதுகாத்தனர்.

நாளுக்கு நாள் சுவாமியவர்களை நாடி வருபவர்களின் தொகை அதிகரித்தது. இந்நிலையில் ஒருநாள் சுவாமியவர்களின் தியானத்தில் ஈஸ்வரப்பட்ட மாமகரிஷி தோன்றி சப்தரிஷி மண்டலம் எங்கு எவ்வாறு எப்படி அமையவேண்டும்? என்ற விளக்கத்தைக் கூறி அதற்கான வரைபடத்தையும் எவ்வாறு வரைவது என்ப தைக் கூறினார்கள். ஈஸ்வரப்பட்ட மாமகரிஷி இந்தியாவில் உள்ள தமது சீடர் ஒருவரின் தியானத்திலும் தோன்றி மேற்படி சப்தரிஷி மண்டலத்தின் வடிவமைப்பை வரைந்து கொடுக்குமாறு கட்டளையிட்டார்கள். அதற்கிணங்க அந்தச் சீடரும் வரைபடத்தை வரைந்து சுவாமியவர்களிடம் கையளித தார்கள்.

உலகிலேயே எங்கும் இல்லாத உயர்ந்த ஆன்ம ரகசியங்களை உள்ளட க்கிய சப்தரிஷிகள் மண்டலத்திற்கு 1997ம் ஆண்டு மார்ச்சு மாதம் 13ந் திகதி குரு வாரமாகிய வியாழக்கிழமை அன்று நண்பகல் 12 மணியளவில் அமைந்த சுபமு கூர்த்தத்தில் சுவாமியவர்களால் இதற்கான அடிக்கல் நடப்பட்டது.

வஞ்சகம், சூது, நிறைந்த இவ்வுல கில் பசுமரத்தில் புல்லுருவி படர்ந்தது போல ஆன்மீகத்திலும் சில புல்லுருவிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் தாங்களும் எதையும் செய்யமாட்டார்கள் பிறரையும் செய்ய விடமாட்டார்கள். கொழும்பு, நுவரெலியா போன்ற இடங்களில் சுவாமியவர்களுக்கு எதிராக எழுந்த எதிர்ப் பலைகளின் எதிரொலி மட்டக்களப்பிலும் பிரதிபலித்தது. பலதீய சக்திகள் சுவாமியவர்களின் அளப்பரிய புனிதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிக்கு எதிர்ப்பாகக் கிளம்பினர். ஆயின் சுவாமியின் அருட்பார்வை அவர்களின் முய ற்சிகளை செயலிழக்கச் செய்து விட்டன.

சுவாமியவர்கள் தளரா நெஞ்சுறுதி படைத்தவர்கள். எந்தத் தீயசத்தியும் சுவா மியவர்களை எதுவும் செய்து விட முடியாது. அவரது ஆன்மபலத்தாலும் பக்தர்களின் தன்னலங்கருதாத உழைப் பினாலும் சப்தரிஷி மண்டலம் அழகான முறையில் கட்டி பூர்த்தி யாக்கப்பட்டது.

இவ்விடத்தில் இதன் வடிவமைப் பைக் கூறுவது பொருந்தும். இந்த சப்தரிஷி மண்டலம் கிழக்குத் திசையில் ஆர்ப்பரித் தெழும் கடலை நோக்கியதாக அமைந்து ள்ளது. இது ஏழு கோணங்களைக் கொண்டதாக ஒரு வடிவமைப்புடையது. உட்புறமும் ஏழு கோணங்கள் உள்ளன. மேற்கூரை வான மண்டலம் போல் கோள வடிவமாக அமைந்துள்ளது. சூரியனும் அதனைச் சுற்றி நவகோள்களும் அழகான முறையில் வரையப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோணமும் ஒவ்வொரு வர்ணத்தால் வான வில்லைப் போல் அலங்கரிக்கப் பட்டுள்ளது. உட்புற மையத்தில் தாமரை வடிவில் ஜோதிர் பீடம் அமைந்துள்ளது. உட்புறக் கோண வெளிச் சுவரில் ஒவ்வொரு கோணத் திலும் ஒவ்வொரு மகரிஷிகளின் படம் வரை யப்பட்டுள்ளது. இதனைச் சுற்றியமை ந்துள்ள ஏழு கோணங்களிலும் உட்புற, வெளிப்புற சுவர்களுக்கு வெவ்வேறு ஏழு வர்ணங்கள் பூசப்பட்டுள்ளன. ஏழு கோண ங்களிலும் ஏழு மணிகள் கட்டப்படவுள்ளன. இதன் முன்பகுதியில் சிறிய மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. முகப்பு வாசலில் அழகிய கோபுரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மண்டலக் கோபுரத்திற்கு ஒரு கலசமும், முன்கோபுரத்திற்கு மூன்று கல சங்களும் வைக்கப்படவுள்ளன.

இம்மண்டலத்தைச் சுற்றிவர தாம ரைத் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது. வெண் தாமரைப் பூக்கள் பூத்து மணம்பரப்பி மண்ட லத்திற்கு எழிலூட்டுகின்றன.

தாமரைத் தடாகத்துக்கும் வெளிப் புறக் கோணங்களுக்கும் இடையில் உள்ள நிலப்பரப்பில் சப்தரிஷிகளால் சுவாமியவர் களுக்கு எடுத்துரைக்கப்பட்ட ஆன்மீக உயிர்மூலிகைகள் நடப்பட விருக்கின்றன. இந்த சப்தரிஷி மண்டலத்துள் தாமரைப்பூ வடிவில் அமைந்துள்ள ஜோதி பீடத்தைச் சுற்றி அமர்ந்திருந்து தியானம் செய்யும் போது இங்கு கட்டப்படவுள்ள ஏழு மணிக ளும் தாமாகவே ஒலிக்கும் என சுவாமிய வர்களுக்கு சப்தரிஷிகள் தியானத்தில் கூறியுள்ளார்கள்.

சுவாமியவர்கள் மட்டக்களப்புக்கு வருகை தந்த ஆரம்பநாட்களில் நீர்ப்பாசன பொறியியலாளர் திரு.எம்.இரவீந்திரன் அவர்கள் இல்லத்தில் மாதத்திற்கு ஒரு முறையாவது வருகைதந்து பத்தர்களுக்கு ஆசிர்வாதம் வழங்குவது வழக்கமாக இருந்து வந்தது.

நுவரெலியாவில் காயத்திரி வழிபாடு நடைபெறுவது போல மட்டக்களப்பிலும் நடைபெறவேண்டும், என சுவாமியை நாடிவந்த அன்பர்கள் கேட்டுக் கொண்ட தற்கிணங்க சுவாமிகள் காயத்திரி சிலை ஒன்றை இந்தியாவில் இருந்து தருவித் திருந்தார்கள். இச்சிலையை வைப்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமிஜி அவர்களால் காயத்திரி யாகம் நடைபெறும் யாகம் மண்டபத்தின் முகப்புத் தோற்றம்




சுவாமிஜி அவர்களின் குருகுலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காயத்திரி தேவிக்கு சுவாமிஜி பஞ்சாரத்தி தீபம் காட்டுகிறார்




மட்டக்களப்பு காயத்திரி வளாகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட
இருக்கும் கோமாதாவுக்கான ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகம் போற்றும் உத்தம ஞானசிவர்
காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளை எமக்கு
ஈன்றளித்த தெய்வங்களான திருமிகு ராமசி- சந்தனம்மா தம்பதியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



165 வருடங்கள் கடுந்தபம் புரிந்து மாபெரும் தவவலிமை பெற்றவரும், தமது வயது இன்னதென்று தமக்கே தெரியாது சுமார் 400 வருடங்கள் இவ்வுலகில் வாழ்நவருமான சத்குரு ஞானானந்தகிரி சுவாமிகளுடன் எம் குருநாதர் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பிலுவில் காயத்திரி பீடத்தில் அமைந்துள்ள குருநாதரின் குருகுலம்



தம்பிலுவில் காயத்திரி பீடத்தில் செந்தாமரைத் தடாகத்துக்கு அருகில் அமைந்துள்ள பக்தர்கள் தங்கும் விடுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பிலிருந்து தம்பிலுவில் காயத்திரி பீடத்திற்கு
வருகை தந்திருந்த சுவாமிஜியை பக்தர்கள் வரவேற்கும் காட்சி



மட்டக்களப்பிற்கு வருகைதந்திருந்த சுவாமிஜியை பக்தர்கள் வரவேற்கின்றனர்
அருகில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த் சுவாமி சங்கரானந்த அவர்களும் காணப்படுகிறார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ யந்திரம்
## ஸ்ரீ பாலதிரிபுரசுந்தரி லலிதா ஸ்ரீ சக்ரஸ்வரூபிண்யை நம:



ஸ்ரீ சக்ரப்பிரியவாசனீம் பகவதிம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரீம் பக்தனாம
பயப்பிரதாம் வரனிதிம் ஆனந்த சந்தாயினி பரமேசாச்சுதாம்
வர்னிதாம் முனினுதாம் கந்தர் வசம் சேவிதாம் துவாம்தேவி
திரிபுரே பராபரமாபி ஸ்ரீ பிரம்ம வித்தியாம் சிவே:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காயத்திரி சித்தர் R.K.முருகேசு சுவாமிகளின்
வழிகாட்டலில், ஜேர்மனியப் பக்தர்கள் தியானத்தின்
மூலம் பெற்றுக்கொண்ட மகா சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் அமைக்கப்படும் வரை அதனை மட்டக்களப்பில் அமைந்துள்ள தாமரைக் கேணி மகாமாரியம்மன் ஆலயத்தில் வைத் திருப்பதற்கு அவ்வாலய நிர்வாகம் விரும்பியதால் அங்கு இக்காயத்திரிச் சிலை பாதுகாக்கப்பட்டுவந்தது. அந்நாட்களில் தாமரைக்கேணி மகாமாரியம்மன் ஆலயத்தில் காயத்திரி பத்தர்கள் வியாழக் கிழமைகளிலும், பௌர்ணமி தினங்களிலும் ஒன்று கூடி காயத்திரி பூசை செய்து வழிபட்டு வந்தனர். பின்பு இக்காயத்திரி சிலை இந்த சப்தரிஷி வளாகத்துள் அமைந் துள்ள தியான மண்டலத்தில் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. இங்கு தினமும் காலை, மாலை இருவேளை களிலும் வியாழக் கிழமையாகிய குரு வாரத்திலும், பௌர்ணமி தினங்களிலும் மற்றும் விஷேட தினங்களிலும் பூசை வழி பாடுகள் நடை பெற்று வருகின்றன.

இந்த சப்தரிஷி வளாகத்தினுள் தெற்குப்புற மாக 'மகாதேவி' இல்லமும், உணவு மண்டபமும் அமைந்துள்ளன. வடபுறத்தில் சுவாமிகளின் குருபீடமும், தியான மண்டபமும் அமைந்துள்ளன. சப்தரிஷி மண்டலத்தின் முன்பு தெற்குப்புறமாக மகாமேரு ஆலயமும், வடக்குப் புறமாக மகாவிஷ்ணு ஆலயமும் அமைந்து அருளொளி பரப்பு கின்றன.

## மகாமேரு ஆலயம்

உலகிலேயே மிகப் சக்திவாய்ந்த மகாமேரு யந்திரம் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. இந்த ஒப்பரிய அருள்மிகு மகாமேரு யந்திரம் சுவாமியவர்களுக்கு மகரிஷி ஒருவரால் வழங்கப்பட்டது. இவ்வியந்திரம் கிடைத்த வரலாறும் சுவையானதே.

ஒருமுறை சுவாமி அவர்கள் மலோசியா சென்றிருந்த போது அங்கே பாழடைந்த நிலையில் காணப்பட்ட ஒரு ஆலயத்திற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது சுவாமிகளுடன் வந்த பக்தரான வைத்திய கலாநிதி குணசிங்கம் அவர்களிடம் சுவாமிகள் இங்கு மகாமேரு யந்திரம் வைக்கப்படுவது பொருத்தமானது எனக் கூறினார்கள்.

அதற்கிணங்க சுவாமியவர்களின் அனுசரணையுடன் தமிழகத்தில் உள்ள ஆச்சாரி ஒருவரால் பஞ்சலோகத்தினால் இம்மகாமேரு யந்திரம் வடிவமைக்கப் பட்டது. இதன் எடை ஆதார பீடத்துடன் சேர்ந்து 1200 கிலோவாகும். 64 தேவிகளின் சத்திகளை வெளிப்படுத்தும் ஆற்றல் மிக் கது. இது இந்தியாவில் இருந்து, மலேசிய நாட்டுக்கு எடுத்துச் செல்லப்படவிருந்தது. ஆயின் ஏதோ குறைபாடு காரணமாக ஐந்து வருடங்களுக்கு மேலாக இவ்வியந்திரம் மலேசியாவுக்கு கொண்டு செல்லப்படாது தடைப்பட்டே வந்தது. இந்நிலையில் மகரிஷி ஒருவர் சுவாமிகளின் தியான த்தில் தோன்றி இவ்வியந்திரம் பற்றிக் கூற, சுவாமியவர்கள் எடுத்த முயற் சியின் பயனாக இம்மகாமேரு இயந் திரம், தமிழகத்தில் வசிக்கும் சுவாமியின் பக்தர்களில் ஒருவரான திரு.ஜெயக்குமார் என்பவரின் உதவியுடன் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. இப்புனித இயந் திரத்தின் வருகையே எமது நாட்டில் சமா தான சூழல் ஏற்பட வழிவகுத்தது எனக் கூறின் மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மகா யந்திரம் அமைந்துள்ள ஆலயத்தை வடிவமைத்தபோது, இதுவரை

## பறவை வடிவில் வந்த மகரிஷி

எவருமே பார்த்திராத மிகப்பெரிய பறவையொன்று பறந்து வந்து சப்த ரிஷி மண்டல வளாகத்தைச் சுற்றி பறந்து பார்வையிட்டு பின் மகாமேரு ஆலய கோபுரத்தில் வந்து நின்றதாகவும் சிறிது நேரத்தின் பின் பறந்து சென்று விட்டதாகவும் இக்கட்டிடத்தைக் கட்டிய கொத்தனாரும் கூலியாட்களும் கூறக் கேட்டு வியப்படையாதவர் எவருமில்லை.

80 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட மண்டபத்தையுடைய மகாமேரு ஆலயத்தின் முகப்பிலும் உச்சியிலும் அழகிய கோபுரங்கள் இலங்குகின்றன. மூலஸ்தானத்தில் மகாமேரு யந்திரமும் இடது புறத்தில் விநாயகரும் வலது புறத்தில் முருகனும் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளனர்.

## மகாவிஷ்ணு ஆலயம்

சப்தரிஷி மண்டலத்தின் முன்பு வடக்குப் புறமாக இவ்வாலயம் அமைந்துள்ளது. இதுவும் மகாமேரு ஆலயத்தைப் போன்ற வடிவமைப்பை உடையது எனினும் இதன் கோபுரம் சாதாரண ஆலயங்களின் கோபுரங்கள் போன்று அமைந்துள்ளது. இங்கு மூலஸ்தானத்தில் மகாவிஷ்ணுவும் இடப்புற, வலப்புறத்தில் முறையே, சீதேவி, பூதேவி ஆகிய சத்திகளும் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளனர்.

## ஸ்ரீ ஆஞ்சநேயர்

சப்தரிஷி மண்டலத்தின் முன்புற பிரதான வாயிலில் ஆஞ்சநேயர் ஆலயம் அமைக்கப்படவிருக்கின்றது. இவர் காவல் தெய்வமாகச் செயற்படுவார் என சுவாமிகள் கூறுகின்றார்கள்.

## குருபீடம்

எமது குருநாதரின் தியானபீடம் மகாமேரு ஆலயத்தின் தென்புறமாக ஆர்ப்பரிக்கும் கடலைப் பார்த்தபடி அமைந்துள்ளது. சலவைக் கற்கள் பதிக்கப்பட்டு அறுகோண வடிவில் இக்குருபீடம் அமைக்கப் பட்டுள்ளது மத்தியில் சுவாமிகள் அமர்ந்து தியானம் செய்வதற்கான பீடம் அமைந்துள்ளது.

## வைத்தியசாலை

சுவாமியவர்களின் விடா முயற்சியால் நிகோட் (NECORD) நிறுவனத்தின் அனுசரணையுடனும், ஸ்ரீ முருகன் ஆலய நிருவாகத்தின் ஒத்துழைப்புடனும் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் திரு.எஸ்.கதிர்காம நாதன் அவர்களின் உதவியுடனும் குருபீடத்திற்கு தென்புறமாக உள்ள காணியில் இலவச வைத்தியசாலை ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவ் வைத்தியசாலை இப்பகுதி வாழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிக்கள ஆன்மஞானிகள் விடுதி

சகல வசதிகளும் கொண்ட வெளிகள ஆன்மஞானிகள் விடுதியொன்றும் இவ்வளாகத்துள் கட்டப்பட்டுள்ளது. இது பதினான்கு அறைகளைக் கொண்ட நாற்சார் விடுதியாகும். இங்கு தூர இடங்களில் இருந்துவரும் காயத்திரி பத்தர்களும், வெளிநாட்டு ஆன்ம ஞானிகளும் தங்கிச் செல்வதற்கு அனுமதிக் கப்படுகின்றனர்.

இத்தகு பெருமையும், சிறப்பும் வாய்ந்த சப்தரிஷி மண்டலமும், மகாமேரு, மகா விஷ்ணு, ஆஞ்சநேயர் ஆலயங்களும் ஒரே வளாகத்துள் அமைந்து நின்று அருள் மழை பொழிவது மட்டக்களப்பு மக்கள் செய்த பூர்வ புண்ணிய பயனன்றி வேறென்ன?

எமக்கு இந்த வாய்ப்புகளையும் வசதிகளையும் பெற்றுத்தந்து திகட்டாத மாறாத பேரின்ப வழிகாட்டி நிற்கும் எம் குருநாதர் அவர்களின் பாதார விந்தங்களில் சரணடைந்து அவர் கூறும் அருள்வழி நின்று அம்மாபெரும் ஆன்மீக வள்ளலுக்கு எமது உள்ளன்பைக் காணிக்கையாக்கி உய்வோமாக.

## சப்தரிஷிகள்

உலகில் வர்ணங்கள் ஏழு, சுரங்கள் ஏழு, கடல்கள் ஏழு, தினங்கள் ஏழு, சப்த தாதுக்கள் ஏழு, கோளங்கள் ஏழு,(இராகு, கேதுக்கள் சேர்க்கப் படுவதில்லை) என யாவும் ஏழு என்னும் எண்ணிக்கையுள் அடங்கிக் கிடப்பதை நாம் காண்கிறோம். இந்த வகையில், சப்தரிஷிகள், சப்தமாதாக்கள், சப்த கன்னியர்கள், சப்தமண்டலங்கள் என்று ஆன்மீக வாதிகள் வகைப்படுத்தியுள்ளனர். இந்த வகையிலே சப்தரிஷிகள் எழுவர் அடங்குவர்.

**சப்தரிஷிகள் யார்? சப்த மாதாக்கள் யாவர்? சப்த கன்னியர்கள் எவர்?** என்ற வினா க்கள் எம்முள் எழுவதும் அவர்கள் பற்றி அறியத்துடிப்பதும் மனித மனத்தின் இயல்பு. அந்தத் துடிப்பை நீக்குமுகமாக எமது குருநாதருக்கு ஸ்ரீ ஈஸ்வரப்பட்ட மாமகரிஷி அவர்கள் தியானத்தில் கூறிய வற்றை அம் மகரிஷியின் அனுமதியுடன் இங்கு தருகின்றோம்.

இயற்கையாகவே மிகுந்த ஒளித் தன்மை படைத்த இவர்கள் சிறந்த அறிவினைப் பெற்றவர்கள். மானுட வர்க்கங்களை உற்பத்தி செய்யும் காரணமாக சப்தரிஷிகளை ஏழு பிரம்ம தேவர்கள் எனவும் அழைப்பார்கள்.

இவர்கள் வேதத்தின் அனைத்து சாத்திரங்களையும் கற்றுக் கொள்வதுடன் அவற்றை மற்றவர்களுக்கும் கற்பித்து வருகின்றனர். இவர்கள் மஹா யாகங்களைச் செய்துவருவதுடன், மற்றவர்களையும் யாகங்கள் செய்ய வைக்கின்றனர். சப்தரிஷிகளே தானத்தை (அவிஸ்) ஏற்றுக் கொள்கின்றனர். இவர்களே தானத்தையும் (அருள்) கொடுக்கின்றனர்.

பிரமச்சரியத்தை அனுட்டானம் செய்பவர்களுக்காக, குருகுலக்கல்வி மூலம் அவர்கள் அறிவை விருத்தி செய்வதும் சப்தரிஷிகளேயாகும். சப்தரிஷிகள் குழந்தைகள் வேண்டி இல்லறத்தை ஏற்றுக் கொள்வதோடு, மக்கட் பேறுக்காக அக்கினியை யாகத்தில் நிலையாக நிறுத்தி வைக்கக் கூடியவர்கள்.

மானுட வர்க்கங்கள் அவரவர்கள் வினைகளுக்கேற்ப அதன்படி அந்தந்த சாதிகளில் (ஆதாரபீடம்) பிறந்தவர்களிடம், அவரவர்கள் முறைப்படி சமமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து கொள்வார்கள். இல்லற தர்மத்தில் மனைவி மக்களுடன் வாழ்பவர்கள் சப்தரி ஷிகள்.

மிகவும் பரிசுத்தமான பொருட்களை தாமே சென்று சேகரித்து, அவற்றைக் கொண்டு, உண்டு வாழும் வாழ்க்கையை சிறப்புற நடத்துபவர்கள். செல்வச் செழிப்போடு வாழும் இவர்கள் பசுக்களை போஷிப் பதுடன் (பாதுகாத்தல்) அத்யாத்ம நிலையில் (பற்றற்ற நிலை) வாழ்ந்து கொண்டே உலகியலிலும் நாட்டம் மிக்கவர்களாக உள்ளனர். வர்ணாச்சிரம தர்மத்தை வகுத்து அவ்வழியிலே செல்பவர்கள். பிரம்ம தேவனிடத்து உற்பத்தியானவர்கள் சப்த மாதாக்களின் சத்தியின் வழிப்பாதை அமைத்து, தியானித்து, தவம் இயற்றி அந்தந்த ஈர்ப்பின் வழியிலே நிற்பவர்கள். எண்ணத்தினால் வழிபாடு செய்து சத்தியைப் பெருக்கிக் கொள்பவர்கள்.

நற்பண்புகளை அறிந்த இவர்களுக்கும் முந்தையவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் பிரமனின் தவக் கனலில் இருந்து தாமாகவே வெளிப் பட்டவர்கள்.

பகவான் பிரமதேவனின் மனதில் உதித்த இந்த சப்ரிஷிகள் பகவானின் மேல் லயித்து அவர்மேல் அன்பும், பண்பும் நம்பிக்கையும் கொண்டவர்கள்.

படைக்கும் பிரம்மசக்தியும், சைதன்ய மகாசக்தியும் சிவமும் கூடிய மனதில் உதித்தவர்கள்சப்தரிஷிகள். உலகில் வாழும் ஜீவன்களுக்கு அறிவு விருத்தியை ஏற்படுத்த வந்தவர்கள் இவர்கள். அதாவது அறிவில் சிறந்த மானிட வர்க்கங்களை பிறப்பிக்கச் செய்து அவரவர்களின் குலத்தின் தெய்வமாக வாழ்பவர்கள் சப்தரிஷிகள்.

## ஆதிமனுவந்தரத்தின் சப்தரிஷிகள்

### (1) மரீசி மாமகரிஷி:

தர்மர் என்ற பிராமணரின் மகள் தர்மப்ரதாவும், தட்சபிரஜாபதியின் மகள் சம்பூதி என்பவரும் இவரது ரிஷிபத்தினி சத்திகளாகும். பிரஜோ உற்பத்தியின் நிமித்தம் பல மனைவிகளைப் பெற்று அவர்கள் மூலமாக உலகில் ஜனத்திரள் அதிகரிக்கச் செய்தவர் இவர். பிரம்மனின் ஆசி பெற்ற இவர் படைத்தல், காத்தல் தொழிலையையும் செய்யவல்லவர்.

### (2) அங்கிரஸ் மாமகரிஷி:

நல்ல தேஜஸ் படைத்துள்ள இவருக்கு மனைவியர்கள் பலர். மரீசியின் மகள் ஸீருபா என்பவருக்குப் பிறந்தவரே பிரஹஸ்பதி. கர்தம ரிஷியின் மகள் ஸ்வாரட் என்பவருக்குப் பிறந்தவர்கள் வாமதேவர், கௌதமர் என்பவர்கள். மனுவின் மகள் பத்யாவுக்குப் பிறந்தவர் விஷ்ணுரிஷி. அக்கினியின் பெண்ணான ஆத்ரே என்பவருக்குப் பிறந்தவர் ஆங்கிர ஈவரஸ்.

### (3) அத்ரிமாமகரிஷி:

கர்தமர்-தேவஹூதியின் மகளே அநஸீயாதேவி. அநஸீயா தேவியின் சகோதரன் கபில பகவான். எப்பொழுதும் தென் திசையில் வாழும் அத்திரி மாமகரிஷியின் மனைவியே அநஸீயா தேவி. ருட்சம் என்ற மலையின் மேல் தவம் புரிந்த அத்திரி மாமகரிஷிக்கு பிரமன் பிரஜோ உற்பத்தியில் ஈடுபடுமாறு பணித்தார். பிரம்ம ஞானியான அத்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமகரிஷிக்கும் அநஸீயா தேவிக்கும் பிறந்தவர்களே மும்மூர்த்திகள். இதில் விஷ்ணுவின் அம்சமானவர் தத்தாத்ரேயர், பிரமன் அம்சமானவர் சந்திரன், சிவத்தின் அம்சமானவர் துர்வாஸர்.

## (4) புலஸ்திய மாமகரிஷி:

இவரின் ரிஷிபத்தினிகள் ஸந்த்யா ப்ரதீசிப்ரீதி, ஹவிர்யூ என்போராவர். இவருக்கு தத்தோலி என்ற அகஸ்த்யர், நிதாகர் முனிவர் விச்ரவஸ் என மூன்ற குமாரர்கள் உள்ளனர். விச்சரவஸ்சின் மக்களே குபேரன், இராவணன், கும்ப கர்ணன், விபீஷணன் என்போராவர். புலஸ்தியர் தர்மத்தில் நிலைபெற்றவர். தேஜஸ் உடையவர் தவசீலர். யோக வித்தையின் ஆசிரியர். அசுரர்களை அழிக்க வசிஷ்டர் கூறிய யுத்தியின் படி பெரிய யாகம் ஒன்றை பராசர முனிவர் செய்த போது அதைத் தடுத்தவர் புலஸ்திய மாமகரிஷியாவார்.

## (5) புலஹர் மாமகரிஷி:

தட்சராஜனின் மகளான ஸாமா என்பவரும் கர்தமரின் பெண் கதி என்பவரும் இவரின் ரிஷிபத்தினி சக்திகளாவர். இவர் ஸநந்தத மஹரிஷியிடம் இருந்து கடவுளின் ஞானத்தைப் பெற்று அதனை கௌதம ருக்குப் போதித்தவராவார். மகா ஞானி செல்வந்தராக விளங்கிய மகரிஷி இவர்.

## (6) கீரது மாமகரிஷி:

கர்தமரின் மகள் க்ரியையம் தக்ஷன் மகளான ஸந்நதி என்பவரும் இவரின் ரிஷிபத்தினிகளாவர். தேஜஸ் மிக்க இவர் சூரியனுக்கு எதிரில் நின்று துதித்துச் செல்லும் வால்கில்யர் முதலான அறுபதி னாயிரம் முனிவர்களுக்கும் தந்தை யாவார்.

## (7) வஸிஷ்டர் மாமகரிஷி:

ஒவ்வொரு கல்பத்திலும் ஒவ்வொரு விதமாகப் பிரிந்தவர் இவர். வஸிஷ்டரின் பதிவிரதையான அருந்ததி என்பவராவார். இவர் தவத்தில் சிறந்தவர். தர்மவான், மிகுந்த பொறுமை உடையவர். ஸ்ரீ இராமனைச் சீடராகப் பெற்றவர். அனிமாதி சித்திகள் அனைத்தும் கைவரப் பெற்றவர். இல்லறத்தில் சிறந்தவர் இவருடைய நூறு குமாரர்களை விஸ்வா மித்திரர் கொன்றுவிட்ட காலத்தில், மிகுந்த தவவலிமை இருந்தும் கோபப்படாமல் விஸ்வாமித்திரருக்கு எந்தவிதத் தீங்கும் செய்யாதிருந்தவர். சிவனின் ஆசியைப் பெற்றவர். தெய்வீக இரகசியங்கள் அறிந்தவர் உத்தமர். காமத்தையும், குரோதத்தையும், மோஹத் தையும், லோபத்தையம் வென்றவர்.

உலகினர் இவர்களை சப்தரி ஷிகள் என்று கூறுவர். வம்சாவழியில் குல தெய்வங்களாகவும் குல ரிஷி களாகவும் இவர்களைக் கொள்ளலாம். (1) விஸ்வாமித்திரர் (2) ஜமதக்கினி (3) பரத்வாஜர் (4) கௌதமர் (5) கச்யபர் ஆகிய ஐவரும் மானிடர்களாகப் பிறந்தவர்கள்.

(1) அத்திரி (2) வஸிஷ்டர் ஆகிய இருவரும் தெய்வப் பிறவிகளாவார்கள். தாயின் வயிற்றில் பிறந்து மானுடர்களாக வாழ்ந்தவர்கள் சப்தரிஷிகளாக மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைக்கும் பிரம்மசக்தியும், சைதன்ய மகாசத்தியும் சிவமும் கூடிய மனதில் உதித்தவர்கள் சப்தரிஷிகள். உலகில் வாழும் ஜீவன்களுக்கு அறிவு விருத்தியை ஏற்படுத்த வந்தவர்கள் இவர்கள். அதாவது அறிவிற் சிறந்த மானிட வர்க்கங்களைப் பிறப்பிக்கச் செய்து அவரவர்களின் குலத்தின் தெய்வமாக வாழ்பவர்கள் சப்தரிஷிகள்.

## ஸப்த மாதாக்கள்

எண்ணத்தினால் சப்த மாதாக்களை வழிபடும் பொழுது அவர்களின் நாமங்கள் சூட்சுமப் படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் அவர்களை தியானிக்கும் பொழுது அந்தந்த ஈர்ப்பில் அதன் பொருள் பெயர் விளங்கும்.

இச்சா கேந்திரத்தில் பூர்ணமாய்ப் பொருந்தி விளங்கும் சத்திகள் அந்தந்த க்ஷணப் பொழுதில் பெயர் மாற்றம் அடைந்து விளங்குவர்.

அண்ட கோசத்துடன் இணைந்த பரப்பிரம்ம சூத்திரமே தொப்புள். அதுவும் ஒரு ஜோதி நிலைக்களன். ஏழு பாதைகள் கிரகங்களை அதன் நாதங்களைச் சார்ந்து செல்கின்றது. அந்தப் பாதைகளில் சென்றவர்களே ஸப்தரிஷிகள் அதே பாதையே முதலில் சத்தி களைத் தருகின்றது. உயிர் எண்ணம் உபாசனா சத்தியைச் சார்ந்தே ஆகாரம் தருகின்றது. ஆகாரத்தைப் பெற்றவன் அவ்வழியையே மறந்து விடுகின்றான். பூலோக இச்சை வாழ்வையே பேரின்பமாக்கினர் ஸப்தரிஷிகள். அனைத்து சத்திகளையும் கிரகிக்கும் இடம் அது ஆதலால் சூரியன் தொடங்கிச் சிந்திக்க ஆகர்ஷணம் சித்திக்கும். திங்கள் தொடங்கி கிரஹித்தல் சகல சத்திகளும் தன்னுள் நிறைவுறும். கொடி ஓடிய அக்கேந்திரம் மிகப்பிரகாசமானது. ஸப்த மாதாக்கள் சூழ்ந்து ஆசீர்வதிப்பது. அதன் வழி ஏகினர் ஸப்த ரிஷிகள் அதன் அருகே மானஸம் உள்ளது. அதனுள் செல்ல தாய சத்திக்கே சாத்தியம் சத்தி இருக்கின்றாள். சௌந்தர்யம் சொல்லில் விளக்கிட முடிந்திடாது அற்புதம்.

1) பிராம்மி: நான்கு முகமும், ஜபமலை, அங்குசம், பாத்திரம், ஆசீர்வதிக்கும் கரமுமாக, வலக்காலை மடித்து இடக்காலை ஊன்றியபடி இடப்பார் வையில் சிரிப்பவள்.

(2) மகேஸ்வரி: மழு, மான், ஆசீர்வாதங்களும், இடக்கரத்தை இடது முழங்காலின் மேல் ஊன்றிய படி வலது காலை மடித்து இடக்காலை தொங்க விட்டபடி காட்சியாவாள்.

(3) வைஷ்ணவி: இடக்கரம் இடது துடையின் மீது வைத்து அதனை அபய ஹஸ்தமாக்கி, சங்கு, சக்கரமுடன் ஆசீர்வாதம் தருபவள்.

(4) ஐந்திரி: பின் வலது கரத்தில் ஆறுதலையுடைய சூலமும் பின் இடக்கரத்தில் பாசக்கயிறு இடக்கரத்தை இடது முழங்காலின் மேல் தொங்க விட்டபடி வலக்கரத்தில் ஆசியை நல்குபவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) வராஹி : சிரித்த வராஹ முகமும்,இடக்கரத்தை இடது தொடை மீது அழுந்தப் பிடித்தபடி வலக்கரத்தில் ஆசீர்வாதமும் பன்றியின் காதுகளோடு, சங்கு சக்கரம் ஏந்திய நிலை.

(6) கௌமாரி: இடக்கரத்தை இடது துடையின் மீது வைத்து வலக்கரத்தில் ஆசி நல்குபவளாக, பின் வலக்கரத்தில் மணி, மாலையும், பின் இடக்கரத்தில் பூச்செண்டும் தரித்து காட்சி தருபவள்.

(7) சாமுண்டி: தலை விரித்த நிலையில், பின் வலக்கரத்தில் சூலமும் பின் இடக்கரத்தில் மானும் வலக்கரத்தில் ஆசியும், இடக்கரத்தை தொடையின் மீது வைத்து அபய ஹஸ்தம் காட்டியும் காட்சிதருவாள்.

# குருவே சரணம்

ஒரு குருவை ஏற்றுக் கொண்டு, அவர் தங்கியுள்ள ஆசிரமத்திலேயே இருக்கும் போது, அங்கே வந்து சேர்ந்திருக்கக் கூடிய சில தீயப் பண்புகள் கொண்டவர்களின் சகவாசம் குருநாதரையும் மற்றவரையும் பாதிக்குமா? என்று சிலருக்கு சந்தேகம் வரலாம்!

வாழ்நாளில் கெட்ட பண்புகள் உள்ள நண்பர்களுடன் கல்வி பெறும் போது, பழகுகிறோம். அதேபோல பின்பு வேலை பார்க்கும் சந்தர்ப்பங்களிலும் இப்படிப்பட்ட வர்களுடன் வாழ்கிறோம். அது நம்மைப் பாதிப்பதில்லை. குடும்பம் நடத்தும் போது சம்சாரத்தின் பாதிப்புகள் இருக்கும். அது நம்முடைய அடிப்படைப் பண்புகளை மாற்றி விடுவதில்லை. ஆகையால் குருநாதரிடம் இருக்கும் போது கூட, இருக்கும் மற்றவர் களின் குணக்குறைவு நம்மைப் பாதிக்காது. அதற்கு மாறாக, குருநாதரிடம் பக்தி பூண்டு பழகினால், நமது மனதில் உள்ள கொஞ்சநஞ்சம் கெட்ட பண்புகளும் அடியோடு விலகிப்போகும்.

நமது வியாதிக்கு டாக்டரிடம் ஆலோசனை கேட்கிறோம். நம்முடைய வாழ்க்கையே சுத்தப்படுத்திக் கொள்ள அருளாசி வழங்கும் நம் குருநாதரிடம் ஏன் போகக் கூடாது? அப்படிப் போகும் போது, நாம் பலவிதமான சோதனைகளையும் ஏற்க வேண்டியிருக்கும். பிற நோயாளிகள், பிற மனநலம் குன்றியவர்கள் ஆகியோருக்கு இடையே நாம் சிகிச்சை செய்து கொள்வதைப்போல, நாம் அருள்வழியை நாடி வந்த வேளையில், பிற குணநலம் இல்லாதவர்களிடம் இருந்து கொண்டே நல்ல வழியைத் தேட வேண்டி யிருக்கும்.

சக்தி வாய்ந்த குருநாதர் நமக்கு நல்ல வழியைக் காட்டுவார். அவருடைய அருளால் நமக்கு மேன்மை கிடைக்கும். நமக்குள்ளேயே அவர் அளித்த சக்தி ஊற்றெடுத்து நமக்குக் கவசமாக அமையும்.

தனது சீடர்களின் நோயைத் தாமே எடுத்துக்கொண்டு, குணப்படுத்தும் குருநாதர்கள் பலர் இந்தப் புண்ணியப் பூமியில் இருக்கிறார்கள். அதேபோல அவர்களுடைய தீய பண்புகளைக் கண்டு, அவற்றை தாமே வரித்துக் கொண்டு, அவர்களை நல்லவர்களாக ஆக்கிவிடும் சக்தியும் அந்தப் பெரியவர்களுக்கு இருக்கும்.

**- சுவாமி பாபா முக்தானந்தா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்ம ரிஷி விசுவாமித்திரர்

காதி அரசனின் மகனான இவர், தமது தந்தைக்குப் பின் பேரரசராக் இருந்து பெரிய மகாரிஷியானவர்.

ஒரு முறை தமது பரிவாரங்களுடன் வசிஷ்டருடைய ஆசிரமத்திற்கு சென்றிருந்த போது, இவருக்கும் இவர் தம் பரிவாரங்களுக்கும் வசிஷ்ட மாமகரிஷி யின் ஆசிரமத்தில் இருந்த "காமதேனு" என்ற பசு உணவளித்தது. இப்பசுவை தாம் தமது நாட்டிற்கு கொண்டு செல்ல வேண்டிய விசுவாமித்திரர், வசிஷ்டரிடம் அதனைக் கேட்ட போது, காமதேனு என்ற பசு விசுவாமித்திரருடன் செல்வதற்கு மறுத்து விட்டது. இதன் நிமிர்த்தம் இருவரு க்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி போர் மூண்டது.

காமதேனு தமது வலிமையால் விசுவாமித்திரரின் போர் வீரர்களை நிர்மூல மாக்க விசுவாமித்திரருடைய அஸ்திரங் களை வசிஷ்டருடைய தண்டம் விழுங்கித் தீர்த்தது.

அவ்வேளை வசிஷ்டரைப் பார்த்து "நானும் பிரம்ம ரிஷியாகுவேன்" என சபதமிட்டு தென்திசையை நோக்கி கடும் தவம் செய்யச் சென்றார். அங்கே சூரிய வம்ச அரசனான திரிசங்கு தன் உடலுடன் சொர்க்கம் செல்வதற்கு உதவி செய்ய வேண்டுமென விசுவாமித்திரரை வேண்ட அவரும் தமது தவவலிமையால் அவனை சொர்க்கத்திற்கு அனுப்பினார். இதனைய றிந்த இந்திரன் அவனைக் கீழே தள்ளிவி ட்டான். திரிசங்கு மேலே போக முடியா மலும் கீழே வர முடியாமலும் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருந்தான்.

இதனால் கடும் கோபமுற்ற விசுவா மித்திரர் புதுச் சொர்க்கமொன்றை உருவாக் கத் தொடங்கினார். இதனையறிந்த பிரம்ம தேவர், இவரைச் சமாதானம் செய்ய சொர் க்கத்தைப் படைக்கும் முயற்சியைக் கைவிட்டார்.

இவர் மேற்குத் திசைக்கு தவம் செய்யச் சென்ற போது சூரிய வம்ச அரசன் அம்பரீஷன் அசுவமேத யாகஞ்செய்து சொர்க்கம் செல்ல விரும்பிய போது, அவ னது குதிரையை இந்திரன் கவர்ந்து சென்றுவிட்டான்.

அக்குதிரைக்குப் பதிலாக ஒரு மனிதனை பலிகொடுக்க நிச்சயம் செய்த அம்மன்னன் ரிசீகர் என்ற அந்தணரிடஞ் சென்று அவர் மூத்த மகனை கேட்ட போது, அவர் அதனை மறுக்க, அதே போல் அவரின் மனைவி இளைய மகனைக் கொடுக்க மறுத்தாள் ஈற்றில் அவர்கள் தமது நடுமகனான சுனச்சேபனை அரசனுக் குக் கொடுக்கச் சம்மதித்தனர்.

அரசனுடன் செல்லும் போது விசுவா மித்திரர் ஆசிரமம் தென்பட்டது. அப் பாலன் ரிஷியின் காலில் விழுந்து "எனக்கு உயிர்ப்பிச்சை அளியுங்கள்" என வேண்ட அவர் அவனுக்கு இரண்டு மந்திரங்களை உபதேசித்தார். அதன் பின் அரசனின் யாக சாலை யில் அவனை பலியிட முயன்ற போது அவன் அம் மந்திரங்களைக் கூறினான். உடனே இந்திரனும் விஷ்ணுவும் அவன் முன் தோன்றி அவனை வணங்கி நல்லாசி கூறி அனுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் விசுவாமதித்திரர் வடதிசை சென்றும் தவம் செய்தார். அவர் கிழக்குத் திசை நோக்கி தவம் செய்ய முயன்ற போது உலகம் அழிந்து போகுமோ என்று அஞ்சிய தேவர்கள் அவரின் தவத்தை நிறுத்தும் படி மன்றாடிக் கேட்டுக் கொண்ட னர். அப்போது அவர் "வசிஷ்டர் என்னை பிரம்ம ரிஷி என்று ஒப்புக் கொள்ளச் சொல்லுங்கள்" எனக் கூற வசி ஷ்டரும் அவரை "பிரம்ம ரிஷி " என்று அழைத்தார்.

பின்பு இவர் யாகம் செய்வதற்காக தசரதனுடைய மக்களாகிய இராமர், இலட்சுமனரை அழைத்துச் சென்று, யாகம் புரிந்து அவர்களை மிதிலைக்கு அழைத்துச் சென்றார். போகும் வழியில் இராமரின் திருப் பாதம் பட்டு கல்லாய்க் கிடந்த அகலிகை சாப விமோசனம் பெற்றாள்.

இவர் ஒரு சமயம் தேவலோகக் கன்னிகையான மேனகையிடம் காதல் கொண்டு பெற்றெடுத்த மகளே சகுந்தலை ஆகும்.

இத்தகு தவவலிமை வாய்ந்த விசுவாமித்திரர் தமது தியானத்தில் காயத் திரி தேவியை தரிசித்து முறைப்படி பல அனுஷ்டானங்களை மேற் கொண்டு காயத்திரி என்னும் மகா மந்திரத்தை உரு வாக்கினார். அதனை உலக மக்களுக்கும் உவப்புடன் உபதேசம் செய்தார்.

## ரிஷித்தன்மை

**சித்து நிலை பெறத்தக்க ஆத்மாக் கள் எத்தன்மை பூண்டு இப்பூமி உருவானதோ, அதன் கலவைக் கூட்டி லெல்லாம் தன் ஆத்ம உயிரைச் செலுத்து, தன் வலுவை இப்புவி ஈர்ப்பின் வலுவிலேயே தன் வலுவைக்கூட்டி, எவ்வலுத் தொடர்ப் படைத் தந்து ஏழு குணச் சேர்க்கையால் இப்பூமி உருவானதோ, இவ்வேழில் பூலாம் பெற்ற சித்தன், இவ்வேழுக்கு மேல் சக்தி கொண்ட வலுசக்தியான சூரிய சக்தியுடன் எச் சக்தியையும் உருவாக கவல்ல ரிஷித் தன்மை கொள்கின்றான.**

**'எண்ணமே தான் கடவுள் கடவுளே தான் எண்ணம், எண்ணத்தை பரிசுத்தப்படுத்தினால் கடவுளைக் காணலாம்'**

## இரவு படுக்கைக்குச் செல்லும் பொழுது

தியானமிருக்கும் வழிமுறைப் படி எண்ணிவிட்டுச் சப்த ரிஷி மண்டலங்களிலிருந்தும், நவகோள் களிலிருந்தும் நட்சத்திர மண்டலங் களிலிருந்தும் சக்தி என்னுள் பெற வேண்டும். சித்தர்கள், ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள் , மகரிஷிகள் உபதேசித்து அருளிய தெய்வ குணம் எனக் கருள்வாய் ஈஸ்வரா என்று எண்ணியபடி படுக்கைக்கு செல்லவும்.

## [illegible]

ஒவ்வொரு உயிரும் ஆத்ம நந்தியின் கலப்பில் தன்னைத் தானே வளர்ச்சி நிலைப்படுத்திக் கொண்டிட முடிந்திடுமே அல்லாது பிரிதொருவர் அளிப்பது அல்ல எஜ்ஜெப சக்தி யையுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹாமேரு யந்திரம்

யாகங்களிலேயே உயர்ந்தது அசுவமேதயாகம். தேவர்களில் உயர்ந்தவர் மஹாவிஷ்ணு, யானைகளில் உயர்ந்தது ஐராவதம். குதிரைகளில் உயர்ந்தது பஞ்சகல்யாணி. பசுக்களில் உயர்ந்தது காமதேனு. மிருகங்களில் உயர்ந்தது சிங்கம். பெண்களிலேயே உயர்ந்தவள் சீதை. அதேபோன்று யந்திரங்களில் உயர்ந்தது ஸ்ரீ மஹாமேரு யந்திரமாகும்.

விக்னேஸ்வரப் பெருமான் ஆனந்தபுரியிலும், முருகப் பெருமான் ஸ்கந்த லோகத்திலும், பிரம்மன் சக்தி லோகத்திலும், நாராயணன் வைகுந்தத்திலும், இந்திரன் தேவலோகத்திலும், சிவபெருமான் கைலாயத்திலும், விரும்பி உறைவது போல ஜகன்மாதாவாகிய அம்பிகை எம்பெருமான் ஆகிய சிவபெருமானுடன் கூடி இன்புற்று உலகத்து உயிர்கள் உய்யும் பொருட்டு, இம்மகா மேரு யந்திரத்திலேயே உறைந்து அருள்பாலிக்கின்றாள் என்பது ஆன்றோர் வாக்கு.

இந்த யந்திரத்தை உலோகத் தகடுகளிலும், அட்டைகளிலும், வெறும் கோடுகளாக வரைந்தால் அது ஸ்ரீசக்கரம் எனப் பெயர் பெறும். அதனை உரிய முறையில் பஞ்சலோகங்களால் உருவமைக்கும் போது, அது மகாமேரு என பெயர் பெறுகிறது.

அன்னையின் உறைவிடமான இந்த மகாமேரு யந்திரம் ஆவரணம் எனப்படும் ஒன்பது கோட்டைகளைக் கொண்டது. அரசர்கள் அரண்மனையைச் சுற்றி மதில்கள் அமைத்து பாதுகாப்பது போல் அமைந்துள்ள இந்த ஒன்பது கோட்டைகளையும் ஒவ்வொரு பெண் சேனாதிபதிகள் பாதுகாக்கின்றனர். ஒவ்வொரு கோட்டையும் ஒவ்வொரு அமைப்பைக் கொண்டதாகும். அவை வருமாறு:

**(1) சதுரக் கோட்டை:**

திரைலோக்ய மோஹனச் சக்கரம் என்று பெயர் பெறும் இதனை ப்ரகடயோகினி முதலான எட்டுத் தேவதைகள் காவல் புரிகின்றனர்.

**(2) பரிபூரக சக்கரக் கோட்டை:**

தாமரை இதழ் போன்ற பதினாறு அமைப்புகள் கொண்ட இந்தக் கோட்டையை குப்தயோகினி முதலான பதினாறு தேவதைகள் காவல் புரிகின்றனர்.

**(3) ஸர்வஸம்சேஷரபன சக்கரம்:**

தாமரை இதழ் போன்ற அமைப்பைக் கொண்ட எட்டுத் தளங்களை உடைய கோட்டை இது. இதனைச் சுற்றி குப்ததர யோகினி முதலான எட்டுத் தேவதைகள் காவல் புரிகின்றனர்.

**(4) சர்வ ஸொபாக்ய தாயக சக்கரம்:**

பதினான்கு முக்கோணங்களைக் கொண்ட இந்தக் கோட்டையை ஸம்ப்ரதாய யோகினி முதலான பதினான்கு தேவதைகள் காவல் புரிகின்றனர்.

**(5) சர்வார்த்த ஸாதக சக்கரம்:**

பத்து முக்கோணங்களைக் கொண்ட இந்தக் கோட்டையைச் சுற்றி குலோதீர்ண யோகினி முதலான பத்து தேவதைகள் காவல் புரிகின்றனர்.

**(6) சர்வர ஷாகர சக்கரம் :**

பத்து முக்கோணங்களைக் கொண்ட இக் கோட்டையைக் நிகர்ப்ப யோகினி முதலான பத்துத் தேவதைகள் காவல் புரிகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (7) சர்வரோக்கர சக்கரம்:

எட்டு முக்கோணங்களைக் கொண்ட இக்கோட்டையைச் சுற்றி ரஹஸ்ய யோகினி முதலான எட்டுத் தேவதைகள் காவல் புரிகின்றனர்.

### (8) சர்வ சித்தப் ப்ரதாய சக்கரம்:

ஒரே முக்கோணத்தைக் கொண்ட இக்கோட்டையைச் சுற்றி அதிரஹஸ்த யோகினி முதலான தேவதைகள் காவல் புரிகின்றனர்.

### (9) சர்வானந்த மய சக்கரம்:

பிந்துஸ்தானம் எனப்படும் இது ஒரு புள்ளி போன்ற இடமாகும். இக்கோட்டையில் பர தேவதையான அம்பிகை, ஸ்ரீலலிதா, மஹாத்ருபுர சுந்தரியாக இருந்து கொண்டு அருள்பாலிக்கின்றாள்.

இத்தகு அமைப்பைக் கொண்ட ஸ்ரீமகாமேரு யந்திரம் உலகம் உய்யும் பொருட்டு ஆதிசங்கரரால் பாரத தேசத்தில் காஞ்சி, திருவாணைக்கா, திருவெற்றியூர் போன்ற தலங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

மக்களின் துயரைப் போக்கி அன்னையின் அருளைச் சுரந்து அளிக்கும் இந்த மகாமேரு யந்திரத்தை வழிபட்டால் நாம் எமது பிறவிப் பெருங்கடலில் இருந்து கரையேறலாம் என்பதில் ஐயமில்லை.

இத்தகு பெருமையும் கீர்த்தியும் வாய்ந்த இம்மகாமேரு யந்திரம் எமது குருநாதரின் அருளாசியுடன் மட்டக்களப்பில் உள்ள காயத்திரி பீடத்தில் தனியான ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இது ஆதாரபீடத்துடன் சேர்ந்து 1200 கிலோ எடை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீ மஹா ருத்ர யாக பூஜையின் சிறப்பும் தத்துவமும்

**மும்மூர்த்திகளுள் அழிக்கும் கடவுள் உருத்திரன். 'த்ரா' என்றால் 'ஓடு' என்று பொருள். பாபங்களை, அநியாயங்களை, அட்டூழியங்களை, அதர்மங்களை ஓட்டுபவர் உருத்திரர். இவைகள் ஓடப் பெற்ற இடத்தில் புண்ணியம், நியாயம், தர்மம் தான் இருக்கும். இதே போல் பஞ்சம், மழையின்மை, மகா மாரி, பூகம்பம் முதலிய நிலைகளையும் அகற்றி அதற்குப் பதில் செழுமை, காலமழை, ஆரோக்யம் நடு நிலைமைகளை உண்டாக்குபவர் உருத்திரர். இதனால் தான் உலகில் பஞ்சமும், பகைமையும், போராட்டங்களும் நிலவும் போது அவைகளை விரட்டி செழுமையும், அன்பும், ஒற்றுமையையும் நிலை நாட்ட ருத்ராயக பூஜை செய்யப்படுகிறது. இன்றைய உலக நிலையில் இது எவ்வளவு பயனுடையது என்பதை எல்லோரும் அறிவார்கள்.**

**- காயத்திரி சித்தர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஈஸ்வரப்பட்டர் மாமகரிஷி

தவச் செல்வர்கள் வாழ்ந்து, ஆன்மீகத்திற்கு வலிமையூட்டிய வளமார்ந்த நாடு இந்தியா. இங்கு தோன்றிய மகரிஷிகள் பலர். இவர்கள் கடவுளை நேரிலே கண்டவர்கள் ஆதலால் அகத்தொளி பரவ இவர் தம் முகத்தினில் பேரொளிப் பிழம்பு ஒளிர்ந்தது. இவர்கள் செய்த சாதனைகள் எண்ணில் அடக்கக் கூடியவைகள் அல்ல. இத்தகைய ஞானிகள் காலத்திற்கு காலம் தோன்றி இந்திய தத்துவ ஞானத்திற்கு உயிரூட்டி வந்துள்ளனர். காலத்தை கடந்து நிற்கும் இம்மகரிஷிகள் வரிசையில் இடம் பெறும் ஒருவரே, எம் குருநாதரை ஆட்கொண்டு வழிநடத்து ஈஸ்வரப்பட்டர் மாமகரிஷி ஆவார்.

நதிமூலமும் ரிஷி மூலமும் அறிந்துரைக்கக் கூடியவைகள் அல்ல என்பது ஆன்றோர் வாக்கு. இந்த வகையில் ஸ்ரீ ஈஸ்வரப்பட்டர் மாமகரிஷியின் பூர்வீகத்தை அறிய முடியாவிட்டாலும், அவர் இன்னும் எம்மிடையே சூக்குமமாகவும், தூல மாகவும் வாழ்ந்து அருள் பாலித்து வரு கிறார் என்றால் பலர் நம்பமாட்டார்கள் ஆயின் ஆன்மீக பெரும் சமுத்திரத்தில் மூழ்கியவர் களும், அதன் கரையில் நின்று அழகை ரசிப்பவர்களும் இதனை நம்பு வார்கள் என்பதில் ஐய மில்லை.

ஸ்ரீ ஈஸ்வரப்பட்டர் மாமகரிஷி எம்குரு நாதரான காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமியவர்களை ஆட்கொண்ட விதம் மிகவும் சுவையானது.

எங்கள் குருநாதர் இளமைக் காலத்தில் வறுமையின் கோரப்பிடியில் சிக் குண்டு இருந்தார்கள். ஆயினும் ஆன் மீகப் படி ஏறுவதில் அவர் சலித்து ஒதுங்கி விடவில்லை. காடுமேடு யாவும் ஏறியிறங்கி தமது ஆன்மீகப் பயிற்சிக்கு இரைதேடிக் கொண்டிருந்த காலம் அது.

அந்த வேளையில் ஒருநாள் எம் குருதேவர் பழனி முருகனை தரிசிக்கும் நோக்கோடு பழனிக்கு வந்திருந்தார்கள். கையில் அதிக பணமில்லை ஏதோ இருப்பதைக் கொண்டு வாழந்து கொண்டிருந்த அவர், தாம் தங்கிருந்த உறைவிடத்திற்கு செல்வதற்காக சாலை யோரத்தில் பஸ்ஸுக்காக காத்துக் கொணடிருந்தார்கள்.

அச்சமயத்தில் ஆஜானுபாகுவான ஒருவர் சுவாமி முன் தோன்றினார். முன்பின் அறிமுகமில்லாத அவர் சுவாமிகளைப் பார்த்து "வாங்க காப்பி சாப்பிடலாம்" என்று அழைத்தார்.

சுவாமிஜியும், இதன் முன் பார்த்திராத அப்புதிய மனிதருடன், வசிய மருந்துக்கு ஆட்பட்ட இளைஞனைப் போல தேனீர்கடைக்குச் சென்றார்கள். இரண்டு காப்பி கொண்டு வருமாறு அப்புதியவர் கூறினார். காப்பியும் வந்தது அந்த வேளையில் எம் குருநாதரின் சிந்தையில் ஒரு சந்தேகப் பொரி தோன்றி எண்ணங்களுக்கு தீமூட்டியது. முன்பின் தெரியாத இம்மனிதர் என்னை ஏமாற்றப் பார்க்கிறார். என்னிடம் காப்பி வாங்கிச் சாப்பிட்டு விட்டு என்னை பணம் கொடுக்கச் செய்யப் போகிறார். கையில் அதிக பணமும் இல்லை என்ன செய்வது? என சந்தேக எண்ணம் மெதுவாக மெல்லப் படரத் தொடங்கியது. அந்நிலையில் அம்மனிதர் வடையொன்றையும் எடுத்து சுவாமியவர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து சாப்பிடச் சொன்னார்கள். சுவாமிக்கு மீண்டும் கலக்கம் ஏற்பட்டது. வடைக்கும் சேர்த்து பணம் கொடுக்க வேண்டுமே என்ற கவலையுடன் தமது சட்டைப்பையில் இருக்கும் பணம் போதுமா என தட்டிப்பார்த்துக் கொண்டார். அந்த மனிதர் வாழைப்பழம் ஒன்றையும் எடுத்துக் கொடுத்தார். சுவாமியின் சந்தேகம் உறுதியாகிவிட்டது.

இவர் என்னை ஏமாற்றப் போ கிறார். முழுப்பணத்தையும் கடைக் காரனுக்கு கொடுத்து விட்டு இரவு பட்டினி கிடக்க வேண்டியதுதான் என முடிவு பண்ணிக் கொண்டார். நடந்தது எதிர் மாறாக அமைந்தது. புதியவரே முழுப் பணத்தையும் கடைக்காரனுக்கு கொடுத்து விட்டு தாங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள? எனக் கேட்டார். சுவாமிக்கு மீண்டும் சந்தே கம் ஏற்பட்டது. இவர் சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்கப் போகிறார். மறுநாள் நம்மை வேறு கடைக்கு அழைத்துச் சென்று "பிரியாணி" வாங்கித் தரச் சொல்லப் போகிறார் என நினை த்தார். பின்பு இருவரும் விடைபெற்றுக் கொண்டனர்.

குருநாதர் தாம் தங்கியிருந்த விடுதிக்கு வந்து சேர்ந்த சிறிது நேரத்தில் அவருக்கு காய்ச்சல் (ஜுரம்) வந்து விட்டது. உடல் நடுங்கிய. தலைவலித்தது. வேதனையால் அவதிப்பட்டார்கள். ஏனென்று கேட்பதற்கும் எவருமில்லை. இந் நிலையில் கதவை தட்டும் சத்தம் கேட்டது. நேரம் நடுநிசி சுமார் 12 மணி இருக்கும் கதவைத் திறந்த போது சுவாமிக்கு "திக்" என்றது.

காப்பி வாங்கி கொடுத்த அப்புதிய மனிதர் அங்கு நின்றிருந்தார். சுவாமிகளின் நிலையை அறிந்து தலையில் தமது கையை வைத்துப் பார்த்து விட்டு, அருகில் இருந்த கடைக்குச் சென்று "கொத்தல்" குளிசையும் சோடாவும் வாங்கிக் கொடுத்து ஆறுதல் கூறிச் சென்று விட்டு சென்று விட்டார்.

இச்சம்பவம் நடந்து சுமார் 15 வருடங்களுக்குப் பின்பு எம் குருநாதர் பவானி ஆச்சிரமத்தில் அமர்ந்திருந்து ஈஸ் வரப்பட்டா மாமகரிஷியை நினைத்து தியானத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, தியானத்தில் தோன்றிய ஈஸ் வரப்பட்ட மாமகரிஷி "என்னைத் தெரிகிறதா? நான் தான் ஈஸ்வரப்பட்டர் பழனியில் உமக்கு அன்றொரு நாள் காப்பி வாங்கி தந்தவன் நான் தான் அச் சமயம் என்னைப் பற்றி சந்தேகம் கொண்டு பலவாறு எண்ணினாய் அல்லவா?" எனக் கூறினார்கள். அப்பொழுது தான் குருநா தருக்கு பழனியில் நடந்த பழைய சம்பவங்கள் ஞாபகத்திற்கு வந்தன.

பிறிதொரு சமயம் எம் குருநாதரின் தியானத்தில் தோன்றிய ஈஸ்வரப் பட்டா "நான் இப்போது சமாதியில் இல்லை. சமாதியை விட்டு வெளியே வந்து ஆனை மலைக்குச் சென்றுவிட்டேன் அங்கே, தனியாக வந்து என்னைப்பார்" என்றார்கள். சுவாமியும் சமாதிக்கு சென்று பார்த்த போது சமாதி இரண்டடிக்கு கீழே பதிந்து காணப்பட்டது.

பின்பு, குருதேவர் ஆனை மலைக்குச் சென்றார். அங்கு சென்ற போது ஈஸ்வரப்பட்டா மாமகரிஷி தமது சுய தேகத்துடன் காட்சியளிப்பதைக் கண்டு மலைத்துப் போய் விட்டார். அவர் சுவாமி அவர்களைப் பார்த்து இவ்விடத்தில் ஐந்து அடி நீள, அகல, ஆழமுள்ள குழியொ ன்றை வெட்டுமாறு பணித்தார். கரடு முரடான அந்நிலத்தில் குழி வெட்டுவது எப்படி என சுவாமிகள் சிந்தித்த போது அவரே தமது ஊன்று கோலால் குழியைத் தோன்றி முடித்தார்கள்.குழிக்குள் தண்ணீர் கசியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது உடனே குழிக்குள் இறங்கி தியானம் செய்யுமாறும், "முப்பு" என்னும் மூலிகை தோன்றும் எனவும் அதுவும் ஒரு விநாடி நேரத்திற்குள் தோன்றி மறைந்து விடும் என்றும் காலம் தாழ்த்தாது எடுக்கக் கூடிய அளவு எடுத்துக் கொள்ளுமாறும் பணித்தார்கள். சுவாமிகள் குழிக்குள் இறங்கி தியானம் செய்து "முப்பு" என்ற மூலிகையைப் பெற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு பலவழிகளிலும் எங்கள் குருநாதருக்கு வழிகாட்டி வந்த ஈஸ் வரப்பட்டா மாமகரிஷி சப்தரிஷி மண்டலம் மட்டக்களப்பு மாநகரில் அமைவதற்கும், அதன் அமைப்பு இவ்வாறுதான் அமைய வேண்டும் என்பதற்கும் வழிகாட்டியதோடு அதன் மகா கும்பாபிஷேகம் இன்னாரால், இந்தத் தினத்தில் அதாவது இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 28ந் திகதி அன்று நடை பெற வேண்டும் எனவும் ஆசி கூறி அருள் பாலித்துள்ளார்கள். (இதுபற்றிய விளக் கத்தை சப்தரிஷி கோயில் சம்பந்தமான ஈஸ்வரப்பட்ட மாமகரிஷியின் விளக்கம் என்ற கட்டுரையில் காண்க.)

சென்னையில் உள்ள பவானி ஆச்சிர மத்தில் ஸ்ரீ ஈஸ்வரப்பட்டா மாம கரிஷியின் அருளாட்சியே நடைபெற்று வருகிறது. பெருந்தொகை யான பக்தர்கள் இங்கு வந்து அவரின் அருளாசியைப் பெறு கின்றனர். இதே போன்று பழனியில் உள்ள அவர் தம் சமாதியில் சூக்கும நிலையில் இருந்தும், ஆனைமலையில் ஸ்தூல நிலையிலிருந்தும் இம்மகா னுபாவர். உலக மக்களை இரட்சித்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**அவர் உலக மக்களுக்குக் கூறுவது இதுதான்:**

**புகழ் கண்டு மயங்காதே!**
**புகழ் தேடிச் செல்லாதே!**
**புகழாரம் பாடாதே!**

**இன்னல் கண்டு கலங்காதே!**
**இகழ்ச்சி கண்டு பதறாதே!**
**இகழ்ந்துரைக்க எண்ணாதே!**

## எமது குருநாதரும் தாந்திர யோகமும்

தாந்திர யோகம் பயில்வதென்பது இலகுவான காரியமல்ல. எமது குருநாதர் தாந்திர சாஸ்திரத்தில் மிகவும் வல்லவராவார். தாந்திரிகத்தில் சஞ்சீவி வித்தையென்பது, மிக முக்கியமான ஒன்று இதனைப் பயின்று சித்தியெய்தியவர் எங்கள் குருநாதர். இக்கலையைப் பயின்றவர்கள் தம்மை உலகம் அறிந்து கொள்ளமுடியாதபடி மூன்று நிலைகளில் தம்மை மறைத்து வாழ்கின்றனர். அவை உன்மத்தவதோ, பைசாசவதோ, பாலியவதோ என்பனவாகும்.

உன்மத்தவதோ என்றால், பைத்தியம் போல் இருந்து உலக நடைமுறைகளை அனுசரிக்காது, மக்களை ஏளனம் செய்து அவர்கள் தம்மை அண்டாதபடி வாழ்வர்.

பைசாசவதோ என்றால், நேரம், காலம், கருதாது மயானம் போன்றவற்றில் கோர உருவுடன் பேய்கள் போன்று காட்சிதருவார்கள்.

பாலியவதோ என்பது, தம் ஞானத்தை வெளிக்காட்டாமலும், தம் ஞானத்தால் மக்களைக் குழப்பாமலும், மக்களுடன் மக்களாக அவர்தம் நிலையிலிருந்தே அவர்களுடன் பழகுவர். அதேவேளை ஞானம் வேண்டி வருபவர்களுக்கு அவர்களுடைய பக்குவம் அறிந்து அதனை வழங்குவர். பழகுவதற்கு இனிமையும், எளிமையும் வாய்ந்தவர்கள் இவர்கள். இவற்றில் எமது குருநாதர் எந்நிலையில் வாழ்கிறார் என்பதை நீங்களே ஊகித்து அறிந்து கொள்ளுங்கள்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்த ரிஷிகள் கோவில், மட்டக்களப்பு. மாமகரிஷி ஈஸ்வரபட்டாய குருதேவரின் விளக்கம்

கோவில் பிரகாரத்தில் நான்கு மூலை களிலும் வில்வம் பிரதிஷ்டை செய்ய வேண்டும். மூலஸ்தானத்திற்கு முன்பு, மஹாமேரு மந்திஸ்தூபம் வைக்க வேண்டும். முப்பத்து முக்கோடி தேவர்களின் அருளாசி இதனால் கிடைக்கும். கோவில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு முன் பாகவே இதை செய்துவிடவேண்டும்.

**சூட்சுமம் :** ஆத்ம அலைகள் எப்படிப் பட்டவையாக இருந்தாலும் அங்கே சுற்றிக் கொண்டிருக்கும் அலைகள் எப்படிப் பட்டவையாக இருந்தாலும் அனைவருக்கும் நல்ல விமோசனம் கிடைக்கும். கும்பாபி ஷேகத்திற்கு வரும் அனைவருக்கும் மகரிஷிகளின் காந்த சக்தி ஆசீர் வாதத துடன் பரிபூரணமாகக் கிடைக்கும்.

**"யாரையும் குற்றம் காண வேண்டாம். எல்லோரையும் அணைக்க வேண்டும்."**

உன்மீது உள்ள எதிர்ப்பு அலை கள் இதில் இருந்து விலகிவிடும்.

9 நவகோள்கள், 27 நட்சத்திரங்கள், 12 ராசி மண்டலங்களின் மூலமாக நவசக்தி விநாயகசக்தி வெளிப்பட்டு பூமிக்கு சக்தி வருகிறது. ரிஷிகளின் தன்மை பூமியில் இயங்கி வருகின்றது. மட்டக்களப்பில் அமைந்திருக்கும் சப்த ரிஷிகள் கோவில் "உண்மைக்கோவில்" பூமியினுடைய மகத் துவத்தை பிரதி பலிக்கின்றது. பூமியில் மனித அறிவால் விளையும் சக்தி இதன் தொடர் பால் வெளிப்படும். உண்மை தத்துவத்தை அனைவரும் உணர வேண்டும்.

**வில்வயாளி வைக்கும் முறை :** கோவில் பிரகாரத்தின் நான்கு மூலைகளிலும் சிறிதாக குழியைத் தோண்டி நல்ல முற்றிய வில்வமரத்திலிருந்த ஒரு அடி குச்சியை முறித்து அதில் மஞ்சள் துணியில் நவதா னியம், ஒண்ணேகால் ரூபாய் வைத்து கட்டி பூமியில் வைக்க வேண்டும் அதற்கு ஆகார மாக நீர், பால் ஊற்றி கற்பூரம் காண்பித்து அந்த இடத்தில் மரங்களை நடலாம். பூமிக் குள் புதைத்தது வெளியே தெரிய வேண்டியது இல்லை. இரகசியமாக இருக்க வேண்டும். வில்வம் வைப்பதற்கு குருதேவர் யாரிடமும் சொல்வது இல்லை. இதன் மூலம் குபேரசக்தி பெருமளவு வளரும். மட்டக்களப்பில் சுவாமி கட்டிய மற்றொரு கோவில் உள்ளது. அங்கே அமர்ந்து தியானம் செய்ய வேண்டும். ஈர்ப்பு அலைகள் புனிதப்படும்.

**தியானம்**

கண்களை மூடித் தகுந்த ஆசனத்தில் தளர்ச்சியாய் உட்காரு ங்கள். மனதை ஏகாக்ரப்படுத்தி நிதானமாக ஓம், ஓம், ஓம் என்று சொல்லிக் கொண்டே இருங்கள். மெது மெதுவாக உணர்வு மன தைக் கடந்து 'ஓம்' என்ற பிரணவ நாதத்திலே லயம் ஆகும். இந்த அளவு தினசரி தியானம் செய்து வந்தால் இறைவனுடைய குணங்கள் எல்லாம் வெளிப்படும். பிரணவ தியானம் செய்து பயனடையுங்கள்.

**- காயத்திரி சித்தர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமகரிஷி ஈஸ்வரப்பட்டாய சற்குருதேவரின் தியானத்தால் உணர்த்தப்பட்ட சப்தரிஷிகள் கோவிலின் ஸ்தாபிதம்

நவகோள்களின் இயக்கமான சப்தரிஷி மண்டலமான ஏழு ரிஷிகளால் ஆனது தான் சப்தரிஷி கோவில். இந்த சப்தரிஷி கோவிலில் ஏழு ரிஷிகளின் நாமங்கள் எழுதப்பட்டு, சப்த மாதாக் களாக, சப்த ஸ்வரசித்தி விநாயக சக்தி யானது ஜீவிதமாக்கப்பட்டு அந்த ஜீவனு டைய தொடர்பில் இயங்குகிறது. நாபிக் கமலம் என்ற ஜோதி தன்னுள் கிளைத்து எழுந்த மூலப்பொருளாய் விளங்கும் தன்மையின் சூக்ஷ்மமும், அறிவின் துணையெனும் சாமரத்தால் வீசப்பெறும் காற்றும் வீசும்பொழுதுதான் பஞ்சபூத ங்களால் எழும் உயர்ஞானம் ஜோதியின் செயல்பாடாகிறது.

சப்தஸ்வரங்களின் வளர்ச் சிக்காக நவகோள்கள், நட்சத்திர மண்ட லங்கள், இராசி மண்டலங்கள் இவை அனைத்தும் சேர்ந்து இலங்கை பூமியில் அமைந்திருக்க கூடிய மட்டக்களப்பில் தாமரைப் பூவாக மலர்ந்து மஹா விஷ்ணு, மஹாலட்சுமியின் அவதார சிருஷ்டியுடைய இயக்கமாக செயல் கொண்டிருக்கின்றது. பூமியின் செயல் பாட்டின் கருத்தாக ஸ்தாபிக் கப்பட்டதுதான் இந்த கோயிலின் வடிவ மைப்பு. இதுவே மஹாலட்சுமி கேந்தி ரமாகும்.

இதன் மூல ஜோதியாக காயத்ரி தேவியுடைய சித்தர் ஸ்வாமி முருகேசு அவர்கள் சப்தரிஷிகளின் சூட்சுமத்தால் ஜீவசரீர உடலுடன் காலங்காலமாக பஞ்ச பூதங்களுடன் பஞ்சசேந்திரியமாகி கலந்திருக்க இந்த சப்தரிஷி மண்டபத்தை கும்பாபிஷேகப்படுத்துகிறார். இந்த சப்தரிஷிகள் தியானாலயத்தில் அரும்தவ தியானம் மேற்கொள்ளும் அனைத்துலக ஆன்மாக்களும் ஆன்மவிழிப்பின் ஒளிஜோதியாகலாம்.

"ஜோதி ஜோதியே ஜோதி ஜோதியே!"

**மனுக்களின் செயல்பாட்டின் படி, தற்போதுள்ள ஸப்தரிஷிகள்**

1. ஸ்ரீ அகஸ்திய மாமகரிஷி
2. ஸ்ரீ வான்மீகி மாமகரிஷி
3. ஸ்ரீ அத்திரி மாமகரிஷி
4. ஸ்ரீ பிருகு மாமகரிஷி
5. ஸ்ரீ உரோம மாமகரிஷி
6. ஸ்ரீ வசிஷ்ட மாமகரிஷி
7. ஸ்ரீ வியாச மாமகரிஷி

### தியானம்

**கண்களை மூடி இருந்தாலும் பிர காசமான ஒளிகள் கண் இமைகளைத் தாக்கினால் அது மனதைத் தாக்கு மாகையால் தியானம் செய்யும் இடத்தில் அதிக வெளிச்சம் இருக்கக் கூடாது. மிகவும் மந்தமான முடிந்தால் நீலமான ஒளி இருக்கலாம். திடுமெனப் பிரகா சமான ஒளிகள் தாக்காமல் இருக்க வேண்டும்.**

**- எங்கள் குருநாதர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெகத்குரு சித்தேஷ்வரநந்தா பாரதி சுவாமிகள்



பாரத பூமியில் ஆன்மீக முன்னேற்றத்தில் முதனிலை வகிப்பது ஆந்திர மாநிலம் எனின் மிகையாகாது. இவ் எழில் சூழ்ந்த மாநிலத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது மௌனகுரு பீடம். ஆன்மீகப் பயிர் வளர்க்கும் இப்பீடத்தின் பீடாதிபதியாக இருந்து அருள்மழை பொழிந்து வருகிறார் ஸ்ரீ ஜெகத்குரு சித்தேஷ்வர நந்தா பாரதி சுவாமிகள் அவர்கள்.

இந்த மகானுபாவர் தமது அயராத முயற்சியாலும், பூர்வ புண்ணிய பலனாலும் ஐம்பது வருடங்கள் அருந்தியானம் செய்து அஷ்ட சித்திகளையும் பெற்றவர். எந்திர, மந்திர, தந்திர சாத்திரங்களைத் துறைபோகக் கற்றுத் தேர்ந்த உத்தமர். ஐந்நூறு வருடங்களுக்குமுன் தாம் வைத்துப் பூசித்த தேவியின் உருவச் சிலையை, இப்பிறப்பில் தம் தவவலிமையால் மீண்டும் பெற்றுக் கொண்ட ஞான வள்ளல் இவர்.

அண்மையில் ஜெகத்குரு சித்தேஷ்வர நந்தா பாரதி சுவாமிகள் அவர்கள் யாகம் வளர்த்துப் பூஜை செய்து கொண்டிருந்த போது யாகச் சுவாலையிலே திடீர் என ஒரு உருவம் தோன்றியது. யாகத்தைச் சுற்றியிருந்த ஏனைய சுவாமிகள் முன்பின் பார்த்திராத அந்த உருவத்தைக் கண்டு மனம் குழம்பினர். தாம் செய்யும் யாகத்தில் ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டுவிட்டதோ? அதனால் தீய சக்திகள் ஏதும் யாகத்தைக் குழப்ப இங்கு தோன்றியுள்ளதோ என உளம் தடுமாறினார்கள். அச்சந்தர்ப்பத்தில் ஜெகத்குரு சித்தேஷ்வநந்தா பாரதி சுவாமிகள் அவ்வுருவத்தை உற்று நோக்கி இது இலங்கையைச் சேர்ந்த காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகளுடையது என அடையாளம் கண்டு மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறினார்கள்.

சிறிது நேரத்தில் காயத்திரி சித்தரின் உருவம் மறைந்துவிட அவ்விடத்தில் ஜெகத்குரு சித்தேஷ்வர நந்தா பாரதி சுவாமிகளின் குருநாதர் மௌனகுரு சுவாமிகள் அக்கினித்தீயில் தோன்றினார். எல்லோரும் வியப்பில் ஆழ்ந்தனர். அப்போது மௌனகுரு சுவாமிகள் தமது சீடரான ஜெகத்குரு சித்தேஷ்வர நந்தா சுவாமி களைப் பார்த்து "இங்கு தோன்றியவர் காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகள். தேவியின் பூரண ஆசீர்வாதம் பெற்றவர். சிறந்த ஆன்மஞானி. இவர் சப்தரிஷி ஆலயம் ஒன்று கட்டி முடித்துள்ளார். அதன் கும்பாபிஷேகம் விரைவில் நடைபெற விருக்கின்றது அதனை நீ உன் சீடர்களுடன் சென்று நல்லமுறையில் நடாத்தித் தர வேண்டும்" என அன்புக் கட்டளையிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிணங்க ஜெகத்குரு சித்தேஷ் வரநந்தா பாரதி சுவாமிகள் இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 28ம் திகதி நடை பெறவு ள்ள சப்தரிஷி மண்டல கும்பாபிஷே கத்திலும், ஏனைய மகாமேரு, மகா விஷ்ணு ஆலயங்களின் கும்பாபிஷே கங்களிலும் கலந்து சிறப்பிக்க விருக்கிறார்கள்.

இம்மகானின் முதலாவது இலங்கை விஜயம் இதுவாகும். இப்புண்ணிய புருடர் தம்முடன் 1008 ஆன்மீக வள மூலிகைக ளையும் எடுத் துவந்து கும்பா பிஷே கத்தை சிறப்பாக நடாத்தித்தர சித்தம் பாலித்துள்ளார்கள்.

செந்நெல் வயல் சூழ, செந்தமிழ் மக்கள் செறிந்து வாழும் மட்டுமாநகர் ஆன்மீகத் துறையிலும் முன்னணி வகிக்கும் ஒரு புனித பூமியாகும்.

பல்வளம் மலிந்த இம் மண்ணி ல்தான் சுவாமி சித்தானைக் குட்டியெனும் புகழ்பெற்ற சித்தர் வாழ்ந்து மகாச மாதியடைந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீ யோகர் சுவாமி அவர்கள் இங்கு ஆச்சிரமம் அமைத்து ஆன்மீகப் பயிர் வளர்த்தார். சுவாமி விவேகானந்தருக்கு இணையான முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்து வளர்ந்து, தமிழும், சமயமும் தழைக்க உழைத்ததும் இம் மண்ணில்தான்.

எனவே இம்மண் ஞானிகளையும், யோகிகளையம் ஈர்ப்பதில் ஆச்சரியமில்லை. எமது இப்புனித பூமியின் ஆன்மீக முதிர்ச்சியும் இம் மண்ணின் மைந்தர் செய்த பூர்வ புண்ணிய பலமுமே மாபெரும் தவசிலரான ஜெகத்குரு சித்தேஷ்வரனந்தா பாரதி சுவாமிகளின் பொற்பாதங்கள் இம்மண்ணில் பதிய உறுதுணையாகின்றன.

எம்மீது கொண்ட பெருங கருணை யினாலும், தமது தபோ வலிமையினாலும் இம்மகானை மட்டுநகர் மண் ணிற்கு வரவ ழைத்து அவர்தம் திருப் பெரும் வடிவைக் காணவும், அருள் ஆசிபெறவும் கூடிய பெரும்பேற்றை எமக்கு நல்கிய எம் குருநாதரின் திருவடிக் கமலங்க ளைச் சிரந்தாழ்த்திப் பணிவோமாக.

## அன்பே ஆனந்தம்

**மனிதப் பிறவி எடுத்ததன் பயனே அன்பு செலுத்தத்தான், அன்பு செலுத்துவதில் உள்ள ஆனந்தம் வேறு எதிலும் இல்லை. அதுவும் என்றும் மாறாத ஒரே வஸ்துவான பரமாத்மாவிடம் அன்பை பூரணமாக வைத்து விட வேண்டும். பரமாத்மா நம்மை விட்டு ஒரு போதும் நீங்குவதில்லை. நம் சரீரத்தில் இருந்து பிரிந்தாலும் பிரிகிற உயிர் பரமாத்மாவிடம் இருந்து பிரியாமல் அவரிடமே கலந்து விடும். அவரிடம் வைத்திருக்கும் அன்பே உண்மையாக இருக்க முடியும்.**

**- காஞ்சிப் பெரியவர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம் பற்றி குருநாதர்

காயத்திரியைப் பற்றி பாரத நாட்டில் எண்ணற்ற நூல்கள் இருக்கின்றன. காயத்திரியைப் பற்றி மாபெரும் வித்துவான்கள் சாஸ்திரிகள் எல்லோரும் அதிக ஆராய்ச்சியின் பெயரில் பல நூல்கள் எழுதியுள்ளார்கள். இவைகளில் கிடைக்க முடியாத காயத்திரி பற்றிய பல இரகசிய வித்தைகளின் உண்மையை மகா ன்கள், மக்கள் அறியாதவாறு மறைத்து வைத்து அவர்களை அடுத்து நிற்கும் சீடர்களுக்கு மட்டும் நேர்முகமாக கற் பித்து வருகிறார்கள்.

வேத மந்திரங்களில் காயத்திரி நான் என்று கீதையில் சொல்கிறார் கண்ணன். காயத்திரியை விட சக்தி நிறைந்த விலை மதிக்க முடியாத இரத்தினங்கள் போன்ற மந்திரம் மண்ணுலகிலும் இல்லை விண்ணுலகிலும் இல்லை.

நான்கு வேதங்களின் தாய் காயத்திரி. என்னால் துதிக்கப்பட்ட த்விஜர்களைப் பவித்திரம் செய்யவல்ல வேத தாயாகிய காயத்ரி ஆயுள், பிராணன், மக்கள், பசுக்கள், புகழ், செல்வம், பிரம்மதேஜஸ் முதலியவைகளை கொடுப்பாள். என அதர்வண வேதம் கூறுகிறது.

சப்த ரிஷிகளும் காயத்திரியை ஜெபித்து இந்திரனையே சபிக்கும் தவ ஆற்றல் பெற்றதோடு பூமி தோன்றிய நாள் முதல் இதுநாள் வரையும் சிரஞ்சீவிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

பிரம்மஹத்தி, திருடு, குருபத்தினியை சேரல் போன்ற பெரிய பாவங்களும் காயத்திரியை ஸ்மரிப்பதால் நாசமாகி விடுகின்றன.

இத்தகைய சக்தி நிறைந்த மந்திரத்தை குரு பரம்பரையில் தொடர்பு கொண்டவர்களே அறிவார்கள் அன்றி, சாதாரண கல்வி மான்கள், சாஸ்திரிகள் அறியமாட்டார்கள்.

அதனாலேயே அவ் இரகசிய வித்தைக்கு "குப்தவித்தை" - (மறைக்கப்பட்ட வித்தை) என பெயர் வந்தது. உண்மையை ஏன் மறைத்து வைத்தனர் என்றால், அவ்வுண்மைகள் வெளியானால் எந்தக் கயவனும் எளிதில் சில சக்திகளைப் பெற்று மனித இனத்திற்கு சொல்லொனாத் துன்பங்களை செய்ய முடியும். இதனால் உலக பரிணாமமே பாதிக்கப்படலாம் அதனால்தான் இந்த உண்மைகளை தீய வழியில் உபயோகிக்க மாட்டார்கள் என்று தெரிந்தவர்களுக்கு மட்டும் தெரிவித்து வருகிறார்கள் சப்த ரிஷிகள்.

காயத்திரி மந்திரத்தை சாதாரணமாக ஜெபிப்போர்களுக்கு சக்திகள் சித்திக்கக் கூடாது என பிரம்மா, வசிஷ்டர், விஸ்வாமித்திரர் முதலானோர் சாபமிட்டுள்ளனர்.

சாபமிட்ட அவர்களே அதை விலக்கி அரிய சக்தி பெறுவதற்கு விமோசனங்களையும் கூறியுள்ளனர்.

காயத்திரியை பொதுவாக த்விஜர்களும், பிராமணர்களும் தான் ஜபிக்கலாம் மற்றவர்கள் ஜெபித்தால் பாவம் வருமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் நந்தன், சபரி, கண்ணப்ப நாயனார் இன்னும் எத்தனையோ நாயன்மார்கள், ஆழ்வார்கள், பக்தர்கள், யோகிகள், பிராமணர்களாய் இல்லாமல் இருந்தும் சிறந்த தெய்வப் பேற்றை பெற்றிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை என்னவென்றால்,

**ஜன்மானா ஜாயதே ஹீத்ர:**
**கா்மணா ஜாயதேத் விஜ்:**

என்ற கீதா வாக்கியம் தான் சரியானது. பிறப்பில் எல்லோரும் சூத்திரர் களாகத்தான் பிறக்கிறார்கள். பிறகு கா்ம சமஸ்காரங்களால் தான் த்விஜா்களா கிறார்கள்.

பெண்களும் தாராளமாக காயத்திரி மந்திரம் ஜெபிக்கலாம். காயத்திரியின் சக்தி வடிவங்கள். லக்மி, சரஸ்வதி, கெளரி, காமாட்சி, மீனாட்சி போன்ற தெய்வங்க ளின் சக்தியாக விளங்குகின்றன.

இந்த சக்தியில்லாமல் பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்றோரும் செயலற்றுப் போவா். இப்படியிருக்க காயத்திரி மந்திரத் தை பெண்கள் சொல்லக் கூடாது என்பது பொருளற்றது.

காயத்திரியை ஜபத்தால் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பேறுகளும், புருஷார்த்தங்களும் கிடைக்கும்.

**ஓம் பூர் புவ ஸ்வஹ:**
**ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்**
**பா்கோ தேவஸ்ய தீமஹி**
**த்யோ யோந ப்ரசோதயாத்:**

இதன் பொருள்: நமக்கு அறிவைக் கொடுத்தருளும் அந்த சவிதா தேவனின் கிரகிக்கத் தகுந்த சக்தியை நாம் தியானிப்போமாக. (சவிதா என்பது காயத்திரி சக்தியின் ஒளி வடிவம்)

இந்த மந்திரத்தில் 24 எழுத்துக்கள் உள்ளன. இவற்றை தனித்தனியாக உச்ச ரிக்கும் போது 24 வகை தெய்வ சக்திகள் விளிப்படைகின்றன.

ஆகவே, காயத்திரி சாதனையால் இந்த 24 தெய்வ சக்திகளும் மனிதனுக்கு நன்மையே செய்வதாக செயல்படுகிறது. இதன் பயனாய் மனித வாழ்வு அமை தியும், இன்பமும் நிறைந்ததாய் இகம்,பரம் இரண்டிற்கும் நன்மை பயப்பதாய் அமைகிறது. அதனால் காயத்திரி மந்திரம் ஜெபிப்பவா்கள் கலவரம் இல்லாமல் காயத்திரி சாதனை செய்து அரிய சக்திகளைப் பெற ஆசீா்வதிக்கின்றோம்.

(காயத்திரி மந்திர மகிமையை ஸ்ரீ காயத்திரி சித்தா் கலாநிதி ஆா்.கே. முருகேசு சுவாமிகள் எழுதிய "ஸ்ரீ காயத்ரி மந்திர மகிமை" என்ற நூலில் காண்க.

## காயத்திரி மகிமை பற்றி வேதங்களும் மகான்களும்

நான்கு வேதங்களையும் அதனதன் அங்கங்களுடன் தராசின் ஒரு தட்டில் வைத்தால் அதற்குச் சமமாக காயத்திரி ஒன்றை மட்டும் மறுதட்டில் வைத்தால் எடை சரியாக இருக்கும்.

கங்கைக்குச் சமமான தீர்த்தமில்லை, கேசவனுக்கு சமனான தேவரில்லை. காயத்திரிக்கு மேலான ஜபம் இருந்தது மில்லை. இனிமேலும் இருக்கப் போவதில்லை.

- யாக்ஞயவல்கியர் -

காயத்திரி மந்திரத்தின் ஜபம் நோயாளிகளைக் குணப்படுத்தவும், ஆத்மாவை முன்னேறச் செய்யவும் பயன்படுகிறது. திட சித்தமாகச் செய்யப்படும் காய்திரி ஜெபம் ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றும் திறமை பெறுகிறது.

- மகாத்மா காந்தி -

கடினமான தெய்வ சாதனைகளை மக்கள் செய்ய வேண்டிய தேவையில்லை. சிறியதான காயத்திரி ஜெபத்தைச் செய்து பாருங்கள் இதனாலேயே சகல சித்திகளும் உண்டாகி விடும். சக்தி நிறைந்த சிறிய மந்திரம் காயத்திரி.

- ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸா் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சப்தரிஷி மண்டலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஸப்தரிஷிகளை
உள்ளடக்கிய ஸப்த காயத்திரி தேவி



மகரிஷிகளின் ஆசியுடன் எமது குருநாதருக்குக் கிடைத்த அக்கினி லிங்கம்,
நவபாசன லிங்கம், கொம்புத் தேங்காய்கள் முதலியவற்றுடன் மட்டக்களப்பு,
புதுமுகத்துவாரம் காயத்திரி வளாகத்தில் வைத்து பூசிக்கப்பட்டு வரும்
நர்மதா நதியில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதா எங்கே போகிறாய்......!

சித்தர் மரபினரோடு நேர்தொடர்பு கொண்டு அவர்கள் வழிநின்று, அவர்கள் உபதேசத்தைப் பின்பற்றி மகரிஷிகளிடத்தில் ஆன்ம வித்தை கற்று, அனுபவித்து, ஆன்ம ரகசியங்களை உபதேசித்து மண்ணுலக மக்கள் மாண்புற வழிகாட்ட மகரிஷிகளின் உத்தரவின் பெயரில் இதை எழுதுகிறோம்.

இன்று மனித இனம் அழிவுப் பாதை நோக்கி வேகமாக முன்னேறி வருகிறது. மனிதன் மனித உருவில் வாழும் பயங்கரப் பிராணியாக வாழ்ந்து அழிந்து கொண்டிருக் கிறான். உலக நாடுகளும் மக்களும் இன்று பிறர் அழிவில், பிறர் துன்பத்தில் இன்பம் காணும் அளவிற்கு முன்னேறியுள்ளனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

இன்று உலகில் மக்களின் சுவாசத்தின் மூலம் வெளிப்படும் விஷ வாயுக்கள், தீய எண்ண அலைகள், அசுர எண்ண பிரபாவங்கள், ஆகாய மண்டலத்தில் அலைக் கழிந்து கொண்டிருக்கின்றன. அதை மீண்டும் சுவாசிக்கும் மனிதன் உட்பட ஜந்துக்கள், தாவரங்கள் என்பன விஷத் தன்மை உடை யவையாக மாறுகின்றன. இதன் விளைவாக இயற்கை மாறி இயற்கையின் சீற்றங்களாகிய பூகம்பம், வெள்ளம் என்பனவும், யுத்தம், போர் வெறி, மத வெறி, அரசியல் வேறு பாடுகள் என்பனவும் ஏற்பட்டு, உலகம் பேராபத்தையும், பேரழிவையும் உண்டாக்கி அழியும் நிலைக்கு வந்து கொண்டிருப்பதை அனைவரும் அறிவார்கள். இந்நிலை மாறி உலகம் அமைதி, ஆனந்தம் உடையதாக செயற்பட்டு, தருமம் நிலைத்து மக்களிடையே அன்பு, பாசம், பரிவு போன்ற தெய்வ குணங்கள் ஏற்பட்டு எதற்காக இவ்வுலகில் பிறந்தோமோ அதன் படி வாழ்வமைத்து மண்ணுலகத்திலே வள்ளுவப் பெருந்தகை கூறியபடி "வைத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றவாறு மனிதனை வாழ வைப்பது எமது கடமையாகும். தெய்வமாகி தெய்வத்தோடு இரண்டறக் கலந்து வாழ வேண்டிய மனிதன், இன்று மிருகங்கள், ஜந்துக்கள், பறவைகளிலும் மோசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

மனிதனை விட மிருகங்கள், பறவைகள், தாவரங்கள், தம்முள் தெய்வத்தன்மையை ஈர்த்து சக்தி பெற்று ஞானத்துடன் வாழ்ந்து வருகின்றன.

இன்று கொடிய, பயங்கர, பிராணியான புலி என்னும் அடையாளத்தை தலைவலி, உடல்வலித் தைலமாக (Tiger palm) என பயன் படுத்துகிறான். விஷப்பாம்பினை (Cobra shoe polish) என சப்பாத்து பொலிஷிற்கு பயன்படுத்துகிறோம். முதலை அடையாள மண்வெட்டி ஒன்று. பூனை அடையாள பற்றரி உண்டு, யானை அடையாள குளிர் பானங்கள் உண்டு, சிங்க அடையாளத்தில் பியர் உண்டு ஆனால் ஆறறிவு படைத்த மனிதனுடைய தலையையும், எலும்பையும், அபாயம், விஷம் என்பவற்றிற்கே கொடுத்துள்ளான் மனிதன்.

புலியின் தோல், கொழும்பு, நகம், பல் என்பன பூஜைக்கு ஏதோவொரு வகையில் பயன்படுகிறது. பாம்பின் விஷத்தை புற்று நோய்க்கு மருந்து செய்யப் பயன்படுத் துகிறார்கள். பசுவில் இருந்து கோரோசனை எடுக்கப்படுகிறது. மானிலிருந்து கஸ்தூரி எடுக்கப்படுகிறது. இவையெல்லாம் விலை மதிப்பற்ற பொருளாக கருதப்படுகின்றன. யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந் தாலும் ஆயிரம் பொன் என்று கூறுவார்கள். குதிரை தெய்வீகம் பொரிந்தியதாக அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாடத்தை மேல் நாட்டவர்கள், தோசம், கண்திருஷ்டி பிரபாவம், தரித்திரம் நீங்கி நிம்ம தியாக வாழ்வோம் என்ற நம்பிக்கையுடன் வீட்டின் முன்புறத்தில் தொங்க விட்டிருப்பார்கள். பூனையில் இருந்து விலைமதிப்பற்ற புனுகு பெறப்படுகிறது.

இப்பேர்ப்பட்ட கொடிய மிருகங்களின் நற்குணங்களையும், தெய்வீக சக்தியையும், தம்முள் ஈர்த்து சித்தர்கள் ஆனார்கள் பலர். கொடிய புலியின் நற்குணங்களை தன்னுள் ஈர்த்து ஒருவர் புலிப்பாணிச் சித்தர் ஆனார். பூனையின் நற்குணங்களை தன்னுள் ஈர்த்து ஒருவர் பூனைக்கண்ணிச் சித்தர் ஆனார். காகத்தின் நற்குணங்களை ஈர்த்து காகபுகண்ட சித்தரானார் ஒருவர். பாம்பின் நற்குணங்களை ஆராய்ந்து ஒருவர் பாம்பாட்டிச் சித்தர் அனார். ஆனால் மனிதனது நற்குணங்களை ஆராய்ந்து ஈர்த்து சித்தர் ஆனவர் யாரு மில்லை.

மனிதனில் இருந்து பெறப்படும் எந்தப் பொருளும் மனிதனுக்கும் மற்ற ஜீவராசி களுக்கும் கூட பயன்படுவதில்லை. மனிதன் பார்த்தால் திருஷ்டி (கண்ணூறு) என்பார்கள். பேசினால் நாவூறு என்று அஞ்சுவார்கள். மனிதன் பார்வையில் விஷம். நாக்கில் விஷம், எண்ணத்தில் விஷம் கொண்டவனாக இருக்கிறான். மனிதனுடைய தலைமுடி, நகம், மண்டையோடு, காலடி மண் என்பன மனித னுக்கே அழிவை ஏற்படுத்தும் ஏவல், பில்லி, சூனியத்திற்குத் தான் பயன் படுகிறது.

மனிதன் உடல் வாழ்வு, நீர்த்த பின்பு அவ்வுடலை எரித்த சாம்பலை உற்றார் உறவினரும் கூட வீட்டினுள், தீமை வருமென்று வைக்க மாட்டார்கள். அச்சாம்ப லை தூவிவிட்டால் வீட்டிலுள்ள அனை வரும் தீமையடைவார்கள் என்பார்கள் அது உண்மையும் கூட.

கொடிய மிருகங்கள், பறவைகள் கூட இறைவனிடத்தில் ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. பசு, குதிரை, பாம்பு, கருடன் என்பவற்றை மனிதனே தெய்வமாக வழிபட்டு வருகிறான்.

சிவனுக்கு ஆபரணமாக பாம்பு, வாகனமாக எருது, விஷ்ணுவுக்கு கருடன், முருகனுக்கு மயில், துர்க்கைக்கு சிங்கம், விநாயகருக்கு எலி, சனிஸ்வரனுக்கு காகம், வைரவருக்கு நாய் என மிருகங்கள் தெய் வங்களுக்கு நெருக்கமான வாகனங்களாக உள்ளன. ஆனால் மனிதன் சிவனுக்கு தட்சனாக முருகனுக்கு சூரபத்மனாக, காளிக்கு சண்ட முண்டராக, நாராயணனிற்கு இரனியனாக என இறைவனுக்கு எதிரியா கத்தான் உள்ளான்

ஆண்டவன் படைத்த உலகத்திலேயே மனிதன் இன்று ஏன் பிறந்தோம் என்று அறியாமல், தெய்வ குணத்துடன் வாழ்ந்து, தேவனாக வேண்டியவன், அசுர குணம் படைத்த அசுரனாக உலகையே சூனியமாக்கி அள்ளல்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பதுதான் வேதனைக்குரிய விடயம்.

உலகத்தையும், மனிதனையும் படைத்த இறைவன், மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை வேதங்கள் மூலம் உணர்த்தினான். ஆனால் மனிதன் அதன் படி வாழாது துண்புறுகிறான். இதையும் இறைவன் கண்டு சங்கராச்சாரியார், இராமகிருஷ்ண பரமஹம்சர், புத்தர், ஜேசு போன்ற அவதாரங்களை எடுத்து திரும்பத் திரும்ப உபதேசம் கொடுத்து ஞாபகப்படுத்தி வந்தும் மக்கள் அவற்றை அலர்ச்சியப்படுத்தி வாழ்வதனால் இன்று உலக மக்கள் துன்பத்திற்குள்ளாகி வாழ்ந்து வேதனைப் படுகின்றனர்.

உலகத்தின் ஆண்டவன் படைப்பில் ஏன் கொடிய விஷத் தாவரங்கள், கொடிய விஷ முடைய ஜந்துக்கள் என மனிதர்கள் கேட்கிறார்கள். "படைத்ததெல்லாம் படைத்தான் மனுவிற்காக" என்று ஒரு முதுமொழி உண்டு. அதாவது விஷ ஜந்துக்களையும், விஷ

தாவரங்களையும் இறைவன் ஏன் படைத்தான் என்றால் மனிதனின் விஷத் தன்மை பொருந் திய பார்வை, சுவாசம், எண்ணப் பிரபாவம் என்பன மூலம் வெளியாகும் விஷ ஜீவ அணுக்களை விஷ ஜந்துக்களும், விஷ தாவரங்களும் ஈர்த்து தம்முள் இழுத்து வைத்துக் கொள்கின்றன. அப்படி அவை ஈர்த்துக் கொள்ளாவிட்டால் அவை ஆகாய மண்டலத்தில் பரவி நல்ல மனிதர்களுடைய சுவாசத்தின் வழிச் சென்று அவர்களையும் தீயவராக விஷத் தன்மை பொருந்தியவராக மரணிக்கச் செய்யலாம்.

மேலும், இன்றைய கலியுகத்தில் நடக்கப் போவது பற்றி தம்முடைய ஞானத்தால் அறிந்து மகரிஷிகள் எழுதி வைத்துள்ளனர். மகா பாரதத்தில் மார்க்கண்டேய மகரிஷி கூறியுள்ளார். அவர் கூறியவை இவை.

பிராமணர் என்று சொல்லிக் கொண்டு பூணூல் அணிந்தவர்கள் உதயஸ் ஸ்நானம், காயத்திரி ஜெபம், தியானம், வேதாத்யானம் என்பவற்றை விட்டு விட்டு பணம் தேடுவதற் காக பிறர் வணங்கத்தக்க வகையில் இருக்க வேண்டியவர்கள் பிறரை வணங்குகின்றனர். முகத்தில் பிரம்ம தேஜஸ் இழந்து, காம, குரோத எண்ணங்கள் மேலிட்டு கொலை, களவு புரிகின்றனர்.

அரசாள்வோர் ஜெபம், தியானம் செய்யாமல் தேவ நிந்தை, குருநிந்தை புரிந்து தன்னுயிரைப் போல் மக்களைக் காக்க வேண்டியவர்கள். கொடுங்கோலாட்சி புரிகின்றனர். மாதம் முன்மாரி தடைப்பட்டும் , அதனால் துர்வியாதிகள், துர்விபத்துக்கள் நடந்து பல உயிர்கள் பிரியும். உலகில் உள்ள மக்கள் கொலை, களவு, காமம்,பொய் என்பவற்றில் ஊறித் தளைத்திடுவர். இதனால் பெரும் மகான்கள் தம்மை யாரென்று காட்டிக் கொள்ளாது. தம் சக்தியை மறைத்துக் கொண்டு உலகில் வாழ்வார்கள். அவ்வாறான மகான்களை பல வழியில் தூசித்தும் ஏமாத்தியும் துன்புறுத்துவர்.

அசத்தியம், பிறர் பொருள் கவர்தல், பிறர் தாரத்தை கவர்தல், கலியுகத்தின் மேலான தருமமாகி விடும் இதனால் காற்று நஞ்சாகும், மனிதர், மரம், பறவை, விலங்குகளுக்குக் சக்தி குன்றும். விரதம், பிதிர்கடன், ஜெபம், தியானம் என்பன பொய் என்று இகழ்ந்துரைப்பர். பூர்வ புண்ணிய பலனாய் இவற்றை சிலர் அனுஷ்டிப்பர்.

தானதர்மம், பரோபகாரம், தயை, சாந்தம், பொறுமை என்பவற்றை எல்லாம் விடுத்து, கோயில், மடாலயங்களில் புனிதத்தைக் கெடுப்பர். கோயிலை வியாபார ஸ்தலமாக்குவர். மது, மாமிசம், புசித்து ஆலயம் செல்வார்கள். கணவனை மனைவி மதிக்கமாட்டாள். பிள்ளைகள் தாய்-தந்தையர்களை வணங்கிட மாட்டார்கள். குருவிற்கு சதி பல செய்வார்கள்.

ஈனக் குணமுடையவர்கள் மேலிடுவர். வேதங்கள், புராணங்களை பணத்திற்காக தமக்கு புரிந்த மாதிரி வியாக்கியானம் செய்திடுவர். உண்மைப் பொருளை குழப்பி சகலதையும் தலைகீழாக மாற்றுவர். பெண்களில் பதிவிரதை என்ற எண்ணமே இல்லாது போகும்.

இவ்வாறு தர்ம தேவை துன்புறும் போது உலகத்தை மறைமுகமாக ஆளும் சப்தரிஷிகள் தம்மை அடுத்து நிற்கும் சீடர்கள் மூலம் காயத்திரி மந்திரம், காயத்தி தியானம், யாகம் என்பவற்றைப் பரவச் செய்து தருமத்தை நிலைநாட்டுவார்கள்.

அதன் பின்பு மாதம் முன்மாரி பொழியும், மன்னர்களும், மக்களும் தானம், தருமம், உபசாரம் என்பவற்றை நடத்தி சத்திய நடத்தை உடையவர்களாகிவிடுவர். மக்கள் ஆயுள்விருத்தியாகும். ஜெபம், தியானம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகம், தேவதா பூசை என்பன ஒழுங்காக நடந்திடும். அவர்கள் வழி நிற்பவர்களுக்கு சகல நோய்கள், சத்துரு பீடை என்பன அகன்று பெருவாழ்வு வாழ்வார்கள் என மார்க் கண்டேய மகரிஷி கூறியுள்ளார். (மகாபாரம், ஆரண்ய பருவம், மார்க்கண்டேயரிஷி, ஜனமேய மஹாராஜா சம்பாஷணை)

இவையனைத்தும் இன்று நடப்பதை கண்கூடாக காண்கிறோம். அன்று மெய் ஞானிகள் உருவாக்கிய உண்மை களையே இன்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்து உலகிற்கு கொண்டு வருகிறார்கள். இன்றும் சப்தரிஷிகளே மண்ணுலகை ஆண்டு வருகிறார்கள் என்ற பேருண்மை மறைக்க ப்பட்டு வருகிறது. மண்ணுலகை ஏழு ஆகப் பிரித்து சப்தரிஷிகளே ஆட்சி செலுத்தி வருகிறார்கள் அதனாலே ஏழு நாட்கள், ஏழு கடல்கள், ஏழு கிரகங்கள், ஏழு வர்ணங்கள், சப்த தாதுக்கள், சப்த கன்னியர் என்று உலகத்தில் ஏழாக யாவும் காணப்படுகின்றன.

இன்று விஞ்ஞானிகள் விண்ணுலகை மண்ணுலகோடு இணைக்கவும் நவகோள்க ளையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரவும் பெரும் முயற்சி செய்து வருகிறார்கள். மனித முயற்சியும் விஞ்ஞான அறிவும் இதில் வெற்றி காண முடியாது. மெய்ஞானிகளால் இது முடியும். இன்றும் மண்ணுலகில் சிரஞ் சீவியாக வாழும் மெய்ஞானிகள் நவகோள் களுக்கும், நட்சத்திர மண்டலத்திற்கும் சென்று அங்கு சூஷ்ம தாரிகளாக வாழும் அறிவு படைத்த மக்களோடு தொடர்பு கொண்டு கருத்துப் பரிமாறி வருகிறார்கள். விஞ்ஞானிகள் எத்தனை முயற்சி செய்தாலும் எவ்வளவு பணம் செலவு செய்தாலும் அவ்வுலகின் சூஷ்ம தன்மையை அறிந்து கொள்ள முடியாது மட்டுமல்ல. அதனால் உலகிற்கு ஏதோவொரு வழியில் அழிவைத்தான் தேடிக் கொள்ள முடியும்.

விஞ்ஞானிகள், விஞ்ஞான வழியில் முயற்சிப்பதை விட்டு மெய்ஞானிகளோடு தொடர்பு கொள்வார்களேயானால், சகல புவனங்களையும், பிரபஞ்சத்தையும், ஆட் கொண்டு நன்மை பெற முடியும்.

மண்ணுலகில் விண்ணுலக இன்பத்தை பெற்று மண்ணுலகிலேயே இறை சாம்ராச்சிய த்தை ஏற்படுத்தி, நிலையான மாறாத, திகட்டாத பேரின்ப அனுபவத்தைப் பெற்று பிரம்ம சாஷாத்கார நிலையை அடைய காயத்திரி மஹா மந்திரம் ஒன்றே சிறந்தது என மாமஹரிஷிகள் கண்டுபிடித்துள்ளனர்.

உலகமமாம் துன்பக் கடலை தாண்டி, பேரானந்தம் எனும் அக்கரைக்கு அழைத்துச் செல்லும் படகு போன்றது காயத்ரி. காயத்ரி மந்திர ஜெபத்தால் விண்ணவரையும் ஏவல் கொள்ளலாம். பிறவாப் பேரின்ப நிலையான இறைவனோடு இரண்டற கலந்து பேரின்பமான இறையின்பத்தை என்றும் நிலையாகத் தொட்டு அனுபவிக்கும் பெரும் பேற்றை அடையலாம். கற்பக விருட்சமாக இருப்பதும் காயத்ரி, காமதேனுவாக இருப்பதும் காயத்திரி, சூரிய சக்தியாக இருப்பதும் காயத்திரி, பிரம்மா, விஷ்ணு, சிவசக்தியாக இருப்பதும் காயத்திரி.

நாம் ஒவ்வொருவரும் உள்ளத்தில் அடங்கி, ஒடுங்கி செயலற்றிருக்கும் உயராத்ம சக்தியை விழிப்படையச் செய்து, ஜீவ பிரம்ம ஐக்கிய நிலையில் மண்ணுலக மக்கள் மாண்புற வழிகாட்டும் ஒளி விள்ககாகத் திகழ காயத்திரி மஹா மந்திரத்தை ஜெபித்து இன்புறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மக்களுக்கோர் இன்பச் செய்தி

பாரதப் பழம் பெரும் ரிஷிகளின் மரபைப் பின்பற்றி, ரிஷி பரம்பரையினரான மகரிஷி ஒருவரின் கண்காணிப்பில் பல்லாண்டு காலம் ஆன்ம சாதனை பயின்று குருநாதரின் பணியை மேற்கொண்டு, உலக மக்களுக்கு ஆன்ம தெய்வ சாத னைகளை கற்பித்து வரும் காயத்ரீ உபா சனா சித்தி பெற்ற ஸ்ரீ ஆர்.கே.முருகேசு சுவாமிகளை யண்டி ஆன்ம இரகசி யங்களைப் பெற்று ஆன்ம இன்பம் அடை வார்களாக.

1.அத்வைத விஞ்ஞானம் : அனைத்தும் ஆண்டவன் மயமே நீ அவனாயிருக்கிறாய் என்ற மகா வாக்கியங்களின் உண்மையை தற்கால அணு பௌதீக ரசாயன, விஞ் ஞான ஆதாரங்கள் கொண்டு விளக்கப் படும். உலகனைத்தும் ஒரே பரம் பொருள் வியாபகமாய் இருப்பதை நேர்முகமாய் கண்டறியும் விளக்கம் விளக்கப்படும்.

2. ஜீவன் முக்தி விஞ்ஞானம் : மனிதன் அடைய வேண்டிய ஓர் பேரின்ப பெரு நிலையுண்டு, அதனை அடையவே மனிதன் பலமுறை, பல உடல்களில் பல கோளங்களில் பிறந்திறந்து செல்கி றான். அந்நிலையாது? அதனால் என்ன பயன்? உடலில் உள்ளபடியே அந்நிலை யடைவதெப்படி? உடலுக்கப்பால் முக்த ஜீவன் என்னாகும்? என்ற விபரங்கள் விஞ் ஞான விளக்கங்களுடன் விளக்கப்படும்.

3. மனோ விஞ்ஞானம் : மனமெ ன்பதென்ன? அது எப்படி இயங்குகின்றது மனதின் கூறுபாடுகள் யாவை? மனதுக்கும் உடலுக்கும் என்ன தொடர்பு? முதலான மனோ விஞ்ஞான தத்துவங் களின் அரிய விளக்கம். மனதை அறிந்த வன் மனிதன். மனமே இன்ப துன்ப கா ரணம்.

மந்திரயோக விஞ்ஞானம்

4. சுவாமிகளின் மந்திரங்களின் ஷக்தியைப் பற்றி விஞ்ஞான விளக்கம்:

1. சப்தமென்பதென்ன 2.ஷப்த் வாகினி 3.ரேடியோவும் அலைகளும் 4.சினிமாவும் ஷப்த அலைகளும் 5.ஷப்தமும் குரலும் 6.சப்தமும் மொழியும் 7. சப்தத்திற்கு வடிவமுண்டு 8.ஷப்தமும் உடலும் 9.ஷப்தமும் மனமும் 10. படைப்பின் முதலில் 11. நாத விந்து 12. காரண சப்த பிரணவம் 13. ஷப்த சக்தி 14. மந்திரமென்பதென்ன 15. மந்திர தேவதை 16. மந்திரமும் சக்தியும் 17.ஜெபமென்பதென்ன 18. வாக்ஜெபம் 19. ஜெபமும் மனோசக்தியும் 20. ஜெபத்தின் உபயோகம் 21.பீஜ மந்திர மென்பதென்ன 22.மந்திரமும் மனோ தத்துவமும்.

5. ஆன்ம விஞ்ஞானம்: உயிரினங்களின் உடலில், உடல், மனம் அறிவுக்கு அப் பாற்பட்ட ஓர் ஆன்மா உண்டு என்பதை விஞ்ஞான விளக்கங்களுடன் விளக் கப்படும் அனுபவ சான்றுகளும் காட் டப்படும்.

6. கடவுள் விஞ்ஞானம்: இயங்கை வாதம், அணு வாதம், மாயாவாதம் சூன்ய வாதம், ஜடவாதம் முதலான எல்லா நாத்திகக் கொள்கைகளையும், பரிசீலித்து உல கத்திற்கோர் ஞானமயக் கடவுள் இருக்கிறார் என்பதின் அனுபவ விஞ்ஞான விளக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. யமன் பேசுகிறார்: மரண கர்த்தாவான நசிகேதனுக்கு "மரணத்தின் பின் மனி தர்கள் என்ன ஆகிறார்கள்'' என்ற மரண இரகசியத்தை விபரமாகக் கூறும் "கடோப நிஷத்" விஞ்ஞான விளக் கங்களுடன்.

8.யந்திர சக்தியின் இரகசிய விஞ்ஞானம் தமது தியானத்தில் கண் டறிந்த யந்திர சக்தியின் விஞ்ஞான விளக் கம்.

9. இலங்கையில் முதல் முறை குண்டலினியெனும் ஞான சக்தியின் முழு விளக்க விஞ்ஞான விரிவுரை:-

ஒவ்வொரு மனிதனிலும் உறங்கி கிடக்கும் பராஸக்தியின் இரகசியத்தை அறிய இது வோர் நற்றருணம்.

10. அருமைத்தமிழில் அணுசக்தி விளக்கம் அணுகுண்டு, அணுசக்திபற்றிய அருந்தமிழ் பேருரை அணுவை அறிந்து அணுவுக்கு அணுவான அண்டவனை அறியலாம்.

11. மரண லோக விஞ்ஞானம்: மரணம், அதன்பின் நிலைகளைப் பற்றிய அனுபவ விஞ்ஞான விளக்க விரிவுரை (1) மரணமென்பதென்ன. (2) கீழேழு மேலேழு லோகங்கள். (3) மனிதனின் தினச்சாவு (4) மரணநிலை வர்ணனை (5) சூட்சும உடல் வெளிப்படும் முறை (6) பாசக்கயிறு (7) தற்கொலை மரணம் (8) அகால மரணம். மரணத்தின் பின்:

(1) ஜீவ நித்திரை (2) மரணலோக விழிப்பு (3) சூட்சும உடல் விளக்கம் (4) சூட்சும உடலின் முடிவு (5) மரண லோக வாழ்க்கையாரம்பம் (6) நரகலோ கமென்ன சுவர்க்க லோக வர்ணனை (7) தேவலோகங்கள் (8) யமலோகமும் தண்டனையும் (9) மரண லோக வாழ்கை முறை (10) நாத்திகரின் ஜீவகதி (11) உலகை சுற்றும் ஜீவர்கள் (12) பேய் பிசாசுகள் உண்டா (13) தற்போதேன் அதிக பேய்களில்லை (15) மரண உலக பூவுலக தொடர்பு (16) ஜீவனின் ஜன்ம யாத்திரை (17) மறுபடி ஏன் பிறக்கிறான் எங்கே பிறப்பான் (18) மேலுலக யாத் திரை (19) தேவரும் மனிதரும் (20) பிறவாப் பேரின்பம்.

12. ஆன்ம ஞானத்திருவிழா: வேதா ந்தமும், விஞ்ஞானமும் இணைத் தெழுந்த விளக்கங்கள்.

13. பக்தி விஞ்ஞானம் : சர்வ வியாபகனான இறைவனை சகுணத்தில் காணமுடியுமா? பக்தியென்பது என்ன? பக்தி எத்தனை வகை? பக்தியால் என்ன பயன் என்பவைகளை தற்கால மனோ விஞ்ஞான ஆதாரத்துடன் அனுபவச் சான்றுகளுடன் விளக்கப்படும்.

14. இன்ப துன்ப விஞ்ஞானம்: மனிதனுக்கு இன்பமும் துன்பமும் ஏன் உண்டாகிறது. இன்பமென்பதென்ன? துன்ப மில்லாத இன்பநிலையில் வாழமுடியாதா? இன்பம் எதனால் கிட்டும் என்பன போன்ற விளக்கங்களுடன் இன்பமாய் வாழும் சாதனா விளக்கமும் விளக்கப்படும்.

15. ஏகாக்ர விஞ்ஞானம் : சமாதி ஞானத்தின் ஆரம்பப்படியாகிய ஏகாக்ர நிலை என்பதென்ன? ஏகாக்ரத்தில் மனம் எப்படி இருக்கும்? அந்நிலையில் மனதுக்கு என்ன திறமை உண்டாகிறது என்ற விளக் கங்களுடன் ஏகாக்ர நிலையை அடையும் பல சாதனா முறை விளக்கப்படும்.

16. ஜோதிட விஞ்ஞானம்: சூரியனைச் சுற்றும் கிரகங்களுக்கும் பூவுலகிக்கும் தொடர்புண்டு கிரக மாறுதல், உலகின் அனைத்திலும் மனிதன் அறிவிலும் மாறுத லாக்கம் கிரகங்கள் மனிதனின் விதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்கின்றன. ஜாதகத்தின் தத்துவம். ஜோதிடப் பலன்களின் விளக்கம் முதலிய விஷயங்கள் விஞ்ஞான அனுபவ ஆதார ங்களுடன் விளக்கப்படும்.

17. கோவில் வழிபாட்டு இரகசியம்: கோவில் ஏன் தோன்றியது? அதன் அமைப்பில் கருத்து வழிபாட்டின் தத்துவம், இவ்விபரங்கள் முதன் முறையாக சூட்சும திருஷ்டியால் கண்டறிந்தவை.

மற்றும் மத சித்தாந்தங்களின் மறைமுக தத்துவங்கள், யோக இரகசிய ங்கள், தெய்வங்களின் இரகசிய விஞ்ஞான விளக்கம், மந்திர சாஸ்திரங்களின் மர்ம ங்கள், சூட்சும திருஷ்டி விஞ்ஞானம், இன்னும் இதுவரை தமிழுலகம் கேட்டி ராத, சிந்தனைக் கெட்டாத பேருண்மைகள் பற்றிய இரகசிய வகுப்புகளும் நடத்தப் படும்.



## சுவாமிஜியின் காயத்ரி பாடங்கள்

### காயத்திரி பாடத்தால் கற்றுத் தரப்படும் பாடங்கள்

1. உபதேசம்
2. உபதேசம்
3. உபதேசம்
4. பிரபஞ்சம் காயத்ரிமயம்
5. தெய்வ வஸியம்
6. காயத்ரியின் தெய்வ சக்திகள்
7. காயத்ரியின் அருள் விலாசம்
8. காயத்ரியும் உடல் மனத் தூய் மையும்
9. காயத்திரி சக்தி சோதனைகள்
10. காயத்ரியின் அட்சர தெய்வங்களும் பயன்களும்
11. தெய்வ காயத்திரிகள்
12. பெண்களும், பயன்களும்
13. காயத்திரி சுய சிகிச்சை
14. காயத்ரியும் - ஆறாதார விழிப்பும்
15. சாதனையும் - பக்குவமும்
16. இல்லற வேள்வி
17. காயத்ரியும் - பஞ்சகோசமும்
18. உபவாச நிபந்தனை
19. உணவு கட்டுப்பாடு
20. பிராணமய கோச சாதனை
22. மனோமய கோச சாதனை திராடகம்
23. மனோமய -சப்த சாதனை
24. ரச சாதனை
25. கந்த-ஸ்பர்ச சாதனைகள்
26. விஞ்ஞானமய சாதனை
27. விஞ்ஞான மய கோச சாதனை
28. ஆனந்த மய கோசம்
29. பஞ்ச பூத தத்துவம்
30. பஞ்ச பூத சாதனை
31. மூன்றவைத்தைகள்
32. தனித்த ஆன்மாவின் செயல்
33. தூரியாவஸ்தை
34. காயத்ரி மய வாழ்வு
35. துரிய சாதனை
36. பயிற்சியின் குறிக்கோள்
37. தன்னறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாந்திர யோகம்

தாந்திர யோகமென்றால் என்ன? இது எப்பொழுது யாரால் கண்டுபிடிக்கப்பட்டது என்ற கேள்வி இன்று பலராலும் கேட்கப்பட்டு வருகிறது. நான்கு வேதங்கள் போன்று தாந்திர வேதமும் ஒன்று. இது வேத காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும் என்பது தாந்திர ஆச்சாரியர்களின் முடிவு. தாந்திரயோகம் இந்து மதத்திற்குப் புதியதல்ல, பல்லாயிரம் ஆண்டுகளாக நடை முறையில் இருந்து வருவதே தாந்திர யோகம்.

இன்று உலகில் பல பாகங்களிலும் தாந்திர யோகிகள் வாழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக, பாரத நாட்டில் ஹிமாசலப் பிரதேசம் நீலகிரி-ஏலகிரி போன்ற பொதிகை மலைச் சாரல்களிலும் ஆபிரிக்காக் கண்டத்திலும் திபேத்திய மலைகளிலும் வாழ்ந்து தாந்திர சாதனைகளைப் புரிந்து, மனித அறிவுக்கு எட்டாத, சிந்தனைக்கும் புலப்படாத விஞ்ஞானிகளும் புரிந்து கொள்ள முடியாத வியக்கத்தக்க பல அரும்பெரும் காரியங் களைச் செய்து வருகிறார்கள்.

தாந்திர யோகத்தின் மூல தெய்வம் மகாகாளி, மூலயந்திரம் ஸ்ரீ சக்கரம், தாந்திர சாதனை மற்ற இறை சாதனைகளை விட மாறுபட்டு, உக்கிரமாகவும் இரகசிய

## மூல தெய்வம்

மானதுமாக இருக்கும். தாந்திர இரகசிய சாதனைகளால் இறந்தவர்களை உயிர்ப்பிக் கலாம், உயிரோடு இருப்பவர்களை மரணிக்கச் செய்யலாம். இந்த முறை தாந்திர சாதனைக்குத்தான் உண்டென்பதல்ல. மற்றத் தெய்வ உபாசனைகளிலும் உண்டு. நன்மையும் செய்யலாம், தீமையும் செய்யலாம். விசேஷமாக காயத்திரி சாதனைக்கும் இது பொருந்தும். நன்மை செய்ய வேண்டு மென்பதுதான் இறை நியதி சிலர் பணத்திற் காகப், புகழுக்காகத் தீய காரியங்களைச் செய்வதால் தாந்திர வித்தை அபாயகரமானது தீயது என்ற எண்ணம் மக்கள் மனதில் அகல முடியாதபடி வேரூன்றிவிட்டது.

தாந்திர யோகிகள் அநேகமாக மயானத்தில் இருந்தே தங்கள் இரகசிய சாதனைகளைச் செய்வது வழக்கம். அடக்கம் செய்த பிரேதங்களை தோண்டி எடுத்து, அதன் மேலமர்ந்து தியானம் செய்து, மாபெரும் தவ ஆற்றலைப் பெற்று வருகிறார்கள். பிரேதங்களுக்கு உயிர் கொடுத்து அதைக் கொண்டு பல நல்ல, தீய, காரியங்களைச் செய்த பின் அதை மரணிக்கச் செய்து அடக்கம் செய்துவிடுவார்கள்.

எவனொருவன் இறந்த பிணத்தின் மேலமர்ந்து தியான ஜெபம் செய்கிறானோ அவனுக்குச் சகல சித்துக்களும் உண்டாகும் என்பது தாந்திர உபதேசம்.

தாந்திர சாதனையைச் சாதாரண மக்கள் பயில்வது கஷ்டமானது. இச்சாதனையைப் பயின்று அஷ்ட சித்திகளைப்பெற விரும்புபவர்கள் தாந்திர யோகியைச் சரணடைய வேண்டும். அவரிடத்திற் தன்னை ஒப்படைத்துப் பரிபூரண சரணாகதியடைய வேண்டும் சரணடைந்தவர்கள் தகுதியுள்ளவர் களாயின் குருவானவர் பல கஷ்டமான, கட்டுப்பாடுகள், சோதனைகளின் பின் தன் மாணவனாக ஏற்று இரகசிய தாந்திர வித்தையைக் கற்றுக் கொடுப்பார். குருவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவர் உபதேச நெறிநின்று சாதனை செய்து வருபவர்கள் அஷ்ட சித்திகளையெல்லாம் பெற்று சாக்ஷத்கார நிலையை அடையலாம். தான் பெற்ற சக்தியை நல்ல காரியங்களுக்கே பயன்படுத்த வேண்டும். தீயகாரியங்களுக்குப் பயன்படுத்தக் கூடவே கூடாது எனத் தாந்திர தேவதையான மகாகாளி மாதாவின் முன் சத்தியம் செய்துதான், ஆஸ்ரமத்தை விட்டுக் குருவின் ஆசியுடன் வெளிவர வேண்டும்.

தாந்திர சித்திபெற்ற பக்தன் இதயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலத்தில் காளிமாதா சிரஞ்சீவியாக வீற்றிருந்து அருளாட்சி நடத்தி, அருளொளி பரப்பி, அருட்சக்தியைச் செயற்படுத்தி வருவாள்.

தாந்திர சித்திபெற்ற, அகம்பாவம் பிடித்த சிலர் செய்யும் தீய காரியங்களைக் கண்டு தாந்திர சாதனையை ஒதுக்கிவிட முடியாது. தாந்திர சாதனையை முறைப்படி பக்தி, வைராக்கியம், சரணாகதியுடன் பயின்று வந்தால் ஜீவபிரம்ம ஐக்கிய நிலை உருவாகி சாக்ஷாத்கார நிலையை நிச்சயம் அடையலாம்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், மகாகவி காளிதாசர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர் ஆகியோர் தாந்திர சாதனை மூலமே அணிமாதி அஷ்ட சித்தி களைப் பெற்று மண்ணுலக மக்கள் மாண்புற வழிகாட்டி வந்தார்கள்.

தாந்திர சாதனையில் மகாகாளி மாதாவையே உபாசனா மூர்த்தியாகக் கொண்டாலும், பெண்களை சக்தியின் வடிவ மாகவே பூஜிப்பது முறை, பெண்களில் தெய்வ த்தைக் காண்பவனே பேரின்பத்தின் எல்லை யைக் காண முடியும். பெண்களைக் காமப் பொருளாக எண்ணுவது மஹா பாவம் என்பது தாந்திர போதனை.

## அஷ்ட சித்திகள்

“பெண்ணே என் மேலான
தர்மம் (மதம்)
பெண்ணே என்னுடைய
மேலான தபஸ் (பக்தி)
பெண்ணே என்னுடைய
சுவர்க்கம்”

“பெண்ணைப் பூஜையால் தியானத்தால் திருப்தி செய்தால் முழு உலகத்தையும் திருப்தி செய்வதற்கு ஒப்பாகும்” என்று தாந்திர வேதம் கூறுகிறது. பெண்களையே மகாகாளிதேவியாகப் பாவித்து, தீப, தூப, நைவேத்தியங்களால் பூஜித்து வருவது தாந்திர முறை, விசேஷமாக, பெண்களின் “பிரம்ம யோனியையே அகில மனைத்தையும் ஆக்கியமைத்து அளிக்கும் அகிலாண்டேஸ்வரி ஆதிசக்தி ஜகன்மாதாவின் மகா சக்திவாய்ந்த யந்திரமாகப் பாவித்து, விசேஷ முறைகள் செய்து, அதற்குண்டான தாந்திர மந்திரங்கள் ஜெபித்து, சிவப்பு மலர்களால், வாசனைத் திரவியங்களால் அர்ச்சித்து, வழிபட்டு, அதன் மூலம் தாந்திர தேவதை யான மகாகாளிதேவியின் சேதனத் திருக் கோலக் காட்சியைக் கண்டு அருள்பெற்று நிலையான, மாறாத, தெவிட்டாத பேரின் பானுபவத்தைப் பெற்றுவரும் யோகிகளை இன்றும் காணக் கூடியதாக இருக்கிறது. பாரத நாட்டில் 63 பிரம்மயோனி ஆலயங்கள் இருப்பது பலருக்குந் தெரியாமல் இருக்கலாம். இந்த ஆலயங்களில் பெண் களின் பிரம்ம யோனியையே மூலஸ் தானத்தில், யந்திரங்களாகப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகிறார்கள். வாசகர்கள் ஆச்சரியப்படலாம். நம்ப மறுக்கலாம். ஆனால் இது உண்மை. தாந்திர இரகசியங் களை சிற்பிகள் அக்காலத்தில் ஆலய கோபுரங்களில் தத்ரூபமாக வடித்திருக் கிறார்கள். இதில் பல பேருண்மைகள் பொதிந்துள்ளன. இன்றும் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி போன்ற ஆலயங்களின் கோபுரங்களில் இவைகளைக் காணலாம். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது: காரணம் ஸ்தூல கண்கொண்டு பார்க்கும் போது ஆபாசமா கத்தான் தெரியும். ஞானக் கண்கொண்டு பார்க்கும் போது மறைமுக ஆன்மீகப் பேருண்மை புலப்படும்.

தாந்திர சாதனைகள் மற்ற ஆன்ம சாதனைகளைப் போல் உலகிற்கு நன்மை அளிப்பவைதான். தாந்திர முறைப்படி இறந்த பிணத்தின் மேலமர்ந்து தியானம் செய்பவனின் முன் மகா காளிமாதா எழுந்தருளி வேண்டும் வரங்களையெல்லாம் கொடுத்து சதாகாலமும் பக்தனின் இதயக் கோயிலில் சிரஞ்சீவியாக வீற்றிருந்து அருளாட்சி நடாத்தி, பக்தனின் சகல விருப்பங்களையும் நிறைவேற்றி வருகிறாள். பரமஹம்ச தேவரும் இப்படியான சாதனைகளைச் செய்து சமாதி நிலையைக் கூடப் பெற்று இறையின்பத்தைத் தொட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்தார். ரிஷி பரம்பரையினர், சித்தர் மரபினர் அனைவரும் தாந்திர சாதனையால் தேவர்களையே சபிக்கும் மாபெரும் தவ ஆற்றலைப் பெற்றதாக வரலாறு கூறுகிறது.

தாந்திர நூல்கள் பெண்களின் பெருமையையும், தெய்வீகத்தையும், போதிக்கின்றன. வேதங்களில் கூட சில பகுதிகளில் கணவன் தன் மனைவியின் உடலைப் புனித

## உலகிற்கு நன்மை

மாகக் கருதி, தெய்வங்களை அதனிடத்து வழிபடல் வேண்டுமெனக் கூறுகிறது. தாந்திர யோகிகள் பெண்ணை தெய்வமாகக் கருத வேண்டுமெனவும் அனைத்துலகும் ஈன்றளிக்கும் அன்னையாம் ஜகன்மாதா அவள் வாயிலாக உருக்கொண்டு விளங்குவதை உணர வேண்டுமெனவும், மாதரை இழிவாக நடத்தக் கூடாதெனவும் கூறுகின்றனர்.

தாந்திர சாதனையில் சகல தேவதைகளையும் கண்டு வழிபடும் இரகசிய முறைபற்றி இக்கட்டுரையில் விளக்க முடியாது. விளக்கவும் கூடாது. காரணம் வாசித்து உணர்ந்து கொள்ளக் கூடியளவு மக்களின் மனப்பக்குவ நிலை போதாது. இவைகளைத் தாந்திர குரு மூலமே தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடுவது சாலப்பொருந்தும்.

ஸ்ரீ இராமகிருஷ்ண காலத்தில் தாந்திர சாதனை செய்து, சித்துப்பெற்ற பிராம்மணியார் என்ற அம்மையார் ஒருவர் இருந்தார். ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அவதார மகிமையை உணர்ந்த அந்த அம்மையார், அவருக்கும் தாந்திர சாதனையைக் கற்றுக் கொடுக்க முன்வந்து, இதைத் தன் சொந்த விருப்பத்தில் அல்லது தேவியின் மறைமுக ஆணையின் பெயரில் செய்வதாகவே அவர் கூறுகிறார். ஸ்ரீ இராமகிருஷ்ணரும் அம்மையாரின் விருப்பத்தை ஏற்று அவர் உபதேசப்படி தாந்திர சாதனையைப் பயின்றார்.

அக்காலத்தில் மங்கையர் அனைவரையும் தாய் போன்று கருதி வந்ததன்றியும், பெண் என்ற மொழியைக் கேட்டதும் அகிலாண்ட நாயகியின் நினைவு தெய்வீக இன்ப வெறி எழுப்பெற்று உலகத்தை முற்றும் மறந்து விடுவார். அங்ஙனமே "யோனி" என்னும் மொழியைக் கேட்டதும்-அது ஜகத் காரணப் பரம்பொருளாக அவர் முன் காட்சியளிக்க அவர் சமாதி எய்திவிடுவார்.


இந்தக் காலத்தில் ஒருநாள் இரவு பிராம்மணியார் அவர் சொற்படி அழைத்து வந்த

## அகிலாண்ட நாயகி

ஓர் இளங் கட்டழகியைத் தேவியாக குருதேவர் வணங்கிய பின் அவ்வழகியின் மடிமீது அமர்ந்து ஜெபம் செய்யும் படி அம்மையார் வேண்ட, குருதேவர் தேவியை நினைத்தார்-தெய்வீக சக்தி செறியப் பெற்று மெய்மறந்து அங்ஙனமே செய்து சமாதியில் ஆழ்ந்தார். அழுகிய நரமாமிசத்தையும், நாவாற் தொட்டு வெறுப்பற்று சமாதியெய்தினார். (தாந்திர சாதனையில் நரமாமிசமும் நிவேதிக்கப்படுவது வழக்கம்.) ஒரு மங்கையின் யோனியையும் தாந்திர முறைப்படி வணங்கி-வீரபாவனை வழிபாடு செய்தார். பரமஹம்ச தேவரை உலகம் ஏற்றுக் கொண்டாள், தாந்திர சாதனையையம் ஏற்றுக் கொள்ளவே வேண்டும்.

நீலகிரிப் பொதிய மலைச்சாரலில் ஒரு தாந்திர யோகி வாழ்ந்து வருகிறார். இவர் கோயிலாம்பாள் என்ற பெண்ணையே தாந்திர தேவதையாக வழிபட்டு வருகிறார். இரண்டு வருடங்களுக்கு முன் இவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அடியேனும் அந்த அம்மையாரை ஜகன்மாதாவாக நினைத்துத் தாந்திர முறைப்படி பூசை செய்ய மகாகாளி மாதாவின் தரிசனம் கிட்டியது. அவளின் ஆணையால், தாந்திர தேவதையான மகாகாளியும், கற்சிலை கொண்டு வரப்பெற்று, இப்பொழுது ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

# ஸ்ரீ ஆதிசங்கரர்



காலடி எனும் கிராமத்தில் பிறந்து, கால்நடையாகவே இமயம் வரை பயணம் செய்து, சிதைந்து சின்னாபின்னமாகப் போகவிருந்த சனாதன தருமமாம் இந்து மதத்தை ஆறு சமயப் பிரிவுகளாக வகைப் படுத்தி அவற்றை ஒன்று சேர்த்து இந்து மதமாக்கி வைத்ததுடன், எம்முள் மூழ்கிக் கிடந்த மூடநம்பிக்கைகளையும் தகர்த்து எறிந்தவர் ஸ்ரீ ஆதிசங்கரர் ஆவார்.

சங்கரர் தோன்றவில்லையாயின் எமது இந்து மதம் இன்றைய நிலையைப் பெற்றிருக்காது. எல்லாவிதமான ஆசைக ளையும் விட்டவர் அவர். அவருக்கு தேசம், மதம், தெய்வம் என்ற பேதமேயில்லை. கணபதி முதல் காலவையிரவர் வரை சகல மூர்த்தங்களையும் துதி செய்தவர் அவர். அவருடைய தோத்திரங்களின் வாயிலாக இவற்றை அறியலாம்.

ஒரு மூர்த்தியை துதி செய்யும் போது அவ்வழியிலேயே இருந்து பிறழாமல் துதி செய்வார் அவர். பஜகோவிந்தம் படிக்கும் போது வைஷ்ணவராகவும், சிவானந் தலகரியில் சைவராகவும், சௌந்தர்யல கரியில் சாக்தராகவும், சுப்பிரமண்ய புஜங்கத்தில் கௌமாரராகவும் அவரைக் காணமுடிகிறது.

நீண்ட காலமாக பொருள் அறியப் படாமல் இருந்த பிரம்ம சூத்திரத்திற்கு உரையெழுதி பண்டிதர்களுக்கு உதவிய பெருமை அவரையே சாரும். தமக்குப் பிறகு தோன்ற விருந்த மதகுருமார்களுக்கு கலங்கரை விளக்கமாக வழிகாட்டித் தூணாக அவர் விளங்கினார்.


அவர் தம் கைபட்ட தலங்கள் தெய்வ ஒளிபெற்றுத் திகழ்கின்றன. தந்திர சாஸ்திரத்தில் அவர் பெற்ற வெற்றிகள் மிகப் பல. அவர் ஸ்தாபித்த யந்திரங்களும், மூல மூர்த்தங்களும் இன்னும் எம்முடன் பேசுகின்றன. காஞ்சியில் அவர் பதித்த ஸ்ரீசக்கரம் எல்லாச்சக்கரங்களுக்கும் தாயாகி நின்று ஒளிபரப்புகிறது. திருவானைக்காவில் தாடங்கம் பதித்த கரம் அவருடையதே. ஸ்ரீரங்கத்திலும், திருப்பதியிலும் அவருடைய கால் பட்ட மகிமையும், கரம் கந்த பெருமையும் இன்றும் பேசுகின்றன.

இம்மகா புருஷரை நினைந்து வழிபடுவதன் மூலம் எமது தெய்வீக சக்தியைப் பெருக்கிக் கொள்ளலாம். அத்துடன் நாமும் தெய்வத்துடன் பேச வழிகாட்டும் அவருடைய தோத்திரப் பாடல்களை முறையாக ஓதி பேரின்பம் பெருவாழ்வு பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ இசக்கி சுவாமிகள்



எமது குருநாதருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்களில் ஸ்ரீ இசக்கி சுவாமிகளும் ஒருவராவார். தவவலிமையில் சிறந்து விளங்கிய இம் மகானுபாவர் மனவலிமையிலும் மிகுந்து விளங்கிய ஞானியாவார்.

இத்தவசீலர், திருவண்ணாமலையில் பள்ளி கொண்டு அருளாட்சி புரிந்து வரும் அருணாசலப் பெருமானிடம் அளப்பரிய பக்தி செலுத்தி வந்தார். அருணாசல நாதரின் அன்பைப் பெறுவதற்காக இவர் சுமார் பதினாலு கிலோ மீற்றர் சுற்றளவு டைய அருணாசலர் வீற்றிருக்கும் மலையைச்சுற்றி ஆயிரத்து எட்டுத் தடவைகள் அங்கப்பிர தட்சனை பண்ணியு ள்ளார் எனின் அவர் தம் மனவலி மையையும், விடமுயற்சியை யும், அருணாசலர் மீது கொண்ட அசைக்க முடியாத பக்தியையும் நாம் புரிந்து கொள்ள முடிகின்றதல்லவா.

இப்பேர்ப்பட்ட அருளாளர்களுடன் உறவு வைத்து, அவர் தம் அன்பையும், ஆசியையும் பெற்று, உலக மக்களுக்கு ஞானவழிகாட்டும் நம் குருநாதரின் பெருமைதான் என்னே!.

# ஞானகீதையிலிருந்து குரு பற்றி சில துளிகள்

⇨ இறைவனை தரிசிக்க விரும்பினால் ஓர் குருவின் தரிசனத்திற்கு உன்னை தயார் படுத்திக் கொள்.

⇨ தீய குணங்கள் உன்னிலிருந்து அகல வேண்டுமாயின் ஓர் சற்குருவை தேடு. அவர் சொற்படி நட அவரே என்றும் உன்னை வழிநடாத்துவார்.

⇨ ஒரு தொழுநோயாளியின் மீது கை வைக்க அருவருப்பு அடைகின்ற மனித னுடைய செய்கையினை விட சற்குரு சாதக னின் விதியையே தொடுகிறார். அது எவ் வளவு அருவருப்பானது. மாறாக அதையே சற்குருவானவர் அன்புடன் அரவணைத்து ஆசிர்வதிக்கின்றார்.

⇨ சாதகர்கள் சாதனையில் சிக்கல் தோன்றும் போதெல்லாம் குருவானவர் சூட் சுமத்திலும் நேரிலும் ஏன் நித்திரையிலும் கூட சற்குரு தோன்றி சிக்கல்களை தீர்த்து வைப்பார்.

⇨ குருவே தெய்வம் என்று அறி. நீ அடைய வேண்டியவை எளிதில் உன்னை வந்தடையும். குரு சரணாகதி தத்துவத்தினை விட சிறந்தது எதுவுமில்லை.

⇨ குரு சேவை மனதை செம்மைப் படுத்தும் விதியுள் வேகத்தினை குறைக்கும். இறையுணர்வை வளர்க்கும் சக்திமிக்கது.


⇨ நீ உலகில் சற்குருவை தவிர யாரையும் நம்பாதே. இறைவன் கூட உன் விதி முடியும் வரை காத்திருப்பார். ஆனால் சற்குரு உனக்கு எல்லா நிலைகளிலும் கைகொடுத்து காப்பாற்றுவார்.

⇨ எந்த சூழ்நிலையிலும் நீ சற்குருவின் அருளமுதமே தெய்வவாக்கு என்று நம்பி தெளிதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வீரப்பிரமேந்திர சுவாமிகள்



எமது குருதேவர் எவரும் எளிதில் செல்ல முடியாத காடு, மேடுகளிலெல்லாம் ஏறி, இறங்கி பல்வேறுபட்ட மகான்களைச் சந்தித்து நல்லாசி பெற்றதுடன், சமாதியடைந்த மகான்களின் சமாதிகளிலும் தியானம் செய்து அவர்தம் அருளாசிகளைப் பெற்றுள்ளார். அந்த வகையில் சுவாமியவர்கள் ஸ்ரீ வீரப்பிரமேந்திர சுவாமிகளின் சமாதியிலும் தியானம் செய்து அவர்தம் அருளைப் பெற்றார்கள்.

பொற்கொல்லர் இனத்தினரான பரிபூரண ஆச்சார்ய, ப்ரக்நதாம்பா தம்பதியினருக்கு காசி விஸ்வநாதரின் அருளால் மகவாகப் பிறந்தவர் ஸ்ரீ வீரப்பிரமேந்திரர். இவர் பிறந்தவுடன் இவர் தந்தை இறந்துவிட அத்துயரம் தாங்காமல் தாயும் இறந்துவிட்டாள். அனாதையான இவரை அத்திரி மாமுனிவர் எடுத்து தமது ஆசிரமத்தில் எடுத்து வளர்த்து வந்தார்.

ஒருநாள் அத்திரிமகரிஷியின் ஆசிரமத்திற்கு வந்த பாபாக்னி மடத்தினைச் சார்ந்த வீரபோஜா, வீரபாப்பமாம்பா தம்பதியினர் மகரிஷியிடம் தமக்கு மகப்பேறு இல்லையென்ற குறையைக் கூற அத்திரி மகரிஷியும், தமது ஆசிரமத்தில் வளர்ந்த அக்குழந்தையை அவர்களிடம் கொடுத்து "இக்குழந்தை சாட்சாத்த அண்டவனின் திருப்பிறப்பேயாகும். வருங்காலத்தில் சிறந்த ஞானபோதனாகவும், மகாபுரிஷனாகவும் இவன் விளங்குவான் "என ,சீர்வதித்து, அவர்களிடம் கொடுத்து வளர்க்குமாறு கூறினார். அக்குழந்தையும் பாபாக்கி மடத்தில் வளர்ந்து அத்திரி மகரிஷியின் திருவாக்கை மெய்ப்பித்தது.

இத்தகு பெருமையை வாய்ந்த வீரப்பிரமேந்திர சுவாமிகளின் சமாதி நெருரில் உள்ளது. இச்சமாதியில் ஒருநாள் குருநாதர் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டிருந்தார். நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. சுமார் 1 மணித்தியாலங்களுக்கு மேலாக தியானத்தில் இருந்தும், அவர்தம் அருள்வாக்குக் கிடைக்கவில்லை. இது சுவாமியவர்களின் மனதைப் பெரிதும் வேதனைப்படுத்தியது. தாம் ஏதாவது குறைகளைச் செய்துவிட்டோமோ என அவருள்ளம் கலங்கியது. அவ்வேளையில் சமாதியின் பின்புறப் பகுதியிலிருந்து ஒரு குடுகுடுப்பைக் காரன் புரியாத மொழியில் குடுகுடுப்பை அடித்து ஏதோவொரு பாடலைப் பாடிக் கொண்டு சென்றதை சுவாமியவர்கள் அவதானித்தார்கள்.

எவ்வித அருள்வாக்கும் கிட்டாததால் மனச் சலனத்துடன் வீரப்பிரமேந்திர சுவாமிகளின் சீடரான சித்தையா என்பவரின் சமாதியிருக்கும் இடத்திற்கு சென்று அங்கு தியானத்தில் ஈடுபட்டார். அச்சமாதியிலும் எவ்வித அருள்வாக்கும் கிடைக்கவில்லை. பின்பு எம்குருநாதர், அச்சமாதியை பராமரித்து வரும் சித்தையா என்பவரின் பரம்பரையைச் சேர்ந்த ஒருவரிடம் தமது குறையை எடுத்துக் கூறினார்கள்.

அப்போது சித்தையா பரம்பரையைச் சேர்ந்த அவர், வீரப்பிரமேந்திர சுவாமிகளின் சமாதியில் எம்குருநாதர் தியானத்தில் ஈடுபட்டிருந்த போது குடுகுடுப்பைக் காரன் பாடிய பாடலைப் பாடி அதற்குரிய பொருளையும் கூறி இதுதான் வீரப்பிரமேந்திர சுவாமிகள் தங்களுக்கு கூறிய அருள்வாக்கு எனக் கூறினார். இதனைக் கேட்ட சுவாமிகளுக்கு மெய்சிலிர்த்தது. அந்த மகாசித்தரின் அருளாசி தமக்கு இவ்விதமாக கிடைத்ததேயென எண்ணி உளம் குளிர்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதியுடன் ஜோதி

எண்ணம் சக்தியில் ஒன்று கொண்ட அனைவருமே ஒன்றுதான். நான் நீ என்ற பிரித்த நிலையில்லை. இந்த ஞானநிலை பெறுவதற்கு முன், இந்நிலையின் தொடர் நிலைக்கு வந்தவர்களின் வாழ்க்கை நிலை எல்லாம், பல இன்னல்கள் பட்டு, ஜெயித்து வழிவந்த நிலை. வாழ்க் கையில் இன்னல் கொண்ட நிலையில் ஏற்படும் மனத் தெளிவின் ஜெப நிலைதான் தெய்வ சக்தியின் நிலை.



ஒவ்வொரு வரும் தனக் கேற்படும் வாழ்க் கையில், சத்திய சோத னையாய் ஜெபம் கொண்டு சலிப்பு நிலை யையும், விரக்தி நிலையையும், கோபநிலையையும் தன்னை அண்ட விடாமல், பற்றற்ற நிலையாக்கி, நம் ஆத்மாவையே ஜோதியுடன் ஜோதியாய் கலக்கிடுங்கள்.

எண்ணத்தில் ஈர்த்து, செயல் கொள்ளும் ஒவ்வோர் ஆத்மாவிற்குமே இந்த ஞான அருள்கிட்டும். ஞானத்தின் அருள் பாக்கியத்தை நாம் பெற்ற சொத் தாக, பொக்கிஷ நிலைப்படுத்தி, பாதுகாத்து செயல் கொண்டிடல் வேண்டும்.

நல்லுணர்வு, இந்நல் ஜெபத் தொடரில், இஸ்தூல உடம் பிலுள்ள தீய சக்திக ளெல்லாம் மறைந்து, நாம் ஈர்த்த ஜெப சக்தியினால் நம்மையே ஒளி சக்தி யாக ஒளிரச் செய்யும் பக்குவ ஜெபத்தில் செயல் கொண்டுள்ள நாம், இவ் வழித் தொடரில் வந்த பிறகு, நாம் சேமித்த இச் சக்தியை மிகவும் ஜாக் கிரதையாக இயற் கையுடன், மற்ற தீய சக்தி கொ ண்டவரின் நிலை யை அடக்க மோதவிடா மலும், தெய்வீக பெரும் சக்தியை மிகவும் பொக்கிஷ நிலைப்படுத்தி, விரயப்படுத்திடாமல் வழித்தொடரின் தெய்வ சக்தியாய் மிளிரச் செய்திடல் வேண்டும்.

**- சற்குருதேவர் ஈஸ்வர மாமகரிஷி -**

## குருவின் பெருமை

குருதேவா! உங்களுடைய குண மகிமைகளை நான் எவ்வாறு சொல்வேன்? அவற்றை வர்ணிப்பதற்கு எனக்குத் தகுதியில்லை. ஏனெனில் அவற்றைக் கூறும் சாமர்த்தியம் எனக்கு இருக்க வேண்டுமெனில், நான் வேதவியாசராகவோ, வால்மீகியாகவோ, நான்முகனாகவோ, பதஞ்சலியாகவோ, வெகு அழகான கதைகளை உடைய "ப்ரகத் கதா"வை எழுதிய குணாட்யராகவோ, தேவர்களின் குருவான பிருகஸ்பதியாகவோ இருக்க வேண்டும். மேற்கூறிய பெருமைகள் இல்லாததால் என்னால் தங்களுடைய குணங்களை வர்ணிக்க இயலவில்லை.

- சுபாஷித பாண்டாகாரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ யோகி ராம் சுரத்குமார் சுவாமிகள்



திருவண்ணாமலைத் திருத் தலத் தின் பெருமையைச் சாதாரண வார்த்தைகளால் சாற்றிவிட முடியாது. இங்கு வீற்றிருக்கும் அருணாசலத்தானை மரணத் தருவாயில் நினைத்தாற் கூடப் போதும் முத்தி நிச்சயமாகிவிடும். இத்தகு சிறப்பு வாய்ந்த திருவண்ணா மலையில் இலங்கும் புகையிரத நிலை யத்தின் அருகில் நிழல்பரப்பி நின்ற ஒரு மரத்தினடியில், கிழிந்த ஆடையை அணி ந்து கொண்டு பித்தம் தலைக்கேறிய பிச்சைக் காரனைப் போல தம்மை உல குக்கு இனங்காட்டாமல் வாழ்ந்து வந்தவர் தான் அருள்ஞானச் செல்வர் ஸ்ரீயோகி ராம் சுரத்குமார் சுவாமிகள்.

அக்காலத்தில் இம்மகானுக்கு உற்ற நண்பனாக விளங்கியது சுவாமிகள் செல்லமாக வளர்த்த நாய் மட்டும்தான். இந்நாய் பிற்காலத்தில் சுவாமிகளின் மடியிலேயே முத்தியடை ந்தது என்பதை அறியும் போது அந்நாய் செய்த தவத்தின் பெரு மையை உணர்ந்து உள்ளம் சிலிர்க் கிறது.

இவரைப் புரிந்து கொண்டவர்கள் மிகச் சிலரே. அவர்கள் தாம் செய்த பூர்வ புண்ணிய பலனால் இப்புனிதரை அண்டிப் பெற முடியாத பல பேறுகளைப் பெற்றுய்தனர். "கடவுள் மீது அடங்காப் பக்தியும் பேரவாவும் கொண்டிருந்தால் உனக்குப் பயமே கிடையாது, இறைவன் என்தலைவன் (My Master), உன்னைக் காக்க எந்த நேரமும் ஓடோடி வருவான்" இதுதான் யோகி ராம் சுரத்குமார் பகவா னின் கீதோப தேசமாகும்.

திருவண்ணாமலையில் உண வின்றியும், இருக்க இடமின்றியும், கயவர் களினால் அடிபட்டும், இம் மகானுபாவர் பட்டபாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. "மகத்தின் உக்கதோர் சனியானாய்" எனும் கூற்றுக்கேற்ப மகத் தில் உள்ள அவரது சனிதிசை அவரைப் பித்தனாக, பிச்சைக் காரனாக உலகில் நடிக்க வைத்தது. அவதார புருஷனான இராமபிரான் எவ்வாறு விதிக்கு உட்பட்டு வேதனைகளை அனுபவித்தாரோ அதுபோலவே ஸ்ரீயோகி ராம்சுரத்குமார் சுவாமியவர்களும் விதியின் ஏற்ற இறக்கங்களுக்கு தன்னை ஆட்படுத்திக் கொண்டு கடவுள் அவதா ரமாகவே திகழ்ந் தார்கள்.

இம்மகாபுருஷரை, ஆரம்ப காலங் களில் இனங்கண்டு கொண்டவர் எங்கள் குருநாதர் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகள் அவர்களே. எம் குருநாதர் இப்பெரியாருடன் மிக நெருங்கிய நட்பும், பூண்டிருந்தனர் அவரும் எம்குருநாதரிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். இம்மகான் இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பதாகவே மகா சமாதியடைந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சற்குருவே நமஹ

# குருவின் மகிமை

**குருர் பிரம்மா குருர் விஷ்ணு**
**குருர் தேவோ மஹேஸ்வரா**
**குரு ஸாட்ஷாத் பரப் பிரம்மம்**
**தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ!**

"குருவே பிரம்மா, குருவே விஷ்ணு குருவே தேவ தேவராகிய மகேஸ்வரன். குருவே சாட்சாத் பரப்பிரம்மம். அவரை நான் வணங்குகிறேன்" என்று புகழ் பெற்ற ஒரு சுலோகம் கூறுகிறது. மின்சார சக்தி, மின்விளக்கு, மின்விசிறி வானொலி தொலைக் காட்சி முதலியவற்றின் மூலம் வெளிப்படுவது போல் பரப்பிரம்மம் பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகிய மூர்த்தங்கள் மூலம் வெளிப்படுகிறது: அதே பரப்பிரம்மம் குருவின் மூலமாகவும் தன்னுடைய அனுக்கிரக சக்தியை வெளிப்படுத்துகிறது. ஆதலால் குருவிடம் வெளிப்படும் அருள் சக்திதான் பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகியவர்களிடமும் இருக்கிறது.

'குரு சக்தி' என்ற ஒரு சக்தி தான் உலகில் மனித குருமார்கள் மூலம் வெளிப் படுகிறது. அந்த வகையில் நமக்கு யார் குருவோ அவரே பிரம்மாவும், விஷ்ணுவும், மகேஸ்வரனும், பரப்பிரம்மமும் ஆவார். "குருவை சாதாரண மனிதன் என்று நினை க்க கூடாது. இறைவனைக் காண்ப தற்கு முன்னால் அந்தத் தெய்வீக தரிசன த்தின் முதல் அங்கமாகக் குருவைத் தான் சீடன் முதலில் காண்கிறான். பிறகு அந்தக் குருவே இறைவனாக மாறி, இறைவன் சொரூபத் தைக் காட்டுகிறார். இறைவனும் குருவும், ஒருவரே என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியிருக்கிறார்.

ஒரு சீடன் பிரம்மாவையோ விஷ்ணு வையோ, மகேஸ்வரனையோ, பரம்பிர மத்தையோ நேரில் கண்ணால் பார்த்த தில்லை. அவன் குருவை மட்டுமே கண்ணால் பார்க்கிறான். பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன், பரப்பிரம்மம் ஆகிய வர்களின் அருளைத் தனக்குப் பெற்றுத் தருபவராகச் சீடன் தன் குருவைத்தான் பிரத்தியட்சமாகத் தன் கண் முன்னால் காண்கிறான்.

எனவே சீடனை பொறுத்தவரையில் குருதான் அவனுக்குக் கண்கண்ட தெய்வம். ஆதலால், குருவை மும்மூர்த்திகளுக்குச் சமமாகக் கருதி நாம் பூஜிக்க வேண்டும். குருவை 'ஞானி' என்று ஒப்புக்கொள்ளும் மனோபாவனை இருக்கு மானால், அவரை இறைவன் என்று ஏற்றுக் கொள்ளத் தயங்க வேண்டியதில்லை.

"அத்தகைய ஞான குருவின் சொல் அனைத்தும் இறைவனின் சொற்கள் தான், அவா செயல்கள் அனைத்தும் இறைவனின் செயல்கள் தான்" என்று சிவனடியார்கள் குறிப்பிடுகிறார்கள். 'இறைவனே மனித வடிவ த்தில் குருவாக வருகிறான்' என்று சைவ சித்தாந்தம் உறுதியாகக் கூறுகிறது.

மனித வடிவத்தில் வரும் இறைவன் தான் குரு. எனவே இறைவன் மனிதர்களைப் போலவே மனித சட்டை அணிந்து, மனித உருவத்தில் வருகிறார். இறைவன் குருமூர் த்தியாக வரும் போது, சீடர்களின் ஆன்மீக நலனுக்கு எதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ, அதைச் செய்வார்.

குரு வேறு இறைவன் வேறு அல்ல. இந்த உண்மையை, "சிவன் வேறு குரு வேறு அல்ல" என்ற ஆன்றோர் வாக்கும் உறுதிப்படுத்துகிறது. "குருவே சிவம் என்றனன் நந்தி" என்று திருமூலர், தமது திருமந்திரத்தில் கூறியிருக்கும் கருத்தும் இங்கு நினைவு கூரத்தக்கது.

இதன் மூலம் "குருவை மனிதன் என்று நினைக்கக் கூடாது. இறைவனாகவே கருத வேண்டும்" என்று கந்தபுராணம் வலியுறுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பூண்டிச் சுவாமிகள்



காயத்திரி சித்தராகிய எமது குருநாதர் தொடர்பு வைத்திருந்த பல் வேறுபட்ட தவசீலர்கள், மாமுனிவர்கள், சந்நியாசிகள், மகாஞானிகள், மகாரிஷிகள் வரிசையில் ஸ்ரீ பூண்டிச் சுவாமிகளும் ஒருவர். இவர் எம் குருநாதரிடம் மிக நெருங்கிய நட்புக் கொண்டிருந்தவர். அருள் ஞானமேதை.

இம்மகானுபாவர், ஓடும் நதியினுள் அமர்ந்திருந்து இருபது வருடகாலம் தவம் புரிந்தார்கள் காலக்கிரமத்தில் நதிவழிவந்த மணலால் இவர் மூடப்பட்டு விட்டார். ஆயினும் தொடர்ந்து, அன்ன ஆகாரமின்றி கடும் தவம் இயற்றினார். நதியும் வற்றி விட்டது.

இந்நிலையில் வற்றிய நதிக் கரையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர் சிறுமியர் கண்களில் சுவாமிகளின் புதையுண்ட உடலின் ஒருபகுதி தென் பட்டது. ஊர்மக்கள் ஒன்று கூடி சுவாமியை வெளியே கொணர்ந்தனர். உடல் மெலிந்து வாடி உருக்குலைந்து போயிருந்தாலும் உயிர் இருந்தது, சுவாமிகளுக்கு உணவு கொடுத்து ஊர்மக்கள் பாதுகாத்தனர். அதன் பின்பும் சுவாமிகள் இருபது வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து அருட் தவமியற்றி மகா சமாதி நிலைய டைந்தார்கள்.

## கடமைகளைச் செய்

**நீ உலக வாழ்க்கையில் இருப்பதும் உலகத்தை துறப்பதும் உன்னுடைய சித்தத்தையே பொறுத் துள்ளதும்! எல்லாப் பாரங்க ளையும் இறைவன் மீது போட்டு விட்டு உலகத்தில் உனக்கேற் பட்ட கடமை களைச் செய்.**

**ஒரு கரம் கொண்டு உன் கடமையை ஆற்று. மறுகரம் கொண்டு கடவுளைப் பற்றிக் கொள். கடமை முடிந்த பின்னர் இருகரங் களையும் கொண்டு கடவுளைப் பற்றிக் கொள்.**

**-ஸ்ரீ இராமகிருஷ்ணர் -**

இம்மைக்கும் மறுமைக்கும் பயனைத் தரும் வழியில் தான் நாம் தங்கியிருக்க வேண்டும். தீய காரியம் செய்பவன் குருடனுக்கு ஒப்பாவான். நல்லதைக் கேளாதவன் செவிடனுக்கு ஒப்பாவான். சந்தர்ப்பம் கிடைத்த போது கூட இனிமையான வார்த்தைகளைப் பேசாதவன் ஊமையே ஆவான்.

- ஆதிசங்கரர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாதா

இந்து சமய மரபில் பசுக்கள் தெய்வீக ஆற்றல் கொண்டவையாக போற்றப்படுகின்றன. அவை தெய்வங்கள் உறையும் புனித தலங்களை கண்டறிந்து மக்களுக்கு அறிவிக்கும் ஆற்றல் மிக்கவை என்பதை அறியமுடிகிறது.

இமயம் முதல் குமரி வரையுள்ள அனேக தெய்வ தலங்களில், புற்றினுள்ளேயிருந்த தெய்வத் திருவடிவங்களை பசுக்களே பால் சொரிந்து மக்களுக்கு காட்டியதாக அந்தந்த கோயில் புராணங்களிலிருந்து காணமுடிகிறது. பொதுவாக இந்து சமயத்தில் பசுக்களை மகாலட்சுமியின் வடிவமாகவே போற்றி வருகின்றனர்.

"ஆ" என்பது உலக உயிர்களையும், பாலைச் சுரந்தளிக்கும் பசுவையும் குறித்து நிற்கும் பொதுச் சொல்லாகும். தமது உடம்பில் இருந்து பாலைச் சுரந்து உயிர் களுக்கு அளிப்பதால், பசுக்களை "சுரபி" என்றும் அழைப்பர். இல்லத்திற்கு இது இலட்சுமி கரத்தைத் தருவதால் இதனை கோமாதா என்றும் போற்றித் துதிக்கின்றனர்.

இந்தக் கோமாதாவிற்கான ஆலயம் ஒன்றும் எமது குருநாதரின் வழிகாட்டலின் படி காயத்திரி பீட வளவில் கட்டப்பட்டு கோமாதாவின் உருவச் சிலை பிரதிஷ்டை செய்யப்படவிருக்கிறது. இவ்வாலயம் அமைவதற்கும், முக்கியமான ஒரு பின்னணி உண்டு.

காயத்திரி வளாகத்தில், சப்தரிஷி மண்டலத்திற்கான அடிக்கல் நடப்பட்டு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. அந்நாளில் எமது குருநாதர் வந்து தங்கி இளைப்பாறுவதற்கு ஒரு வசதியான இடம் அமைந்திருக்கவில்லை. இதனைக் கருத்திற் கொண்டு குருநாதருக்கான குருபீடம் ஒன்றை அமைப்பதற்கு பக்தர்கள் எடுத்த முயற்சி மகாதேவி இல்லமாக பரிணமித்தது.

இவ்வில்லத்தை திறந்து வைப்பதற் காக குருநாதர் வருகை தந்திருந்தார். இல்லத் திறப்பு விழாவிற்கு முதல்நாள் சமய ஆசாரப்படி இல்லம் கழுவப்பட்டு அதற்குள் வெள்ளை நிறமான பசுமாடு ஒன்று கட்டப்பட வேண்டுமென தீர்மானிக்கப் பட்டது. அதன்படி அவ்வில்லத்துள் அன்றிரவு ஒரு வெள்ளைப் பசு கட்டப்பட்டு அதற்கு சகலவிதமான வசதிகளும் செய்யப்பட்டன.

மறுநாள், திறப்பு விழாவிற்காக ஆயத்தம் செய்தபோது கம்பீரமாக அவ்வில்லத்தில் இருந்த பசு இறந்து கிடக்கக் காணப்பட்டது. எல்லோருக்கும் ஒருவித அதிர்ச்சி. இதுபற்றி குருநாதருக்கும் அறிவிக்கப்பட்டது.

இப்பசு எப்படி இறந்திருக்கலாம் என்பது பற்றி குருநாதரிடம் கேட்டபோது, அவர் மனிதனுடைய திருஷ்டி பிரபாவ ங்களே மனிதர்களாகிய எம்மைத் தாக்காது இப்பசுவை தாக்கியுள்ளன என்று விடைபகர்ந்தவுடன் மனிதனுடைய பார்வை மிகவும் கொடூரமானது எனவும் கூறினார்.


இவ்வாறு எமது நலத்திற்காக தன்னுயிரைத் தியாகம் செய்த பசுவுக்கு நன்றி செலுத்துமுகமாகவே குருநாதர் அதற்கு ஒரு ஆலயம் அமைத்து அதன் திருவுருவை பிரதிஷ்டை செய்ய விருக்கிறார்கள். என்னே! எமது குருநாதரின் கருணை உள்ளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் கூறும்

# குருபக்தி



நம் சாஸ்திரங்களில் எல்லாக் காரியங்களையும் ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. சிற்பி கோயில்களை அழகாகக் கட்டுவதாலும் பகவானுடைய மூர்த்திகளை அமைப்பதாலும் தன் வேலைகளைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்கிறான். மற்ற நாட்டுச் சாஸ்திரங்க ளெல்லாம் அப்படி இல்லை. அவையெ ல்லாம் இந்திரிய சுகத்துக்குத்தான் பெரிதும் பயன் படுகின்றன. நாம் நந்தவனம் அமைக்கிறோம். அவர்கள் குரோட்டன்ஸ் வைக்கிறார்கள். ஆனால் இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசம்! குரோட்டன்ஸ் கண்ணால் பார்த்து ஆனந்தப்படுவதோடு சரி: ஆனால் நந்தவனம் ஈசுவரார்ப் பணத் துக்காகவும் ஏற்பட்டது. நம் நாட்டுக்க லைகள் ஆன-சித்திரம், சிற்பம், சங்கீதம் எல்லாம்-கோயில்களிலேயே காணப்படு கின்றன. இதுபோல் நாம் கற்கும் எல்லாக் கலைகளையும், கல்விகளையும் ஈசுவரார்ப்பணம் செய்வதால் சித்தசுத்தி உண்டாகிறது.

எது தர்மம்? அந்தத் தர்மத்தை எப்படி அநுஷ்டானம் செய்ய வேண்டும் என்று சொல்வது வேதம். வேதம் பூர்வ காண்டம், உத்தரகாண்டம் என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. நாம் செய்ய வேண்டிய காரியங்களை அனுஷ்டானம் செய்வதற்கு உபயோகமாக இருப்பது கர்மகாண்டம் என்னும் பூர்வகாண்டம். இதையே மீமாம்சா சாஸ்திரம் என்பார்கள். இதை இயற்றியவர் .ஜைமினி மகரிஷி வைதிக கர்மாக்களை முறைப்படி செய்வதால் சித்த சுத்தி உண்டாகிறது. அதன் பிறகு அத்வைத நிலையை-பரம் பொருளை - அடையலாம். அத்வைத நிலையைப் பற்றிச் சொல்வது உத்தர காண்டம், உபநிஷத்துக்கள் அடங்கிய வேதாந்தம் அது.

உழுத இடத்தில்தான் விதை முளைக்கும். நாம் எவ்வளவோ உபந்யாசங்களைக் கேட்டாலும் நமக்குத் துக்கம் போகவில்லை ஏன்? சித்தசுத்தி செய்துகொண்டு கேட்கவில்லை முதலில் சித்தத்தைச் சுத்தமாக-சாந்தமாக-வைத்துக் கொண்டு கேட்க வேண்டும். அதற்காக என்ன செய்ய வேண்டும்? வைதிக கர்மாக் களை நன்றாகச் செய்து அவற்றைப் பகவானுக்கு அர்ப்பணம் செய் என்கிறார்கள். பெரியவர்கள். அதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசில் சாந்தத்தை உண்டாக்கும். அது உழுவதற்குச் சமானம். கர்மாக்களால் மனசை உழுதான பின் நீர் பாய்ச்ச வேண்டாமா? அதுதான் பக்தி. ஆசார்ய பக்தி ஈசுவர பக்தியை விடச் சிரேஷ்டமானது. குருபக்தி இருந்தால் மனம் தானாகச் சாந்தத்தை அடையும். பெரியவர்களுக்கு முன் ஒன்றை வாசித்தாலும், கேட்டாலும் மனம் ஒருவித அமைதியோடு இருக்கிறது. கிளப்பிலும், லைப்பரரியிலும் அப்படி இருப்பதில்லை. மனம் குரு பக்தியில் நனைந்தால் உடனே பயன் உண்டாகும்..அதனால்தான் மான்களிடத்தில் உபதேசம் கேட்க ணேடும். குரு மூலமாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். நாம் எவ்வளவோ படித்திருக்கலாம். ஆனாலும் நமக்குள் அஞ்ஞானத் தடிப்புக் குறையவில்லை. அது எந்த இடத்தில் குறையுமோ, அந்த இடத்தைத் தேட வேண்டும்.

## 'நான்'' உடலல்ல

உடலே நானாயிருந்தால் உறக்கத்திலும் 'நான்' இருக்க வேண்டும். மரணத்தின் பின்னும் நானிருக்க வேண்டும். மயக்க நிலையிலும் நான் இருக்க வேண்டும், மயக்கம் கொடுத்து உடலை சத்திரசிகிச்சை செய்யும் போது 'நான்' அறுபடுவதாக உணர வேண்டும் அதனால் உடல் 'நான்' அல்ல. உடலில் 'நான்' இருக்கிறேன். எனக்கு ஒரு வீடு, வாசல், தோட்டம், துரவு இருப்பது போல் ஒரு உடல் இருக்கிறது. அதனால் தான் என்னுடைய வீடு, என்னுடைய தோட்டம் என்பது போல் என்னுடைய உடல், என்னுடைய கண், என்னுடைய கால் என்கிறேன். அதனால் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையுள்ள மாமிச பிண்டமாகிய உடல் 'நான்' அல்ல.


## மனம் 'நான்' அல்ல

கண்ணால் பார்க்கிறேன், காதால் கேட்கிறேன், இது போல் மனதால் நினைக்கிறேன். கண்ணும், காதும் என் தொடர்பில்லாமல் இயங்காதவை. என் மனம் என் தொடர்பில்லாமல் இயங்கும் ஒரு கருவி. ஆனால் எப்போது வேண்டுமானாலும் நான் மனதைப் பற்றி, தனக்கு வேண்டுமானதை நினைக்க முடியும். நான் அதைப் பற்றாத போதும் அது தானாக இயங்கிக் கொண்டுதான் இருக்கும் ஆனாலும் அதை நான் அறிவதில்லை. நான் ஆழ்ந்து தூங்கும் போது என் மனம் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. சிலசமயம் நான் உறங்கிக் கொண்டிருக்கும் போது, மனம் உடலை இயக்கி எழுந்து நடமாடவும் செய்கிறது. உண்ணச் செய்கிறது, ஆனால் இவையாவும் எனக்குத் தெரியாது, ஏனென்றால் நான் அப்போது மனதுடன் இருக்கவில்லை. ஆகவே மனம் 'நான்' அல்ல.

- சுவாமி [illegible] -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுவாமிகள்

கனவிரதிர குரு ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுவாமிகள் உயர்ந்த ஒப்பற்ற அருள் நிலைக் களனாக விளங்கியவர் ஆவார். முப்பத்திரெண்டு லட்சணங்கள் பொருந்திய திருமேனியரான இவர் தம்மை அண்டியவர்களுக்கு அபயமளித்து இக-பர சௌபாக்கியங்கள் அனைத்தையும் வழங்கி வந்தார்கள். பாரதமண்ணில் உள்ள புண்ணியதலங்களான காசி, அயோத்தியா, அலகாபாத், ஹரித்துவார், ரிஷிகேசம், ஆமதாபாத், துவாரகை, குருஷேத்திரம் போன்ற இடங்கள் எல்லாம் சென்று நீண்ட நாள் தவம் செய்து ஆன்மீக ஞானம் பெற்றவர் இவர். தமது பார்வையாலேயே ஒருவரை ஞானவானாக்க வல்லவர். பல மொழிகளிலும் பேசவல்ல இம்மகான் எமைப் பார்த்து 'சற்குரு பரனின் திருவடியைத் தொழுது வழிபடுங்கள் இன்னல்களைப் பறித்து எறியுங்கள் இன்ப வாழ்வு வாழ முயற்சி செய்யுங்கள்' என கூறிகின்றார். எமது குருநாதருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த இந்த ஆத்ம ஞானியின் திருவாக்கை பின்பற்றி உய்வோமாக.



ஸ்ரீ மாயிமாதா
இவர் சுமார் 300 வருடங்களுக்கு மேல் ஜீவப்பிரம்ம ஐக்கிய நிலையில் வாழ்ந்து வருகிறார். எமது குருநாதருடன் ஆத்மிக தொடர்பு வைத்துள்ள இவரை தரிசிப்பவர்கள் பாக்கியவான்கள்.



சுவாமி அபேதானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பாலயோகீஸ்வரர்



ஸ்ரீ பாலயோகீஸ்வரார்

ஆந்திரபிரதேசத்தில் மும்முடிபுரம் எனும் கிராமத்தைச் சேர்ந்த இவர்கள் இருவரும் சகோதரர்களாவர். இவர்கள் தியானத்தின் மூலம் பல சித்திகளைப் பெற்றவர்களாவர்.



ஸ்ரீ தர்மானந்த சுவாமிஜி
கேரளா மாநிலம், இந்தியா.

அணிமாதி அஷ்டசித்
திகளைப் பெற்ற
இவர் எமது குருநாதர்
காயத்திரி சித்தர்
ஆர்.கே.முருகேசு
சுவாமிஜி அவர்களின்
சீடரான ஸ்ரீமதி சீதா
பாபு மூலம் ஸ்ரீ இலங்
காதீஸ்வரர் ஆலயம்
அமைக்க ஆசி வழங்
கியவர்களில் ஒருவர்.
மகாகாளி உபாசகரா-
கிய இவரின் அருளா-
சியினால்
கேரளாவிலிருந்து
மகா காளி விக்கிரகம்
கொண்டுவரப்பட்டு
நுவரெலியாவில்
பிரதிஷ்டை செய்யப்
பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ மாமேரு யந்திரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள
மாமேரு ஆலயத்தின் பின்புறத் தோற்றம்



ஆதாரபடததுடன் 1200 கிலோ எடைகொண்ட மகாமேரு
யந்திரத்தின் எழில் மிகு தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது குருநாதர் தமது தபோவலிமையால் பெற்றுக் கொண்ட உயிர் மூலிகைகளும் அக்கினி லிங்கமும் மந்திரகேலும்



எமது குருநாதர் தமது தியானத்தின் மூலம் பெற்றுக் கொண்ட விலைமதிப்பற்ற கஜமுத்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரால் இறையருள் பெறலாம்!

மனித உடலினை இறைவன் தன்னை உணரத்தக்க இந்திரியங்களுடன் தெய்வ ஆகர்ஷண சக்தி உள்ளன வாகவே படைத்துள்ளான். சில மகான்கள் தம்மை பார்த்தவுடன் தம்முடைய நோய் நீங்கப் பெற்றது என்றும், சில சாதுக்கள் தலையில் கையை வைத்து ஆசீர்வதிக்க தம்முடைய குறைகள் நீங்கப்பெற்றதாகவும் உலகில் பலர் அனுபவபூர்வமாக கூறக் கேட்கிறோம். அது போல் சிலரது பார்வை பட்டாலே பயிர்களும் குழந்தைக ளும் நோயுற்று வாடியதாகவும் சிலர் கைகளால் பணம் வாங்கியதால் தமக்கு நஷ்டமும் துன்பமும் ஏற்பட்டதாகவும் சிலரின் அனுப வமாக சொல்லக் கேட்கிறோம். இவற்றுள் உள்ள உண்மை தான் என்ன ?

மனித உடலில் தெய்வ காந்த சக்தியை ஈர்க்கவும் வெளிப்படுத்தவும் வல்ல அவயவங்களே உள்ளன. அவற்றுள் கண்கள், கைகள் பாதங்கள் என்பன முத ன்மை பெற்றவை மகான்களின் கண்கள் ஒளி மிகுந்தவை அவர்களுடைய ஆத்மா தெய்வ குணங்களை ஈர்த்து கண்கள் மூலம் வெளிப்படுத்துபவை காரணம். அவர்களின் பார்வை படும் பொழுது பாவங்களும் எமது குறைகளும் நீங்கி மனம் அமைதி அடைகின்றது. அவர்க ளுடைய மன, சித்த, உடல்களில் இருந்து வெளிவரும் தெய்வகாந்தம் கண்கள் கைகள் மூலம் வெளிப்பட்டு எம்முடல் மனங்களில் கலப் பதினாலேயாகும். எல்லா உறுப்புக்களும் இவ்வரிய தெய்வ காந்தத்தை வெளிப் படுத்தினாலும் கண் களே அதிக அளவில் வெளிப்படுத்துகிறது.

இதே போல் தெய்வ குணங்களை விடுத்து அசுர குணங்களை ஈர்த்து வெளிப் படுத்துபவர்களது பார்வை தொடுகை யினாலேயே கண்திருஷ்டி, பிறபாவம், மன அமைதியின்மை என்பன ஏற்படுகின்றன. இவ்வரிய உண்மை மனிதகாந்தம் எனும் தத்துவம் மூலம் யோகிகளால் விளக்கப் பட்டுள்ளது இதனாலேயே பழங்காலம் தொடக்கம் இன்று வரை மகான்களின் பார்வையில் வாழ்வதும் அவர்களை பார்பதும் அவர்கள் பாதங்களைச் சேவிப் பதும் நன்மை என்று கூறப்பட்டுள்ளது.

பிறந்த குழந்தை தாயின் முகத்தைப் பார்த்து அடையாளம் தெரிந்து கொள்ள கண்ணே உதவுகிறது. பின்னர் தாய் காட்டிய தந்தையையும் உற்றார் உறவினர்களையும் கண் மூலமே அறிகிறது. அதனால்தான் தாய் குழந் தையை கண்ணே என்றும் கண்ணின் மணியே என்றும் அழைக்கிறாள்.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது பழமொழி அகக் கண்ணில் தெரியுது குணம் என்பது கவி பாரதி கூற்று. உள்ளக் குறிப்பை உணர் வதிலும் வெளிப் படுத்துவதிலும் கண் முக்கிய பங்கு வகிக்கிறது.

'ஒளிபடைத்த கண்ணினாய் வா' என்கிறார் கவி பாரதி. சுவாமி விவேகா னந்தருடைய கண்கள் ஒளி படைத்தவை அவருடைய கண்கள் தாமரை மொட்டுப் போல் மலர்ந்து சிறிது வெளித்தள்ளிக் கொண்டு அன்றலர்ந்த செந்தாமரை போல் இருக்கும்.

உள்ளத்தில் உள்ள எண்ணங் களை வாயினால் தான் வெளிப்படுத்த முடியும் என்று பலர் எண்ணுவர் ஆனால் வாய் பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சைவிடப் பேசா உறுப்பா கிய கண் பேசினால் அதற்கு ஆற்றல் மிக அதிகம். கண் பேசும் போது வாய் சொற்கள் பயன்படாது போய் விடுகின்றன.

ராமபிரானது கண்கள் பேசிய பேச்சை அனுமன் தன் கண்களால் கண்டு உணர்ந்து கொண்டான். எதையும் அறியும் ஆற்றல் படைத்தவன் அனுமன். மகாபுரு ஷர்கள் ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் அவரது அகத்தின் அழகையும் உள்ளத்தில் உள்ளதையும் உள்ளபடி அறிந்துகொள்வார்கள் கண்ணாடிப் பெட்டியினுள் வைக்கப்பட்டு இருக்கும் பொருளை நாம் காண்பது போன்று நமது உள்ளத்து உணர்வுகளை யெல்லாம் அம் மகான்கள் நம்மை பார்த்த மாத்திரத்தில் தெரிந்து கொள்வார்கள்.

இத்தகைய தெய்வ காந்த சக்தியை வெளிப்படுத்தும் கண்களின் சிறப்பு பற்றி புராணங்களில் கூறப்பட் டுள்ளன. மகாபாரதத்தில் குருடராகிய திரு தராஷ்டிரனின் மனைவியாகிய காந்தாரி தனது கண்களை கணவனுக்காக கட்டிக் கொண்டு வாழ்ந்ததாக கூறுவார்கள். உண்மையில் அவளது பதிபக்தியால் ஏற்பட்ட கண்களின் அபார காந்த சக்தி, மற்றை யோரை எரிக்கும் என்பதா லேயாகும். கொங்கனவ மகரிஷி தன் தவத்தால் கண்கள் காந்த சக்தி பெற தன் தியானத்தைக் குழப்பிய கொக்கை தன் பார்வையாலே எரித்தார். இத்தகைய அரிய சக்திகள் கண்கள் மூலமே செயற்படுகின்றன. மனிதனது உள்ளத்து நிலையினதும் அன்பினையும் கருணைதனையும் கண்கள் கொண்டு தான் காண முடியும். கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம் என்பது வள்ளுவம். வாடியபயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று பாடிய வள்ளல் பெருமானது கண்கள் கருணையே வடிவெடுத்ததாய் இருப்பதை காண் கின்றோம்.

கண்களுக்கமைந்த ஒருதனிச் சிறப்பு கண்ணீர் விட்டு அழுதலாகும். அது மானிடத்துக்கென்று இறைவன் அளித்த வரப்பிரசாதமாகும். மனிதன் துன்ப துயரங் களுக்கெல்லாம் உள்ளாகும் பொழுதெல்லாம் கண்ணீர் விட்டு அழு கின்றான். அழுது அழுது தனது துயரத் ததை ஆற்றிக் கொள்கிறான்.

துயரத்தை கண்ணீரால் வெளிப் படுத்துகின்ற உள்ளம் ஆனந்த மிகுதியால் உவகை கொள்ளும் போது அதை கண்கள் கண்ணீரால் வெளிப் படுத்து கின்றன. துன்பத்தினால் வெளிப்படுத்தும் கண்ணீருக்கும் ஆனந்தத்தால் வெளிப்படுத்தும் கண்ணீருக்கும் இடையில் வேற்றுமை ஒன்றுண்டு. துன்பக் கண்ணீர் மூக்கின் அருகே வெளிப்படும். ஆனந்த கண்ணீர் கடைக்கண்களில் வெளிப்படும்.

இடுக்கண் வருங்கால் நகுக என்றார் வள்ளுவப் பெருந்தகை. ஆனால் அது எல்லாராலும் இயலுவது இல்லை. அழாமல் இருப்பது நல்லதுதான் ஆனால் அதை விட பிறருக்காக அழுவதில்தான் மனிதத் தன்மை அதிகம் இருக்கின்றது. மனிதன் தனக்காக வேண்டுமானால் அழாமல் இருக்கலாம். ஆனால் அவன் பிறர் துயர் கண்டு அழத்தான் வேண்டும். உலகில் தேசபக்தி, தெய்வபக்தி, தொண்டு, தியாகம் என்று என்னென்ன மேன்மைகள் உண்டோ அவையனைத்தும் விளைவது எதனால்? அன்புடைய மனிதரது கண்ணீரா ல்தான். மகான்களது கண்களில் இருந்து பொழிந்த கண்ணீர் மழையினால்தான்.

நமக்காக நாம் அழுதல் கூடாது. ஏழை எளியவர்களுக்காக பட்டினி கிடப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களுக்காக அழுபவர்கள் பாக்கிய வான்கள். ஏனென்றால் அவர்களது உள்ள த்தில் அன்பு மலரும் அவர்களது உயிரறிவு வளரும். அவர்களது மனித நேயமும் விரி வடையும். படிப்படியாக அவர்கள் மகாத்மா வாக வடிவெடுப்பர்.

பட்டப்பகலில் பதைபதைக்கும் வெயிலில் ஒட்டிய வயிற்றுடன் ஒருபிடிச் சாதத்திற்காக பல்லை கடித்துக்கொண்டு கல்லை உடைக்கும் பாட்டாளி மக்களிடத் தேயே பரந்தாமன் குடி கொண்டு ள்ளான் என்றார் ஒரு மகான்

நம்மில் யாரும் இறைவனுக்காக அழுவதில்லை. மக்கள் தங்களது பிள்ளைக ளுக்காகவும் பொன் பொருளுக்காகவும் வீடு வாசலுக்காகவும் பட்டம் பதவிகளுக்காகவும் குடம் குடமாக கண்ணீர் வடிக்கின்றனர். கண்ணீர் கடலிலேயே மூழ்குகின்றனர். ஆனால் இறைவனுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வடிப்பதில்லை என்கிறார் பகவான் ராமகிருஷ்ணர்.

இறைவன் அருளுக்காக நாம் அழ வேண்டும். கண்ணீர் விட்டுக்கதற வேண்டும். அன்புப் பெருக்கினால் நமது கல் நெஞ்சம் கரைந்து கரைந்து நெகிழ வேண்டும். நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகவேண்டும் என்கிறார் அருணகிரியார். உருகாத நெஞ் சையும் அழாத கண்களையும் கல் என்றும் மரமென்றும் நொந்து கொள்கின்றார் மணிவாசகப் பெருமான்.

சிறுவர் சிறுமியர் பெற்றோர் களிட த்துத் தங்கள் விருப்பங்களையும் வேதனை களையும் அழுது அழுது நிறைவேற்றிக் கொள்கின்றனர். பக்தர்களோ இறைவனை நோக்கி அழுதழுது அவன் அருளைப்பெற முயலுகின்றனர் முயன்று பெறுகின்றனர். அழுது அழுது ஆண்டவனின் அருளைப் பெற்றவர் மணிவாசகப பெருமான்.அதனால் அவரை அழுது அடி அணைத்த அண்ணல் என்று அழைப்பர்.

இறைவனது அருளை வேண்டி நாயன் மார்களும் ஆழ்வார்களும் அழுதனர். அருண கிரிநாதரும் ஆதிசங்கரரும் தாயுமானவரும் வள்ளலாரும் அழுதனர். சைதன்னிய மகாபிரபும் பகவான் ராமகிருஷ்ணரும் அழுத அழுகைக்கு அள வென்பதே கிடையாது. அவர்கள் கண்களில் கண்ணீர் கடலையே வரவழைத் தனர்.

கண்ணபரமாத்மா கீதையில் பால் பழம் நைவேத்தியம் செய்து என்னை வழிபடு அல்லது ஒரு மலரையாவதுவைத்து வழிபடு. இல்லையேல் ஒரு இலையையாவது வைத்து வழிபடு. அதுவும் இல்லையேல் தண்ணீரையா வது வைத்து வழிபடு. அதுவும் முடியாவிடின் கண்ணா என்று மனமுருகி கண்ணீர் விடு. நான் உன்னை இரட்சிக்கிறேன் என்றார்.


ஒருசீடன் தன் குருவின் பாதார விந்தங்களில் விழுந்து தன் கண்ணீர் துளிகளால் அவர்பாதத்தை கழுவினால் அது கண்டு அவரது ஆனந்த கண்ணீர் சீடனின் சிரசின் மேல் படுமேயானால் அவன் உடனேயே முக்திப் பேறு பெறுவான் என்பது திண்ணம்.

கண்ணையே இறைவனுக்கு கொடுத்துக் கண்ணப்பன் என்ற பெயரையும் சிவனருளையும் பெற்றார் கண்ணப்பன். கடவுளுக்கே கண்ணைக் கொடுத்து கண்தானம் செய்யும் தொண்டை உலகில் முதன்முதல் தொடங்கிவைத்த பெருமையும் கண்ணப்பருக்கு உண்டு எல்லோரும் இறைவன் மேல் காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி இறைவனை வழிபடுவோமே யானால் அவனது அருளை உடனே பெறுவது நிச்சயம் நாம் நமது கண்களைக்கடவுளுக்கு கொடுக்காவிடினும் கண்ணீரையாவது கொடுத்து இறைவன் அருளை பெறமுயல்வோமாக.

நமக்காக நாம் அழுதல் கூடாது. ஏழைஎளியவர்களுக்காக வறுமையில் வாடுவோருக்காக பட்டினிகிடப்போருக்காக அழுகின்றவர்கள் பாக்கியவான்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Grams: "DIVINELIFE" Phone : 40

# THE DIVINE LIFE SOCIETY

(REGISTERED)

Propagates Yoga and Vedanta, and the Ethical and Spiritual Culture of India, promotes Universal Love, the Unity of Religions, the Ideal of Brotherhood, and the Spirit of Service, by Tuition and Training, Publication of Texts, Correspondence and Propaganda.

Founder-President
**Sri Swami Sivananda**

P.O. SIVANANDANAGAR,
via Rishikesh,
Dt. Tehri-Garhwal,
(Himalayas), India.

14-4-1963

[illegible]

எம்குருநாதருக்கு ரிஷிகேஷில் இருந்து சுவாமி சிவானந்தர் அவர்கள் 14.04.1963 ல் வரைந்த அஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளிக்களப் பக்தர்கள் தங்கி செல்வதற்கான நாற்சார் விடுதியின் ஒருபுறத் தோற்றம்



மட்டக்களப்பு, புதுமுகத்துவாரம் சப்தரிஷிகள் வளாகத்தின் வெளிப்புறத் தோற்றமும் அதன் இயற்கை எழிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சற்குருநாதரின் அருளாசியுடன் திருகோணமலையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் ஆத்மயோக ஞானசபா













ஆலயத்திற்கான புதர்மண்டிக் கிடந்த காணி துப்பரவு செய்யப்படுவதையும், குருபீடத்திற்கான அடிக்கல் நடப் படுவதையும், கிணறு தோண்டப்படுவதையும் மேலுள்ள புகைப்படங்கள் சித்தரிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம யோக ஞான சபை

மானச - யோக - ஆன்மிக - ஆஸ்ரமம்

அம்பத்தூர், மதறாஸ்.

தேதி 25-10-62

ஆன்மீக அன்பர்கள் ஸ்ரீ முருகேசு
அவர்களின்

29வது பிறந்தநாள் வாழ்த்துரை

வாழிய! முருகேசா நீ
வையகத்தும் உய்ய வென்று
ஆயுள் மேலும் நீடித்து
ஆன்மீகப் பணியைக் கொண்டு

ஆத்ம யோக ஞான சபை
அகத்தியனின் மூல சபை
அச்சபையின் இலங்கை கிளை
அமைத்திட்ட அறிஞன் நீ

இலங்கை மக்கள் இன்பம் காண
நலன்கள் பெறும் யோகம் ஞானம்
நலன்கள் நிறையும் வகுத்திடு
நாளும் சுற்றும் பணியும் செய்யுமய்யா

வாழி - வாழி - வாழி

யோகி கண்ணையா

பரமகுருநாதர் பண்டிட் கண்ணையா யோகிஸ்வரர் அவர்கள் எமது குருநாதரின் 29வது அகவை நிறைவை முன்னிட்டு வழங்கிய வாழ்த்து மடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி சிவானந்தர்



எங்கள் சற்குரு தேவர், ஞானப் பாதையில் நடை பயிலும் போது, நிழல் தரும் விருட்சமாக நின்று அவரின் ஆன்மீகத் தாகம் தணிய உதவிய ஞானிகள் பலர். அவர்களுள் சுவாமி சிவானந்தர் முதன்மையானவர் ஆவார்.

ரிஷி கேசத்தின் ரிஷி என அழைக் கப்படும் இம் மகான் பிரபல வைத்திய ராகத் திகழ்ந்தவர். சிறந்த செல்வச் செழிப்போடு வாழ்ந்தவர். இவரின் பூர்வாச் சிரமப் பெயர் குப்புசாமி என்பதாகும்.

ஒரு நாள் மலேசியாவில் இவர் வைத்தியராக கடமையாற்றிக் கொண்டிருந்த போது, நோயாளி ஒருவர் இவரிடம் வந்தார். அவரை சோதனை யிட்டுக் கொண்டிருந்த வேளை குப்புசாமி அவர்களின் உள்ளத்தில் இருந்து, ஆன்மாவின் குரல் ஒலித்தது. நான் யார்? ஏன் இங்கு பிறந்தேன்? நான் பிறந்ததன் நோக்கம் என்ன? போன்ற பலவித வினாக் கள் அவரது உள்ளத்தில் எழுந்தன.

உடனடியாக அவ்விடத்தை விட்டு எழுந்து இமாலயத்தை நோக்கி பயணமானார். அங்கு ரிஷிகேசத்திலுள்ள "சொர்க்காஸ்ரம்" தனில் பன்னிரண்டு ஆண்டுகள் கடுந் தவம் புரிந்தார். அதன் பின் அவ்வாச்சிரமத்தில் இருந்து கொண்டே தம்மை அண்டிவரும் பக்தர்களுக்கு மந்திரம் மூலமும், விபூதிப் பிரசாதம், மூலி கைகள் வழங்குவதன் மூலமும், நோய் நொடிகளைத் தீர்த்து வந்தார்.

இம்மகானை சந்திக்கும் நோக்கோடு எங்கள் குருதேவர், அவர் கங்கைக் கரை யில் தினமும் கங்கா பூசை செய்யும் நேரமாகிய அதிகாலை பிரம்ம மூர்த்தத்தில் சென்று காத்திருந்தார்கள். பூசை முடிந்து திரும்பிய சிவானந்தர் சுவாமியவர்களைப் பார்த்து "நீ யார்"? எனக் கேட்டு, அதே கணத்தில் அவரின் தோள்களைப் பற்றி கங்கையில் தூக்கியெறிந்து விட்டார். கங்கையில் பீதியுடன் அலறியவாறு அலைகளால் அடித்து செல்லப்பட்டுக் கொண்டிருந்த எமது குருநாதரை தமது கசாய வேஷ்டியை தூக்கியெறிந்து அவரைக் காப்பாற்றினார். அதன் பின் ஆசீர்வதித்து தனது உருத்திராக்க மாலை யையும் அவருக்கு அணிவித்து அன்று முதல் அவர் மீது அன்புடையவராக விளங் கினார்.

ரிஷிகேசத்தில் அவர் தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரமத் தில் எமது குருதேவர் சிலகாலம் தங்கி ஆன்மீகப் பயிற்சி பெற்று வந்தார்கள். அவ் வேளையில் அவருக்கும் எமது குருநாத ருக்கும் இருந்தஉறவு மேலும்வலுப் பெற்றது. குருநாதர் இலங்கை வந்த பின்னரும், ரிஷிகேஷ் செல்லும் இலங்கைப் பக்தர்களிடம் "முருகேஸ் எப்படி இருக்கிறார், நலமாக உள்ளாரா" என நலம் விசாரிப்ப தோடு நின்று விடாமல் தமது கைப்பட எழுதி விபூதிப் பிரசாத ங்களும் அனுப்பி வைப்பாரெனின அவரின் அன்பை என்னவென்பது.?

இம்மகான் எழுதிக் குவித்த நூல்கள் எண்ணிறந்தவை. சுமார் 300க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார் இவற்றின் எடை அவர்தம் எடையை விட கூடியவை எனக் கூறுவார்கள்.

எவரையும் குறை கூறாதீர்கள். பிறருக்கு தீர்ப்பளிக்கும் அதிகாரம் உங்களிடம் இல்லை. நீங்கள் உங்கள் சொந்த வேலையில் மட்டும் கவனம் செலுத்துங்கள். அனைத்தையும் கவனிக்க ஆண்டவன் இருக்கின்றார். உண்மையில் உங்களையும் அவர்தான் கவனிக்கின்றார். எனக் கூறும் சுவாமி சிவானந்தர், இந்த உலகம் முட்டாள்கள் நிறைந்தது. நீங்கள் அறிவுடையவர்களாக விளங்குங்கள் என்கிறார். இம்மகானின் போதனையின் உட்பொருளை உய்த்தறிந்து, உயர் ஞான வழி நின்று இறையின்பம் பெறுவோமாக.

## 20 ஆண்டுகள் புதைகுழியில் வாழ்ந்த துறவி



குஜராத் மாநிலத் தில் பரோடா நகரம் அருகே ஆசிரமம் அமைத்து மக்க ளுக்கு அருளாசி வழங்கி வந்தவர் துறவி பாபா விதேஷ் அவர்கள். இவர் நிகழ்த்திய அற்புதங்கள் பல. 1980ம் ஆண்டு தனது பக்தர்களிடம் சமாதியை உருவாக்கக் கூறினார். இரும்புப் பெட்டியில் பாபாவை வைத்து பெட்டியைக் குழிதோண்டிப் புதைத்தனர். 20 ஆண்டுகளின் பின் சமாதியைத் தோண்டிப் பார்க்குமாறு பாபா கூறியிருந்தார். அவரின் பக்தர்கள் நம்பிக்கையுடன் காத்திருந்தனர். இருபது ஆண்டுகளின் பின் புதை குழி தோண்ட ப்பட்டது.


அப்போது, புதைக்கப்பட்ட அவரது உடல் எப்படி இருந்ததோ அதே போன்று எவ்வித மாற்றமும் இல்லாமல் இருந்தது. சூரிய ஒளியும், காற்றும் பட்டதும், பாபா உடலில் அசைவு ஏற் பட்டது. தூங்கி எழுவது போல பாபா எழுந்தார்.

பாபா விதேஷ் தெய்வப் பிறவி எனவே, அவர் இப்படி உயிருடன் மீண்டும் எழ முடிந்தது என அவரின் பக்தர்கள் கூறுகின் றனர். இந்த அற்புதம் பற்றி மனோ தத்துவ ஆய்வாளர்கள் கூறுகையில் "ஆழ்நிலைத் தியானம்" மூலம் கற்பனை க்கு அப்பாற்பட்ட வகையில் சில காரியங் களை செய்ய முடியும். மண்ணில் உயிரோடு புதைக்கப் பட்டதும், ஆழ்நிலைத் தியானம் மூலம் பல நாள் உயிருடன் இருக்க முடியும். இது சாத்திய மானது. என பழங் காலச் சரித்திரக் குறிப்புகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமணமகரிஷி



தமிழகத்தில் திருச்சுழி எனும் கிராமத்தில் 1879ம் ஆண்டு ஸ்ரீ ரமண மகரிஷி அவர்கள் இப்பூவுலகில் அவதா ரம் செய்தார்கள். இவரது தாய்-தந் தையர் இவருக்கு வைத்த பெயர் வேங்கடராமன் என்பதாகும்.

வேங்கடராமன் இளமையில் மீத்திறன் மிக்க ஒரு மாணவனாகத் திகழவில்லை பாடசாலைக்குச் செல்வ தையும் அவர் விரும்பவில்லை. ஆயினும் நல்ல வலுவான உடலுறுதி உடைய வராகக் காணப்பட்டார். எப்போதும் சாந்தம் தவழும் அவர் வதனத்தில் கரு ணையே வடிவான அவர்கள் கண்கள் அமைந்து அருள் சிந்திக் கொண்டிரு க்கும் அன்பின் பிறப்பிடமாக அவர் திகழ்ந்தார். உயிர் களிடத்தில் அவர் வைத்திருந்த பற்றும் பாசமும் எழுத்தில் விபரித்துக் கூற முடியாததாகும்.

தமது 12வது வயதில் தந்தையை இழந்த இவர் மதுரைக்குச் சென்று அங்கு சில காலம் வாழ்ந்து வந்தார். அவருக்குப் 16வயது நிறைவான போது அவரின் இல்லத்திற்கு வந்த விருந்தினர் ஒருவர் மூலம் அருணா சலத் தின் மகிமையை அறிந்து கொண்டார். சிறுவயது முதலே இவர் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருந்த "அருணாசலம்" என்ற சொற்பொருள் அங்கு வந்த உறவினர் மூலமே அவருக்கு விளங் கியது. அதுவொரு மலை என்றும் அப் பகுதியில் ஒரு திருத்தலம் அமைந் துள்ளது என்றும் அங்குள்ள இறைவனின் பெயர் அருணாசலம் என்றும் அறிந்து பரவச மடைந்தார்.

அருணாசலமலை ஜோதி மலை யெனப் பெயர் பெற்றது. இங்கு சுயம்பு வடிவாகத் தோன்றியதே ஜோதி லிங்கம். பிரம்ம, விஷ்ணுக்களது ஆணவத்தை அடக்க சிவபெருமான் ஒளிப்பிழம்பாகத் தோன்றினார். அந்த ஒளிப்பிழம்பே இங்கு லிங்கவடிவாக காணப்படுவதாக கூறுகின்றனர்.

கார்த்திகைத் தீபத்திற்கு பெயர் பெற்ற திருவண்ணாமலைக்கு தமது 16ஆவது வயதிலேயே வந்து சேர்ந்த ரமண மகரிஷியவர்கள் தம் வாழ்நாளில் பெரும் பகுதியை அங்கேயே கழித்தார்.

அவர் திருவண்ணாமலைக்கு வந்த கதை சுவையானதாகும். ஒருநாள் வேங்கடராமன் தனது சிறிய தந்தையின் வீட்டு மாடியில் உட்கார்ந்திருந்த போது அவருக்கு திடீரென மரணபயம் உண்டா யிற்று. அவர் இப்பயத்தை தாமே தீர்த்துக் கொள்ள துணிந்தார். சாவு தம்மை நெருங் கிவிட்டது. சாவு என்றால் என்ன? எது சாகிறது இந்த உடல்தானே செத்துப் போகிறது. என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு மரணானுபவத்தை ஏகாக் கிரஹமாய் பாவித்துப் பார்த்தார். பிணம் போல விறைக்குமாறு கை, கால்களை நீட்டிப்படுத்தார். சரி இந்த உடம்பு செத்து விட்டது என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டார். இதை மயானத்திற்கு கொண்டு போய் எரித்து விடுவார்கள் இது சாம்பலாய்ப் போகும் ஆனால் இந்த உடம்பின் முடிவுடன் 'நானும்' இறந்து விடுவேனா? இந்த உடல் சப்தமற்று சலனமற்று கிடந்தாலும் இதற்கப்பால் "நான்" என்ற சொரூபத்தின் சக்தியும் தொனியும் ஒலிக்கிறதே ஆகவே 'நான்' தான் ஆத்மா. உடலுக்குள் கட்டுப்படாத வஸ்து அது என்ற முடிவுக்கு வந்தார். அதன் பின் அவர் சாந்தமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூமியின் சிவலிங்க அணுக்கள்




சக்கர வியூகம்




சிவசக்தி இயக்கம்தான் அணுக்களின்
உண்மைத் தன்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆகாயமண்டலத்தில் உள்ள நவகோள்களில் இருந்து வெளிவரும் நவஜோதிகள்




ஆகாய மண்டலத்தில் காணப்படும் நவகோள்கள்



ஆகாயச் சித்தன் கண்ட சிறுமூளையின் இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியும் நிறைந்தவர் ஆனார். குடும்பம், கல்வி, உணவு, விளையாட்டு யாவையும் மறந்தார். மிகக் கஷ்டப்பட்டு அருணா சலத்தை வந்தடைந்தார்.

தலத்தை வந்தடைந்ததும் நேராக சந்நிதிக்குச் சென்று அங்குள்ள குளத்தில் தன்னிடமிருந்த பட்சணங்கள், மீதிக் காசு, பூணூல் சகலதையும் போட்டுவிட்டு ஸ்நானம் கூடச் செய்யாமல் கௌபீனத் துடன் கோயிலை நோக்கிச் சென்றார்.

இவர் குளியாமல் கோயிலுக்குள் நுழையப் போகின்றாரே என்று அறிந்தோ என்னமோ எம்பெருமான் திருவருளால் சல சல என கனத்த மழை பொழிந்தது.

நேராக கோயிலில் பாதாள லிங்கம் இருந்த இருட்டுக் குகையில் சென்று நிஷ்டையில் ஆழ்ந்தார். இவர் எத்தனை நாள் தவம் கிடந்தார் என யாருக்கும் தெரியாது. பல நாட்களின் பின் பக்தர்கள் இந்தப் பாலயோகியின் திருமேனியை பலவந்தமாக வெளியே கொண்டுவந்தனர். அப்போதும் யோகநிலை மாறாது இருந்த அவர் நிலை கண்டு அனைவரும் வியந் தனர். பாதாள லிங்கத்தின் இருட்டில் குடியிருந்த ஈ, எறும்பு, பூச்சிகளுக்கு யோக நிலையில் இருந்த இவரது உடம்பு இனிமையான இரையாகி விட்டது. வெளிக் கொணர்ந்த இவரது உடம்பில் கீழ்ப்பாகம் பூச்சி அரித்து இரத்தமும் சீழும் சேர்ந்து கட்டிக்கிடந்தது. ஆனால் அவர் அந்தத் துன்பத்தைப் பொருட் படுத்தாமல் ஆனந்தன் நிஷ்டையில் அசையாது வீற்றிருந்தார்.

இதைக் கண்டவர்கள் இவர் மீது மிகுந்த பக்தியும் மரியாதையும் செலுத்தி வரலாகினர். விருபாக்ஷ குகையில் இருந்த போது இவர் "அருணாசல அக் ஷரமண மாலை" எனும் துதியை பாடியருளினார்.

பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்து அவர்கள் சந்தேகங்களுக்கு சிறு சீட்டில் பதிலெழுதிக் கொடுத்தும் மௌனம் மூலம் மறுமொழி கூறியும் அரிய உபதே சங்கள் செய்து வந்தார்.

முதன் முறையாக இவரது தாயார் இவரைத் தேடிவந்த போது தமக்கு குடும்ப பாசம் அற்றுவிட்டதெனக் கூறி அவரை வழியனுப்பி வைத்தார். பின்பு விசாலமான ஸ்கந்தாச்சிரமத்திற்கு இடம் மாறி வந்த பின் தமது அன்னையை தம்முடனே வைத்துக் கொண்டார். அவர் அன்னையும் அவருக்கும் அவரை அண்டிய பக்தர்களுக்கும் உணவ ளித்து வந்தார்.

பிற்காலத்தில் தனது பேச்சு, நடத்தை, மௌனம் முதலியவற்றின் மூலம் தமது தாயின் மனதை ஞானமார்க்கத்தில் பக்குவப்படுத்தினார். அன்னையின் இறுதி நாளில் அவரின் அருகில் இருந்து அவர் மடியிலேயே தமது அன்னையின் உயிர்பிரிய உதவினார்.

அன்னையின் சமாதியின் மேல் லிங்கமொன்றை பிரதிஷ்டை செய்து "மாத்ரு பூதேசுவரர்" எனும் பெயரில் ஆலய மொன் றையும் நிருமானித்தார். இக் கோயிலில் நித்திய பூசை நடந்து வருகிறது. ஆரம்ப நாட்களில் ஸ்கந்தாச்சிரமத்தில் இருந்து பகவான் அடிக்கடி மலையடி வாரத்தில் உள்ள இக்கோயிலுக்கு வருகை தந்து கொண்டி ருந்தார். பின்பு நிரந்தரமாகவே இக் கோயிலில் தங்கி விட்டார்.

இவரது உபதேசங்கள் உல கெங்கும் பரவ பக்தர்களது எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது. ரமணாச்சிரமமும் நாளுக்கு நாள் விரிவடைந்து இன்று ஆன்ம போத கலைக் கூடமாக மிளிர்கின்றது. "உன்னையே நீ விசாரித்து அறி" என்ற ஆன்ம விசாரத்தையே பகவான் வலியுறுத்திக் கூறினார். தனது சொல்லாலும் செயலாலும் அருள் பார்வையாலும் பக்தர்களின் துன்பங்களை அகற்றி வந்த இம்மகரிஷி தமது 70வது வயதில் மஹா சமாதியடைந்தார்.

இம்மகரிஷியின் ஆச்சிரமத்திற்கு எமது குருநாதர் தமது 9வது வயதில் சிறிய தந்தையுடன் விஜயம் செய்து அவருடைய அருளாசியையும் நேர்முகமாக பெற்றுக் கொண்டார்கள். இம்மகரிஷி மஹா சமாதியடைந்த பின்னரும் எம் குருநாதர் சூட்சுமமாக அவருடன் ஆன்மீகத் தொடர்புகளை வைத்து அவர் தம் உறவை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரஹ தேவதை

வீடுகளில நம்மைச் சுற்றி எப்போதும் ஒரு தேவதை இருந்து கொண்டேயிருக்கிறது. நாம் எதைச் சொன்னாலும் "அப்படியே ஆகட்டும்" என்று அந்தத் தேவதை சொல்லிக் கொண்டே இருக்குமாம். நாம் பேசுவது எல்லாமே நல்ல வார்த்தைகளாகவும், மங்கல வாக்காவும் இருந்தால் அந்தத் தேவதையும் "அப்படியே ஆகட்டும்" என்று ஆசீர்வதிக்கும் போது எல்லாம் நல்லதாகவே அமையும்.

ஆகையால் கடுஞ்சொற்கள், கெட்ட வார்த்தைகள், அபசகுணமாகப் பேசுதல் ஆகியவற்றை வீட்டில் தவிர்க்க வேண்டும். ஏதாவது ஒரு பொருள் இருக்கிறதா? என்று கணவன் கேட்டால் "இல்லை" என்று மனைவி சொல்லக்கூடாது.

"நிறைய இருந்தது மறுபடியும் வாங்கி வரவேண்டும்" என்ற விதத்தில் சொன்னால், தேவதையும் "அப்படியே ஆகட்டும்" என்று கூறும்.

வீட்டில் எல்லாப் பொருட்களும் எப்போதும் நிறைந்திருக்கும். வீடு மங்களகரமாக இருக்கும். பேசும்போது நல்ல வார்த்தைகளாகவே சொல்லலாம் அல்லவா!

வீட்டின் நுழைவாயில் அதிமுக்கிய மானது. இதில் இருக்கும் தேவதைக்குப் "பிரதானத்துவார தேவதா" என்று பெயர். வீட்டைக் காப்பது நுழைவாயில். பிரதான வாசற்படியைத் தினமும் நீர்விட்டுக்கழுவிக் கோலம் போடவேண்டும். வாசக்கால்களில் மஞ்சள் குங்குமம் இடவேண்டும். வீட்டைவிட்டு வெளியில் புறப்படுவதற்கு முன், பிரதான வாசல் நிலையை வணங்கிவிட்டு செல்ல வேண்டும். பண்டிகை தினங்களில் நுழைவாயிலில் மாவிலைத் தோரணம் கட்டி அலங்கரிக்க வேண்டும். காலையிலும், மாலையிலும் பூஜை அறையில் தீபம் ஏற்றி வணங்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களிருந்தாலன்றி, தீபம் ஏற்றாமல் இருக்கக்கூடாது. கிழக்கு நோக்கி, விளக்கு ஏற்றி வழிபட்டால், கிரஹ பீடை, துன்பம் அகலும். மேற்கு நோக்கி தீபம் ஏற்றி வணங்கினால், கடன் தொல்லை, சனி பீடை, அகலும். வடக்கு நோக்கி தீபமேற்றித் துதித்தால் செல்வம் பெருகும். சுபகார்யம் நடக்கும். தெற்கு நோக்கி தீபம் ஏற்றக் கூடாது.

தெய்வங்களைத் துதிப்பதால் பாவம் நீங்குகிறது. ரோகம் போகும். ஆயுள் நீடிக்கும். நல்ல அறிவும் ஸம்பத்துக்களும் பெறலாம். நம்பிக்கையும், பக்தியும், சிரத்தையும் வேண்டும். பலன் கிடைக்குமோ? கிடைக்காதோ? என்று சந்தேகம் கொள்ளலாகாது. "விஸ்வாஸ: பல தாயக:" விஸ்வாஸமிருந்தால் பலனுமிருக்கும்.

- சு.கிருஷ்ணஸ்வாமி -

ஒழுங்கான தியான நேரத்தைக் கடைப்பிடியுங்கள். தியானம் மனதை அமைதிப்படுத்துகிறது. மனதில் நிச் சலத்தன்மையை அது உருவாக்கு கிறது. ஒரு மணி நேரம் நீங்கள் ஆழ்ந்து தியானித் தால் கூட அந்த தியானத்தின் மூலம் மனதில் ஏற்படுத்தப்பட்ட பதிவு மீதமுள்ள இருபத்து மூன்று மணி நேரமும் மனதில் தங்கி நிற்கிறது. முன்போல மனம் அலைந்து திரியாது. படிப்படியாக தினசரி தியானத்தின் கால அளவைக் கூட்டுங்கள். இது உங்கள் அன்றாட வேலையுடன் குறுக்கிடாது. ஏனெனில் தியானம் உங்களது பல்வேறு திறமைகளை அதிகரித்து குறைந்த நேரத்தில் வேலை களை செய்வதற்கான ஆற்றலை உங்க ளுக்கு அளிக்கிறது.

**- ஸ்வாமி சிவானந்தா-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட இந்தியாவில் ராதை பிறந்த இடமான பிருந்தாவன் எனும் கிராமத்தில் வாழும் நானாக்கரு சுவாமிகள் எமது குருநாதருக்கு அன்பளிப்புச் செய்த ராதா-கிருஷ்ணா திருவுருவச் சிலைகள். இவை நுவரெலியாவில் உள்ள இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட இந்தியாவிலுள்ள ராதை பிறந்த இடமான பிருந்தாவனத்தில்
ஸ்ரீ நானாகரு சுவாமிகளுடன் குருநாதர் உரையாடும் காட்சி



தம்பிலுவில் காயத்ரீ பீடத்தில் நடைபெற்ற அன்னதான வைபவத்தில்,
கலந்துகொண்ட சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த குழந்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு காயத்திரி பீடத்திற்கு எமது குருநாதரும் அவர் தம் தென்னாபிரிக்கச் சீடரான சுவாமி சங்கரானந்தா குழுவினரும் வருகை தந்த போது பாடிய வரவேற்புப்பா மடல்

குருவே வருக! எம்குறை நீக்கும்
திருவே வருக! பதினெண் சித்தர்
உருவே வருக! உறவே வருக!
உயிரே வருக! உலராக் கற்பகத்
தருவே வருக! தரணியைக் காக்கும்
இறையே வருக! எந்தையே வருக!
உங்கள் பொற்பத புதுமலர் தன்னில்
எங்கள் சிரங்கள் வைத்தோம் வருகவே!

சற்குரு நாதரின் திருவருள் பெற்று,
சஞ்சல மகன்று, தன்னலந் துறந்து
காந்தியை மகாத்மா வாக்கி வைத்ததும்
பேடன் பவலின் பெருமையை உலகம்
அறியச் செய்ததும், நெல்சன் மண்டேலா
அறிஞனை ஈன்று அளித்து மான

தென்னா பிரிக்கா நாட்டினி லிருந்து
இந்நாட் டிற்கு வருகை தந்துள்ள
சங்க ரானந்தா சுவாமிகள் அவர்களே!
உங்களை நாங்கள் உள்ளம் குளிர
சங்கத் தமிழால் வருக வருகென
இன்முகத் துடனே வரவேற் கின்றோம்
தங்களோ டிணைந்து வந்துள்ள அன்புச்
சீடர்கள் தம்மையும் இருகரம் கூப்பி
இதயம் திறந்து வரவேற் கின்றோம்!

தரணி போற்றும் தமிழகத் திருந்தும்
சீர்மிகு மலேசிய நாட்டினி லிருந்தும்
பேரறி வாளராம் எம்குரு நாதரின்
பேரருள்ப் பார்வையில் வாழ்ந்திடும் பெரியீர்!
உங்களை நாங்கள் குருவின் துணையுடன்
எங்கள் செந்தமிழ்ப் பண்பினைக் கலந்து
வருக வருகென வரவேற் கின்றோம்.
எம்திரு நாட்டின் எண்டிசை யிருந்தும்
இன்புடன் இங்கே வருகை தந்துள
அன்பர்கள் தொண்டர்கள் அனைவர் தம்மையும்
கன்னற் றமிழில் கனிவினைக் குழைத்து
அன்புடன் வருகென வரவேற் கின்றோம்.

**எங்கள் குருநாதர்**

எங்கள் குருநாதர்
காயத் திரிச்சித்தர் டாக்டர் முருகேசர்,
நேயத் துடன்எம் நெஞ்சில் உறைபவர்
அன்பும், அறிவும், அடக்கமும் தமது
அணிகல னாகப் பூண்டவர் இந்த
அகிலம் அனைத்தையும் தம்திருக் கரங்களுள்
அடக்கி யாளும் வல்லமை பெற்றவர்.
காயத் திரியெனும் அன்னையின் புதல்வர்!
பாயும் புலியையும் பரிவுடன் அணைக்கும்
அருள்மிகு பண்டிட் கண்ணைய யோகிதம்
திருமிகு சீடர்! பெருந்தவ சீலர்!

புத்தர், இயேசு, நபிகளைப் போன்றே
சித்தம் முழுவதும் மக்களின் நலனில்
செலுத்தி வாழும் செம்மனச் செம்மல்!
எம்மதரும் சித்தர் பதினெண் மரையும்
தமதரும் உடலில் தாங்கிய யோகி!
ஆய கலைகள் அறுபத்து நான்கும்
நேய முடனே கற்றுத் தெளிந்தவர்.
தயங்கா தெதையும் சாதிக்க வல்லவர்
மாயம் மிகுந்த உலகியல் வாழ்வில்
மயங்கா நிற்கும் மாபெரும் ஞானி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னா பிரிக்கா என்னும் நாட்டிலும்
இன்பத் தமிழ்வாழ் தமிழக மண்ணிலும்
எழிலுறு வளநகர் மலேசி யாவிலும்
இயற்கை வளங்கள் இயல்பாய்ச் செறிந்த
இங்கி லாந்து முதலாம் உலகில்
சிறந்து விளங்கும் நாடுகள் அனைத்திலும்
வாழ்பவர் தமக்கும் வாஞ்சை யுடனே
தீட்சை வழங்கிய தீட்சகர் எமக்கு
மீட்சி யளிக்க வந்தமா வள்ளல்

நுவர எலியா எனுந்திரு நகரில்
பால யோகியார் பரிவுடன் ஈந்த
இலிங்கேஸ் வரர்க்கும் காயத் திரிக்கும்
எழிலுறு ஆலயம் இயல்பாய் அமைத்தும்
அமைதி யாகவே தியானம் புரிந்திட
அழகிய மண்டபம் ஆக்கியும் தந்துளார்.

செந்தமிழ் இனத்தவர் சிறப்புடன் வாழும்
தம்பிலு வில்லெனும் தனிப்பெரு நகரில்
காயத் திரியாம் அன்னை தமக்கு
கவினுற ஆலயம் கட்டித் தந்துளார்.
மீனிசை மீட்டும் மட்டுமா நகரில்
மிளிரும் புதுமுகத் துவாரம் தன்னில்
வானுறை ஸப்த ரிஷிகள் தமக்கும்
வனப்புற மிகப்பெரும் மண்டலம் அமைத்தும்
அருள்மிகு அன்னை காயத் திரிக்கும்
அகிலம் காக்கும் மகாவிஷ் ணுவிற்கும்
ஆன்றோர் போற்றும் மாமேரு தமக்கும்
அன்புடன் ஆலயம் அமைத்துத் தந்துளார்

நோயால் வாடும் மக்களின் துயரை
நீக்கும் பொருட்டு மருத்துவ மனையும்,
மூப்பால் வருந்தும் ஏழைகள் வாழ
முதியோர் இல்லமும் கட்டித் தந்துள்ளார்
அத்துடன் ............
தன்னிலை மறந்து தியானம் புரிந்திட
தனித்துவம் மிக்கதோர் மண்டபம் அமைத்துத்
தரவும் எம்குரு சித்தம் கொண்டுள்ளார்
இத்தனைக்கும் மேலாய்............
மாய உலகின் மயக்க நிலைகாட்டி
தாயாய் இருந்து தக்க வழிகாட்டி
எமக்குள் உறைந்துள இறையுணர்வை யாமறிய
இயன்ற வழிமுறைகள் எடுத்து எமக்கோதி
அவித்தையின் காரணத்தால் ஆசை தனில்மூழ்கி
அவதி யுறுமெங்கள் அறியாமை தனைப்போக்கி
வாழும் முறைகாட்டி நிற்கின்றார் குருநாதர்!

ஆனாலும் ..................
இன்னும் குருநாதர் இயல்பைப் புரியாமல்
இருளில் மூழ்கிக் கிடக்கின்றார் சிலபேர்கள்
உலகியலாம் பெருங்கடலில் மூழ்கி வெளியேற
உதவியின்றித் தவிக்கின்றார் பலரிங்கு! யாவர்க்கும்
அருள்தந்து ஆட்கொள்ள ஆயத்த மாயுள்ளார்
அன்பே உருவான எங்கள் குருநாதர்
ஆதலினால் .........

எல்லோரும் வாருங்கள் எங்கள் குருநாதர்
இனிய திருவடியைப் பற்றிப் பிடித்திடுவோம்.
இன்னல் மறையும் இனிய வழிதெரியும்.
இதயத்தில் அவருருவில் இறைவன் தனைக்கண்டு
இன்புற் றிருப்போம் இனிதே!


**தமிழருவி**
**செ. சிவானந்ததேவன், B.A.Dip-in-Ed.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீமகாவிஷ்ணு ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ள ஸ்ரீதேவி, பூதேவியருடன் மஹாவிஷ்ணு



மட்டக்களப்பு, புதுமுகத்துவாரம் காயத்திரி பீடத்தில் நடைபெற்ற மகாயாகத்தின் போது மண்டபத்தில் நிறைந்திருக்கும் பக்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காயத்திரி வளாகத்துள் அமைந்திருக்கும் மகாதேவி இல்லத்தின் முன்புறத் தோற்றம்



காயத்திரி வளாகத்துள் அமைந்துள்ள உணவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரிஷிகளின் மர்மவாசம்!

"மகரிஷிகள் இருக்கிறார்களா? என்பதே இன்று பலருக்கு நம்பமுடியாத செய்தியாக இருக்கும். ஆனால் நாளுக்கு நாள் இவர்களின் இருப்பிடத்தையறிந்து, நேரில் சென்று, பல ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்து, சாதனைகள் பயின்று வரும், ஆண்கள், பெண்கள், மேதைகள், ஆன்ம ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள், ரிஷிகளின் ஆசிரமங்களுக்கு வந்து, உண்மையறிந்து போய்க் கொண்டிருக் கிறார்கள். இத் தகையவர்களின் யாத்திரை அனுபவங்கள் அவ்வப்போது பல ஆன்மிகப் பத்திரி கைகளில் வெளிவருகின்றன. ஆன்மிகப் பத்திரிகைகளைப் படிக்கும் பழக்கம் மிகப் பெரும்பாலானவர்களுக்கு இல்லை யாகையால் அவர்கள் இதைப்புரிந்து கொள்ள முடிவதேயில்லை.

## மகரிஷிகளின் கேந்திரம்

இமய கிரியின் கிழக்குப் பகுதியின் பின் புறத்தில் திபேத்தியப் பீடபூமியின் தெற்குப் பக்கத்தில், அடர்ந்த மலைகளும், காடு களும், பள்ளங்களும், மேடுகளும், நிறைந்த இடத்தின் நடுவில் சம்பளம் என்ற கிராமிய சூழ்நிலை கொண்ட சூட்சும ஆசிரமத்தில் ரிஷிகளின் மத்திய கேந்திரம் இருக்கிறது. இதை ஆன்மிக நெறியில் முன்னேறிய பல ஆண்கள், பெண்கள் சென்று பார்த்து வந்திருக்கிறார்கள். தனிப்பட்ட எந்த மனிதனும் இவ்விடத்தைக் கண்டு கொண்டு செல்ல முடியாது. இப்படி ஓர் இடம் இருப்பதாக விமானத்தில் பறந்து செல்பவர் களுக்கும் பார்க்க முடியாது. ஏனென்றால் இதன் அமைப்பு மனிதனின் சாதாரண பார்வைக்குத் தெரியாத வண்ணம் உள்ளது. ஆசிரமத்தைச் சேர்ந்த யாராவது வழிகாட்டி அழைத்துச் சென்றாலொழிய உலகத்திலுள்ள யாரும் இதைக் காண முடியாது. உலகத்தின் மத்திய கேந்திரமாக சம்பளம் இருக்க, உலகின் வேறு பலபா கங்களில் அதன் கிளைகளாகச் சிறிய ஆசிரமங்கள், அதேபோன்ற சூக்ஷ்ம அமைப்பில் செயல்பட்டு வருகின்றன. இங்கும் அவ்வப்போது பல ஆன்மிகர்கள் வந்து, சாதனை பயின்று செல்கின்றார்கள். தென்னிந்தியாவிலும் இப்படியொரு கிளையிருக்கிறது. இதன் தலைவராக தமிகழத்தின் தமிழ்ப் பண்பாடுகளின் தந்தையென்று சொல்லும் அகத்தியனார் இருந்து வருகிறார். அகத்திய ஆசிரமம் என்ற பெயரில் மருத்துவமனைகளையும் யோகம் எனப் பெரிய ஆசிரமங்களையும் வைத்து நடத்தும் பலருக்கு அகத்தியனார் இன்னும் இருக்கிறார் என்பதே நம்ப முடியாத செய்தியாயிருக்கும். அவர் தமிழ் நாட்டுக்கு வந்து முதலில் தங்கியிருந்த பொதிகை மலையில் இப்போது இல்லை. நெடுங்காலமாக மேற்கத்திய மலை த்தொடரின் ஒரு பகுதியில் நீலகிரி மலையின் சாரலையடுத்து, மலைகளின் நடுவில் சம்பளம் போன்ற சூக்ஷ்சும ஆசிரமத்தில் அவர் சிரஞ்சீவியாயிருந்து, தென்னிந்தியாவின் உயிர்களுடையனவும் இல்லாதனவுமான பொருள்களின் பரிணாமத்தை நடத்தி வருகிறார்.

## மேலை விஞ்ஞானி வருகை

சில காலத்துக்கு முன் ஒரு மேல் நாட்டு விஞ்ஞானி இங்கு வந்து பலகாலம் தங்கிச் சென்றபின் எழுதிய நூலில் "நான் நீலகிரிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரலிலுள்ள மாபெரும் முனிவரைச் சந்தித்தேன்." என்று எழுதியிருக்கிறார். இவர்தான் முதன் முதலில் ரிஷிகளின் வரை படத்தை மகரிஷிகளின் உத்தரவின் பேரில் ரிஷிகளின் தொடர்புள்ளவர்களுக்கு காட்டியவர்.

மனிதரின் கண்களுக்குப் புலனாகாமல் கரந்துரையும் மகரிஷிகள் எப்போதுமே மனிதரிடை வராமல் இருப பதில்லை. அவ்வப்போது மாறு வேடங்களில் மனிதரிடை வரவே செய்கிறார்கள். இங்கிலாந்தில் அரசி விக் டோரியா மகாரா ணியின் பட்டாபிஷேகத்தின் போது, மகரிஷிகள் வெண்புரவிகளிலேறி, ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். அவர்கள் எப்போதும் மனித உலகத்தில் வாழாத மகரிஷிகள்தாம் என்பதை அறிந்து மகாராணியார் இத்தகவலைத் தன் வரலாற்றில் எழுதி வைத்திருக்கிறார். அவ்வப்போது உலகின் சமூகங்கள் சமுதா யங்களில் நடைபெறும் பெரிய காரியங்களில் அவர்கள் மாறுவேடத்தில் வந்து பங்கு கொள்கிறார்கள். ரிஷி பாரம் பரிய வழியில் சாதனை புரிபவர்களுக்கு அவ்வப்போது மாறு வேடங்களில் வந்து சில உபதேங்களைச் செய்து செல் கிறார்கள். இப்படியெல்லாம் இவர்கள் மக்களிடை தோன்றிச் செல்லக் காரணம் தம் வழியில் நிற்கும் அவர்களின் சுப காரியங்கள் செவ்வனே நடைபெற, அவர்க ளுக்குக் காந்த சக்தியை உதவுவதற் குத்தான். அவர்கள் இருக்கும் இடங்களில் தெய்வீகக் காந்த சக்தி அலைக்கழியும்: அதன் பிரபந்தத்தால் அங்குள்ள அனை த்தும் நலமடையும். நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம் மகரிஷிகள் தொடர்புடையது. அங்கு அடிக்கடி மகரிஷி கள் சூக்ஷ்ம சரீரத்தில் வந்து போகிறார்கள்.

## மண்ணுலகப் பரிணாமம்

மண்ணுலகப் பரிணாமத்தைத் திட்டமிட்டு நடத்த ஆண்டுக்கொருமுறை எல்லாக் கேந்திரங்களிலுமுள்ள ரிஷிகளும் சம்பளக் கிராமத்தில் கூடுகிறார்கள். அப்போது அவர்கள் உலகில் எங்கெங்கு என்னென்ன விதமான பரிணாமத்தைச் செய்ய வேண்டும். எங்கெங்கு அழிக்க வேண்டும். எங்கெங்கு ஆக்கவேண்டுமென்று திட்டம் தீட்டுகிறார்கள். "வைகாசி மாதம் பௌர்ணமி"யன்று தான் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. இதற்கு அக்காலம்வரை ஆன்மசாதனையைத் தகுந்த முறையில் பயின்றவர்கள் நேர்முகமாய் அழைக் கப்பட்டுச் செல்கிறார்கள். அந்த அளவுக்குப் பண்படாதவர்கள் தம் அகக்கண் நோக்கால் சூக்ஷ்ம சரீர யாத்திரையால் அதைக்கண்டு பயனடைகிறார்கள்.

மகரிஷிகள் அனைவரும் கூடும் அச்சமயம் அவர்களின் கூட்டுக் காந்தம் மண்ணுலக வானப் பரப்பு முழுவதும் பரவுகிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளவே அன்று ஆன்மீகக் கூடங்க ளிலுள்ளவர்கள் எல்லாம் அங்கங்கு கூடித் தியான நிலையில் ஆழ்கின்றனர். அந்தக் காந்த சக்தி பரவும் மாதமாகிய வைகா சியில் உலகின் பல ஆன்மீக மேதைகள் பிறந்திருக்கிறார்கள். புத்தர், வியாசர், திருவள்ளுவர், ஆகியோர் இந்த மாதத்தில் பிறந்தவர்கள்தான்.

## புராணத்திலுள்ள உண்மை

மகரிஷிகளின் தலைமை அவ்வப்போது மாறுகிறது. நம் மந்திரிகள் எப்படி அவ்வப்போது மாறுகிறார்களோ, அப்படி மகரிஷிகளும் தலைமையை ஒருவருக் கொருவர் மாற்றிக் கொள கிறார்கள். கலியுகம் ஆரம்பமாகும் வரை உலக ரிஷிகளின் குழுவுக்குத் தலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகித்தவர், 18 புராணங்களையும், கீதை யையும் எழுதிய வியாசமா முனிவராவர். கலியுக ஆரம்பத்தில் மைத்ரேயருக்குத் தலைமைப் பதவி யளிக்கப்பட்டுள்ளது. இவ் விவரங்கள் கதாரூபமாகப் புராணங்கள் பலவற்றில் விளக்கமாகச் சொல்லப் பட்டிருந்தாலும், புராணங்களைக் கதை களாவே நினைத்துப் படிப்பவர் களுக்கு அவற்றில் இருக்கும் இந்த நடைமுறை உண்மை புலப் படுவதில்லை.

அகத்தியர், மைத்ரேயர், புலஸ்தியர், வசிஷ்டர் போன்ற சப்தரிஷிகள் நிரந் தரமாய் மத்திய கிளைக் கேந்திரங்களில் சிரஞ்சீவிகளாயிருந்து பரிணாமத்தை நடத்தி வருகிறார்க ளானாலும் இடையிடையே அவர்கள் வழியில் நின்று கடுமையான சாதனைகள் புரிந்து அதனால் தம் உடலின் பரிணா மத்தை கட்டுப்படுத்தக் கூடிய அளவு வெற்றியடைந்து பலரும் அவ்வப்போது மகரிஷிகளின் ஆணையின் பேரில் செயல் படுபவர்களாக உலகின் பல கேந்திரங் களிலிருந்து பணியாற்றி வருகிறார்கள். சித்தியடைந்த சித்தர்கள் பலரும் இப்படியிருந்து வருகிறார்கள். உலகின் பரிணாமத்தை நேர்முகமாய் நடத்த வேண்டிய இடங்களில் இத்தகையவர்கள் பங்கு கொண்டு நடத்தி வைக்கிறார்கள். சமயா சமயங்களில் இவர்களில் சிலர் சில குடும்பங்களில் பிறந்து, வளர்ந்து சில அற்புதங்களை செய்து, மக்களைத் திசை திருப்பிவிட்டுப் பின் மரணம் போன்ற நிலையில் உடலை விட்டுச் சென்று தம் பழைய உடம்பையேற்றுக் கொள்கிறார்கள். சமயாசாரிகளாய் தோன்றி மறைந்தவர்கள் பலரும் இத்தகையவர்களேயாவர்.

## ஆன்ம வித்தையின் பயன்

அற்ப நாட்களில் முடியும் வாழ்க்கையை, அற்ப நேரத்தில் மறையும் பௌதிக இன்பத்தை, உண்மையென நம்பி வாழ்ப வர்களுக்கு கண்ணுக்குத் தெரியும் மனிதனுக்குள் கண்ணுக்குத் தெரியாத மனிதனொருவனுண்டென்று கருத முடியாதவர்களுக்கு பௌதிக இயக்கங்க ளெல்லாம் தானாக நடைபெறுபவையெனத் தவறாகக் கருதிக் கொண்டிருப் பவர்களுக்கு, உண்பதும், உறங்குவதும், மக்களைப் பெறுவதையும் தவிர மனிதன் செய்ய வேண்டியது வேறொன்று மில்லை யென்று நம்பி வாழ்பவர்களுக்கு, கண்ணுக்குத் தெரியாத ஓர் உலகம் இருக்கிறதென்பதை புரிந்து கொள்ளாத வர்களுக்கு, இதுவரை நான் சொல்லிவந்த உண்மைகள், கட்டுக்கதைகளாக, நம்ப முடியாத வைகளாயிருக்கும். ஆனால் இதை நம்பும், பயன்கொள்ளும் ஆயிரக் கணக்கானவர்கள் இதே உலகில் இருக்கிறார்கள். நம்பாதவர்களைப் புத்த கங்களைக் கொண்டும் சொற் பொழி வுகளைக் கொண்டும் நம்ப வைத்துவிட முடியாது. இந்த உண்மைகள் அந்த மரபுக்கு மாறானவை. அதனால்தான் இதை அறியாதவர்களுக்கு மெய்ப்பிக்க யாரும் துணியவில்லை. நாமும் இதை அறியக் கூடிய அளவு ஆன்ம வித்தையில் பண்பட்ட வர்களுக்காக வென்றே எழுதி வெளியிடுகிறோம். அத்தகையவர்கள் எம்முடைய இந்த விளக்கத்தால் உள்ளத்தில் உறுதி பெற்று, தம் சாதனையில் வேகமாய் முன்னேறி விரைவில் மாமுனிவர்களை நேருக்கு நேராகத் தரிசிக்கும் பேற்றைப் பெறுவார்களென நம்புகிறோம்.

வாழ்க ஆன்மீகம்! வளர்க தெய்வீகம்!! ஓங்குக முனிவர் புகழ்!!!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநாதரும் மறக்க முடியாத சம்பவங்களும்

மனிதனை மனிதனாக வாழ வைக்க, காலத்துக்குக் காலம் ஞான வழி காட்டிகள் தோன்றுவதும் உலகம் உய்ய உகந்த செயற்பாடுகளில் ஈடு படுவதும் வழக்கம். இந்த வகையில் இறைவனே மனிதனுக்குக் குருவாக வந்து அமைந்த வரலாற்றுப் பெருமை மிக்க பல கதைகள் உண்டு. மகாபாரதத்திலே அர்ஜுனனுக்கு பகவான் கண்ணனே ஆன்மீகக் குருவாக இருந்தார். அதன் விளைவே பகவத்கீதை. தென்னாட்டில் மாணிக்கவாசகருக்கு பரமசிவனே குருந்த மரத்தின் அடியில் குரு வாக வந்து காட்சி கொடுத்தார். அதன் விளைவாக எழுந்ததே திருவாசகம் என்னும் தேன்.

இதே போன்று வேதவியாசர், ஆதிசங்கரர், இராமானுஜர், மத்வாச் சாரியார் போன்றோர் வேதஞானத்தை எமக்கு விளங்க வைத்தனர். பதினென் சித்தர்கள் தோன்றி எமது சித்தனையைச் செம்மைப் படுத்தினர். இவ்வகையில் இக் கலியுகத்தில் காயத்திரிச் சித்தர் கலாநிதி ஆர்.கே.முருகேசு சுவாமிகள் எமக் கெல்லாம் குருவாக வந்து, ஆட்கொண்டு எம்மை வழி நடத்துகிறார்கள் இதன் விளைவே இன்று கும்பாபிடேகம் காணும் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருத த்தக்க மட்டக்களப்பு புதுமுகத் துவார த்தில் அமைந்து அருள்சுரக்கும் சப்த ரிஷிகள் மண்டலம் ஆகும்.

ஆன்மீக ஏழைகளின் தோழனாக விளங்கும் எம் குருநாதர் தமது வாழ்க்கை அனுபவங்களை அவ்வப்போது நகைச் சுவையோடு கூறுவார்கள். அவற்றில் பொறுக் கியெடுத்த சிலவற்றை இங்கு தருகிறோம்.

## இதுவா குருபக்தி?

எமது குருநாதர், அவர்தம் குருவான பண்டிட் கண்ணையா யோகீஸ்வரரின் யோகாஸ்ரமத்தில் ஆன்மீகப் பயிற்சி பயின்று கொண்டிருந்த போது ஒரு நாள் கண்ணைய யோகீஸ்வரர் தமது சீடர்களில் சிலரை அழைத்துக் கொண்டு அருகில் இருந்த பயங் கரமான காட்டினுள் புகுந்தார்கள். இக் குழுவில் எமது குருநாதரும் ஒருவர்.

அது ஒரு அமாவாசை தினம். இரவுப் பொழுது. பகல் நேரத்தில் கூட சூரிய ஒளி பரவாத அடர்ந்த காடு அது. அந்தக்காட்டினுள் நுழைந்ததும் சீடர்கள் அனைவரும் திக்குத் தெரியாது தவித்தனர். குருவின் அருகிலேயே அவரை அண்டியபடி ஒவ்வொருவரும் மெதுவாக அடியெடுத்து வைத்து நடந்தனர். ஒருவரையொருவர் பார்க்க முடியாத இருட்டு தமது குருநாதரின் இடப்புறமாக சென்று கொண்டிருந்த எம் குருதேவர் காதினிலே புலி ஒன்று உறுமும் உறுமல் கேட்டது. தொலைவில் அதன் கண்கள் தெரிவது போல் ஒரு பிரமை. உடனே எம்குருதேவர் எவருக்கும் எதுவும் பகராமல் தமது குருநாதரின் வலப் புறத்துக்கு வந்து, தொடர்ந்து நடந்து கொண்டிருந்தார்கள். கண்ணைய யோகீஸ் வரராகிய எம் பரம குருநாதர் எமது குரு நாதரைப் பார்த்து "முருகேசு இதுவா குருபக்தி? குருநாதரை முதலில் புலிய டிக்கட்டும் நாம் தப்பித்துக்கொள்வோம் என்று நினைத்துத் தானே எனது வலப் புறமாக வந்திருக்கிறாய் என நகைச் சுவையுடன் வினவினார்கள். இவ்வினா எமது குருதேவரின் உள்ளத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேர்மனியில் இருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்த எமது குருநாதரின் அருளாசி பெற்ற பக்தர்கள் கொழும்பிலுள்ள குருநாதரின் குருகுலத்தில் தியானத்தில் ஆழ்ந்திருக்கின்றனர்.



இன ஒற்றுமையை வலியுறுத்தும் சமாதான மகாநாட்டில், பௌத்த குருமார்கள் மத்தியில் எமது குருநாதர் உரை நிகழ்த்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காகபுசுண்டர் தலையாட்டிச்சித்தரின் கமண்டலம், சங்கு முதலியவற்றுடன் எமது குருநாதர் காயத்திரி சித்ததர் ஆர்.கே. முருகேசு சுவாமிகள்



வரெலியா காயத்திரி பீடத்தில் அமைந்திருக்கும் பிரமாண்டமான தியானமண்டபத்தின் முன்புறத்தோற்றமும் அதன் இயற்கைச் சூழலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுள்ளென்று தைத்தது. தாம் செய்த செயலை நினைத்து வெட்கமும் வேதனையும் அடைந்து தமது குரு தேவரிடம் மானசிகமாக மன்னிப்புக் கேட்டு க்கொண்டார்கள்.

அப்போது ஸ்ரீகண்ணைய யோகீஸ்வரர் சீடர்களைப் பார்த்து பாதை தெரியவில்லையா? பயமாக இருக்கிறதா? என வினவினார். அவ்வளவுதான் எங்கிருந்து ஒளிவந்ததோ தெரியவில்லை. மையிருள் அகன்று அவ்விடம் பகல்பொழுது போல் காட்சியளித்தது. சீடர்கள் வியப்பில் ஆழ்ந்தனர்.

## செப்புத்தகடு தங்கமானது

ஒருநாள் பண்டிட் கண்ணைய யோகீஸ்வரர் அவர்கள் எமது குரு நாதரையும் அவருடன் பயின்று வந்த மற்றொரு சீடரையும் அழைத்து ஒவ்வொ ருவருக்கும் ஒவ்வொரு சிறு செப்புத்தகடு துண்டுகளைக் கொடுத்தார் கள். குரு நாதரும் அவர் நண்பரும் அதனைப் பய பத்தியுடன் வாங்கிக் கொண்டனர். அப்போது பரமகுருநாதர் அவர்களைப் பார்த்து இதனை ஊருக்குள் எடுத்துச் சென்று குறிப்பிட்ட நகைக்கடை ஒன்றில் கொடுத்து பணம் பெற்றுக் கொள்ளுமாறும், அப்பணத்தில் சமையலுக்குத் தேவையான பொருட்களை வாங்கிவருமாறும் பணித்தார்கள். ஊருக்கும் இவர்கள் வாழ்ந்த ஆஸ்ரமத்துக்கும் இடையில் வெகு நீண்ட தொலைவு, போக்குவரத்து சாதனங்கள் எதுவும் இல்லாத அந்நாளில் ஒற்றை யடிப்பாதை வழியாக இருவரும் ஊரைநோக்கி நடந்து கொண்டிருந்தனர். கால் வலித்தது. தமது குருநாதர் இவர் களுக்கு உபதேசித்த மந்திரத்தை இருவரும் ஜெபித்தனர். என்ன ஆச்சரியம் இருவரும் ஊர் எல்லையில் வந்து நின்றனர். பின் குருநாதர் குறிப்பிட்ட நகைக்கடைக்குச் சென்று தமது குருதேவர் கூறியபடி மந்திரத்தை ஜெபித்து செம்புத்தகட்டுத் துண்டுகளைக் குறிப்பிட்ட கடையில் கொடுத்தனர். என்ன விந்தை. செம்புத்ததகட்டுத் துண்டுகள் தங்கக் கட்டிகளாக மாறியிருந்தன. கடைக்காரன் அதற்குரிய பணத்தைக் கொடுத்தான். இருவரும் குருநாதர் கூறியபடி எல்லாப் பொருட்களையும் வாங்கிக் கொண்டு ஆஸ்ரமத்துக்குத் திரும்பினர்.

## கண்ணாடி காட்டிய உண்மை

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள இல்லமொன்றில் எமது குருநாதர் தங்கியிருந்த போது அவரிடம் ஒரு பெண்வந்து தமது துன்ப துயரங்களை முறையிட்டாள். தான் மிகவும் நல்லவள் எனவும், தமது கணவன் துர்நடத்தை யுடையவர் எனவும் தன்னை மிகவும் கொடுமைப் படுத்துவதாகவம் கூறி கண்ணீர் வடித்தாள்.

அவள் நீலிக்கண்ணீர் வடிக்கிறாள் என்பதை தமது ஞானசக்தியால் அறிந்து கொண்ட எம் குருநாதர் அவளைப்பார்த்து "உன் கணவனை விட நீதான் துர்நடத தையுடையவள்" எனக் கூறினார். அவ்வளவு தான் அவளுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. சுவாமியின் மகத்து வத்தை உணராத அந்தப் பேதை வாய்க்கு வந்தபடி குருநாதரைத் திட்டடித்தீர்தாள். அவள் பிரயோகித்த கொடும் வார்த்தைகள் சுவாமிஜியின் உள்ளத்தில் வேல்போல் பாய்ந்து வேதனைப்படுத்தின.

தமது மனக்கலக்கத்தை தம் குருநாதராகிய பண்டிட் கண்ணையா யோகிஸ்வரரிடம் மானசீகமாக முறையிட்டார். எம் குருநாதரின் சிந்தையில் திடீர் என ஒரு விழிப்பு ஏற்பட்டது. அருகில் இருந்த தமது அன்புக்குப்பாத்திரமான ஒரு பெண் மணியை அழைத்து முகம்பார்க்கும் கண்ணாடி ஒன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துவரச் செய்தார் கள். கண்ணாடி வந்ததும் சுவாமி, அவரை அவதூறு பேசிக் கொண்டிருந்த பெண் மணியைப்பார்த்து "இதோ இந்தக் கண்ணாடியைப் பார்" என்றார்கள். அவள் கண் ணாடியைப் பார்த்தாள். அவள் பிற ஆடவ னுடன் துர்நடத்தையில் ஈடுபட்ட சம்பவங் கள் எல்லாம் திரைப்படம் போல் கண்ணா டியில் பிரதிபலித்தன. வாயடைத்துப் போன அப்பெண் அடியற்ற மரம் போல் குரு நாதரின் பாதக்கமலங்களில் வீழ்ந்து மன்னி ப்புக் கோரினாள்.

## ஊசலாடிய உயிர்

எமது குருநாதர், தம்மை அண்டி யவர்களை ஒருபோதுமே கைவிட்டதில்லை. ஒருமுறை குருநாதரின் அன்புக்குப் பாத்திரமான ஒரு பக்தரின் சகோதரியின் மகள் மூளைக்காய்ச்சல் நோயால் அவதியுற்றுக் கொண்டிருந்தாள். அவளைக் கொழும்புக்கு அழைத்துச் சென்று அங்குள்ள பிரபலமான மருத்துவமனை யொன்றில் வைத்து சிகிச்சை அளித்தார்கள். வைத்தியர்கள் எடுத்த முயற்சி பயனளிக்க வில்லை. இனி அப்பெண்ணைக் காப்பாற்ற இயலாது என்ற நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அப்பெண்ணை வைத்து பிராணவாயு (ஒட்சிஜன்) செலுத்திக் கொண் டிருந்தனர். அப்பெண் உயிர்பிழைக்கும் சாத்தியம் இல்லை. மறுநாள் காலை ஏழு மணிக்கு முன்பு அவளது உயிர் பிரிந்து விடும் என்ற வைத்தியர்களின் அபிப்பிராயத்தை உறவினர்கள் அறிந்து மிகுந்த மனத்துயரில் மூழ்கினர். இச்செய்தியை சுவாமிஜியிடம் அப் பெண்ணின் உறவினரான பக்தர் மிகுந்த கவலையுடன் முறையிட்டார். குருநாதர் எதுவும் பேசவில்லை. சிறிது நேரம் மௌனமாக தியானத்தில் ஆழ்ந்திருந் தார்கள். பின்பு அப்பக்தரைப் பார்த்து "நாளைக் காலை ஐந்து மணி வரை பொறுத் திருங்கள்" எனக் கூறினார். இவ்வேத வாக்கை சிரமேற் கொண்ட அப்பக்தர் உறவினர்களை அழைத்து ஆறுதல் வார்த்தைகள் கூறி தேற்றினார்கள்.

மறுநாள் காலை ஐந்து மணிய ளவில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அவ் இளம் பெண் திடீரெனக் கண்விழித்து 'அம்மா' என அழைத்தாள். வைத்தியர்கள் உட்பட பலரும் இந்த அதிசயத்தை கண்டு மெய்மறந்து நின்றனர்.

மரணத்தையே தடுத்து நிறுத்தக் கூடிய சகல வல்லமை வாய்ந்த எம் குருநாதரின் திருப்பார்வையில் அவர்தம் ஞான உபதேச நெறி நின்று வாழும் பாக்கியம் எமக்குக் கிடைத்ததையிட்டு நாம் பெருமிதம் கொள்ளாமல் இருக்க முடியுமா?

## இதயத்துவாரம் (Hole in the Heart) மறைந்த மாயம்

பார்த்தாலே பழவினைகள் பறந்தோடக் கூடிய பேராற்றல் மிக்க எம் குருதேவர் செய்த அற்புதங்களில் வியக்கத்தக்க அற்புதம் இது.

ஒரு நாள் சுவாமியின் நெருங்கிய பக்தரான நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்கள் சுவாமிஜியிடம் வந்து தம்மிடம் வேலை செய்யும் ஒரு தொழிலாளி இதயத்துவார நோயினால் மிகுந்த வேத னையடைவதாகவும். இளம் வயதினனான அவனுக்கு திருமணம் நடந்துவிட்டதெனவும் இரு குழந்தைகள் இருப்பதாகவும் கூறி அனுதாபப்பட்டார்கள்.

இத்தொழிலாளி மட்டக்களப்பு புதுமுகத்துவாரத்தில் அமைந்துள்ள காயத்திரி ஆச்சிரமத்தில் சிரமம் பாராது வேலை செய்து வருபவர் எனவும் கூறினார்கள். சுவாமிஜி அவனை தம்மிடம் அழைத்து வருமாறு கூற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறியியலாளர் அவர்களும் அவனை நுவரெலியா விலுள்ள காயத்திரி பீடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். சுவாமிஜி அவனை அன்புடன் நோக்கி, பயப்படத் தேவையில்லை எனத் தேற்றி, தினமும் தவறாது உட்கொள்ளும் படி ஒரு மருந்தைக் கொடுத்தார்.

அவனும் அந்த மருந்தை தவறாது உட்கொண்டு வந்தான். இதயநோயினால் அடிக்கடி மயக்கமடைந்து வந்த அவன் இம்மருந்தை உட்கொள்ளத் தொடங்கியதும் அந்நிலையிலிருந்து படிப்படியாக தேறி வந்தான் பின்பு மருத்துவ பரிசோதனை மேற்கொண்ட போது அவன் இதயத்துவாரம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் இருப்பதைக் கண்டு ஆச்சரியமும் அதிசயமும் அடைந்து எம் குருநாதரின் திருப்பாதங்களில் சரணடைந்தான். அன்று முதல் இன்று வரை எவ்வித நோயுமில்லாமல் தேகாரோக கியத்துடன் வாழ்ந்து வருகிறார்.

## பேசாத சிறுமி பேசினாள்

பண்டாரவளையில் நீர்ப்பாசன பொறியியலாளராக கடமையாற்றி வந்தார் திரு.பலிப்பாண என்ற அன்பர். இவரது மூன்று வயது குழந்தை திறந்த கண் மூடாமலும் வாய்பேச முடியாமலும் வளர்ச்சி குன்றிய ஒரு குழந்தையாக வளர்ந்து வந்தது. இது இவருக்கு மிகுந்த கவலை யையும் வேதனையையும் அளித்தது.

அச்சந்தர்ப்பத்தில் இவருடன் கடமையாற்றிய எமது குருநாதரின் நெருங்கிய பக்தராகிய பிரதி நீர்ப்பாசன பணிப்பாளராக கடமை புரிந்த அன்பர் இவரை எமது குருநாதரிடம் சென்று முறையிடுமாறு ஆற்றுப்படுத்தினார்.

அதற்கிணங்க நுவரெலியாவிலுள்ள காயத்திரி பீடத்திற்கு சென்று சுவாமிஜி அவர்களை சந்திப்பதற்கு தாமே உதவியும் புரிந்தார். அச்சந்தர்ப்பத்தில் குழந்தை எங்கே? என்று சுவாமிஜி வினவ இவர்கள் இருவரும் மீண்டும் பண்டாரவளைக்குச் சென்று குழந்தையை அழைத்து வந்தனர். சுவாமி குழந்தையை ஆசீர்வதித்து ஏதோ ஒரு மூலிகை மருந்தை அக்குழந்தைக்கு கொடுத்தனுப்பினார். என்னே! ஆச்சரியம்!! இரண்டு மூன்று மாதங்களுக்குள் குழந்தை கண்ணைத் திறந்து மூடவும், வாயால் பேசவும் தொடங்கிவிட்டது தற்போது இப் பெண் குழந்தை ஆரோக்கியமுள்ள யுவதியாக வாழ்ந்து வருகிறாள்.

## மீண்டும் கண்பார்வை கிடைத்தது

மொணராகளயில் நீர்ப்பாசன பொறியியலாளராகக் கடமையாற்றிய திரு.விக்கிரமபால என்பவரின் நான்கு வயது நிரம்பிய ஆண் குழந்தை ஒன்றுக்கு புற்றுநோய் ஏற்பட்டதன் காரணமாக சத்திரசிகிச்சை நடைபெற்றது. இச்சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நிறை வேறாததன் காரணமாக இக் குழந்தையின் பார்வை பறிபோய்விட்டது. இதனையறிந்து இக்குழந்தையின் தந்தை மனம் குழம்பிப் போய்விட்டார். அத்தருணம் பண்டார வளையில் பிரதி நீர்ப்பாசன பொறியிய லாளராகக் கடமை புரிந்து கொண்டிருந்த சுவாமிஜியின் நெருங்கிய பக்தர் மூலம் சுவாமிஜியின் பேராற்றலைக் கேள்விப்பட்டு சுவாமிஜியிடம் சென்று தமது மனக் குறைகளை வெளியிட்டார். அப்போது சுவாமிஜி தேசிக்கனி ஒன்றை மந்திரித்து அக்குழந்தையின் கையில் கொடுத்தார். அவ்வளவுதான் அக்குழந்தைக்கு அவ்விடத் திலேயே பார்வை திரும்பிவிட்டது. இவ்வதிசயத்தை கண்டு அக்குழந்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரும் அங்கு குழுமியிருந்தோரும் ஆச்சரியத்தில் மூழ்கினர்.

## கால் இடறியவர்கள் காப்பாற்றப்பட்டனர்

ஆன்மீகத் துறையில், உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதத்தக்க ஸ்ரீ சப்தரிஷிகள் மண்டலத்தின் கட்டுமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அது.

அதன் மேற்கூரைப் பகுதியில் கலசம் வைப்பதற்கான துவாரம் இடும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் சுவாமிஜியின் நெருங்கிய பக்தர்கள் இருவர். மிகுந்த சிரமத்துடன் ஆதாரமேதும் இல்லாமல் அந்தரத்தில் நின்று துழையிட்டுக் கொண்டிருந்த போது இருவரது கால்களும் இடற தடுமாறி கீழே விழப்பார்த்தனர். அங்கிருந்து வீழ்ந்து இருந்தால் இருவரும் உயிர் பிழைப்பதென்பது இயலாத காரியம். ஏனெனில் அதன் உயரம் சுமார் 35 அடிகளுக்கு மேற்பட்டதாகும். அந்த வேளையில் செய்வதறியாது நிலை குலைந்த அவர்கள் ஏதோவொரு சக்தி தங்களை பின்புறமாக தாங்கி நேராக நிமிர்த்திவிட்டது போல உணர்ந்தனர். இந்த சம்பவம் இயல்பாக ஏற்பட்ட ஒன்றல்ல. எம்குருநாதர் ஆபத்து வேளையிலும் தம்மை அண்டிய பக்தர்களை கைவிடமாட்டார் என்பதற்கு இதுவொரு எடுத்துக் காட்டாகும்.

## குழந்தையில்லாக் குறை தீர்ந்தது

எமது குருநாதரின் திருவடியைப் பணிந்து தமது குறைகளை எடுத்துக் கூறிய எவரும் வெறுங்கையோடு திரும்பிய வரலாறே கிடையாது. வேண்டுபவருக்கு வேண்டும் வரம் அளிக்கும் ஞான வள்ளல் அவர். ஒரு முறை அமெரிக்காவில் வசிக்கும் கிறிஸ்னி என்னும் பெண்மணி தமக்கு குழைந்தை இல்லையே என்ற குறையை எங்கள் குருநாதரிடம் முறையிட்டு வருந்தினாள். குருநாதர் "எல்லாம் சரிவரும் ஆசீர்வாதம் அப்பா" எனக்கூறி விடை கொடுத்து அனுப்பி விட்டார்கள் அப்பெண்ணும் முழு நம்பிக்கையுடன் அமெரிக்கா சென்று விட்டார்.

நாட்கள் நகர்ந்தன. குழந்தை கிடைக்கவில்லை. அப்பெண்மணி அமெரிக்காவில் இருந்து இது பற்றி மீண்டும் சுவாமிகளிடம் முறையிட்டாள். உடனே சுவாமிஜி ஒரு குறிப்பிட்ட நாளில் அப் பெண்மணியை குறிப்பிட்ட இடத்தில் தியானத்தில் இருக்குமாறு கூறினார். அப்பெண்மணியும் அவ்வாறே செய்தாள். அந்நாளில் குருநாதர் தாமும் தியா னத்தில் ஆழ்ந்து தமது ஆத்ம சக்தியை ஆகாய மண்டலத்திற்கு எழச் செய்து அச்சக்தியை அப்பெண்ணின் சுவாசத்தின் ஊடாக உட்செலுத்தி கருத்தரிக்கச் செய்தார்கள்.

குழந்தைப் பாக்கியம் பெற்ற அப் பெண்மணி அடைந்த மகிழ்ச்சிக்கு அள வேயில்லை. இப் பெரும் பேற்றை நல்கிய எம் குருநாதரை கிறிஸ்னி தமது இதயத்தில் வைத்து வழிபட்டு வருகிறாள்.

இதே போன்று எங்கள் குருநாதரின் அன்புக்குரிய பக்தர்களில் ஒருவரான ஞான சேகரம் என்பவரின் மருமகள் ஈஸ்வரி என்ப வருக்கும் குழந்தைப் பாக்கியம் இல்லாத குறை இருந்து வந்தது. பல வைத்திய நிபுணர்களை அணுகியும் பயன் கிட்டாமல் போகவே, ஈற்றில் சுவாமியைச் சரணடைந்து தமது குறையை எடுத்துக் கூறினார்கள்.


கருணையே வடிவான குருநாதர் ஈஸ்வரிக்கும், தமது ஆத்ம சக்தியை காற்று மண்டலத்தின் ஊடாக சுவாசத்தோடு கலக்கச் செய்து உட்செலுத்தி கருத்தரிக்கச் செய்தார்கள். அழகிய குழந்தையை பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பிலுவில், சின்னத்தோட்டம் காயத்திரி கிராமத்தில்
அமைந்துள்ள ஆலயத்தின் முன்பு நிழல்பரப்பி நிற்கும்
ஆலமரமும் குழுமியிருக்கும் பக்தர்களூறும்



சினனத்தோட்டம் எனும் இடத்தில் எங்கள் குருநாதர் காயத்திரி
சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளால் உருவாக்கப்பட்ட காயத்திரி
கிராமத்தின் அழகிய சூழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பிலுவில் காயத்திரி பீடத்தில் அமைந்துள்ள
ஸ்ரீ காயத்திரி தேவியின் ஆலயத்தின் ஒரு பக்கத் தோற்றம்



தம்பிலுவில் காயத்திரி பீடத்தில் குழுமியிருக்கும் பக்தர்களின்
ஒரு பகுதியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆழ்ந்த தியானத்தில்
ஆத்மானந்த நிலையில்.....



ஸ்ரீ சிவபாலயோகியால் வழங்கப்பட்ட
பசுபதி சிவலிங்கேஸ்வரருடன்
காயத்திரி சித்தர்










அயராது ஆன்மிகத் தேடலில்
ஈடுபட்டுக் கொண்டிருந்த குருதேவரின்
இளமைத்தோற்றம்



ஆன்மீகத்தில் சொற்கரிய சாதனைகள் பல புரிந்து
முழுஞானக் கனியாகக் கனிந்து அருள்பாலிக்கும்
பிரம்மரிஷி காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு
சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமது பதினான்காவது வயது முதல் தொடர்ந்து பன்னிரெண்டு வருடங்கள் தியானத்தில் மூழ்கியிருந்து சாட்சாத் சிவபெருமானையே நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற சிவபாலயோகி மஹராஜியுடன் குருதேவர் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்புற்று வாழ்கின்ற ஈஸ்வரி அவர்கள் தமது நன்றிக் கடனைச் செலுத்தும் முகமாக நுவரெலியாவில் அமைந்துள்ள காயத்திரி பீட வளவில் வெங்கடாசல பதிக்கான ஆலயம் ஒன்றை அமைத்து கொடுத்துள்ளார்கள்.

## நோய் நீங்கியது

குருநாதர், மட்டக்களப்பில் தங்கியிருந்த சமயம் திரு.கதிரவேற்பிள்ளை என்னும் பக்தர் குருநாதரைச் சரணடைந்து தமது மனைவி பல்வேறுபட்ட நோய்களுக்கும் இலக்காகி படுத்த படுக்கையில் கிடப்பதாக கூறி கண்ணீர் வடித்தார்கள். கருணா மூர்த் தியான குருதேவர் "பயப்படத் தேவையில்லை எல்லாம் நன்றாக நடக்கும் போய் வாருங்கள். ஆசீர்வாதம் அப்பா" எனக் கூறி அவர்களுக்கு விடை கொடுத்தார்கள்.

ஓரிரு தினங்களின் பின் படுக்கையில் கிடந்த திருமதி கதிர வேற்பிள்ளையின் கனவில் எமது குருநாதர் தோன்றி ஒரு மலரின் பெயரைக் கூறி அம்மலரை எடுத்து வந்தால், உமது நோய் நீங்கும் எனக் கூறி மறைந்தார்கள்.

இக்கனவை அவர் தம் கணவரிடம் கூறினார். அந்த மலர் எங்குள்ளது என எவருக்கும் தெரியவில்லை. இந்நிலையில் எங்கிருந்தோ ஒருவர் அவ்வீட்டுக்கு உடல் நலம் விசாரிக்க வந்தார். அவரிடமும் இது பற்றிக் கூறினார்கள். அவர் அம்மலர் கொக கட்டிச்சோலையில் இருப்பதாகவும் தாம் அதனை எடுத்து வருவதாகவும் கூறிச் சென்றார்கள். மறுநாள் அவர் மலருடன் வந்து சேர்ந்தார். அதனை படுக் கையில் கிடந்த திருமதி கதிரவேற்பிள்ளை அவர்களின் நெஞ்சினில் வைத்தார். என்ன ஆச்சரியம்! மறுநாளே படுக்கையில் கிடந்த அம்மாது எழுந்து நடக்கத் தொடங்கி விட்டார். அவரைப் பீடித்திருந்த அனைத்து நோய்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன.


## வெங்கடாசலபதி மகாவிஷ்ணு ஆனார்

குருநாதரின் பக்தர் ஒருவர் தமிழகத்திலுள்ள சிற்பாச்சாரியார் ஒருவரிடம் மூன்றடி உயரமான வெங்கடாசலபதி உருவச் சிலையொன்றை செதுக்கித் தருமாறு வேண்டியிருந்தார். அச்சிற் பாச்சாரியார் சிலையைச் செதுக்க முனைந்த போது அவர் எண்ணத்தில் மகாவிஷ்ணு சிலையை செதுக்கும் படி யாரோ கூறுவது போல தோன்றியது. அவர் மகாவிஷ்ணு சிலையுடன் ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோரின் சிலையையும் செதுக்கி கொடுத்தார்.

அச்சிலைகள் இன்று மட்டக்களப்பில் உள்ள சப்தரிஷிகள் மண்டல வளாகத்தில் அமைந்திருக்கும் மகாவிஷ்ணு ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் காணவிருக்கின்றன.

இதே போன்று எத்தனையோ சம்பவங்களை எடுத்துக் கூறலாம். அவையே ஒரு பெரு நூலாக அமைந்து விடும். அவற்றை இங்கு விரித்துக் கூறாமல் ஒரு சிலவற்றை மட்டும் உதாரணத்திற்காக இங்கு தந்துள்ளோம். இதிலிருந்து அடியார்கள் எங்கள் குருநாதரின் அபூர்வ ஞானத்தையும், ஆன்மீக தபோவலிமையையும் உணர்ந்து கொள்வார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## வாழ்க குருநாதர் புகழ்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ இராமலிங்க வள்ளலார்



சைவத்திற்கும். தமிழுக்கும் அரும் பணியாற்றியவர்களுள் இராமலிங்க வள்ள லார் அவர்கள் குறிப்பிடத்தக்க பெரிய ஞானி. திருவருள் பிரகாச வள்ளலார் என அடியார்களால் போற்றப்படும் இம்மகான் சோணாட்டில் சிதம்பரத்திற்கு வடமேற்கில் உள்ள திருமருதூரிலே அவதரித்தார். இவரின் தந்தையின் பெயர் இராமையாப் பிள்ளை. இளமையிலேயே தமது தந்தையை இழந்த இவர் பொன்னேரியிற் சிறிது காலம் வாழ்ந்தார். பின்பு சென்னை ஏழு கிணறுப்பகுதியில் குடியேறி தமது வாழ்வைத் தொடர்ந்தார்.

வாலிபப்பருவம் அடைந்ததும் தமது சிறிய தமக்கையாராகிய உண்ணா முலையம்மானின் புதல்வியான தனக் கோட்டியம் மானைத் திருமணஞ் செய்து கொண்டார். இல்லறத்தில் இணைந்து இன்பத்தில் திளைத்த இவர் 1855ம் ஆண்டு சென்னையை விட்டேகி சிதம்பரத்தை சென்றடைந்து தமது தமையனார் பரசுராம பிள்ளையவர்கள் வசித்த கருங்குழி எனும் இடத்தில் சிலகாலம் வாழ்ந்தார். பிற்காலத் தில் தம்வாழ்நாளை வடலூரிலே கழித்த வள்ளலார் வடலூரை அடுத்த மேட்டுப் பாலயத்தில் மகா சமாதியடைந்தார்.

வடலூரிலே சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தையும், தருமசாலை ஒன்றையும் தாபித்து அருட்பணியாற்றி வந்தார். தம்மை நாடிவரும் பக்தர்களுக்கு, இறையின்பத்தின் அருமை பெருமைகளை எடுத்துக்கூறி ஞான வழிகாட்டி வந்தார்கள்.

தொழுவூர் வேலாயுத முதலியார், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், பொன்னேரி சுந்தரம்பிள்ளை, காரணப்பட்டு ச.மு.கந்தசாமிப்பிள்ளை முதலியோரின் ஆசிரியராகத் திகழ்ந்த வள்ளல் பெருமானின் ஆக்கங்களை அவர் மாணாக் கரான தொழுவூர் வேலாயுத முதலியார் 1867ல் நான்கு திருமுறைகளாக வகுத்து திருவருட்பா எனப் பெயரிட்டு வெளி யிட்டார். 1880ல் இத்தொகுப்பு ஐந்து திருமுறைகளைக் கொண்டதாக அதே ஆசிரியரால் வெளியிடப்பட்டது. வேலூர் பத்மநாப முதலியாரும், லோகநாத செட்டி யாரும் ஆறாம் திருமுறையென ஒரு தொகுப்பினை 1883ல் வெளியிட்டனர். பொன்னேரி சுந்தரம் பிள்ளையவர்கள் இந்த ஆறு திருமுறைகளையும் ஒரே பதிப்பாக 1892ல் வெளியிட்டார்கள்.

ஸ்ரீ இராமலிங்க வள்ளலார் மீது, வள்ளலாரின் மாணவரும், அவர்தம் சகோதரர் சபாபதிப்பிள்ளையின் மருமகனுமான பொன்னேரி சுந்தரப்பிள்ளை அவர்கள் இராமலிங்க சுவாமிகள் பிள்ளைத் தமிழ் எனும் நூலைப் பாடியுள்ளார்கள். இந்நூலில் விநாயகர் துதியுடன் செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபனை, சிறுதேர் எனும் பத்துப் பருவங்களிலும் ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப்பத்து பாடல்கள் மூலம் நூறு பாடல்கள் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது.

வள்ளலார் அவர்கள் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய சேவை அளப்பரியது. மனிதனை மனிதனாக்க அவர் எடுத்த முயற்சிகள் பல. இவை பயன்தராமற் போகும் சந்தர்ப்பங்களில் சுவாமிகள் அடிக்கடி கூறும் வாக்கியம் இங்கு நினைவு கூரத்தக்கது.

"நான் ஞானத்தைக் கொணர்ந்தேன் கடைபரப்பி வைத்தேன், எவரும் வாங்க முன்வரவில்லை. எனவே அவற்றை மீண்டும் எடுத்துச் செல்கிறேன்."

என்பதாகும் இவ்வாக்கியத்தில் வள்ளலார் மனதில் எழும் உணர்வை அதாவது - மனிதன் ஞானவழி நிற்க முன் வரத்தயங்குகிறானே என்ற ஏக்கத்தை நாம் அவதானிக்க வேண்டும். இனிமேலாவது ஞானவழி நிற்க நாம் முன்வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவும் சீடரும்



**பரமகுருநாதர் பண்டிட் கண்ணையா யோகீஸ்வரருடன்**
**காயத்திரி சித்தர் R.K. முருகேசு சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென் ஆபிரிக்காவில் உள்ள காயத்திரி தியான மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசங்கிய பேப்பர் காசாகியது

எம்குருநாதர் யோகாச்சிரமத்தில் வாழ்ந்த காலத்தில் ஒரு நாள் அவரின் குரு நாதர் சுவாமியவர்களையும் மற்றும் இரண்டு சீடர்களையும் அழைத்து மூவருக்கும் சிறிது பணம் கொடுத்து அயலூருக்குச் சென்று சுற்றிப்பார்த்து விட்டுவருமாறு பணித்தார்கள். குருவின் வார்த்தையைச் சிரமேற் கொண்ட சுவாமிகளும் நண்பர்களுடன் புறப்பட்டார்கள்.

அது முன்னேற்றம் குறைந்த ஒரு குக்கிராமம். பழைய பஸ் ஒன்றில் பயணம் செய்து அந்தக் கிராமத்தை வந்தடைந்தனர். பஸ் ஒரு கொல்லன் பட்டறைக்கருகில் உள்ள தரிப்பிடத்தில் நிற்க மூவரும் இறங்கிக் கொண்டு அடுத்த பஸ்சுக்காகக் காத்தி ருந்தனர்.

அப்போது கொல்லன் பட்டறைக்கு வந்த முதிய சாமியார் ஒருவர் அங்கிருந்த கொல்லனிடம் புசிப்பதற்கு ஏதாவது தருமாறு கேட்டார். கொல்லனும் உணவுப்பொதி ஒன்றை சுவாமிக்குக் கொடுத்து உண்ணச் செய்தான். உண்டு களைப்பாறிய சுவாமி பட்டறையில் உடைந்து கிடந்த கோடரித்துண்டு ஒன்றைக் கையிலெடுத்துக் கொண்டு கொல்லைப் புறத்துக்குச் சென்றார். மீண்டும் அவர் பட்டறைக்கு வந்தபோது அவரின் கைகளில் சில பச்சிலைகள் காணப்பட்டன. அப்பச்சிலைச் சாற்றை கோடரித் துண்டத்தில் ஊற்றினார் சாமியார் உடனே அவ்விரும்புத் துண்டு தங்கமாக மாறிவிட்டது. அதனைச் அச்சாமியார் கொல்லனிடம் கொடுத்து உணவு தந்தமைக்கு நன்றியும் கூறிவிட்டுச் சென்றார் கள்.

இந்த விந்தையான நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருந்த சுவாமிகளும் நண்பர்களும் பிறிதொரு பஸ்ஸில் ஏறி, மற்றொரு கிராமத்திற்குச் சென்றனர் அக்கிராமத்தில் அங்குள்ள விடுதி ஒன்றில் மூவரும் மதிய உணவைச் சாப் பிட்டனர். அப்போது வாட்டசாட்டமான இஸ்லா மியப் பெரியார் ஒருவர் அங்கு வந்தார். வந்தவர் மிகுந்த பசிக்களைப்புடன் காணப் பட்டார். உணவு விடுதிக் காரரிடம் தேவையான உணவைக் கேட்டு உண்டு பசியாறினார். பின்பு கடை முதலாளியிடம் சென்று தம்மிடம் தற்போது பணம் இல்லை எனவும், பசிக்க ளைப்பில் வந்து சாப்பிட்டுவிட்டதாகவும் தன்னை மன்னிக்கும் படியும் வேண்டினார்.

கடைக்காரன் துள்ளிக்குதித்தான். பணம் இல்லாமல் கடைக்குள் நுழைந்ததே தவறு என்று வாய்க்கு வந்தபடி பேசினான். சாப்பாட்டுக்குரிய பணம் அறுபது பைசாதான். அதற்குப்பதிலாக கடையின் கீழ் உள்ள பள்ளப் பகுதிக்குச் சென்று தண்ணீர் எடுத்து வரும்படிக் கூறினான். வந்தமனிதர் தம்மால் கடின வேலை செய்ய முடியாது எனவும் தயவு கூர்ந்து மன்னித்துக் கொள்ளுமாறும் இரந்து வேண்டியபோதும் கடைக்காரன் இரக்கம் காட்டவில்லை. அவர் தமது கழுத் தில் இருந்த மணிமாலையைக் கழற்றி மேசை யில்வைத்து இதனை ஏற்றுக் கொண்டு தம்மை விடுவிக்குமாறு மன்றாடினார். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த எம்குருநாதர். தமது நண்பர்களுடன் பேசி மூவரும் சேர்ந்து உண்டவரின் கணக்கைத் தீர்த்துவிட முய ன்றார்கள். அப்போது அம்மனிதர் நிலத்தில் கிடந்த கசங்கிய பேப்பர் ஒன்றை எடுத்தார். அதை முதலாளியிடம் கொடுத்தார். உடனே அக்கசங்கிய பேப்பர் நூறு ரூபாய்தாளாக மாறிவிட்டது. வந்தவர் முதலாளியிடம் உனது சாப்பாட்டுக் கணக்கை எடுத்துக் கொண்டு மிகுதியைத் தருமாறு வேண்டினார். முதலாளியும் மிகுதியைக் கொடுத்தார். மிகுதியை வாங்கிய அப்பெரியவர். தனது வாயால் அதனை ஊதிவிட்டார். மிகுதி மீண்டும் கசங்கிய பேப்பராகிவிட்டது. மூவரும் வியந்து நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் அவர்கள் ஆந்திர தேசத்தில் கோதாவரி ஜில்லாவில் உள்ள ஆதிவராபுப் பேட்டா என்னும் சிற்றூரில் 1935ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் தேதி பிறந்தார். இவரது இயற் பெயர் சத்தியராஜு, தந்தை பீமண்ணா ஒரு ஏழைத் தொழிலாளி. தாயார் பர்வதம்மா, பீமண்ணாவுக்கு இரண்டாவது மனைவி. முதல் மனைவி சுவர்ணம்மா. அவருக்கு இவர்மேல் அலாதிப்பிரியம்.

தந்தை பீமண்ணா மறைந்ததும், சத்திய ராஜு தன் பாட்டனார் கோலி சத்தியம் என்பவருடன் வசித்து வந்தான். வறுமை காரணமாக சிறுவன் சத்தியராஜு பல மணி நேரம் தறிகளில் நெய்தான். இத்தொழிலில் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமையினால், பீடிக்கடை ஒன்று நடாத்தி பணம் சம்பாதித்தான்.

1949ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் தேதி சத்தியராஜுவுக்கு 14 வயது. நண்பர்களுடன் அவன் ஒரு பனந் தோப்பில் விளையாடிக் கொண்டிருந்த போது அந்த அற்புதம் நிகழ்ந்தது.

ஒரு பனை மரத்திலிருந்து தானாகவே சில பனம் பழங்கள் சத்திய ராஜுவின் முன் விழுந்தன. சத்தியராஜு ஒரு பனம் பழத்தை எடுத்துக் கடித்ததும் திடீரென்று உடல் முழுவதும் நடுங்க ஆரம்பித்தது. பழத்தின் உள்ளிருந்து ஓங்கார நாதம் எழுந்தது. இந்த வினோத ஒலியைக் கேட்டதும் சத்தியராஜு திடுக் கிட்டான். சில வினாடிகளுக்கெல்லாம் கோடி சூரியர் ஒன்று திரண்டு வந்தாற்போன்று பேரொளிப் பிழம்பு ஒன்று தோன்றியது. பனம்பழம் அந்த ஜோதியில் கலந்து விட்டது. கணப்பொழுதில் பழம் சிவலிங்கத்தின் உருவை அடைந்தது. லிங்கம் இரண்டாகப் பிளந்து ஏழடி உயர முள்ள ஆஜானுபாகுவான ஒரு மனிதன் தோன்றினான். இந்த மனிதன் சத்திய ராஜுவைப் பத்மாசன நிலையில் உட்காரச் செய்து தன்னுடைய நடு விரலால் சத்தியராஜுவின் புருவமத்தியில் தொட்டு தலையை மெதுவாகத் தட்டிக் கொடுத்தான். சத்தியராஜு உடனே தன்னிலை இழந்தான்.

சத்தியராஜு தியான நிலையில் ஆழ்ந்து விட்டதை அறியாத நண்பர்கள் பல விதத்திலும் தொந்தரவு படுத்தினர். அவனைத் தூக்கிச் சென்று ஆற்றில் போட்டார்கள். அப்படியும் அவன் நிஷ்டை கலையவில்லை. இதனால் பயந்த நண்பர்கள் ஓடிச் சென்று அவரது உறவினரிடம் கூறினர். அவரது யோக நிலையை யாரும் உணர முடியவில்லை. காமராசு என்ற ஹரிஜன அறுபது வயதுக் கிழவர் மட்டும் சத்தியராஜு ஒரு யோகியாக மாறிவிட்டார் என்று கூறினார். அன்றிலிருந்து அவன் முன் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து தியானத்தில் ஆழ்ந்து போனான்.

உண்மையை அறியாத மக்களால் அவரது நிஷ்டை வாழ்க்கையில் பல இன்னல்கள் ஏற்பட்டன. இதனால் கிராம எல்லையில் இருந்த இடுகாட்டை அவன் சரணடைந்தான். அங்கும் இம்சைகள் குறையவில்லை. பல மணி நேரம் நிஷ்டையில் இருக்கும் உடலை விஷ ஜந்துக்கள் பதம் பார்த்தன. ஒரு முறை விஷப்பாம்பு ஒன்று தீண்டியும், தன் யோகவலிமையினால் விஷம் நீங்கப் பெற்றான். 1950ல் ஊர் மக்கள் 12 அடி அளவில் ஒரு கோயி லைக் கட்டி முடித்து, அதனுள் சத்திய ராஜுவை இருத்தி, கதவைப்பூட்டி சாவியை அவன் தாயாரிடம் கொடுத்து விட்டனர். அன்றிலிருந்து அவர் பாலயோகி ஆகிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீகாவேரி ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில்
சுவாமிகளுடன் பக்தர்கள் கூடி நிற்கின்றனர்.



ஸ்ரீகாயத்ரி வளாகத்தின் முன்புறவாயிலின் எழிலுறு தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட்டக்களப்பு காயத்திரிபீட யாகசாலையில் குருநாதரிடம்
காயத்திரி திட்சை பெறுவதற்காக ஆயத்தமாகவுள்ள பக்தர்கள்



தென்னாபிரிக்காவிலிருந்து, மட்டக்களப்பு காயத்திரி பீடத்திற்கு
தமது பக்தர்களுடன் வருகைதந்திருந்த சுவாமி சங்கரானந்தா
அவர்களுடன் எமது குருநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சிவபாலயோகி அவர்கள் தமது 12வது வயதில் தவயோகத்தில் ஈடுபட்டு 12 வருடங்கள் தொடர்ந்து யுகதபஸ் புரிந்து, சாட்சாத் சிவபெருமானையே நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றார்கள். தமது தியானத்தின் பயனாய் நர்மதா நதிக்கரையில் கண்டெடுத்த ஜோதிர் இலிங்கத்தை, சிவபெருமானின் உத்தரவின் பேரில், இலங்கையிலுள்ள நுவரெலியாவில் வாழும் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமி அவர்களிடம் கையளித்து, அங்கு அமைந்த காயத்திரி பீடத்தில் இலங்காதீஸ்வரராக தமது திருக் கரங்களாலேயே 1978ம் ஆண்டு பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1951 ஜனவரியில் காகிநாடா என்ற கிராமத்தில் தபஸ்வி ஜீ என்ற முதுபெரும் யோகி ஒருவர் (180 வயது) ஸ்ரீ சிவபாலயோகியைப் பற்றிக் கேள்விப்பட்டு அடிக்கடி அவரைத் தரிசிக்க வந்தார். வாய்ப் பேச்சின்றியே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டனர். தபஸ்வி ஜீ 1955ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ம் தேதி மகா சமாதி அடைந்தார். பாலயோகி 12 ஆண்டுகள் இடையறாது செய்த தவம் 1961 ஆகஸ்ட் மாதம் 7ம் தேதி முடிவடைந்தது.

12 ஆண்டுகள் இடைவிடாது தவம் செய்தல் யோக தபஸ் எனப்படும். யோக சாஸ்திரத்தின்படி 12 வருடங்கள் ஒரு யுகம் அல்லது பருவம் எனப்படும். ஒவ்வொரு திக்கையும் நோக்கி நின்று புரியும் தவம் முடிவடைந்தால் அது 'திக்சித்தி' எனப்படும். ஒவ்வொரு திக்கையும் நோக்கி நின்று தவம் செய்யும் போது அத்திக்குக்குரிய மந்திரத்தை உரிய முறைப்படி செபம் செய்தல் வேண்டும். 'திக்சித்தி' அடையும் ஒருவர் யுகதபசை முடித்தாரானால் அவர் ரிஷி எனப்படுவார்.

1953 ஒக்டோபர் 23ம் தேதி வரை நான்கு வருடங்கள் கிழக்கு நோக்கியும், 1955 ஆகஸ்ட் 7ம் தேதி முதல் 1956 ஜூன் 25ம் தேதி வரை மேற்கு நோக்கியும் 1956 ஜூன் 25ம் தேதி முதல் தெற்கு நோக்கியும் மீண்டும் 1961 ஆகஸ்ட் 7ம் தேதி வரை கிழக்கு நோக்கியும் தவம் செய்து 12 வருட தவத்தை பூர்த்தி செய்தார்.

1961 ஜனவரி முதல் 1961 ஆகஸ்ட் 7ம் தேதி வரை பூரண உபவாசம் இருந்தார். ஆகஸ்ட் 6ம் தேதி மாலை 7 மணிக்கு யோகி அமைதிமிக்க உயர் பேருவகை கொண்ட சமாதி நிலை அடைந்தார். இந்த நேரத்தில் தான் யோகிக்குத் தியான மூர்த்தியைப் பரிபூரணமாக உணர்ந்து கொள்ள முடிந்தது. மறுநாட்காலை சுமார் 2 மணி அளவில் சமாதியினின்று மீண்டார். இந்த நிமிட நேரத்தில் தான் பார்வதி பரமேஸ்வரர் யோகியின் உடம்பில் லயித்துக் கலந்த உணர்வு யோகிக்கு ஏற்பட்டது. அவர் அர்த்த நாரீஸ்வரராகப் பலருக்குத் தென்பட்டார். யோகியார் தவம் செய்து வந்த கோயில் குடிலின் சிகரம் பேரொளிப் பிழம்பாக விளங்கி நின்றதை அவரது பக்தர்கள் பலர் கண்டு அனுபவித்தனர்.

12 வருட தவம் முடிந்த நாள் காலை 8 மணிக்கு யோகி இனிமையான குரலில் ஓங்காரத்தைப் பாடித் தன் மௌனத்தைக் கலைத்தார். அவருடைய தரிசனத்திற்காக கூடியிருந்த பெரும் கூட்டத்தினருக்கு குடில் கோயிலின் கதவுகள் திறந்து விடப்பட்டன. உடல் மெலிந்திருந்தாலும் முகவிலாசம் பள பளப்புடையதாக இருந்தது. பக்கத்துக் கிராமங்களிலிருந்தும், தொலை தூரத்தி லிருந்தும் மூன்று லட்சத்துக்கும் அதிக மான மக்கள் யோகியைத் தரிசிக்கக் கூடியிருந்தனர்.

பிற்பகல் 3 மணிக்கு யோகி சில வார்த்தைகள் மக்களுக்குக் கூறினார். "சூரியனையே வென்று விடுவோம் என்று சொல்வது முட்டாள் தனம். இது உலகத் திற்கு நன்மை பயக்காது. ஒருவர் சமாதி நிலையில் சூரியனையே அடைந்து உயிரோடு திரும்ப முடியும் என்பது சிரம சாத்திய மில்லை, என்பது எனது சொந்த அனுபவம். இதைத் தெரிய ஜனங்கள் தியானம் செய்து தங்களையே புரிந்து கொள்ள வேண்டும். இதுவே உலகிற்கு அமைதியைக் கொண்டுவரும்."

யோகியின் இச் செய்தியின் உட் பொருளைப் புரிந்து கொண்டால் சேமமே.

எமது குருநாதர் (காயத்திரி சித்தர்) எழுதிய 'ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ்' எனும் நூலிலிருந்து எடுக்கப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சிரமத்தின் தெய்வீகக் கொள்கையும் ஆன்மீகக் கொள்கையும்.

1. இந்தப் பிரபஞ்சத்தினைப் படைத்தவர் இறைவன். அவர் எங்கும் நிறைந்தவர். பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளி லும் இறைவன் இருக்கின்றார் என்பதனை எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள் கின்றன. மனிதன் தவிர்ந்த ஏனைய உயிர்களில் எல்லாம் இறைவனுடைய இயல்புகள் இடம்பெறவில்லை. இறைவ னின் மகிமைகள் யாவும் மனிதனிட த்திலேயே முழுமையாக வெளிப்பட் டுள்ளன. தனக்குள் பொதிந்திருக்கும் தெய்வீக இயல்புகளை மனிதன் தூண்டி னால் ஒழிய அவனால் இறைவ னுடன் வேறுவழிகளில் தொடர்பு கொள்ள முடியாது.

2. கடவுள் மனிதனல்ல. சில தலைகள், கைகள், கால்களைக் கொண்ட பொருளு மல்ல. சுவர்க்கத்தில் அல்லது உயர் பிரதேசங்களில் வசிக்கும் பொருளுமல்ல. ஆனால் அது ஒரு தூய உணர்வாகும். அதுவே பொருள்கள் யாவற்றிலும் பரந்து காணப்படுகிறது. நிலையான சக்தி மற்றும் பொருள்கள் என்னும் ஊடகத்தின் வாயிலாக பொருள்களை ஆக்குகின்றது: வாழச் செய்கின்றது.

3. இறைவனின் சக்தியின் மூலம் மனிதன் நல்லவற்றையும் தீயவற்றையும் செய்தா லும் எந்தவொரு செயலுக்கும் இறைவன் காரணமாக இருப்பதில்லை. ஆனால் மனிதன் தான் விரும்புவது போல சக்தி யைப் பயன்படுத்தி இதன் பலாபல ன்களை அனுபவிக்கின்றான்.

4. இறைவன், ஆன்மா, சக்தி-சடம் ஆகியன எல்லாம் முடிவில்லாதவை. செய்யப்படும் விடயம் ஏனைய ஒவ்வொரு பொருளில் இருந்தாலும் அவை இன்னொன்றிலிருந்து வருவதில்லை.

5. கோயில்களில் எழுந்தருளி இருக்கும் உருவச்சிலைகள் எல்லாவற்றையும் கடவுள் என்றே மக்கள் கருதுகின்றனர். அது அவர்களின் அறியாமையாகும். கோயில்க ளும் சிலைகளும் உண்மையின் குறியீடு களே. அவை உண்மையான கடவுளையும் அவரது பண்புகளையும் எடுத்துக்காட்டு கின்றன. புராணங்களில் எடுத்துக் காட்டப்பட்ட கடவுள் பற்றிய கதைகள் உண்மையில் நிகழ்ந்தவையல்ல. அவை இறைவனுக்கும் மனிதனில் காணப்படும் தீய சக்திக ளுக்கும் இடையேயான போராட்டங் களையும் ஏனைய செயல்களையும் எடுத்துக் காட்டுகின்றன. மேலும் இந்த நாட்களில் கோயில்கள் எல்லாம் வியாபார நிலையங்களாக மாறிவிட்டன. உண்மை யான பக்தன் ஒருவன் இந்தக் கோயில்க ளுக்குச் செல்வதன் மூலமும் வணங்கு வதன் மூலமும் எந்த நன்மையையும் பெற்று விடமாட்டான். அத்தகைய வணக்கத்தலங் களிலே ஆன்மீகக் கதிர்வீச்சு நிலவுவ தில்லை. இவ்வாறான கோயில்களுக்குச் செல்வதற்குப் பதிலாக வீட்டிலே இருந்து கொண்டு தெய்வங்களை வணங்குதல் மேலானது. கடவுளைத்தேடி யாத்திரை என்ற பெயரில் இடத்துக்கிடம் அலைந்து கொண்டிருப்பது அறியாமையே அன்றி வேறில்லை. கடவுள் எல்லா உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடத்திலும் இருக்கின்றார். அவர் எம்மில் இருக்கின்றார் என்றும் விளக்கியுள்ளார். ஒருவர் கடவுளின் பிரசன்னத்தை தன்னில் உணராவிட்டால் அவர் கடவுளை இப்பிர பஞ்சத்தில் வேறெங்கும் காணமாட்டார். "அமர்ந்திரு, உள்ளே செல், கடவுளைக் காண்" என்பது எமது ஆச்சிரமத்தின் போதனையாகும்.

6. பூசைகள் மூலமும் உபாசனைகள் மூலமும் விருப்பமானவைகளைப் பெறும் பொருட்டு ஒருபக்தன் ஞானகுருவிட மிருந்து முதலில் உபாசனா தீட்சையை பெற்றுக் கொள்ள வேண்டும். தீட்சை என்பது, ஒரு பக்தனுக்கு நிறமான ஆடை களையும் உடலைச்சுற்றி ஒருவகை நூலை அணிவித்தலும் அல்லது பக்தனு டைய கைகளையும் கால்களையும் தீயினால் சுடுதல் என்றும் பொருளாகாது. அவ்வாறான நம்பிக்கைகளும் சம் பிரதாயங் களும் சுயநலம் கொண்ட சமயத் தலைவர்கள் மூலமே உருவான வை. பக்தனுள் பிராண காந்தத்தை விதைப்பதுவே தீட்சை ஆகும். ஆகவே அவர் உண்மையாகவும் ஒழுங்காகவும் செய்யும் பூசைகள், உபாசனைகள் மூலம் அவற்றினை உள்ளெடுத்துக் கொண்டு அதனை மெதுவாக உயர் அதிர்வு கொண்ட அலைகளாக வளர்த்துக் கொள்ளலாம். அத்தகைய உயர் அதிர் வலைகள் உருப்பெறும் பொழுது அவருடைய தேவதையின் கதிர்வீச்சும் கிடைத்து விடும். அதனால் அவர் பெற்றுக் கொண்ட நன்மைகள் எல்லாம் தெய்வத்திடமிருந்து பெற்றுக் கொண்ட நன்மைகளாகிவிடும்.


7. ஒருவர் பல ஆண்டுகளாக பூசைக ளையும் உபாசனைகளையும் ஒழுங்காகச் செய்து வந்தாலும், அவர் தியான நிலையில் இருந்து தெய்வத்தன்மையை உணராவிட்டால் தனக்குள் தெய்வீக சக்தி இடம்பெற்றி ருப்பதை ஒரு பொழுதும் உணரமாட்டார். ஆனால் இந்த அடிப் படையிலேயே ஆச்சிரமப் பூசைகளிலும் உபாசனைகளிலும் உள்ள தியானம் சித்திபெறும் வகையில் சேர்க்கப் பட்டுள்ளது.


8. இன்று, கடவுளின் அருளைப் பெறுவதற்காக கோயில்களிலே பலவகை யான பொருட்கள் நிவேதனம் செய்யப் படுகின்றன. இந்தப் பிரபஞ்சத்தையும் பிரபஞ்சத்தில் உள்ளவற்றையும் ஆக்கியவர் கடவுள் ஆவார். அவர் பக்தனிடமிருந்து எதனையும் எதிர்பார்ப்ப தில்லை. நிவேதனங்களைப் படைப்பத னால் இறைவன் பக்தன் மீது ஆசீர்வாதங் களையும் இரக்கத்தையும் சொரிவதில்லை. ஆயினும் பக்தனின் அன்பினை எதிர்பார்ப்பார். உருக்கொள்ளல், உரத்து மந்திரம் ஓதுதல் பாடுதல், மலைகளையும் கோயில் வளவினையும் சுற்றி பிரதட்சணம் செய்தல், பாராயணஞ் செய்தல், பலவகையான நேர்த்திக் கடன்களையும் நிறைவுசெய்தல், தீக்குளித்தல், செலவுமிகுந்த திருவிழாக்களை நடத்துதல் என்பன எல்லாம் கடவுளின் அருளைப் பெற்றுத் தருவதில்லை. முழுமையான உணர்வுடன் உண்மையா கவும் பக்திமயமாகவும் வணங்கினால் விரும்பிய விளைவினை அடையலாம். நோய்கள் அகலும், வறுமை நீங்கும், எதிரிகள் கட்டுக்கு அடங்குவர். கடினமான பிரச்சினைகள் தீரும். எமது பிரார்த்த னைகளில் எதிர்மறை விளைவுகளைத் தரும் சொற்பேச்சுக ளுக்கு இடமில்லை. பக்தர்கள் தற்பொழுது தாம் வணங்கும் தெய்வங் களுக்கு தமது பிரச்சினைக ளையும், மனக்குறைகளையும் கண்ணீர் மல்க அழுது கொண்டு கூறுவது வழக்க மாகிவிட்டது. இது தவறு. நவீன பிரார்த்த னைகளில் பல தவறான ஆலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திர மண்டலம், கிரக மண்டலம், ராசி மண்டலம், சப்தரிசிகள் மண்டலம், சித்தர் மண்டலம், ஆகியவற்றில் இருந்து சப்தரிகளும், கிரகங்களும் சித்தர்களும் தேவர்களும், 30.10.04ல் நடந்து ஏறிய மட்டக்களப்பு புது முகத்துவாரத்தில் அமைந்துள்ள சப்பதரிசி கும்பாவிசேகத்தில் திருப்தி அடைந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித நர்மதா நதியில் கண்டெடுத்து பிரதிஷ்டை
செய்யப்பட்டுள்ள ஸ்ரீ இலங்காதீஸ்வரர் - சிவலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனைகளும் அறியாமையுடன் கூடிய விளக்கங்களும் உள்ளன. ஒரு பக்தன் தனது பிரச்சினைகளைத் தெய்வத்திடம் கூறி அதனின்றும் நீங்கவும், இன்பகரமான வாழ்க்கைக்கு வழிகோலவும், மற்றவர் கள் எல்லாரும் மகிழ்ச்சியாக இருக்கும் பொழுது தன்னை மட்டும் கடவுள் பல பிரச்சினைகளுடன் படைத்திருக்கின்றார் எனக் குறைகூறுதல் கூடாது.

எங்களுடைய ஆச்சிரமம் பக்தனுடைய தேவைக்கு ஏற்றவாறு சுய பிரார்த்த னைகளை இயற்றிவருகிறது. அதே வேளையில் அதன் அங்கத்தவர் கள் தமது பிரச்சினைகளை வெற்றி கொள்ள வேண்டிய வழிமுறைகளையும் போதித்து வருவதுடன் ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத் கீதையில் கூறியது போல "எல்லாம் வல்லவனிடத்தில் சரணாகதி அடையுங்கள்" எனக் கூறு கின்றது. ஆகவே கடவுள் எதற்காக உள்ளாரோ பக்தனும் அதனையே செய்ய வேண்டும்.

9. பக்தியோகமாக, ஞானயோகமாக, கர்மயோகமாக இருக்கலாம். அல்லது ஏனைய சாதனைகளாக இருக்கலாம். இவை ஒருவருடைய தூய்மையான, சரியான வாழ்க்கைக்கு வழிகோல வில்லை என்றால் அவரது இலக்கினை அடையும் முயற்சிகளில் எல்லாம் வெற்றி கிடைக்காது. மனிதனின் மனம் கொடூர மானதாக, தீங்கு விளைவிப்பதாக, தீயசிந் தனையுடையதாக இருந்தால் எந்த வழியிலும் அவனுக்கு இறையருள் கிடைக்காது. ஒருவன் ஏதாவது சாதனை யைத் தொடங்கு முன்னர், அவர் தமது சிந்தனைகளை மிகக் கவனமாக கட்டுப்படுத்த வேண்டும். சிந்தனை எப் பொழுதும் தூய்மையாகவும், நன்மையா கவும் பக்திமயமாகவும் மாற்றப்படுதல் வேண்டும்.

10. ஒருவர் தமது சித்தத்தைத் தூய் மைப்படுத்தா விட்டால், அவருடைய கர்மத்தின் செல்வாக்கு ஆழமாக இருந்தால், அவர் நீண்ட காலம் தம்மை வருத்திச் செய்த சாதனைகளின் பயன் களை அடையமாட்டார்.

11. உலகியல் நடத்தையிலும் ஆன்மீக நடத்தையிலும் வேறுபாடுகள் உள்ளன. ஓர் ஆன்மீகவாதியை அவரது உறவினர் களும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஒத்துழைப்பு நல்க மாட்டார் கள். உலகியல் விடயங்களில் தமது விருப்பப்படி நடக்கவில்லை என்பதற்காக அவர் உறவினர்களாலும் நண்பர்களாலும் ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை.

12. ஆச்சிரமக் கொள்கையின்படி, எவரும் தீயவரெனக் கருதப்படுவதில்லை. ஒருவருடைய உடை, செயல் போன்ற வெளித்தோற்றத்தைக் கொண்டு எவரும் நல்லவரென்றோ தீயவர் என்றோ கருதப் படுவதில்லை. நல்ல செயல்களைச் செய்பவன் போலத் தோன்றும் ஒரு மனிதன் கெட்ட நோக்கம் கொண்டவனாக இருக்கலாம். அவ்வாறே நடத்தையில் கூடாதவன் போலத்தோன்றும் ஒருவன் அகத்தில் தூய்மையானவனாக, பக்தியு டைய்வனாகக் காணப்படலாம்.

13. யோகத்தின் உயர்ந்த விஞ்ஞான ங்களை உண்மையாகவும் ஆழமாகவும் கற்க விரும்பினால், உண்மையான குருவைத் தேடி எங்கும் அலைய வேண்டி யதில்லை. அத்தகைய தொரு விஞ்ஞா னத்தில் அவன் முதிர்ச்சி பெறுவானா னால் அவனருகிலேயே குருவைக் காணலாம்.

14. எமது ஆச்சிரமம் ஆன்மீக சாதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் புரிவதில் நாம் அணியும் உடையிலோ, சமயத்திலோ, சாதியிலோ அல்லது வர்க்கத்திலோ வேற்றுமைகளை எதிர்பார்க்கவில்லை. எமது ஆச்சிரம மாணவர்கள் ஒருவரை அவரது உடையை அல்லது ஏனைய அணிகலன்கள் ஆகிய வற்றைக் கொண்டு சாது என்றோ, சன்னி யாசி என்றோ, யோகி அல்லது ஞானி என்றோ ஏற்பதில்லை.

15. இன்று, பல இடங்களில் கபட யோகிகளே யோகிகள் என்ற பெயரில் சாதனை செய்து வருகின்றார்கள். எமது ஆச்சிரமமானது "யோகத்தின் உயர் பலாபலன்களைப் பெறுவதற்காக, உடலை வருத்தவோ துன்புறுத்தவோ வேண்டாம்" என்கிறது. ராஜயோகத்தின் சரியான உபதேசங்கள் வழியே கற்பிக் கிறது. அதன் வழியே ஒருவர் உயர் சித்திகளையும் மேலான யோக நிலையை யும் அடைந்து கொள்ளலாம்.

16. பலர் குண்டலினியை எழுப்புவதன் விளைவாக தமது மூளையை வதைக் கின்றனர். யோகிகள் போல நடிப்பவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தாம் ஏனையவர்களில் உறங்கும் குண்ட லினியை எழுப்பலாம் என்கின்றனர். எமது ஆச்சிரமம் இதனுடன் உடன்படவில்லை. இது ஒருவகையான ஏமாற்று ஆகும். ஏனெனில் ஒருவருடைய குண்டலினியை இன்னொருவர் விழிப்படையச் செய்ய முடியாது. குண்டலினியை விழிப்படையச் செய்ய முற்படுபவர் குறிப்பிட்ட சில சாதனைகளை இரகசியமாகவும் பக்தி பூர்வமாகவும் செய்தல் வேண்டும். ஆயத்தமற்ற, முதிர்ச்சியற்ற ஒருவர் இதனைச் செய்யமுடியாது. அவ்வாறு செய்தல் பாதுகாப்பற்றதுமாகும். மேலும் நன்மைக்குப் பதிலாக தீமையையே விளைவிக்கும். எல்லாவற்றிலும் மேலாக இராஜ யோகப்படி சரியான முறையைப் பின்பற்றி, ஒரு உண்மையான யோகியிடம் அதனைக் கற்கும் பொழுது குண்டலினி தானாகவே விழிப்படைந்து அவருடைய யோகவழிக்கு உதவும் எனலாம்.

17. மனிதர்கள் சிலர் தியானம் பற்றியும் தவறான கருத்துகளைக் கொண்டிருக்கிறார்கள். சில மந்திரங் களைத் திரும்பத் திரும்ப மனதுக் குள் சொல்வதையே தியானம் எனக் கருதுகின்றனர். அவ்வாறு செய்தல் தியானமாக முடியாது. ஏனெனில் மந்திரங்களைத் திரும்பத் திரும்பக் கூறுதல் மனதில் நிகழ்கிறது. உண் மையான தியானம் என்பது அது மனதுக்கு அப்பால் சென்று உணர் வில் செயற்படுகிறது.

18. தியானம் பற்றி இன்னொரு தவறான விளக்கமும் உண்டு. அது இராஜ யோக த்தின் உயர்நிலைக்கான ஒருவரின் தகுதி பற்றியதாகும். எந்தவிதமான ஆயத்த முமின்றி எவரும் நேரடியாகத் தியானம் செய்ய ஆரம்பிக்கலாம் என அவர்கள் கருதுகின்றனர். எடுத்துக் காட்டாக இவர்கள் தீமைதரும் பழக்க வழக்கங்களை மாற்றுதல் விரும்பத்தகாத நடத்தைகளை அல்லது கூடாத செயல்களை மாற்றுதலே தியானம் எனக் கருதுகின்றனர். மற்றும் தியானம் செய்வதற்கு வேண்டிய ஆரம்ப நடவடிக் கைகளைக் கூடச் செய்வதில்லை.

19. மனிதனே தனது இன்பதுன்பங்கள் முழுவதற்கும் காரணமாகின்றான். இதற்குக் கடவுளோ அல்லது ஏனைய புறச் சக்திகளோ காரணமாவதில்லை. மனிதனே தனது விதியை உருவாக்கு கின்றான். தனது கர்மங்களை தான் எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டகளப்பு காயத்திரி பீட தியானமண்டபத்தில் பக்தர்கள் தியானத்தில் இருப்பதை மேலுள்ள படத்திலும். ஜேர்மன் நாட்டிலிருந்து வருகை தந்த பக்தர்கள் கொழும்பிலுள்ள சுவாமிஜியின் குருகுலத்தில் தியானத்தில் மூழ்கியிருப்பதை கீழுள்ள படத்திலும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு, புதுமுகத்துவாரத்தில் அமைந்துள்ள காயத்திரிபீட
யாக சாலையில் காயத்திரி பக்தர்கள் தியானத்தில் இருக்கும் காடசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னால் மேதகு ஜனாதிபதி அமரர் ஆர்.பிரேமதாசா அவர்கள் எமது குருநாதரிடம் அருள் ஆசி பெறுகின்றார்.



முன்னால் இலங்கைப் பிரதமரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மேன்மைமிகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எமது குருநாதரிடம் அருளாசி பெறுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1994 லில் டெல்கியில் நடைபெற்ற ஆன்மீக மேலாளர்களின் பாராளுமன்றத்தில் ஏகமனதாக தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட காயத்திரி சித்தர் பன்நாட்டு ஆன்மீக ஞானிகளுடன் காணப்படுகிறார்



எமது குருநாதரிடம் காயத்திரி தீட்சை பெற்று, பல்வேறு சாதனைகள் புரிந்து ஆன்மீகச் சித்திபெற்ற ஸ்ரீலூயிஸ் கொன்லெக் அவர்கள் அமெரிக்க காயத்திரி பக்தர்களுடன் காணப்படுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீலஸ்ரீ காகபுசுண்டர் பிரம்மரிஷி தலையாட்டிச் சித்தர் அவர்கள் திருவாய்மலர்ந்த 2010ம் ஆண்டுவரை நடக்கவிருக்கும் நிகழ்வுகளைப் பற்றிய காலஞானத்தை அன்னைச்சித்தர் எஸ்.இராஜகுமார் சுவாமிகள் "மகாசித்தர்களின்குருகடாக்ஷம்" திங்களிதழில் வெளியிட்டுள்ளார்கள். அதனை அன்பர்களுக்காக இங்கே தருகிறோம்.**



**அதிசயம் ஆச்சரியம்!**
**ஆனால் உண்மை!**
**2010க்குள் மாபெரும் பிரளயம்**
**ஸ்ரீலஸ்ரீ காக புசுண்டர் தலையாட்டி சித்தர் கூறிய கால ஞானம்**
**2010க்குள் நடக்கப் போகும் உலகமாற்றம்!**



**ஆன்மீக மெய்யன்பர்களே!**

**இந்த விசயங்கள் மக்கள் பயமுறுத்த வேண்டும். என்பதற்காக வெளியிடவில்லை. தீ என்றால் சுட்டு விடாது. நெருப்பாகப்பட்டது தொட்டதும் சுடும். சுட்டு புண்ணாகக் கூடிய ஒன்று என்பதை உணர்ந்தவர்கள், அனுபவ சாலிகள் கூறுவதை நாம் புரிந்து கொள்கிறோம். அப்படி தான் இங்கேயும் தன் அனுபவத்தை தன் குருநாதர் ஸ்ரீலஸ்ரீ காக புசுண்டர் தலையாட்டி சித்தரிடம் எட்டு வருடங்கள் காணாத காட்சி எல்லாம் கண்டு, கேட்டு, உய்த்துணர்ந்து, அனுபவித்ததை ஸ்ரீலஸ்ரீ காக புசுண்டர் அடிமை மூலிகை முனிவர் எஸ். இராஜகுமார் சுவாமிகள் நம் இதழுக்காக அளித்த சிறப்புப் பேட்டி:**

தெய்வ திருவருட் சகாயமான மெய்யன்பர்களே! அடியேன் 1981ம் வருடம் முதன் முதலில் என்னுடைய சற்குருவைப் பார்த்தேன். கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் மற்றும் போலித்தனமான செய்கைகளுக்கும் என் உள்ளம் என்றுமே வசப்பட்டது அல்ல!

இறைவன் என்பவன் ஒரு மாபெரும் சக்தி, அந்த சக்தியை ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற்கிணங்க! பணத்தினாலும், மதிப்பினாலும் கடவுளை அடைய முடியாது என்பதை என்னுடைய கடினமான அனுபவங்களைக் கொண்டு உணர்ந்தேன்.

நான் முதன் முதலில் சித்தர் சுவாமியை கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மகன் மறைந்த திரு.கலைவாணன் கண்ணதாசன் அவர்களுடன் என் முதல் படத்தை இயக்கம் (டைரக்ட்) செய்வதற்கு ஆசீர்வாதம் பெறுவதற்காக சென்றேன். அப்போது நான் சினிமாவில் பிஸியாக இருந்த நேரம், (மீண்டும் கோகிலா, கடல்மீன்கள், கோழிகூவுது, கரையெல்லாம் செண்பகப்பூ, ருசி கண்ட பூனை) ஆகிய படங்களுக்கு அசோசியேட் டைரக்டராக பணிபுரிந்தேன். என் பெயர் எஸ்.இராஜகுமார், என்னை முதன் முதலில் கண்டவுடனேயே சித்தர், ஆ! ராஜா வந்தாச்சு! என்று கூறினார். எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. நான், ஏன் சுவாமி அப்படி கூறுகிறீர்கள் என்று கேட்டேன்?

ராஜா! நீ என்னுடன் காலகாலமாய் இருந்தவன், அதனால் தான் இப்பிறவியில் இங்கு வந்துள்ளாய், என்றார் சித்தர்.

''ஸ்ரீலஸ்ரீ காக புசுண்டர் தலையாட்டி சித்தர் கூறிய கால ஞானம்''

சுவாமி, ஒவ்வொரு 2010 வருடங்களுக்குள் ஒரு பூலோக பிரளயகாலம் என்று கூறுகிறார்களே, உலக மக்களின் அறியாமையால் மாயையின் பிடியிலிருந்து விடுபடவும் 2003லிருந்து 2010க்குள் உலகத்தில் ஏற்படும் இயற்கைச் சீற்றங்களின் அழிவிலிருந்து மனிதன் பிழைத்துக் கொள்ள தர்ம வழிமுறைகளை குருநாதர் சித்தர் பெருமானிடம் கேட்டேன்.

சித்தர் பெருமான் கூறிய அருள்வாக்கு:

ஒவ்வொரு 2010 வருடங்களுக்கு ஒரு பூலோக பிரளயகாலம், ஒவ்வொரு பிரளயகாலத்திற்கும், ஒரு சிவன் புதிதாய் அவதாரம் செய்வார். அது போலவே பிரம்மா, விஷ்ணுவும் ஆகும். இதேபோல் ஒவ்வொரு ஏழரை இலட்சம் கோடி காலமாய், யுகயுகமாய் பிரளயத்தைக் கண்டவரும், பூலோக இந்திரன் என்று தேவர்களால் புகழ்ந்தும், மந்திரசக்தி, இந்திரசக்தி, எந்திரசக்தி, தந்திர சக்திகளுக்கு அப்பாற்பட்ட வருமான ஸ்ரீலஸ்ரீ காக புசுண்ட மகரிஷியாய், ஸ்ரீ அகத்தியராகவும், ஸ்ரீபோகர், ஸ்ரீகொங்கணர் என்றும், துர்க்கை சக்தி, அஷ்டலெட்சுமி சக்தி என பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரங்களைப் பெற்று, ரஷிகளுக் கென்றே உள்ள பிரம்மரிஷி மலையின் நாயகராய் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ தலையாட்டி சித்தர் பெருமான் - சித்தர்களாய், ரிஷி, யோகி, ஞானிகளாய் தர்ம சிந்தனையுடைய மக்களின் மக்களாகிய 1 கோடி ஜீவன் வித்துகளை பூமி அழிவிலிருந்து காக்கவே கூறியது.

முன்பு ஒரு காலத்தில் சிவனுக்கு சந்தேகம் ஏற்பட்டது! நாம் எப்படி சிவபெருமான் என்ற பதவிக்கு வந்தோம்! இதற்கு யார் காரணம்? அப்பொழுது அவர் ஆழ்ந்து சிந்தித்திருந்த வேளையில் ஒரு முடிவிற்கு வந்தவராய், படைக்கும் கடவுள் பிரம்மாவை கேட்டால் தெரிந்துவிடும் என்று நினைக்கும் போது பிரம்மா அங்கே வந்து விட்டார். பிரம்மா, என்னை சிவபதவியில் வைத்தது யார்? நான் எப்படி சிவன் ஆனேன். என்றார்.

உடனே பிரம்மா அதே கேள்வியை தான் நான் உங்களிடம் கேட்க நினைத்தேன்? நான் எப்படி பிரம்மா ஆனேன்?

நம்இருவருக்கும் தெரியவில்லை யென்றால் காக்கும் கடவுள் விஷ்ணுவை கேட்போம் என்று கூற, விஷ்ணுவும் அங்கு வந்தார். விஷ்ணு உடனே, நானும் உங்களை இதே கேள்வியைத் தான் கேட்க வேண்டுமென்று இருந்தேன். சரி நம் மூவருக்கும் தெரியவில்லை யென்றால் நமக்கு முன்னால் இருக்கும் ரிஷி, சித்தர்களையாவது கேட்போம், என்று சித்தர்கள், ரிஷிகள், முனிர்கள் சபைக்கு வந்து கேட்க, ரிஷிகள், முனிவர்கள், சித்தர்களும் விழிக்க, உடனே மார்கண்டேய மகரிஷி, வந்து! இந்த இரகசியங்களைத் தெரிந்தவர் பூலோகத்தில் ஒரு கிழ முனி, பழமுனி இருக்கிறார் என்று செல்லிட அவரை அழைக்க வசிட்டர் மட்டுமே செல்லமுடியும், ஏன் என்றால்? புசுண்டரின் சாய்கையே வசிட்டர்தான் என்றதும் சிவன் சிந்திக்க,

வசிட்டர் சபைக்கு வந்து, சிவனின் நிலை அறிந்து பூலோகம் சென்றார். ஆலிலை மேல் பள்ளி கொண்டு காகம் வடிவாய் இருக்கும் புசுண்டரை நோக்கி தந்தையே! தந்தையே என்று கூறி அழைக்க, பேய் பிடித்தவர் வார்த்தை சொல்ல வந்தீரே வாரும்! வாரும்! வசிட்டரே, இதே கேள்வியை எட்டுமுறை பிறந்து வந்து கேட்கிறாய், என்னை இந்தக் கேள்வியை கேட்க சொன்ன சிவன், எத்தனை சிவனுக்கு பிறகு வந்த சிவன் என்று அவரிடமே கேட்டு வாரும்! என்றதும், வசிட்டர் நடுநடுங்கி சிவனிடம் வந்து சொல்ல! எல்லோரும் ஆச்சரியத்தில் காக புசுண்டரிடம் வர நினைத்தனர், அதற்குள் அவர்கள் எதிரில் புசுண்டரே கூறுகிறார்.

''கேளப்பா ஈசனொரு காலந்தன்னிற்
கிருபையுடன் சபைகூடியிருக்கும் போது
வாளப்பா மாலயர்தம் முகத்தை நோக்கி
வந்தவா றெவ்வகையோ சென்றதே
கேளப்பா சேயகால யந்தா னெங்கே
குருநமசி வாயமெங்கே நீங்க ளெங்கே
தமக்கு வந்து சொல்லுவதே தவமாய்ப் போச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுகிறேன் கவனத்தின்முன்
னுரைக்கப் போனேன்
வாதாட்ட மெனதாச்சே இனியென் சொல்வேன்
சேற்றிலே நாட்டியதோர் கம்பம் போலத்
திரும்பினது போலாச்சு யுகங்கள் தோறும்
ஆற்றுகிற னந்தமது ஆகும் போது
ஆரகரா அந்நேரம் நடக்கை கேளே!

கேளப்பா நடந்தகதை சிவமே யுண்மை
கெடியாகச் சக்கரங்கள் திருப்பும் போது
பாழப்பா தசநாதம் மௌனம் பாயும்
பரமான மௌனமது பரத்திற் சாடும்
ஏறப்பா அடுக்களும் இடிந்து வீழும்
இருந்தசதா சிவமோடி மணியில் மீளும்
கேளப்பா இதுகேளா யெவருஞ் சொல்வார்
கோ கோ கோ அண்டமெல்லாங்
கவிழ்ந்து போமே
கவிழ்ந்துபோ மப்போது அடியெ னங்கே
கருத்து வைத்தத் தியானமொருதியான முண்டு
தவழ்ந்து போங் காலம்போ நிறுத்துவேன்யான்.

இதை உலகத்திற்கு ஒவ்வொரு 2010க்குள் நாட்டில் என்ன நடக்கும் என்பதை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீகாக புசுண்டர் காவியம் 33ல் கூறியுள்ளார். இதனை அறிந்து மக்கள் அலட்சியப்படுத்தாமல் பயபக்தியுடன் மிகுந்த எச்சரிக்கையுடனும் தரும சக்தியின் துணையை நாடி சாதுக்களின் ஆதரவை பெற்று வாழ்வதே நலம் கோடி பயக்கும்!

சுவாமி 2010ல் உலகம் முழுவதும் அழிந்து விடும் என்று பலர் பலவிதமான கருத்துக்களை அவ்வப்போது கூறிவரு கிறார்கள். இதைப் பற்றி நீங்கள் விளக்க வேண்டும், என்றேன்.


ராஜா! 2010க்குள்ளாகவே, 1984ம் ஆண்டே பூமி லாக்கை கழற்றி விட்டார்கள், அதனால் பூமி தன் நிலையை விட்டு நகர்ந்து வருவதால், எப்போது எது நடக்கும் என்று கூற முடியாது.இது என்னைத் தவிர வேறு யாராலும் கூறவே முடியாது. ''காயா வெய்ய காஞ்சி கனத்த வெள்ளம் வந்து பேயா மழை பொழியும்'' என்று கூறியுள்ளார்கள்.

2010க்குள்ளாகவே உலகெங்கும் மாபெரும் மாற்றங்கள் (அதாவது இயற்கைச் சீற்றங்கள், பேரழிவுகள், இன, மத பூசல்கள், போர்கள் மூழும் அபாயம்) ஏற்படும்.

மனிதரில் ஐந்து வகையான மனிதர்கள் உண்டு. மரமுண்டு, பறவையுண்டு, மிருகமுண்டு, மனிதரில் மனிதருண்டு தேவரும் மனிதராய் பிறப்பதுண்டு. இயற்கையின் சீற்றத்தில் நான்கில் மூன்று மடங்கு ஜனங்கள் குறைந்து விடும்.

காட்டிலிருந்து வந்த பறவைக் கூட்டமும், மிருக கூட்டமும், காட்டுக்கே போய்விடும். கடலில் இருந்து வந்த உலக முழுவதும் உள்ள மனித ஜீவராசிகளை மீண்டும் அவரவர் இருந்த ரூபங்களாய்கடல் சொந்தமாக்கிக் கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நுவரெலியா காயத்திரிபீடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குகிறான் என்று அவன் அறிவானானால் அவன் அதனை மாற்றலாம். தனது விதியை மாற்றலாம். எமது ஆச்சிரமம் விதியை வெல்லக்கூடிய வழிமுறைகளை விஞ்ஞான பூர்வமாகப் போதிக்கிறது.

20. பக்தர்கள் சிலர் தமது இஷ்ட தேவதையைக் கண்முன்னால் கண்ட தாகக் கூறுகின்றனர். சில விடயங்களில் அது உண்மையாக இருக்கலாம் எனக் கூறினாலும் உண்மை என்னவெனில், அத்தகைய தெய்வங்கள் சுவர்க்கத்தில் இருந்து பூமிக்கு வந்து தமது பக்தர்களுக்குத் தரிசனம் கொடுப்பதில்லை. இது ஒருவகை உள்ளகச் சிருஷ்டியின் வெளிப்புறத் தோற்றமே. இது ஒரு மாயைத் தோற்றமுமாகும். அல்லது மனப் பிரமையாகும். தூக்கத்தில் நடப்பது போன்றதாகும். உயர் உளச் சிருஷ்டியில் பக்தர்கள் தமது இஷ்ட தெய்வங்களைத் தொட்டு உணரலாம் ஆனால் அத்தகைய செயல்கள் எல்லாம் இறைவனை உணர்தல் என்ற பொருளாகாது.

21. தீராத நோய்களிலிருந்து விடுபடுதல், வறுமையிலிருந்தும் நீங்குதல் என்பவற்றிற்கு ஏனையவர்களே காரணம் என்று ஒருவர் நம்புகின்றார். அவைகூட ஒருவருடைய உள்மனத்தின் ஆக்கமே என்பதை அறிவதில்லை. பிரார்த் தனைகளும் உபாசனைகளும் ஏற்கனவே சித்தத்தில் இடம்பெறும் விடயங்களைப் புறவயமாக அல்லது உள்மனத்தில் உருவாக்கும் வழிமுறை மட்டுமே.

22. தீக்குளித்தல், கூரான கருவிகளால் நோவை உணராமல் உடலில் குத்துதல் அல்லது இரத்தம் சிந்துதல் மற்றும் இவை போன்ற அற்புதங்களைச் செய்தல் என்பனவும் ஒருவகையான மனச் செயலாகும். இங்கு உடலை மனம் கட்டுப் படுத்துகிறது. இத்தகைய அற்புதச் செயலுக்கு செயற்கைத் தூக்கநிலை (ஹிப்னாட்டிஸம்) ஓர் உதாரணமாகும்.

23.யோகி ஒருவர் தன்னை அணுகு பவர்களின் நோய்களைக்குணப்ப டுத்துதல், துன்ப துயரங்களைத் தமது அற்புதங்கள் மூலம் அல்லது சித்துக் களின் சக்தி மூலம் நீக்கினால் அவர் ஓர் உண்மையான யோகியல்லர். ஏனெனில் அவருடைய முற்பிறவியில் ஒருவர் செய்த பாவங்களை நீக்குவதற்கு நோய்க ளும் துன்பங்களும் ஒரு வழிமுறை மாத்திரமே. அவை சித்தத்தில் பதிந்துவிடுகின்றன. இவ் வாறான நிகழ்வினை ஒரு சாது தடுத்தால் இந்தப் பிறவியில் மனிதனின் பாவங்கள் நீங்கிவிடுவதில்லை. இதனை நீக்குவதற்கு இன்னும் பல பிறவிகளை எடுத்துத் துன்ப மடைய நேரிடுகிறது. உண்மையான ஒரு யோகி அல்லது சாது துன்பப்படுபவரின் துயரங்களைக் கண்டு அவற்றிலிருந்து எவ்வாறு விடுபடலாம் என்பதற்குப் பொருத்தமான நடத்தைகள் மூலமும் திருத் தங்கள் மூலமும் எடுத்துக் காட்டுவார். அத்தகைய அற்புதங்களை நிகழ்த்து வதற்கு ஒரு சாது தான் பெற்றுக் கொண்ட சக்தியைத் துஷ்பிரயோகம் செய்யமாட்டார்.

24. ஒரு ஞானி எனப்படுபவர் குடும்பத்தில் ஒருவராக கடந்த காலத்தில் உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டவராக இருக் கலாம். மிதிலையின் பேரரசர் ஜனகர், யாக்ஞவல்யர், வசிஷ்டர் போன்ற ரிஷிகள் தமது மனைவிமார் மற்றும் பிள்ளைகளுடன் வாழ்ந்து குடும்பத்தை வழிநடத்தியதுடன் பல சிக்கல் மிகுந்த கடமைகளையும் செய்து முடித்துள்ளார் கள் எனக் கீதையில் விபரிக்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகச் சிந்தனையைக் கிளரும் சித்தர்கள்

சித்தர்கள் என்று கூறுகிறோம். சித்தர்கள் என்றால் யாவர்? அவர்கள் எப்போ தோன்றினார்கள்? எங்கு தோன்றினார்கள்? என்ன செய்தார்கள்? இப்போது அவர்களின் நிலை என்ன? இவை போன்ற வினாக்கள் எம்முன் எழுகின்றன. இவ்வினாக்களுக்கு விடை காண எம் சிற்றறிவுக்கு ஆற்றலில்லை ஆயினும் சித்தர்கள் பற்றி ஆன்றோர் கூறுவதிலிருந்து சில தகவல்களை இங்கு தருகின்றோம்.

அணிமாதி அட்டசித்திகளையும் பெற்றவர்கள் சித்தர்கள் எனப் போற்றப் படுகின்றார்கள். இவர்கள் முக்காலமும் அறிந்துரைக்கக் கூடிய சக்தி படைத்தவர்கள். இவர்கள் எப்போ எங்கு தோன்றினார்கள் என்பதற்கு போதிய ஆதாரம் இல்லை. ஆயினும் இவர்களில் பலர் தாய் வயிற்றில் தோன்றாது மிருகங்களின் வயிற்றில் உதித்தனர் என நாடோடிக் கதைகள் வாயிலாக அறிய முடிகிறது.

அந்த வகையில் ரிஷ்ய சிருங்கர் மானுக்கும், ஜம்புக மாமுனி நரிக்கும், கௌதவ மாமுனி முயலுக்கும், மாண்டவியர் தவளைக்கும், கார்க்கேயர் கழுதைக்கும், சௌனகாதி நாய்க்கும் பிறந்தவர்களாகும். விஷ்வாமித்திரர் சத்திரிய குலத்தில் பிறந்தவர். வியாச மாமகரிஷி சண்டாள கன்னிக்கும், வசிஷ்டமாமகரிஷி தாசிக்கும் புதல்வர்களாகத் தோன்றினர். அகஸ்திய மாமகரிஷி மண்குடுவையில் உதித்தார் எனவும் அறியமுடிகிறது. இதிலிருந்து இவர்கள் குலம் கோத்திரம் யாவையும் கடந்தவர்கள் என தெளியலாம்.

கடவுளைக் காண முயல்வோர் பக்தர்கள். கடவுளைக் கண்டு இன்பம் பெற்றவர்கள் சித்தர்கள். இவர்களை ஆங்கிலத்தில் (Mystics) என்பர். சித்தர்கள் அனுபூதி ஞானம் பெற்றவர்கள். அதாவது வாழ்க்கை அனுபவத்தின் மூலம் உண்மை அறிவைப் பெற்றவர்கள். இவர்கள் எல்லாச் சமயத்திற்கும் அப்பாற் பட்ட சர்வசமய சமரச சன்மார்க்கத்தினை உலகில் பரப்பியவர்கள்.

இவர்கள் அஷ்டமா சித்திகளையும் பெற்ற ஞானக் கொழுந்துகளாவர். அஷ்டமா சித்திகளாவன:

1. அணுவைபோல சிறிதாதல் - அணிமா
2. மேரவைப்போல பெரிதாதல் - மகிமா
3. காற்றுப்போல இலேசாதல் - இலகுமா
4. பொன்போலப் பளுவாதல் - கரிமா
5. எல்லாவற்றையும் ஆளுதல் - பிராப்தி
6. எல்லாரையும் வசப்படுத்தல் - பிராப்தி
7. கூடுவிட்டுக் கூடுபாய்தல் - பிரகாமியம்
8. விரும்பியவற்றை எல்லாம் செய்து முடித்து அனுபவித்தல் - ஈசத்துவம்

என்பனவாகும்.

சித்தர்கள் தங்கள் ஆத்ம சாதனைகளின் மூலம் அரும் பெரும் சித்திகள் பெற்று வீட்டுப்பேறு என்னும் அழிவற்ற அமரநிலை எய்தியவர்களாவர். இவர்கள் தமது அனுபவங்களையெல்லாம் அறிஞர்களும், கல்வியறிவில்லாத பாமரமக்களும், குழந்தைகளும் கூட நெஞ்சில் பதித்து வாய்விட்டுப் பாடக்கூடிய சந்த அமைப்புடன் பல பாடல்களைப் பாடியுள்ளனர். மேலெழுந்த வாரியாகப் பார்க்கின்றவர்களுக்கு அதற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைந்துள்ள உள்ளார்ந்த அர்த்தம் புலப்படாது. ஆன்மீகத் தொடர்புடையவர்கள் பாடலிலுள்ள தத்துவங்களை உணர்ந்து கொள்வர். சீன தேசத்திலிருந்தும் எகிப்திலிருந்தும், ஈழத்திருநாட்டிலிருந்தும் தமிழ்நாட்டுக்கு வந்து அரிய அனுபவங் களைப் பெற்றுப் பாடலாக்கியுள்ளனர் இச்சித்தர்கள்.

பின்வருவோர் பதினெண் சித்தர் வரிசையில் அடங்குவர் என கருவூரர் எழுதிய "அட்டமாசித்து" என்ற நூல் கூறுகிறது.

1. ஸ்ரீ கும்பமுனி சித்தர்
2. ஸ்ரீ நந்திமுனி சித்தர்
3. ஸ்ரீ கோரக்கர் சித்தர்
4. ஸ்ரீ புலிப்பாணி சித்தர்
5. ஸ்ரீ புசுண்டரிஷி
6. ஸ்ரீ திருமூலர் சித்தர்
7. ஸ்ரீ தேரையர் சித்தர்
8. ஸ்ரீ யூகி முனி சித்தர்
9. ஸ்ரீ மச்சமுனி சித்தர்
10. ஸ்ரீ புண்ணாக்கீசர் சித்தர்.
11. ஸ்ரீ இடைக்காடர் சித்தர்
12. ஸ்ரீ பூணைக்கண்ணர் சித்தர்
13. ஸ்ரீ சிவவாக்கியர் சித்தர்
14. ஸ்ரீ சண்டிகேசர் சித்தர்
15. ஸ்ரீ உரோம ரிஷி
16. ஸ்ரீ சட்ட நாதர் சித்தர்
17. ஸ்ரீ காலாங்கிநாதர் சித்தர்
18. ஸ்ரீ போகர் சித்தர்

இப்பதினெண் சித்தர்களை "நிஜானந்த போதம்" என்ற நூல்:

(1) அகத்தியர்
(2) போகர்
(3) நந்தீசர்
(4) புண்ணாக்கீசர்
(5) கருவூரார்
(6) சுந்தரானந்தர்
(7) ஆனந்தர்
(8) கொங்கணர்
(9) பிரம்ம முனி
(10) உரோம முனி
(11) வாசமுனி
(12) அமலமுனி
(13) கமல முனி
(14) கோரக்கர்
(15) சட்டைமுனை
(16) மச்சமுனி
(17) இடைக்காடர்
(18) பிரம்மமுனி

என வரிசைப்படுத்துகிறது

இப்பதினெண் சித்தர்களை "அபிதான சிந்தாமணி" என்னும் நூல்:

(1) அகத்தியர்
(2) போகர்
(3) கோரக்கர்
(4) கைலாசநாதர்
(5) சட்டைமுனி
(6) திருமூலர்
(7) நந்தி
(8) கூன் கண்ணன்
(9) கொங்கணர்
(10) மச்சமுனி
(11) வாசமுனி
(12) கூர்மமுனி
(13) கமலமுனி
(14) இடைக்காடர்
(15) உரோமரிஷி
(16) புண்ணாக்கீசர்
(17) சுந்தரானந்தர்
(18) பிரம்மமுனி

என்ற வரிசையில் வகைப்படுத்துகிறது. இவர்கள் வாழ்ந்த காலத்தைச் சரியாக வரையறுக்க முடியாவிட்டாலும், கி.பி.14ம் - 17ம் நூற்றாண்டுகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைப்பட்ட காலத்தவர்களாக இருக்க முடியும் என தமிழறிஞர்கள் வரையறை செய்துள்ளனர்.

ஆன்மீகம் தழைக்கவும், மக்களின் ஆரோக்கியம் செழிக்கவும் சித்தர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர். தத்துவத் துறையிலும்,மருத்துவத்துறையிலும் எழுதிக் குவித்த நூல்கள் எண்ணில டங்காதவை. கடவுள் நிலைபெற்றவர்கள் சித்தர்கள் இவர்களைக் கடவுளுக்குச் சமமாகவே போற்றி வணங்கினர் எம் முன்னோர்கள்.

பதினெண் சித்தர்களின் வாழ்க் கைக் குறிப்புகளை, எமது தேடலில் கண் டெடுக்கப்பட்டவரையில் மிகச் சுருக்க மாக இங்கு தருகின்றோம்.

## அகத்தியர்

அகத்தின் செயலறிந்து கூறக் கூடிய வல்லமை பெற்றவராகையால் இவர் அகத்தியர் என அழைக்கப்பட்டார். பேரகத்தியம், சிற்றகத்தியம் என்ற நூல்கள் வழியே முத்தமிழ் பரப்பியவரா தலால் இவரைத் "தமிழ்முனி" எனவும் அழைத்தனர். சோதிடத்தில் வல்லவரான இவர் வெளியிட்ட உண்மைகள் இன்று "அகத்தியநாடி" என்ற பெயரில் வழங்கு கின்றது. சோதிடம், வைத்தியம், ஞானம் என்று அவர் தொடாத துறையே இல்லை எனலாம்.

அகத்தியருடைய மாணாக்கர் களில் புலத்தியர், தேரையர் இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். அகத்தியர் இயற்றிய சாத்திர உண்மைகளை, நாதமுனி என்பவர் வடமொழியில் சுலோ கங்களாக ஆக்கி அவை தம்முடைய படைப்புகள் என உரிமை கொண்டா டினார். அதனால் அகத்தியரின் சாபத்துக் குள்ளாகி சிந்தை கெட்டு அலைந்து திரிந்து பின் அகத்தியரைச் சரணடைந்து அவர்தம் மாணாக்கர்களில் ஒருவரானார்.

அகத்தியர் எழுதிய நூல்களில் வைத்தியகாவியம் ஆயுர்வேதம், ஞான சௌமிய சாகரம், அமுதகலைஞானம், மாந்திரிக காவியம், ஜாலசூத்திரத்திரட்டு, தர்க்கசாத்திரம், சகலகலைஞானம், பிள்ளைத்தமிழ் எனும் நூல்கள் குறிப்பிடத்தக்கவை. தத்துவம் சமயம்,



யோகம், மருத்துவம் ஆகிய துறைகளில் அவர் மிக விரிவாக வெளிப்படுத்திய உண்மைகள் இதுவரையாரும் கூறாத தகவல்களைக் கொண்டதாக மிளிர் கின்றன. அகத்தியர் எழுதிய நூல்களின் மொத்த எண்ணிக்கையை சரியாகக் குறிப்பிட முடியாவிட்டாலும். அவை ஏறத் தாழ தொன்னூற்று ஐந்து எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான் கலியுகமாந்தரின் பிணி தீர்க்க பழனி என்ற திருத்தலத்தைப் படைத்தான். அப்போது அகத்தியர் முருக னிடம் "மக்களுக்கு உடல்மட்டும் நலமாக இருந்தால் போதுமா?" என வினவினார். அதனைச் செவிமடுத்த முருகப் பெருமான் அகத்தியருக்கு முக்காலமும் உணரக் கூடிய மந்திரத்தை உபதேசித்தார்.

அப்போது அகத்தியரின் மனக் கண்ணில் திருமந்திர நூல் இயற்றப் போகும் திருமூலர், அட்டமா சித்துகள் நிகழ்த்தப் போகும் போகர், புலிப்பாணி எனத் தொடங்கி வள்ளலார் வரை தோன்ற விருக்கும் அநேக சித்தர்கள் தெரிந்தார் கள். கலியின் பிடியி லிருந்து மனிதரைக் காக்க இவர்களால் முடியாதா என்ன? மனம் தெளிந்தார் தமிழ் முனி இப்படியாக அக த்தியரில் இருந்து ஒரு சித்தர் பரம்பரை உருவானது.

## போகர்

தமிழ்நாட்டில் வேட்கோவர் வகுப்பில் பிறந்த இவர் சர்வ சாத்திரங்க ளையும் கற்றுத் தேர்ந்தவர். இதனால் இவர் போகர் என்றழைக்கப்பட்டார். காலாங்கி முனிவரின் தலை மாணாக்கரான இவர் காய கல்ப மூலிகை களைப் பயன்படுத்தி காயசித்தி பெற்றவர். உலக மொழிகள் பலவற்றையும் அறிந்த இவர் பலநாடுகளுக்கும் சென்று பாரத நாட்டு வைத்திய யோக முறைகளைப் பரப்பிய துடன், ஆயிரத்து எழுநூறு பாடல்களைக் கொண்டு ஒரு நிகண்டும் செய்தருளி னார்.

இடைக்காடர், கருவூரார், புலிப்பா ணியார், கொங்கணர் ஆகியோர் போகரிட மிருந்து அஷ்டமா சித்துகளைப் பெற்றனர் என்பர். போகர் தமது மாணாக்கருடன் சீனதேசம் சென்று பல கருவி நூல்களும், இயந்திர நூல்களும் இயற்றி அங்கே அறிவியல் ஞானம் பெறச் செய்தவராவார்.

சீனதேசத்திலிருந்து தமிழகத்துக்கு



வந்து பழனியில் வாழ்ந்தார். நவபாஷா ணங்களின் சேர்க்கையில் பழனிமலை முருகன் சிலையை உருவாக்கியவர் இவரே. மருத்துவத் துறையில் அளவற்ற ஞானம் உடைய இவர் எழுதிய நூல்க ளில் நிகண்டு, வைத்தியம், துவாத காண்டம், சப்பகாண்டம், வைத்திய சூத்திரம், அட்டாங்க யோகம், ஞான சாராம்சம் ஆகியவை குறிப்பிடத்தக்க னவாகும்.

## கோரக்கர்

இவர் மச்சமுனியின் மாணாக்கர். தமிழ் நாட்டு சேணிய வகுப்பினர். காய கற்பமுண்டு தேகத்தை வச்சிர காயமாக்கி மகிழ்ந்தவர். கூடுவிட்டு கூடுபாயுந் தொழிலில் வல்லவர். இவர் எழுதிய நூல்களில் கற்பம், முத்திநெறி, அட்டகர்மம், வகாரசூத்தம், மூலிகை ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ கோரக்கர்
திருக்கோணமலை

## புலிப்பாணி

போகருடைய மாணாக்கருள் ஒருவர். தமிழ் நாட்டு பொன் வணிகர் குலத்தை சேர்ந்தவர். இவருடைய நூல்களில் வைத்தியம், ஜாலம், வைத்திய சூத்திரம் குறிப்பிடத்தக்கவை.



ஸ்ரீ புலிப்பாணி
பழநி

## புசுண்டர்

இவர் உரோமரிஷிக்கு ஆசான் ஆவார். தமிழ் இனத்தவர். இவரை காக புசுண்டர் என்பதும் உண்டு. பிரளய காலத்தில் அவிட்ட நட்சத்திர பதவியில் வாழ்வாராதலின் இப்பெயர் வந்தது. இவரது சிறப்பும், மேன்மையும் அளவிட ற்கரியது.

வைத்திய வாத யோகஞானம், மேற்படி சூத்திரம், மெய்ஞான விளக்கம் மற்றும் சில நூல்களை இவர் இயற்றி உள்ளார். இவர் சோதிடத்திலும் வல்லவராய் இருந்தார்.

## திருமூலர்

பாண்டிய நாட்டில் இரானேந்திர புரம் எனும் நகரை ஆண்டு வந்த சுவேத மஹாராசாவின் மகன் வீரசேனன் என்பவன் ஆவான். தந்தைக்குப் பின் இவன் ஆட்சி செய்து வந்த காலத்தில் அரண்மனை முற்றத்தில் இருந்த மலர்ச்செடியில் இருந்து ஒரு பூவை பறித்து முகர்ந்த பொழுது தலை சுற்றி மயக்கமுற்று உயிர் நீத்துவிட்டான். இதனையறிந்த அவ னின் மனைவியாகிய குணமதியும் ஏனைய



ஸ்ரீ திருமூலர்
திருவாடுதுறை

மந்திரி பிரதானிகளும் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் திருமூலர் என்ற வனத்தில் திருமூலர் என்ற ரிஷி ஒருவர் ஆச்சிரமம் அமைத்திருந்தார். இவர் கூடு விட்டு கூடுபாயும் வித்தையைக் கற்றவர். அன்று அவர் ஆகாயமார்க்கமாக சென்ற போது வீரசேனன் மரணமுற்ற செய்தியை அறிந்தார். அவர் மனம் அவனுக்காக உருகியது. அவர் தமது சீடரான குருராஜ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹரிஷியை அழைத்து தனது உடலை குகையொன்றில் கிடத்தி தான் திரும்ப வரும் வரை அதனைப் பாதுகாக்குமாறு பணித்துவிட்டு,சென்று வீரசேனனின் உடலில் புகுந்து கொண்டார். அதுவரை உயிரற்ற சடலமாகக் கிடந்த வீரசேனன் கண்விழித்து எழுந்தான். இதனைக் கண்டு அரசியும் பிரதானிகளும் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர்.

மறுநாளில் வீரசேனனின் நடத்தையில் ஏற்பட்ட மாறுதலை அறிந்த அவன் மனைவி குணவதி அதுபற்றி அவரிடம் வினவினாள். வீரசேனனின் உடலில் புகுந்திருந்த திருமூலரும் உண்மையை மறைக்காமல் அவளுக்கு உணர்த்தியோடு அல்லாமல் தமது உடல் இருக்கும் இடத்தையும் அதனை அழிக்க வேண்டின் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது பற்றியும் அவளுக்கு எடுத்துரைத்தார். சுயநலமிக்க குணவதி வஞ்சக நோக்கத்தோடு இரு வீரர்களை திருமூலரின் உடல் இருக்கும் இடத்திற்கு அனுப்பி அதனை அழித்து விட்டாள். சிறிது காலத்தின் பின் திருமூலர் தமது உடலை நாடிச் சென்று அவ்வுடல் அங்கில்லாதது கண்டு அது, அழிந்ததற்கு குணவதியே காரணம் என்பதை உணர்ந்தார். இந்த ஊத்தை உடலுடன் வாழப்பிடிக்காதவராய் தேசாந்தரம் சென்றார். இந்நிலையில் சம்பு சேகரம் என்ற ஊரில் ஞானநூல்களை நுனிப்புல் மேய்வது போல் மேலெழுந்த வாரியாக கற்ற ஒரு பிராமணன் இருந்தான். அவன் பெயர் சம்புஹேஸ்வரன் இவன் தவத்தின் மூலம் மோட்சம் பெறக் கருதி சதுரகிரி சாரலில் பிராணயாமப் பயிற்சி செய்யும் போது மூர்ச்சைச் சமன் செய்து அடக்கும் முயற்சியில் தோற்று உயிர் இழந்தான்.

அச்சமயம் வீரசேனனின் வடிவில் இருந்த திருமூலர் அங்கு வந்தார். "இதுவே கடவுள் நமக்களித்த உடல்" என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது மிக்க மகிழ்ச் சியுடன் சம்புஹேஸ்வரனின் தேகத்தில் புகுந்து கொண்டார். பின்பு அடர்ந்த காட்டுப்பகுதிக்குச் சென்று கடும் தவம் இயற்றினார். பல சீடர்கள் அவருக்கு வாய்த் தனர். அவர்களுக்கெல்லாம் தவயோகப் பயிற்சிகள் அளித்ததோடு உலக நன்மைக்காக வைத்திய, யோக, ஞான, சாஸ்திரங்கள் பலவற்றை படைத்தளித்தார். மனித ஆன்மாக்களை கரையேற்ற அவர் ஆக்கிய திருமந்திரம் ஒன்றே போதுமானது எனலாம்.



ஸ்ரீ தேரையர்
பொதிகைமலை

## தேரையர்

அகத்தியருடைய மாணாக்கர்களில் ஒருவர். மருத்துவ ஞானம் மிக்குற்றவர். சித்த வைத்திய முறையில் தேரையர் கண்ட உண்மைகள் பெரிதும் உபயோக மாகிறது. மனிதரின் தேக உணர்வையும், குரலின் தன்மையையும் வைத்தே நோய் நிர்ணயம் செய்து விடுவார் இவர். அவ்வண்ணமே சிகிச்சை முறைகளிலும் இவருக்கு அதிக வல்லமை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ ஆராய்ச்சிகளில் இவர் முதன்மை பெற்றவராக இருந்தபடியால் தேரையர் என்று அழைக்கப்பட்டார். இவருடைய திறமையை அகத்தியர் பலமுறை பாராட்டியது உண்டு. சுமார் பதினாறு நூல்களை இவர் இயற்றி இருக்கிறார். அவற்றுள் வைத்திய காவியம், இரசவர்க்கம், கருக்கிடை, வைத்திய சிந்தாமணி, மருத்துவ பாரதம் என்பவை குறிப்பிடத்தக்கனவாகும்.

## சட்டைமுனி

தமிழ் நாட்டு சேணிய வகுப்பை சார்ந்தவர். கயிலாயம் சென்று சிவபெருமானை சேவித்து வருபவர். எப்போதும் கம்பள மேலாடை அணிந்ததால் சட்டை முனி எனப்பட்டார். சுந்தரானந்தர் இவரிடம் சில சாத்திரங்கள் கேட்டறிந்ததுண்டு. இவர் சரக்கு வைப்பு, நவரத்தின வைப்பு, வகாரம் தீட்சை, ஞானவிளக்கம் உள்ளிட்ட பதிநான்கு நூல்களை இயற்றினார்.



ஸ்ரீ சீர்காழி சட்டைநாதர்
திருவரங்கம்

## கொங்கணர்

மேலைக் கடற்கரை கொங்கண தேசத்தவர். வேட்டுவர் குலத்திற் பிறந்தவர். போகரின் மாணாக்கர்.

இவர் நிஷ்டையில் இருந்தபோது மரக்கிளையில் இருந்த கொக்கு எச்சமிட, அதனால் நிஷ்டை கலைந்தவர் சினந்து நோக்க அப்பறவை சாம்பலானது.



ஸ்ரீ கொங்கணர்
திருப்பதி

இவர் பிச்சைகேட்க சென்ற போது, ஓர் அம்மையார் காலந்தாழ்த்தி அன்னமளிக்க அந்த அம்மையாரை சினந்து நோக்கினார். 'கொங்கணவா, நான் ஒன்றும் கொக்கல்ல எரிந்து போவதற்கு' என்று அமைதியாகப் பதில் அளித்தார் அந்தப் பெண்மணி. 'என் கணவருக்கான பணி விடையில் இருந்தபோது உமது குரல் கேட்டது. ஆனால், எனது கடமை யை முடிக்காமல் நான் எப்படி உமக்கு அன்னமளிக்க வரமுடியும்'? என்றார் அவர்.

கொங்கணர், அந்த பெண்ம ணியின் தொலைவிலுணர்தலை (ஞான திருஷ்டி) எண்ணி வியந்தார். அவளுடைய கற்பின் திண்மையை மெச்சி வாழ்த்தினார். தம்முடைய அதீத சினத்தை நினைத்து வெட்கினார்.

கொங்கணர் செய்த நூல்கள் மிகப்பல. அவற்றுள் வாத காவியம் (முதற் காண்டம். நடுக்காண்டம், கடைக் காண்டம் )வாத சூத்திரம், கற்ப சூத்திரம், வாலைக்கும்மி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான வெண்பா என்பன குறிப்பிடத் தக்கதாகும். அவர் சுமார் இருபத்து நான்கு நூல்கள் இயற்றி உள்ளார்.

## மச்சமுனி




பிண்ணாக்கீசரின் மாணாக்கர். செம்படவமரபினர். திராவக முறையில் சிறந்தவர். ஞானம், மருத்துவம் தொடர்பாக பதிநான்கு நூல்களை இவர் இயற்றி இருக்கிறார். அவற்றுள் பெருநூல் காவியம், சரக்கு வைப்பு, வகாரம், யோக ம், வேதாந்தம், ஞானம் குருநூல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

## நந்தீசர்

கயிலயங்கிரியில், வீரகன் என்ற பெயரில் ஒரு கணநாதர் வசி த்தார். அங்கு வதியும் சித்தர்க ளையும் சதுரகிரி வனங்களையும் கண்டு அதிசயமுற்றார். அங்கேயே தங்கிவிட்டால் நல்லது என எண்ணி னார். அவரது எண்ணத்தை அறிந்த சிவபெருமான் "நீ கணநாத வடிவை விட்டு மானிட வடிவம் ஏற்றாக வேண்டும். புத்திரப்பேற்றுக்காக தவம் புரியும் சிலாத முனிவரின் மகனாகப் பிறந்து வாழ்" என அருளினார்.

அவ்வாறே சிலாத முனிவருக்கு மகனாக நந்தீஸ்வரர் என்ற பெயரில் பிறந்து சதுரகிரியில் சிவனுடைய சந்நிதான த்திற்கு முன்பாக ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து வருவார் ஆயினர். வைத்திய, யோக, ஞான கலைகளில் சிறந்து விளங்கிய இவர் சோதிடத்திலும் வல்லவர். இவருடைய நூல்களில் வைத்திய காவியம், கலைஞானம், கலைஞான சூத்திரம், நிகண்டு, கருக்கிடை, சம்வாதம், ஞான சூத்திரம் என்பவை குறிப்பிடத் தக்கவை. இந்நூல்களை இவர் தமது மாணவர்கள் மூலம் உலகெலாம் பரவும்படி செய்தார்.




## கருவூரார்

போகரின் மாணாக்கரான இவர், கருவூரைச் சேர்ந்தவர் என்பதால் கருவூரார் என அழைக்கப்பட்டார். சைவ சமயத்தை கடைப்பிடித்தவர். ஞான நூல்களை ஆராய்ந்தவர். சிவயோக சித்தியடைந்தவர். இவர் பால் அழுக்காறு கொண்டவர்கள் இவரை வாதுக்கு அழைக்க வெகு எளிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை வென்றார். தலயாத்திரையாக பல இடங்களுக்கும் சென்று திருக்குற் றாலத்தில் சிலகாலம் தங்கினார். அப்போது திருவிசைப்பா பாடி, இறைவனின் அருள் பெற்று கருவூர்த்தேவர் என்று எல்லோராலும் போற்றப்பட்டார். பிறகு, தஞ்சையிலும், சதுரகிரியிலும், கருவூரிலுமாக வாழ்ந்து இருக்கிறார். இவர் உண்மையான பிரமஞானி. இவரை மகாசித்தர் என்றும் கூறுவர். இவருடைய நூல்களில் வாத காவியம், வைத்தியம், யோகஞானம்,



ஸ்ரீ திருமழிசை சிவவாக்கியர்
கும்பகோணம்

பலதிரட்டு வைத்தியம், குருநூற் சூத்திரம், பூரணஞானம் குறிப்பிடத்தக்கவை.

## சிவவாக்கியர்

இறைவனின் இருப்பை மிகத் தெளிவாகவும் விரிவாகவும் எமக்கெடுத்துக் கூறியவர் சிவவாக்கியர் ஆவார். இவர் ஏனைய சித்தர்களில் இருந்து வேறுபட்ட ஒருவர். ஆன்மீகத்தில் பொதிந்துள்ள அறியா மையை முற்றாகக் களைந்தெறிய வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாக இருந்தது.

கோயில் ஏது? குளங்கள் ஏது? நட்டகல்லுப் பேசுமோ? என்றெல்லாம் வினாக்களை எழுப்பி எமது சிந்தனையை கிளறு வதோடு உண்மை நிலையை அறிவதற்கு எம்மைத் தூண்டுகிறார்.

உங்களுக்குள் இறைவன் இருப்பதை உங்களால் ஏன் நம்ப முடிய வில்லை? தேங்காய்க்குள் தண்ணீர் இருப்பதை நம்புகிறீர்கள் அதுபோல உங்களுக்குள் இறைவன் புகுந்திருக் கிறான் அதனை நீங்கள் உணர்ந்து விட்டால் இந்த நிலவுலகில் எவரோடும் உங்களுக்குப் பேசத்தோன்றாது.

எங்கே உதயம்? எங்கே அஸ்த மனம்? எங்கே விழிப்பு? எங்கே உறக்கம்? எங்கே தெளிவு? எங்கே மயக்கம்? இந்தக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டால், இதற்குரிய பதிலை இன்னொருவரோ அல்லது இன்னொரு வரின் கேள்விக்கு நீங்களோ பதில் கூற முடியாது. ஆகவே, உங்களுக்குள் இருக்கும் இறைவனை காண முய லுங்கள். "உள்ளே அழுக்கிருக்க ஆன்ம சாதனைகள் எடுபடாது" என்பதை மிகத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றார் சிவவாக்கியர்.

## உரோமரிஷி

தற்போது மறைமுகமாக உலகை ஆண்டு வரும் சப்தரிஷிகளில் உரோமமா மகரிஷியும் ஒருவர். இவர் எக்காலமும் சதா நிஷ்டையில் இருப்பவர். சகஸ்ரார தள அமுதுண்டு, சதாவும் ஆனந்தத்தில் லயித்திருப்பதால் உரோமரிஷி எனப் பட்டார். தமிழ் இனத்தவர். புசுண்ட மகா முனிவருக்கு மாணாக்கர்.

இவருடைய மருத்துவ நூல்களில் வைத்திய சூத்திரம், பெருநூல், காவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டடி, பரிபாஷை குறிப்பிடத் தக்கனவாம்.

## பிண்ணாக்கீசர்

காா்காா்த்தாா் மரபினா், மச்சமுனி இவரது, சீடா். வடமொழியிலும், தமிழிலும் புலமை பெற்றவா். காய கல்பம் உண்டு அநேக சித்திகளை செய்து இருக்கிறாா். இவா் பிரம ஞானம் உடையவா். அழுகு ணிச்சித்தா் இவருடைய மகன் என்பாா்கள்.



ஸ்ரீ புண்ணாக்கீசர்
சாங்கணாச்சேரி

பிண்ணாக்கீசா், வடநாட்டு மக்களுக்கு வடமொழியில் உபதேசித்து அதனால் அந்த நாட்டிலும் பிரசித்தமானவா்.

மெய்ஞானம், ஞானப்பால், முப்பு சுண்ண செயநீா், யோகப்பாடல் ஆகியன இவா் செய்த நூல்கள் ஆகும்.

## காலாங்கி நாதர்

வேளாள மரபினா். இவரது திரு மேனி காற்று வடிவில் அமைந்திருந் ததால் அத்திருமேனியில் கூரிய கத்தி கூட உட் சென்று வெளிவரக் கூடியதான முறை யில் காட்சியளித்தது. இதன் காரண மாகவே இவரை 'காலாங்கி' என்றனா். இவா், போகரைத் தமது மாணாக்கராகப் பெற்றவா். அவருக்கு சகல சாத்திர முறை களையும் உபதேசித் தருளியவா்.

காலாங்கி நாதா் மருத்துவத்திலும், ஆன்மீகத்திலும் பல நூல்கள் செய்திருக்



ஸ்ரீ காலாங்கி
காஞ்சிபுரம்

கிறாா். அவருடைய வகாரத்திர வியம், வைத்திய காவியம், ஞான சாரம்சம் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

## பிரம்மரிஷி

குருசேத்திர பூமியின் பிரமரிஷி தேசத்தில் இருந்து வந்ததால் பிரமரிஷி என்ற பெயரைப் பெற்றாா். தென்னாடு வந்து தமிழ் கற்றாா். சித்தா்கள் கூட்டத்தில் சோ்ந்து வாழ்ந்தாா். இவருடைய வேள்வி யில் இருந்து கஞ்சா, புகையிலை, கற்ப மூலிகைகள் உண்டாயின. இவா் பிராமணத் திருமேனியானவா். அட்டமா சித்துக்கள் கைவரப்பெற்றவா். இவருடைய நூல்களில் வைத்தியம், சூத்திரம், தண்ட கம், ஞானம், வகார சூத்திரம் குறிப்பிடத் தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரடி சாயிபாபா



அன்பின் வடிவமான ஸ்ரீ சீரடி சாயி பாபா அவர்கள் எந்த மதத்தை சார்ந்தவர் என்றோ, எந்த ஊரில் பிறந்தவர் என்றோ, இவரின் பெற்றோர்கள் யாவர் என்றோ, இவர் பிறந்த நாள் எதுவென்றோ, அறுதியிட்டுக் கூறக் கூடிய தகுந்த ஆதாரங்கள் இல்லை.

ஆயினும் பாபா நேரிடையாக அவ்வப் போது தமது பக்தர்களுக்கு கூறிய விருத்தாங்கங்களில் இருந்து அறிந்து கொள்ளக் கூடிய சில விடயங்கள் துலங்குகின்றன.

பழைய நையாம் சமஸ்தா னத்தைச் சேர்ந்த பத்திரி என்ற கிராமத்தில் அந்தணர் குடியில் பாபா அவதரித்தார் எனவும் ஏதோ காரணத்தால் பெற்றோர்கள் இக் குழந்தையை ஒரு முஸ்லிம் சாது (பக்கீர்) விடம் ஒப்படைத்ததாகவும் வரலாறு கூறுகிறது.

குழந்தைக்கு தாய் - தந்தை என்ன பெயர் வைத்தனர் என்றோ இளமையில் இவர் எப்பெயரால் அழைக்கப்பட்டார் என்றோ அறியமுடியவில்லை.

தமது பெற்றோராலே ஒரு பிராமணக் குழந்தை முஸ்லிம் சாது ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால், அந்தச் சாது எப்பேர்ப்பட்ட மகானாக இருந்திருக்க வேண்டும்? என்பதை ஊகித்து அறியலாம் அந்த மகானுடைய சீலம், வைராக்கியம், பற்றற்ற தன்மை, அன்பு யாவும் பிள்ளைப் பிராயத்திலேயே பாபாவிடம் குடி கொண்டு விட்டன. அந்த முஸ்லிம் சாது தமது வாழ்வின் முடிவு நெருங்கிய சமயம் தமது மனைவியை அழைத்து தாம் இறந்த பின் அச்சிறுவனை சேலு என்ற கிராமத்தின் ஜெமீந்தாரான ஸ்ரீ கோபால் ராவ் தேஷ்முக் என்பவரிடம் ஒப்படைக்கும் படி கூறி சமாதியடைந்து விட்டார்கள்.

ஸ்ரீ கோபால்ராவ் தேஷ்முக் என்பவர் ஒரு அந்தணர். தெய்வபக்தி மிகுந்தவர். அவரிடம் பாபா ஒப்படைக்கப் பட்டார். அப் பெரியாரை பாபா வெங்கடேசர் அல்லது வெங்குசா என்றே அழைப்பாராம். பாபாவுக்கு தம் குருநா தரிடம் அலாதிப் பிரியம். அக் குருவோ பாபாவுக்கு எதையும் உபதேசித்தது இல்லை. ஆனால் அருகில் வைத்து அன்பு காட்டி வளர்த்து வந்தார். ஒரு நாள் இவர் மீது பொறாமை கொண்ட சிலர், பாபாவும் வெங்குசாவும் பேசிக் கொண்டிருந்த போது, பாபாவின் மீது கற்கலால் எறிந்தனர். கல்லொன்று பாபாவின் தலையில் பட்டு இரத்தம் பெருகியது. அவர்கள் அடுத்த கல்லை பாபா மீது விட்டெறிய முனைந்த போது வெங்குசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கே பாய்ந்து தம் தலையில் அக்கல்லடியைத் தாங்கிக் கொண்டாராம். இதிலிருந்து அக்குருநாதர் பாபா மீது கொண்டிருந்த அளவிறந்த அன்பை அறிந்து கொள்ள முடிகிறது அல்லவா?

தன்னால் தான் வெங்குசாவுக்கு கல்லெறி பட்டதென்பதை அறிந்த பாபா தான் தனித்துச் சென்று விட தம் குருநாதரிடம் அனுமதி கோரினார் அப்போது வெங்குசா பாபாவைப் பார்த்து "தான் வெகு விரைவில் இறைபதம் அடையப் போவதாகவும் தமது சக்திகள் அனைத்தையும் பாபாவிடம் ஒப்படைக்க இருப்பதாகவும் கூறி, அருகில் கட்டியிருந்த பசுவின் பாலை கறந்து வருமாறு பாபாவை ஏவினார்."

பாபா கட்டியிருந்த பசுவின் அருகில் சென்ற போது அதன் உரிமையாளர் இப்பசு மலட்டுப் பசு என்றும் இது ஒரு போதும் கன்று ஈனவில்லை என்றும் கூறினார். உடனே பாபா அவனையும் அழைத்துக் கொண்டு வெங்குசாவிடம் சென்று முறையிட்டார். வெங்குசா பசுவின் மடியை தமது கைகளால் தடவி விட்டு சொந்தக் காரனைப் பார்த்து பால் கறக்கும்படி கூறினார். என்ன ஆச்சரியம்! பசுவின் மடியில் இருந்து பால் பெருகிக் கொண்டு வந்தது. வெங்குசா தமது எல்லாச் சக்திகளும் குரு கிருபையும் பரிபூரணமாக பாபாவிடம் சேரவேண்டியதெனக் கூறி பாலைப் பாபாவிடம் கொடுத்தார். உடனே வெங்குசாவை கற்கலால் அடித்தவன் பிணமாகக் கீழே விழுந்தான்.

இதனைக் கண்ட ஏனையோர் வெங்குசாவின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினார்கள். அவர் தம்மிடம் எவ்வித சக்தியும் இல்லை எனவும் பாபாவிடம் முறையிடுமாறும் அவர்களைப் பணித்தார்கள். அவர்களும் உண்மையை உணர்ந்து பாபாவைப் பணிந்தார்கள். பாபா குருநாதரின் பாததூளியை எடுத்து பிணமாகக் கிடந்தவன் மேல் வைத்தார் அவன் உயிர் பெற்றெழுந்தான். ஏனையோரையும் பாபா மன்னித்து அனுப்பி வைத்தார்.

ஓரிரு தினங்களில் வெங்குசா தேக வியோகம் செய்தார். தாம் உயிர் நீக்குமுன்பு பாபாவை மேற்குத் திசையை நோக்கிச் செல்லும்படி கட்டளை யிட்டிருந்தார். அதன் படி 1872ம் ஆண்டில் ஒருநாள் சந்பாய் பட்டேல் என்பவரது உறவினருடைய கலியாண ஊர்வலத்துடன் பாபா அவர்கள் தமது 18வது வயதில் சீரடி எனும் ஊருக்கு வந்து சேர்ந்தார் எனவும் அவ்வூரிலேயே 1918ம் ஆண்டு மகா சமாதியடையும் வரை அருள் வாழ்வு வாழ்ந்து வந்தார் என்றும் அறிய முடிகிறது.

சீரடிசாயிபாபா இறைவன் அருளால் கங்கா பவாத்யா என்னும் படகோட்டிக்கும் அவர் மனைவி தேவகிரி என்பவருக்கும் மூன்றாவது மகனாக அவதரித்தவர் என்றும், வனத்தில் பிறந்த அவரை, அவரது தாயார் அவ்விடத்திலேயே விட்டுச் சென்றதாகவும் இவரின் அவதாரத்தை அறிந்திருந்த முஸ்லீம் பக்கிரி ஒருவர் இவரை எடுத்து வளர்த்ததாகவும் ஒரு கதை கூறப்படுகிறது. 1835ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ந் திகதி இவர் பிறந்தார் என்றும் அறிய முடிகிறது.

அப்துல் பாபா, நானா, சந்திராட்கர், அர்ஜுன் தாஸ், தாய்கனு, வலஸ்பதி ஆகியோர் இவரது முக்கிய சீடர்கள் ஆவர். ஒருநாள் இவர் இச்சீடர்களை அழைத்து "நான் யார் என்று தெரியுமா?" என வினவினார். அதற்குச் சீடர்கள் ஒவ்வொருவரும் "நான் தங்களுடைய சீடன்" என்ற பதிலையே அளித்தனர். பாபா அவர்களைப் பார்த்து "இந்தச் சீடர் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதத்தை உபயோகிக்காதீர்கள். எனக்குச் சீடர் என்று எவரும் இவ்வுலகில் இல்லை." பக்தர்கள் கோடிக்கணக்கில் உள்ளனர். பக்தருக்கும் சீடருக்கும் உள்ள வேறுபாட்டை நீங்கள் உணருவதில்லை. எவராயினும் பக்தர் ஆகலாம். ஆனால் சீடராவது இயலாது. இறைவனின் ஆணையைத் தவிர வேறு எதுவும் தனக்குக் கிடையாது என்று பரிபூரணமாக அர்ப்பணித்து சேவை செய்பவனே சீடன். உங்களில் ஒவ்வொருவரும் என்னுடைய ஆணைகளை எவ்வளவு தூரம் நிறைவேற்றி உள்ளீர்கள் என்று சுயசோதனை செய்து பாருங்கள். என்னைத் தவிர வேறு எதுவுமில்லை என்ற மனப்பான்மையுடன் செயல்படுபவனே சீடன். எங்கிருந்தாலும் பகவானைப் பிரார்த்திப்பவன் பக்தன் என்றார்.

குருவிடம் ஐக்கியமாகும் உணர்வு கொண்டு ஈருடல் ஓர் உயிர் எனும் நிலையில் தான் வேறு கடவுள் வேறு என்ற உணர்வுக்கு இடமில்லாமல் இருப்பவனே சீடன் (You and I are me) "நானும் நீயும் ஒன்றே என்ற உண்மையான உணர்வு கொண்டவர் எவருமில்லை". என்றார் பாபா. இதைக் கேட்ட 'ஷியாம்' என்ற சீடன் நான் தங்களுடைய பாத சேவையைத் தவிர வேறு எதிலும் நாட்டமில்லாதவன். நான் கூட சீடர் வகையில் சேர்த்துக் கொள்ளப் படவில்லையே என கவலைப்பட்டான். பாபா அவனைத் தனியே அழைத்து "இவ்வுலகில் நீ ஒருவன் மட்டுமே எனது சீடன். மற்ற யாவரும் பக்தர்கள் தான் சீடர்கள் அல்ல". எனக் கூறினார். இதைக் கேட்ட ஷியாம் 'உங்களைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை' எனக் கூறிக் கொண்டே தனது உயிரை நீத்தான்.

82 ஆண்டுகள் வாழ்ந்த பாபாவின் கண்களில் இதுவரை ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வந்ததில்லை. ஆனால் ஷியாமின் இறப்பை கண்டு அவர் மூன்று சொட்டுக்கள் கண்ணீர் வடித்தார். இது பற்றி பாபாவிடம் கேட்ட போது அச்சீடன் இவ்வுலகில் இன்னமும் செய்ய வேண்டிய சில செய்கைகள் மிகுதியாகவுள்ளன, அவற்றை பூர்த்தி செய்துவிட்ட நிறைவை உண்டு பண்ணும் வகையிலே இந்த மூன்று துளிகள் சிந்தினேன் என்றார்.


இத்தகு சிந்தனையாற்றல் மிக்க பாபா எக்குடியில் எப்படி, எப்பொழுது, தோன்றினார் என்பது முக்கியமல்ல. ஒன்று மட்டும் உண்மை பாபா ஒரு தெய்வீக புரிஷர் அவரிடம் மனித சக்திக்கு அப்பாற் பட்ட சக்திகள் இருந்தன தம்மை அண்டினவர்க்கு இகத்திலும் பரத்திலும் நன்மையளித்து இன்புறச் செய்து வந்த தெய்வம் அவர் என்பதனை, சீரடியில் வாழ்ந்த 46ஆண்டுகளில் அன்னாரை அண்டி பயனெய்திய பக்தர்கள் வரலாறுகளில் இருந்தும், இம்மகான் மகா சமாதியடைந்த பின் சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக அவரை நம்பிய பக்தர்கள் பெற்ற அனுபவங்களில் இருந்தும் அறியமுடிகிறது.

எனவே, நாமும் அந்த தெய்வீக புருஷனின் உபதேசங்களின் உண்மையை உணர்ந்து உளம் பதித்து உய்வோமாக.

## ஜெபக் கணக்கு

காயத்ரீ மந்திரத்தை ஒரு வேளைக்கு 32 தடவையோ, 64 தடவையோ 108 தரமோ ஜெபித்தால் நித்தியக்ரமக் கடனைத் தீர்த்ததாகும். வெகு அவசரமாகவோ அசந்தர்ப்பமாகவோ இருக்கும் பொழுது முடிந்த தடவைகள் சொன்னால் போதும். காலம் அடுத்தபடி கிட்டியவுடன் விட்டதைச் சேர்த்துச் செய்து பிராயச் சித்தம் தேடிக் கொள்ளலாம். இக் கணக்குக்கு மீறி அதிகம் செய்வதெல்லாம் விசேஷ புண்ணியக் களஞ்சியத்தை நிரப்பும்.

# ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள்



புன்முறுவல் பூத்த முகம். எங்கோ, உள்ளே எதையோ பார்த்துக் கொண்டிருக்கும் திருவிழிகள். இன்ன வயது என்று அளவிட முடியாத திருமேனி. இனிமையான ஆற்றொழுக்குப் போன்ற பேச்சு. இடையிடையே "தேவா" என்று வரும் இன்ப ஒலி. வரம் வேண்டுவோர் தம் குறையை சொல்ல சொல்லக் கேட்டு "வேண்டுவோம்" என்று அஞ்சல் காட்டும் திருவாக்கு. சில சமயங்களில் குலுங்கக் குலுங்கச் சிரிக்கும் குழந்தைத் தன்மை. இத்தனையும் சேர்ந்த முழுவடிவே சுவாமி ஞானானந்தகிரி அவர்கள்.

ஆரவாரம் இன்றி எளிமையும், அமைதியும் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்த இம்மகான், தென்னாட்காடு மாவட்டத்தில் உள்ள தென்பெண்ணை ஆறு நெளிந்தோடும் திருக் கோவலூருக்கு அருகில் அமைந்திருந்த ஸ்ரீ ஞானானந்த தபோவனத்தில் எழுந்தருளியிருந்து ஞானவொளி பரப்பி வந்த மகாபுருஷர் ஆவார்.

## குருநாதர் தரிசித்த ஞானானந்தகிரி சுவாமிகளை

இம்மகானுபாவரின் தபோவனத்தில் அவருடன் சில காலம் தங்கியிருந்து ஆன்மீகப் பயிற்சி பெற்ற எமது குருநாதர் அவர்கள், இந்தமகானைப் பற்றிக் கூறிய செய்திகளில் இருந்தும், இத்தவசீலர் வாழ்ந்த காலத்தில் அவரை அண்டி அருளாசி பெற்ற அன்பர்கள், பக்தர்கள் எடுத்துரைத்த கூற்றுக்களில் இருந்தும், இந்த மகாஞானி பற்றிய சுவையான சில தகவல்களை திரட்டி உங்கள் முன் சமர்ப்பிக்க முனைகின்றோம்.

இன்றுவரை இந்தப் பெருமகனுடைய ஆயுளைக் கணித்தவர் இல்லை. அதுபோல் இவர் தம் வரலாற்றை முழுமையாக உரைத்த வருமில்லை. கன்னட மொழி பேசும் நாட்டிலே மங்களபுரி எனும் ஊரிலே அவதாரம் செய்தவர் இம்மகான் என்பதையும், கங்கைக்கரையில் அமைந்திருந்த ஜோதிர் மடத்துச் சங்கராச்சாரிய சுவாமிகளிடம் உபதேசம் பெற்று ஜோதிமா முனிவராகி திகழ்ந்தவர் இவர் என்றும், இமயத்திலும் இவர் சிலகாலம் தவம் புரிந்தார் என்பதற்கும் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

மலாயா, பர்மா, இலங்கை, இந்தியா முழுவதும் தம் திருப்பாதத்தாலேயே நடந்து சென்று ஆன்மீக ஞானம் பெற்ற மகாஞானி இவர். எத்தனை வருடகாலம் தம்மை மறந்த நிலையில் இவர் தவம் புரிந்தார் என்பது இவருக்கே தெரியாது. தூக்கத்தில் கண்ட கனவு நாளடைவில் மறந்து போனதுபோல தம்முடைய வாழ்க்கையையே ஒழுங்காக கோவைப்படுத்தி மனதில் நிறுத்திக் கொள்ளாத மாண்பினை யுடையவர் இந்த ஞானாமுதவாரிதி.

சுமார் 400 வருடங்களுக்கு மேலாக இவ்வுலகில் தவவாழ்வு வாழ்ந்த இப்பெருஞான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளல் தமது வயது இன்னது என்றே தெரியாது வாழ்ந்தார். அன்பின் வடிவமாகத் திகழ்ந்தார். தம்மை நாடி வருபவர்களிடம் "நெடுந்தூரத்தில் இருந்து வந்த களைப்பு மிகுதியாக இருக்குமே, பசிக்குமே, போய் ஆகாரம் பண்ணி வரலாமே." என்றும் "சிறிது ஏதாவது தாகத்திற்கு அருந்தி வரலாமே." என்றும் இவர் கூறுவாராம். இதிலிருந்து இப்பெரு மகனின் தாயன்பை ஊகித்து அறியலாம் அல்லவா?.

இந்த மகாபுரிஷரை தரிசிக்கும் பாக்கியம் பெற்ற கி.வா.ஜகந்நாதன் அவர்கள் தமது கட்டுரை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், சித்தர் பாடல்கள் எல்லாம் இந்த முனிபுங்கவர் பேச்சிலே இழையோடும். வடமொழிச் சுலோகங்கள், உபநிடத மகாவாக்கியங்கள் துள்ளி வரும். இடையிடையே ஹிந்தியும் மணக்கும்". என்கிறார். இதிலிருந்து ஞானானந்தகிரி என்னும் ஞானமலையின் அறிவாற்றலையும், புத்திசாதுர்யத்தையும், மொழிவளத்தையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது அல்லவா?.

## சுவாமியின் அற்புதங்கள்

ஞானானந்தகிரி சுவாமிகள் செய்த அற்புதங்கள் எண்ணற்றவை. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கு கூறினால் அவரின் ஏனைய அற்புதச் செயல்களையும் அறிய வேண்டுமென்ற ஆவலும், தேடல் உணர்வும் எம்முள் தோன்றுமல்லவா? ஆதலால் அவற்றை இங்கு தருகிறோம்.

ஒருமுறை ஒரு பஜனை மண்டலி துவக்கவிழாவிற்கு வருவதாக ஞானானந்தகிரி சுவாமிகள் ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால், அவரால் அங்கு செல்லமுடியவில்லை. பக்தர்கள் ஏமாற்றம் அடைந்து மனம் வருந்தினர். பிறகு சுவாமியைச் சந்தித்த போது தமது தாபத்தை வெளிப்படுத்தினர். அதற்கு சுவாமிகள் தாம் ஒரு தவளை வடிவில் பஜனை விளக்கிற்கு அருகில் வந்ததாகவும் , பஜனை மண்டலியின் தலைவர், தவளை வடிவில் இருந்த தம்மை வெளியே விரட்டிவிட்டதாகவும் கூறினார். இதனைக் கேள்வியுற்ற சம்பந்தப்பட்ட மண்டலியின் தலைவர் வெட்கித் தலைகுனிந்தார்

மற்றொரு நாள், ஒரு பஜனை மகோற்சவத்தில் சங்கீதக் குழுவினரும் பக்தர்களும் சங்கீர்த்தனத்தில் மூழ்கி, மனம் உருகி உணர்ச்சி வயப்பட்டு ஆனந்த நிலையில் திளைத்திருக்கும் போது திடீரென சங்கரர் மடத்தில் அமைந்திருந்த அந்த மேடையின் விளிம்பில் ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள் - கண்ணனாக, குழந்தையாக தோன்றி அடியார்களுக்கு காட்சி கொடுத்தார்கள்.

ஒருநாள் சாயந்தர வேளையில் சித்த லிங்கமடத்திற்கு சுவாமிகளைத் தரிசிக்க வந்த ஒரு பக்தர் சுவாமியின் அறையின் வாசலின் முன்பு அமர்ந்து பகவான் ஸ்ரீ ரமணமாமகரிஷி அருளிய "அருணாசலசிவ" என்ற தோத்திரத்தை மெய்யுருகப் பாடிக் கொண்டிருந்தார் அப்போது வெளியே வந்து ஆசனத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீ ஞானானந்தகிரி பிரபு ஆனந்த ஜோதி மயமாக காட்சியளித்ததுடன், அங்கிருந்த பக்தர்களிடம் "அதோ அருணாசலம், அண்ணாமலை" என்று சுட்டிக் காட்டினார்கள். அப்போது அம்மகானே அருணாசல நாதராய் காட்சியளித்தார் என்றால் அவர் பெருமையை, தவவலிமையை என்னவென்பது.?

இத்தகு ஞானச்சுடராய் ஒளிர்ந்த இம்மகான் அமைதியே வடிவானவர், சாந்தமே உருவானவர். கிழமன்று, முதிர்ந்த பழம் என்று சொல்லும் வகையில் இளநடை பயிலும் குழந்தையாய், வேலை வாங்கும் எஜமானாய், சோறுபோடும் தாயாய், கவலை தீர்க்கும் தந்தையாய், நெருங்கியவர்களுக்கு ஞானம் வழங்கும் தவநிதியாய், சந்தேகம் தீர்க்கும் மாகுருவாய் விளங்கிய இந்த ஞானச்சுடர் 1974ம் வருடம் அணைந்து மகா சமாதிக்குள் சங்கமம் ஆகியது. இத்தகு மகாபுருஷர்களை தரிசிப்பது புண்ணியம், இவர்கள் பேசக் கேட்பது தவம். இவர்கள் அருளுக்கு ஆளாவது அநுபூதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு கீதை

1. எவர் குருவோ அவரே சிவன். எவர் சிவனோ அவரே குரு. இவற்றில் பேதம் கண்டவர் மீளமுடியாத பெரும் பாவம் செய்தவர்க் கொப்பாவார்.

2. சிவனின் கோபத்திற்கு ஆளானால் பரவாயில்லை, குரு உன்னைக் காப்பாற்றுவார். குருவின் கோபத்திற்கு ஆளானால் உன்னை மூவுலகிலும் யாராலும் காப்பாற்ற முடியாது.

3. எவருடைய பாதகமலங்களிரண்டும் துவந்து வந்தால் ஏற்பட்ட துன்பத்தை நிவாரணம் செய்யுமோ, பிறவிக்கடலையும் தாண்டுவிக்குமோ அந்த ஸ்ரீ குருவை நான் வணங்குகிறேன்.

4. ஸ்ரீ குருவின் பாதஸேவையால் எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டுப் பரிசுத்தனாகிறான்.

5. எல்லா தீர்த்தங்களிலும் முழுகுவதால் ஏற்படும் புண்ணிய பலனை அடைகிறான். குருவின் பாத தீர்த்தத்தைப் பருகி மிகுதியைத் தலையில் புரோக்ஷித்துக் கொள்ள வேண்டும்.

6. பாவமாகிய சேற்றை உலர்த்துவதும், ஞானமான ஒளியை நன்றாகப் பிரகாசிக்கச் செய்வதும் குருவின் பாத தீர்த்தமே. அது பிறிவிக்கடலைத் தாண்டுவிக்கிறது.

7. பாததீர்த்தத்தை ஞானமும் வைராக்கியமும் சித்திப்பதற்காக பருக வேண்டும்.

8. குருபாத தீர்த்தத்தைப் பருகுதல், குரு சாப்பிட்டு எஞ்சியதைச் சாப்பிடுதல், குருவின் மூர்த்தியை எப்பொழுதும் தியானம் செய்தல், குருவின் நாமத்தை எப்பொழுதும் ஜபம் செய்தல் ஆகியவற்றைக் கொள்ள வேண்டும்.

9. தன் குருவின் நாம கீர்த்தனமே அனந்தராகிய சிவனுடைய கீர்த்தனமாகும். தன் குருவின் நாம சிந்தனையே அனந்தராகிய சிவனுடைய நாம சிந்தனையாகும்.

10. குருவினுடைய வாசஸ்தானமே காசீ க்ஷேத்திரம்: பாததீர்த்தமே கங்கை: குருவே ஸாக்ஷாத் தாரகப் பிரம்மமாகிய விஸ்வேஸ்வரர்.

11.குருவின் மூர்த்தியை எப்பொழுதும் தியானம் செய்ய வேண்டும். குருவின் நாமத்தை எப்பொழுதும் ஜபம் செய்ய வேண்டும். குருவின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும். குருவைத் தவிர வேறு எதையும் எண்ணக் கூடாது.

12. குருவின் முகத்தில் பிரம்மம் விளங்குகிறது. அவருடைய திருவருளால் அது அடையப்படும். காதல் வழி செல்லும் ஸ்திரீயானவள் காதலனை எப்படி மனதில் எண்ணிக் கொண்டிருப்பாளோ அப்படி எப்பொழுதும் குருவை ஒருவன் தியானம் செய்ய வேண்டும்.

13. குருவின் மகிழ்ச்சிக்குக் காரணமான ஆசனம், படுக்கை, வஸ்திரம், வாகனம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபரணம் முதலியவை ஸாதகனால் அவருக்கு அளிக்கப்பட வேண்டும்.

14. செயலாலும், மனதாலும், வாக்காலும், எப்பொழுதும் குருவை வழிபட வேண்டும். குருவின் முன்னிலையில் வெட்கத்தைவிட்டு நெடுக வீழ்ந்து நமஸ்கரிக்க வேண்டும்.

15. உடல் இந்திரியங்கள், உயிர், பொருள், சுற்றம், உறவினர், மனைவி, ஆத்மா முதலிய அனைத்தையும் ஸத்குருவிற்கு நிவேதனம் செய்ய வேண்டும்.

16. பிரம்ம விஷ்ணு சிவாத்மகமான உலகனைத்தும் குரு ஒருவரே யாவார். குருவிற்கு மேலானது ஒன்றுமில்லை. ஆகையால் குருவை நன்றாகப் பூஜிக்க வேண்டும்.

17. எல்லா வேதங்களின் சிரசில் விளங்கும் இரத்தினம் போன்றவை குருவின் பாத கமலங்கள் ஆகையால் வேதாந்தத்தின் அர்த்தத்தை உபதேசிக்கும் குருவைப் பூஜிக்க வேண்டும்.

**(இவை ஸ்கந்த புராணத்தில் சிவபெருமானே பார்வதி தேவிக்கு உபதேசித்தவை)**

# போற்றுவோம்... வணங்குவோம்!



இந்துக்கள் பசுவை (கோமாதாவை) வணங்குவதைப் பெரும் புண்ணியமாக நினைக்கின்றனர். காரணம், பசுக் கொம்புகளின் அடியில் பிரம்மனும் திருமாலும் உறைகின்றனர். கொம்புகளின் நுனியில் கோதாவரி முதலிய புண்ணிய தீர்த்தங்களும், சராசரி உயிர் வர்க்கங்களும் உறைகின்றன.

சிரத்தில் - சிவசக்தியும்
நெற்றி நடுவில் - சிவக்தியும்
மூக்கு நுனியில் - குமரக் கடவுளும்
மூக்கினுள் - வித்தியாதரரும்
காதுகளின் நடுவில் - அசுவினி தேவரும்
கண்களில் - சந்திர, சூரியர்களும்
பற்களில் - வாயுதேவரும்
நெஞ்சில் - கலைமகளும்
மணித்தலத்தில் - எமனும் இயக்கர்களும்
உதட்டில் - உதயாஸ்தமன சக்தி தேவதைகளும்
கழுத்தில் - இந்திரனும்
மார்பில் - தேவர்களும்
நான்கு கால்களில் - அணிகலன் என்ற வாயுவும்
முழந்தாள்களில் - மருத்துவரும்
குளம்பு நுனியில் - சர்ப்பர்களும்
குளம்பின் நடுவில் - கந்தர்வர்களும்
குளம்பின் மேல் இடத்தில் - அரம்பை மாதரும்
முதுகில் - உருத்திரரும்
யோனியில் - ஏழு மாதர்களும்
குதத்தில் - லட்சுமிதேவியும்
கோமியத்தில் - ஆகாய கங்கையும்
சாணத்தில் - யமுனை நதியும்
ரோமங்களில் - மகா முனிவர்களும்
வயிற்றில் - பூமாதேவியும்
மடிக்காம்பில் - சகல சமுத்திரங்களும்
எலும்பிலும் சுக்கிலத்திலும் - யாகத்தொழில் முழுவதும்
என அங்கங்கள் தோறும் கலங்கா நிறையுடைய, கற்புடைய மாதர்களும் வாழ்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சற்குரு தேவரின் திருப்பாதக் கமலங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஸ்ரீ காயத்திரி சித்தர்
கலாநிதி ஆர்.கே.முருகேசு
சுவாமிகளின் திருப்பாதக்
கமலங்களில் இச் சிறப்பு
மலரை உளத்தூய்மையுடன்
சூட்டுகின்றோம்......!

- மலர்க் குழு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org